வானொலியில்...

# சிறப்புரை - சொற்பொழிவு!

5160

கலைமாமணி கவி காமு ஷெரீப்.

# சீறாப்புராண-
# -சொற்பொழிவு!

கலைமாமணி
கவி கா.மு.ஷெரீப்

சீதக்காதி நூல் வெளியீட்டகம்
21, பச்சையப்பச் செட்டி தெரு,
சென்னை-600 002.

முதற் பதிப்பு — டிசம்பர் 1980.

(புதுவை மாநில வானொலி நிலையத்தார்
அனுமதி பெற்று அச்சிடப்பட்டது.)

விலை ரூ. எட்டு

மக்கள் அச்சகம், சென்னை-600 002.

சென்னைப் பல்கலைக் கழகத்தின்
தமிழ் இலக்கியத் துறைத் தலைவர்
உயர் திரு. சிந்தனைச் செம்மல்—
டாக்டர் ந. சஞ்சீவி அவர்களின்

# வரவேற்புரை

ஒரு காலத்தில்—முப்பதாண்டுகட்கு முன்பு—தமிழரசுக் கழகத்தின்—இயக்கத்தின் மூத்த தளபதியாய்—எல்லைக்காந்தியும் மௌலானா அபுல்கலாம் ஆசாத்தும் இணைந்த உணர்வாய்த் திகழ்ந்தவர் கவி. கா. மு. ஷெரிப். தமிழ் நாடு சட்ட மேலவையின் இன்றைய மாண்புமிகு தலைவராய்த் திகழும் சிலம்புச் செல்வருக்கு அந்நாள் ஆற்றல்மிக்க வலது கரமாய் விளங்கிய பெருமை கவி. கா. மு. ஷெரிப் அவர்கட்கு உண்டு. அந்நாளிலேயே தன்தனி (சுயமான) ஆய்வுத்திறனும் எழுத்துத் திறனும் பேச்சுத்திறனும் செயல் திறனும் படைத்து விளங்கினார்கள் நம் கவிஞர் பெருந்தகை. 'தமிழ் முழக்கம்' இதழ் வாயிலாக என்போன்றோரும் ஏற்றம் பெற உதவிய கவிஞர் அவர்கள்—அறுபத்தாறுண்டுகள் அனுபவம் பெற்ற அறிஞர் (1) **ஒளி (1946)** (2) **இன்றையச் சமுதாயம் (1951)** (3) **அமுதக் கலசம் (1964)** (4) **நபியே! எங்கள் நாயகமே! (1972)** (5) **இறையருள்வேட்டல்(1978)**(6) **ஆயிஷா நாச்சியார் பிள்ளைத்தமிழ் (1979)** (7) **மச்சகந்தி (1972)** ஆகிய **கவிதை** நூல்களையும் **மகனே கேள்!** என்ற கட்டுரை நூலையும், (1) காதல் வேண்டாம் (2) காதலும் கடமையும் (3) கனகாம்பரம் என்ற சிறுகதைத் தொகுப்புக்களையும், (1) நல்ல மனைவி (2) விதியை வெல்வோம் (3) தஞ்சை இளவரசி என்ற புதினங்களையும், (1) புது யுகம் (2) மன்னவன் காதலி (3) பாசம் தந்த பரிசு ஆகிய நாடகங்களையும் ஏற்கெனவே வெளியிட்டுப் புகழ் பெருக்கியவர் கவி. கா மு. ஷெரிப்.

'இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும்' என்ற தலைப்பில் 1974-இல் சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாக அடியேன் பதிப்பித்து வெளியிட்ட 572 பக்க அளவிலான கருத்தரங்கக் கட்டுரைகள் நூலில் உள்ள 40 ஆய்வுக் கட்டுரைகளில் ஒன்றாக (32-வது) இலங்குவது (இப்போது டாக்டர்) **வீ.** ஞானசிகாமணி அவர்களின் 'கவி. கா. மு. ஷெரிபின் கவிதைகள்' என்ற அருமையான ஆய்வுரை. அக்கட்டுரையின் முதல் வாக்கியமே இதுதான்:

> *கவிஞர் கா. மு. ஷெரிப் அவர்கள் அடிமை இந்திய மண்ணில் வாழ்ந்தவரும் விடுதலை பெற்ற இந்திய மண்ணில் வாழ்கின்ற பேறு பெற்றவருமான ஓர் ஒப்பற்ற இசுலாமியக் கவிஞராவர்.*

கவி கா. மு. ஷெரிப் சாதாரணக் கவிஞர் இல்லை; பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடவல்ல பாவலர். இவர்தம் **நபியே! எங்கள் நாயகமே!** (1972) என்ற நூலுக்கு எளியேன் படைத்த மதிப்புரையின் ஒரு பகுதியையும் மேற்குறிப்பிட்ட ஆய்வுக் கட்டுரையில் அதன் ஆசிரியர் (இப்போது டாக்டர்) வீ. ஞான சிகாமணி எடுத்துக் காட்டியுள்ளார். அது வருமாறு:

"................ஒரு குட்டித் திருக்குறள் போல் ஒரு குட்டித் திருவாசகம் போல் பயன்தரும் பண்பு படைத்த **நபி** வாழ்த்துப்பாமாலை ஒவ்வொரு **இந்துவும்கூடப் பாராயண மாய்** ஓதத் தக்க நூல்........"

அரசியல்—அதுவும் திரு.வி.க. பாடியது போலக் கொள்ளை எரி அரசியல்! அவாக்கள் அறும்போது முதலில் இலக்கியத்திலும் பின்னர் அதையும் கடந்த ஆன்மிகத்திலும் மனித மனம் ஈடுபாடுகளைத் தேடுவது இயற்கை. முதிர்ச்சியின் வளர்ச்சியின் முத்திரை இது. அண்மைக் காலத்தில் கவி. கா. மு. ஷெரிப் சீறாப்புராணச் சொற்பொழிவுகளில் செறிந்திருப்பது நாடு செய்த நற்றவம்; தமிழ் செய்த தவப்பயன். அதன்

பயன்களுள் ஒன்றாக உருவாகியிருப்பதே இந்நூல். இதன் வாயிலாகக் கவி கா. மு. ஷெரிப் அவர்களைக் 'கேளாதாரும் கேட்டு'ப் பயன் பெற இயலும். 1980-இல் புதுவை வானொலி வாயிலாகக் கவிஞர் 31 நாட்கள் நிகழ்த்திய உரைகளின் தொகுப்பே 191பக்கங்களுடைய இந்தப் புத்தகம்—புதிய அகம்! **'உரை'** என்பதற்குரிய பேச்சு, உரைநடை, விளக்கம் என்ற முப்பொருளுக்கும் உரைகல்லாய் ஒளிர்கின்றது **'சீறாப் புராண(ச்) சொற்பொழிவு'.**

பல்வகை அடைகளும் பெற்றுப் பெற்றுப் பெருமை பெறும் பெருந்தமிழ் இன்று **'உலகத்தமிழ்'** என்ற உயர்வும் பெற்றுள்ளது. இந்த உயர்வுக்கு வெளிநாட்டி லிருந்து வந்த இத்தாலி நாட்டுச் சேசுசபைத் துறவியர் பெரு மகனார் வீரமாமுனிவர் (1680-1747) அவர்களும் அவருக்கும் (சற்று) முன் தமிழ்நாட்டிலேயே தோன்றிய (1665), தமிழர் உமறுப்புலவருமே ஆவர். முன்ன வராகிய பின்ன வர் 1726-லும் பின்னவராகிய முன்னவர் 1715-லும் முறையே தேம்பாவணியையும் சீறாப்புராணத்தையும் இயற் றினர் என்பர். இக்காலக் குறிப்பினின்றும் உமறுப்புலவரின் சீறாப்புராணமே கொங்கு வேளிர், திருத்தக்க தேவர், கவிச்சக்கரவர்த்தி கம்பர் போன்றவர்களால் இந்தியத் தமிழாக உயர்த்தப்பட்ட தொல்காப்பியத் தமிழகத் தமிழை உலகத் தமிழாக்க உதவியது எனலாம். அம்முயற்சிக்கு 'அடுத்து ஊன்றும் ஆள்' ஆக உறுதுணை புரிந்து உச்சகட்டத் திற்கு உயர உதவியனவே வீரமாமுனிவரின் தேம்பாவணியும் அவர்தம் 1730-ஆம் ஆண்டுத் திருக்குறள் இலத்தீன் மொழி பெயர்ப்பும்.

இந்நிலையில் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியம் அராபிக் பர்சியன் உருது துறைகள் இணைந்து 'தமிழ் நூல் களிலும் தமிழர் வாழ்விலும் இந்து-முஸ்லிம் ஒருமைப்பாடு' குறித்துக் கருத்தரங்கு நடத்தும் வேளையில், உலகத்தமிழ் 5-வது மாநாடு அணுகும் வாரத்தில் கவி கா. மு. ஷெரிப்பின்.

சீருப்புராணச் சொற்பொழிவு' நூல்வடிவில் வெளிவரல் கடவுட் செயல் அல்லாமல் வேறொன்றும் இல்லை!

கவிஞர் தமது வானொலிப் பேச்சுகள் முப்பத்தொன்றிலும் சீருப்புராணத்தின் செய்திகளையும் சிறப்புகளையும் மணிமிடை பவளம் போல் உமறுப்புலவரின் உயரிய கவிதைகளோடு தம் உரை நடை விளக்கங்களையும் இணைத்தும் பிணைத்தும் இயற்றி யுள்ள இந்நூல் தமிழ் இளைஞர்களும் தமிழ் முதியோர்களும் ஒருசேரப் படித்துப் பயன்பெறத் தக்கதாகும். **சிறப்பாகப்** +2 மாணவர்கள்/ இளங்கலை மாணவர்கள் படித்துப் பயன் பெறத் தக்கதாகும்.

ஒவ்வொரு மாதத்திலும் ஒரு நாளைக்கு ஒன்றாகப் படித் துப் பயன் கொள்ளத்தக்க வகையில் சீருப்புராணம் பற்றி ஒரு நூல் இல்லாக் குறையை அல்லாவின் அருளால் கவி கா. மு. ஷெரிப் தமக்கே உரிய தனியாற்றலுடன் நிறைவேற்றி யிருப்பது நாம் செய்த நற்பேறாகும்.

உத்தமர் உமறுப் புலவர் எட்டயபுரம் மண்ணில் வளர்ந்த வர், வாழ்ந்தவர், அமரவாழ்வு அடைந்தவர். இந்த உண்மையை மகாகவி பாரதியின் நூற்றாண்டின் புகுமுக ஆண்டில் நுழையும் நாம் நினைந்து மகிழ்தல் பொருத்தமே ஆகும். தமிழ் மண்ணின் எந்த ஒரு சிறு பகுதிக்கும் துரோகப் பழி இருக்கக் கூடாது என்று இறைவன் திருவுள்ளம் வைத்த தால்தான் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் மட்டுமே எட்டய புரமண்ணில் பிறந்தார் என்று இதுவரை பலரும் எண்ணி வந்த னர். கடிகைமுத்துப் புலவரும் அவர் தம் மாணாக்கராகிய உமறுப் புலவரும் பண்பாடிப் பண்படுத்திய மண்தான் எட்டய புரம் என்பது இப்போது எவருக்கும் தெளிவாகும். **ஒருவேளை இதுவே மகாகவி பாரதியார் 'சமையங்தோறும் நின்றதையல்' ஆகிய தமிழ்த்தாயின் மணிவயிற்றிற் பிறந்த இந்துமாக் கவி ஞருள்—மறுமலர்ச்சித் தமிழ்க் கவிஞருள்— முன்னோடியாக் அல்லாவின் புகழைப் பாட்டிலும் கீர்த்தனையிலும் "இஸ்லாமின்**

**பெருமையை'' உரை நடையிலும் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பரப்பத் தோன்றத் துணைக் காரணம் போலும்.**

கவி. கா. மு. ஷெரிப்பின் 'சீருப்புராணச் சொற்பொழிவு நூலைப் படித்ததன் வாயிலாக எளியேனுக்கு ஏற்பட்ட முதல் பெருநலங்கள் இரண்டு. (1) நபிநாயகத்தின் வரலாற்றை நற்கருப்பஞ் சாறுபோல் பருக முடிந்தது. (2) தேம்பா வணிக்கும் முற்பட்ட சீருப்புராணத்தின் செய்யுள் நலத்தைத் துய்க்க முடிந்தது. இனி, இவ்வுரை நூலின் உயரிய கொடைகள் சிலவற்றைக் குறிப்பிடல் கடமை. அவ்வகையில் தலைமையாக எளியேனுக்குத் தோன்றியது கவிஞரின் நடைநலம். ஆசிரியர் கவிதையோடு கதை, நாடகங்களும் எழுதிப் பண்பட்ட வரதாலின் சீருப்புராண விளக்கத்தை—செய்யுளை—நாவல் போல் நிகழ்த்தியுள்ளார். அடுத்துக் குறிப்பிடத்தக்கது ஆசிரியர் காட்டும் இலக்கியக் கொள்கைகள். அவை பொது—சிறப்பு என இரு வகைப்படும். சில எடுத்துக் காட்டுகள்.

இஸ்லாமியப் புலவர்கட்குக் கடவுள் வாழ்த்துப் பாடுவது என்பது சர்க்கஸ் வித்தைக்காரன் கம்பியின்மீது நடப்பதினும் எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டிய ஒன்ரும். ஆம், உருவமற்ற கடவுளைப் பாடுகின்ற அவர்கள் உவமானமாகவும்கூட உருவமுடைய பொருள்களைச் சுட்டாமல் பாடவேண்டும். இந்த மரபு நெறியை உமறு முறையுடன் பிழையின்றிப் பின்பற்றிச் செல்கின்ருர். (பக். 23)

இப்படி ஒரு பாடலைப் பல கோணங்களில் கண்டு, காணுந்தொறும் அதன் வடிவில் ஒரு புதுமை தோன்றுவதை உணர்ந்து இன்பம் துய்க்குமாறு அமைவதே சிறப்புடைய கவிதையாகும். (பக். 24)

கவிஞன், தான் எதை விளக்க நினைக்கின்றானோ, அது அதுவாகவே அமையும் பேறுதான் வெற்றி பெற்றவனாகின்றான். (பக். 52)

இஸ்லாமியப் புலவர்கட்கு இயற்கையைக் கண்டால் ஒரே ஆனந்தம்! காரணம், மற்றெதையும் கற்பனையாகவோ, கற்பனை கலந்தோ பாடுகின்ற வாய்ப்பு இஸ்லாமியப் புலவர்க்கு அடியோடு இல்லை. உள்ளதை உள்ளவாறே பாடவேண்டும். பெண்களையோ ஆண்களையோ அங்க வருணனை செய்ய அனுமதியில்லை. எனவே, இயற்கையின் பால் வரும்போது, ஆனந்தப் பெருந்தலுக்காளாகி விடுகின்றார்கள். ஆகவே இஸ்லாமியப் புலவர்களிடையே இயற்கையை வருணிக்கின்ற திறம் சற்றே கூடுதல் எனலாம். (பக். 56)

இதில் உள்ள தனிச் சிறப்பு, தலைவியின் உடலழகை உரைக்காமல், உள்ளத்தழகை, குணமேம்பாட்டழகை விவரிப்பதாம். இத்தன்மை தமிழ்க் காப்பிய உலகின் புதுமைச் சிறப்பென்றே சொல்ல வேண்டும். இஸ்லாமியம் தந்த ஏற்றமிகு தனிச்சிறப்பெனக் கூறுவதும்பொருந்தும். (பக். 60)

இதனைச் சொல்லப் போந்த உமறுப்புலவர், மனமகிழ்வும், மனக்களிப்பும், மடுங்குவர என்றும், மறுகுமணி மறுகூடு மறுகாது சென்றார் என்றும் சொற்பெய்துள்ள நயம், சிறப்பிற்குரியதாம். மற்றும் திருமண வீட்டில் இசைநாதம் எழுவது போன்று, பாடலில், நடைநாதம் ததும்புமாறு செய்துள்ளதும் திரும்பத் திரும்பப்பாடி மகிழத்தக்கதாம். (பக். 78)

பாத்திரங்களைப் பேசவைப்போன் கவிஞன். ஆனால் அந்தப் பாத்திரமாகப் பேசுவதும் கவிஞனே! உயரிய

கவிஞன்பால் படாத பாத்திரங்கள் ஓட்டைப் பாத்திரங்களாகி விடுவது இயல்பு. தாம் படைக்கின்ற பாத்திரங்களால் உயர்வடைகின்றான் கவிஞன். (பக். 79)

தமிழ்க்காப்பியங்களில், சீறாப் புராணத்தில் உள்ளது போன்று மணம் பொருத்து படலம் விரிவாக இல்லை, இல்லாக்குறையை நிறைவு செய்கின்றார் உமறு. இது தமிழிற்கு இஸ்லாம் நல்கிய ஏற்றமிகு பரிசு, இன்பப் பரிசு எனலாம். (பக். 82)

தமிழ்க் காப்பியங்களிலும் உலா நூல்களிலும் நகர் வலம் காண்கின்ற பெண்கள், தந்நிலை மறந்து, காம வயப்பட்டு, மோக மொழிகள் பகர்ந்து, உலாக்காணும் பாங்கை விரித்துரைக்கக் காண்கிறோம். சீறாவில், உமறுப் புலவர் இந்நிலையில் மாற்றம் கண்டுள்ளார். (பக். 84)

பாடல்கள் என்பன வெறும் வார்த்தை ஜாலங்கள் அன்று. எதுகை மோனைகள் என்ற யாப்பு அணிகளு மன்று, பாடல்கள் தருகின்ற பாநயம் சிறக்கச் செய்யும் பொருள் நயமே பாடல்களின் சிறப்பு என்பதை யும் புரிந்து மகிழ முடியும். இறவாச் செய்திகளை என்றும் எவரும் ஏற்கும் இனிய கருத்துக் கருவூலங்களை, தன் னுள்ளே தேக்கி நிற்பதே பாட்டாகும். அதனால் தான், பாட்டிற்குச் செய்யுள் என்று பெயர். இத்தகு சிறப் புடைய பாடல்களைச் சீறாப்புராணம் முழுவதிலும் காண் கின்றோம். (பக். 138)

இப்படிச் சொல் தேடிப் பாட்டமைப்பது கைவந்த கவிஞர்களின் ஆற்றல் ஆம். (பக். 146)

உள்ளுவமம் தொக்கப் பாடுவதே சிறப்புடைய கவிதையாகும். வெளிப்படையாகக் கூறுவதைவிட, மறை முகமாக உணர்த்துவதே கவிநயமாகும். (பக். 179)

கவிஞர்களும் புலவர்களும் சமுதாயத்தின் ஆசிரியர்களா வர். அவர்கள் சமுதாயம் மேன்படப் பல அரிய கருத்துக்களைப் போதிப்பவராவார்கள். (பக். 180)

> கற்பனையைக் கண்டு ரசிப்போம். உண்மையைக் கண்டு வியப்போம். கற்பனைக் கிடையே உண்மை மிகைத்து விளங்கும் போது இதுதான் கவிதை என்று கூறி வாழ்த்தி வரவேற்போம். (பக். 185)

கவிஞர் கா. மு. ஷெரிப் நூலறிவோடு நுண்ணறிவும் மிக்கவர். தமிழகம் முழுதும் சுற்றி, மக்கள் வழக்கை நன் கறிந்தவர் என்பதற்கு ஒரு பெருஞ்சான்ருய் இயங்குவது அவர் வடார்க்காடு மாவட்டத்துக் 'கரிப்பு' என்ற சொல்லையும் செங்கற்பட்டு மாவட்டத்துத் 'தாங்கல்' என்ற சொல்லையும், இராமநாதபுர மாவட்டத்துக் 'காவணம்' என்ற சொல்லை யும், உமறு பயன்படுத்தியிருக்கும் உயர்வை ஆராய்வது.

இனி 'சீருப்புராணச் சொற்பொழிவு' எளியேனுக்கு மிகவும் பிடித்த இந்து-முஸ்லிம் ஒருமைப்பாட்டை எவ்வளவு வலியுறுத்துவது என்பது நூலின் முடிவிலேயே நன்கு விளக்கும். அது வருமாறு :

> வில்லிபுத்தூராழ்வார் தரும் மகாபாரதம் காட்டும் நெறி, இந்த ஞானமா மேதைகள் ஒப்பிய—உரைத்த உயர் கருத்து வழி ஒழுகுமாறு உலக மக்களை அழைத்த வர்கள் நபிகள் நாயகம் அவர்கள். மக்கள் ஒன்றுபட்டு ஒரே வழியில் நிற்க எடுத்தோதிய மார்க்கம் இஸ்லாமிய மார்க்கம். (பக். 191)

கவிஞர் அவர்களின் நூலில் பல இடங்களில் உமறுவின் பாடல்களை, சிலப்பதிகாரம், கம்பராமாயணம் ஆகிய முற் காப்பியப் பகுதிகளோடு ஒப்பாய்வு செய்து—உவகை—உயர்வு

செய்கிருர். ஆனல் ஒப்பாய்வு தப்பாய்வு ஆகாமல் இருக்க மிகவும் எச்சரிக்கையாக இருப்பது பல்கலைக்கழகப் பி.எச்.டி.க் களும் கவனமாய்க் கருதத் தக்கது. ஒரு சான்று:

> கம்பர், ராமன் கையிலுள்ள அம்பு, சொல்லினும் கடிய வேகமுடையதென்பார். சொல் மனத்தில் தோன்றி வெளியில் வரவேண்டும். கம்பனின் பின்தோன்றலாகிய உமறுப்புலவர், அதனினும் சிறப்புறச் சொல்ல எண்ணு வது இயல்பு. எனவே, சொல் உதிப்பதற்குக் காரண மாகிய மனத்தையே குதிரையின் வேகத்திற்கு உவம மாக்கியுள்ளார். இது உமறுப்புலவர் காலத்திலுள்ள புலவர்களின் புலமை வளர்ச்சியைக் காட்டுவதாகக் கொண்டு மகிழ இடமுண்டு.

சிறந்த திறனய்வாளரின் சீர்த்தி நூலாசிரியர் நுட்பமாகக் கூறுவதை அனைவரும் அறியத் திட்பமாக்குதல். ஒரு சான்று:

> மாதருக்கரசி ஆமினு வயிற்றினின்றும் வள்ளல் நபி அவர்கள் அவதரித்தார்கள் என்று கூறுகின்ற உமறுப் புலவர், முகம்மது தோன்றினர் எனப் பாடாமல், அகமது தோன்றினரன்றே எனப் பாடிப் போந்துள்ளார். இது அறியாமல் நேர்ந்த தவறன்று; அச்சுப் பிழையுமன்று. முகம்மது என்பது வள்ளல் மாநபி அவர்கட்கு இடப் பெற்ற பெயர். ஆனல் ஆமினுத் தாயார் தம் மகனை அன் பொழுக அழைத்த பெயர் அகமது என்பது. தாய்க்கு முதலிடம் அளிக்குமாறு உபதேசித்தவர்கள் வள்ளல் மாநபி அவர்கள். எனவே அவர்கள் பொன்மொழியை நினைவுகூரும் விதமாக ஆமினுத் தாயார் அழைத்த அகமது என்ற பெயர் என முதல் பாட்டில் இட்டு மகிழ் வளிக்கின்ருர் உமறுப்புலவர்.

கவிஞர் தம்முடைய உரை நூலில் சற்றேறப்ப 150 சீருப் புராணப் பாடல்களை விளக்கத்துடன் வெளியிட்டிருக்கும் அருமைப் பாட்டை ஓருந்தொறும் —ஓதுந்தொறும்— சீருப்

புராணத்தைத் திரட்டாக ஒரு நூறு பாடல்களைச் சிறந்த ஓவியங்களுடன் கவிஞர் விளக்கங்கள் தந்து அச்சீடு செய்தால் எல்லோருக்கும் இன்பமும் பயனும் கிட்டுமே என்று எண்ண வேண்டியுள்ளது.

கவிஞரின் 'சீருப்புராணச் சொற்பொழிவு' நூலை இலக்கிய நோக்கோடுதான் படித்தேன். ஆனால் இதற்கு முன்னர் பல முறை முயன்று படித்தும், என் பாறை நெஞ்சில் படியாத நபி பெருமானின் நல்வாழ்வு கவிஞரின் நாவல் போன்ற இலக்கிய விளக்க நூலால் என் நெஞ்சில் பசுமரத்தாணிபோல் பதிந்து விட்டது! இதுதான் தமிழின் — இலக்கியத்தின் ஆற்றல் போலும்!

கவிஞரின் உள்ளத்தைக் கவிஞர்தான் உணர முடியும். அந்த வகையில் உமறுப் புலவரின் உள்ளத்தைத் தெள்ளிதின் உணரக் கூடிய அறிவும் ஆற்றலும் அனுபவமும் பெற்ற ஒரு பெருந் தமிழ்க்கவிஞர்தான் கா. மு. ஷெரிப். அந்த வகையில் இந்த நூல் பற்பல பதிப்புகளையும் (இப்பதிப்பில் உள்ள சிற்சில அச்சுப்பிழைகளையும் நீக்கி, பெற்றுத் தமிழ் மக்களின் அன்றாட வாழ்விலும் இந்து—முஸ்லிம் ஒருமைப் பாட்டை உருவாக்குவதாக!

இஸ்லாம்—சாந்தி — நெறி—உலகெங்கும் ஓங்குவதாக!

ந. சஞ்சீவி
28-12-80

"பிறை" ஆசிரியர்
ஆலிஜனுப் மௌலவி

**எம். அப்துல் வஹ்ஹாப்** எம்.ஏ., பிடி.எச்.
அவர்களின்

# அணிந்துரை

*பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்*
*நஹ்மதுஹூ வ நுஸல்லி அலா ரஸூலிஹில் கரீம்*

"வானொலியில் சீருப் புராணச் சொற்பொழிவு" என்னும் இந்த வளமார் தொகுப்பைத் தமிழ் கூறும் பேருலகுக்கு வழங்கியிருக்கும் இலக்கியவள்ளல் கலைமாமணி கவி கா. மு. ஷரீப் அவர்களுக்கு அறிமுகம் தேவையில்லை. ஆனால் அவர்களின் கொடையான இத்தொகுப்புக்கு ஓர் அறிமுகம் தேவை தான்—ஏனெனில் இது ஒரு புதுமையான முயற்சி, அருமையானதும்கூட!

**சாதாரணமாக ஒரு நூல் ஒரு குறிப்பிட்ட துறையினருக்கு மட்டும் பெரிதும் நலமும் நயமும் பயப்பதாக அமையும். ஆனால் இந்த மணியான நூல் ஆய்வாளருக்கு, இலக்கிய நுகர்வாளருக்கு, மாணவர்களுக்கு, பொது வாசகர்களுக்கு, ஒழுக்க இயலில் விருப்புக் கொண்டோருக்கு, எழுத்தாளர்களுக்கு, பேச்சாளர்களுக்கு—இப்படிப் பல்வேறு நிலையினருக்கும் சுவையும் பயனும் நல்கக் கூடியது.**

இஸ்லாமியத் தமிழ்ப் படையல்களிலே இன்று பெரிதும் பேசப்பட்டு வருவது சீருப் புராணமேயாம். எனினும் அதை முழுவதும் படித்து, உணர்ந்து, ரசித்து, அதன் வயப்பட்டு, அதன் பெற்றியை எடுத்துக் கூறுவோர் வெகு சிலரே உளர்; அச் சிறு திருக்கூட்டத்திலே போற்றத் தகுந்த ஒரு தனியிடத்தைப் பெற்றிருப்பவர்கள் கலைமாமணியவர்கள்.

தமிழில் பெரும் புகழ் ஈட்டியுள்ள பல்வேறு காப்பியங்களில் தங்களுக்குள்ள தரமான புலமையை அடித்தளப்படுத்தி, அவற்றோடு ஒப்பு நோக்கும் போது எந்தெந்த அம்சங்களில்

சீரு சிறப்புடன் திகழ்கிறது என்று அவர்கள் ஒரு வழக்குரைஞரின் வல்லமையோடு எடுத்தியம்பும்போது, நாம் அவர்களின் சொல்லாட்சியிலும், கருத்துப் பெருக்கிலும் திளைத்து நிற்கிறோம்.

**வானொலி கேட்கும் பல்வேறு மனத்தவருக்கும், மதத்தவருக்கும் சீருப் பயனளிக்க வேண்டும் என்ற பெரு நோக்கோடு அவர்கள் செய்துள்ள இப்பேராய்வு முஸ்லிமல்லாத சோதரர்களையும் பெருமளவில் தம்பால் ஈர்க்கும் எனத் துணியலாம்.**

இலக்கியம் என்பது வெறும் கலா ரசனைக்காக மட்டும் படைக்கப்படுவதல்ல; அந்த இலக்கியத்தைப் பயில்வோரின் மன வளத்தையும் அது செழுமைப்படுத்தவேண்டும். அந்த நோக்கோடு பார்க்கும்போது நபிகள் பெருமானாரின் ஒழுக்க நெறிமிக்க உயர்வாழ்வு, சீருவைக் கருத்தூன்றிப் படிப்போரைக் கவரும்; அவர்கள் செவ்வழி நடக்கத் தூண்டும். அந்த வகையில் நம் இளைஞர்களுக்கு இது அளப்பரும் நன்மை பயக்க வல்லது எனத் திடமாகக் கூறலாம்.

**பள்ளிச் சாலைகளிலும், கல்லூரிகளிலும் ஒழுக்க இயல் பற்றி போதிக்கவேண்டும் என்று இன்று பரவலாக உணரப்பட்டு வருகின்றது. அங்ஙனே ஏற்படும்போது தமிழில் அதற்கான தலையாய பாடப் புத்தகமாக அமையும் தகுதி இந் நூலுக்குளது.**

ஒழுக்க இயலை, நபிகள் பெருமானாரை அழகிய முன்மாதிரியாகக் கொண்டு அவர்கள்தம் திருவாழ்வை நிலைக்களனாக வைத்து அழகு தமிழில் அருமையாக எடுத்துக் கூறும் இச்சிறப்பு நூல் கலைமாமணியவர்களுக்கு ஒரு வெற்றி நூல் என்றுகூறி அமைகின்றேன். அல்ஹம்துலில்லாஹ்!

15, லெப்பை தெரு
சென்னை-600 016. M. **அப்துல் வஹ்ஹாப்**
17, ஸபர், 1401.
27, டிஸம்பர், 1980.

# என்னுரை

அன்புடைய இலக்கிய நுகர்வாளர்களே!

புதுவை வானொலி நிலையத்தில் நான் தொடர்ந்து முப்பத்தோர் தினம் நிகழ்த்திய சொற்பொழிவுகளின் தொகுப்பு உங்கள் கரங்களிலே!

என்னை அழைத்துப் பேசப் பணித்தமைக்கும், என் உரைத் தொகுப்பை நூலாக அமைத்துக் கொள்வதற்கும் அனுமதித்த புதுவை வானொலி நிலையத்தினருக்கு எனது நன்றியை நவிலுகின்றேன்.

அடுத்து, எனது உரையைக் கேட்டு என்னைப் பாராட்டி லிகிதம் வரைந்துள்ள அன்பர்கட்கெல்லாம் நன்றி.

இவ்வுரைத் தொகுப்பை நூல்வடிவில் காண உதவிய மதிப்புமிகு சங்கு ஹாஜி K. M. சையத் அப்துல் காதர் அவர்கட்கு இதயம் கனிந்த நன்றி.

இந்நூலிற்குப் பல அலுவல்கட்குமிடையேயும் என்பால் அன்பு கொண்டு உரிய காலத்திலே வரவேற்புரையும் அணிந்துரையும் தந்துள்ள உயர்திரு. டாக்டர் ந. சஞ்சீவி அவர்கட்கும், ஆலிஜனுப் மௌலவி எம். அப்துல் வஹ்ஹாப் எம்.ஏ. பிடி.எச் அவர்கட்கும் மனமார்ந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.

அச்சிட்டு வழங்கிய 'மக்கள் அச்சகத்'தாருக்கும் மனநிறை நன்றி.

இந்நூல், சீறாப்புராணம் பற்றிய அறிமுகமேயன்றி முழுமையானதன்று.

இந்நூலில்....

விளக்கம் போதாப் பகுதிகள் உண்டு. விளக்காமல் விடுபட்டுப் போன படலங்கள் பல உண்டு.

வானொலியில் கிட்டிய நேரத்திற்குள் இவ்வளவே செய்ய வியன்றது.

உயர்திரு. டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் குறிப்பிட்டிருப்பது போன்று, சீருப்புராணத்திற்கு முழு அளவில் உரை செய்ய வேண்டும் என்பதே எனது அவா. செய்து கொண்டும் உள்ளேன்.

இறையருளால், பதவுரை, விரிவுரைகளுடன் மிக விரைவில் ஒரு காண்ட அளவிலேனும் சீருப்புராணத்தை அச்சிட்டளிக்க இயலும். உங்கள் அன்பும் ஆதரவும் தேவை.

பொதுவாக, அனைவரும் படிக்க வேண்டும் என்கின்ற நோக்கில், இஸ்லாமிய மரபுச் சொற்கள் பெயர்கட்கு முன் சேர்க்கப்படவில்லை. இறைவன் மன்னிப்பானாக.

இது ஒரு குறுகிய கால ஆக்கம். எனவே, அச்சுப் பிழைகள் நேர்ந்துவிட்டன! ஆண்டவன் அருளால் அடுத்த பதிப்பில் நிச்சயமாக இத்தன்மை நீக்கப் பட்டு விடும்.

உரை நடையில் நூல் எழுதுவது எனக்குப் புதிதன்று. ஆனால், ஒரு பெருங்காப்பியத்தை மிக மிகச் சுருக்கி நூலாக்கம் செய்வது என்பது இதுவே முதன் முறை.

ஒட்டகத்தை ஊசித் துவாரத்தில் நுழைப்பதிலும் இது கடினமான வேலை; அதிலும் துரிதமான வேலை.

வானொலி உரையைக் குறைக்கவோ விரிக்கவோ செய்யாமல் அப்படியே தந்துள்ளேன். இந்நூலை நுணுகி ஆய்ந்து படித்துத் தமது கருத்துக்களை நுகர்வாளர்கள் எனக்கு அனுப்பித் தருவது பயனுடையது—விரும்புகின்றேன்.

மீண்டும் கூறுகின்றேன், சீருப்புராணத்திற்குப் பதவுரை, விரிவுரையுடன் கூடிய நூலினை ஆக்கிக்கொண்டுள்ளேன். வெளிக்கொணரும் வல்லமையை இறைவன் எனக்குத் தந்தருள்வானாக!

இலக்கிய இன்சுவை நுகர்வாளர்களே, உங்களின் ஆதரவு என்றும் தேவை, முழு அளவில் தேவை!

சென்னை-2
29-12-80.

அன்பன்
**கவி காமு ஷெரீப்**

# 1

இறைவனின் திருத்தூதர், மகான் முகம்மது நபி அவர்கள்தம் அரிய வரலாற்றினை, இனிய தமிழ்ப் பாக்களில் எடுத்தியம்புவது சீர்தவழ் சீருப்புராணம்.

சீருப் புராணம், பதினேழாம் நூற்றுண்டில் தோன்றிய காப்பியம்.

பதின்மூன்ரும் நூற்ருண்டிலிருந்து பதிஞரும் நூற்ருண்டு முடிய, தமிழில் பெருங் காப்பியம் எது ஒன்றும் தோன்றவில்லை என்பது வரலாறு. பதினேழாம் நூற்ருண்டினையும் இப் பட்டியலில் இணைத்து விடாமல் காப்பாற்றிய பெருமை சீருப் புராணத்திற்கு உண்டு. ஆம்; நான்கு நூற்ருண்டுக் காலமாகத் தேங்கிக் கிடந்த தமிழ் மக்களின் காப்பியப் பசியைத் தணிக்கத் தோன்றிய காப்பியம் சீருப்புராணம். இதன் பின்னர்ப் பல காப்பியங்கள் தோன்றுவதற்கு வழி காட்டியாக அமைந்த காப்பியமாகவும் சீருப்புராணத்தைச் சுட்டலாம். ரட்சண்ய யாத்திரிகம், தேம்பாவணி போன்ற செழிப்பு மிகு காப்பியங்களெல்லாம், சீரு மலர்ந்த பின் மலர்ந்த மலர்களே யாம்!

'சீரு' என்னும் அரபிச் சொல்லிற்கு வரலாறு என்பது பொருள். நபிகள் நாயகம் அவர்களின் வரலாற்றைச் சுட்டுவதாக மட்டுமே இச்சொல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. 'சீறத்' என்கின்ற சொல்லைத் தமிழ் மரபிற்கும் ஏற்பச் சீரு என்ருக்கி, அக்கால வழக்கில் இருந்த புராணம் என்ற பதத்தையும் இணைத்து, "சீருப்புராணம்" எனப் பெயரிடப்பட்டுள்ளது. புராணம் எனும் சொல்லிற்கு, தொன்மையானது எனப்

பொருள் கூறுவர். அதன்படி பார்க்கப்புகின், சீருப்புராணம் என்பதற்குத் தொன்மையான வரலாறு என்பது பொருள் ஆகும். சீருப் புராணத்தின் துவக்கம், இறைவன் இவ்வகிலத்தைப் படைத்ததிலிருந்தே ஆரம்பமாவதினுல் தொன்மையான வரலாறு எனப் பொருள் கொள்வது பொருத்தமானதே!

சீருப் புராணக் காப்பியத்தின் ஆசிரியர் பெயர் உமறுப் புலவர் என்பதாம். இவர் சிறந்த கல்விமான். சங்க இலக்கியங்களை யெல்லாம் கற்றவர் என்ருலும், இவரைக் கவர்ந்த தமிழ்ப் புலவர்களாகத் திருத்தக்க தேவரையும் கம்பனையுமே குறிக்கலாம். இவ்விரு அருங் கவிஞர்களின் வழித்தோன்றலாகவே உமறு தோற்றம் தருகின்ருர்.

வடமொழிச் சொற்களும் தமிழ்ச் சொற்களும் விரவி வருவதே இடைக்கால இலக்கியம். உமறு தரும் சீருவில், இவற்ருேடு அரபிச் சொற்களும் பார்சிச் சொற்களும் இடம் பெற்றிருக்கக் காணலாம். இவற்ருல் சீருப் புராணத்தைப் பொருள் உணர்ந்து படிப்பது புலவர்களாலும் இயலாததாயுளது.

நபிகள் நாயகம் அவர்களின் வரலாற்றைத் தமிழில் காவிய வடிவில் பேசுகின்ற ஒரே நூல் சீருப் புராணமாகும். இதனுலும், ஓசை நயத்தாலும், உன்னத நடையாலும், சொற்சுவையாலும், பொருள் வளத்தாலும் கடந்த முந்நூறு ஆண்டுகளாக, தமிழ் இதயங்கள் ஏற்ற இனிய காவியப் பேழையாகச் சீருப் புராணம் திகழ்ந்து வருகின்றது.

உமறுப் புலவரை எட்டயாபுரத்தின் அரசவைக் கவிஞர் என்பர். அப்பதவி இவரை நாடி வந்தடைந்த விதம் பற்றிச் சுவையான செவிவழிச் செய்தி ஒன்றுண்டு.

வாலை வாரிதி என்ற வடபுலப் புலவன் ஒருவன் தமிழகம் போந்து, புலவர்களை வென்று, வாகைசூடி வந்தான். இவன் எட்டயாபுரத்திற்கு வருகை புரிந்தான். அரசரைச் சந்தித்

தான்; ''உமது அரசவைப் புலவருடன் யான் புலமைப் போர் புரிய வேண்டும்,'' என்முன். அரசர் ஆவன செய்தார். அக் காலை எட்டயாபுரத்தின் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தவர் கடிகைமுத்துப் புலவர் ஆவார்.

குறிப்பிட்ட நாளில் அரசவையில் அறிஞர்களும் புலவர் களும் நிரம்பித் திகழ்ந்தனர். அரசர் வந்தமர்ந்தார். வாலை வாரிதியும் உரிய காலத்தே வந்து தனக்குரிய இருக்கையில் அமர்ந்தான். அரசவைக் கவிஞரான கடிகை முத்துப் புலவர் வரவில்லை. அவரை அழைத்து வருமாறு ஆள் அனுப்பப் பட்டான். அதுபோது அவைக்கண் நுழைந்த இளைஞர் உமறு, அரசவைப் புலவருக்கான இருக்கையில் சென்றமர்ந் தார். அரசர் உள்ளிட்ட அனைவர்தம் கண்களும் உமறையே நோக்கின.

''புலமைப் போரைத் துவக்குவோமா?'' என்முர் உமறு. ''யார் இந்தச் சிறுபிள்ளை?'' என்று கேட்டான் வாலை வாரிதி. அவ்வுரை கேட்ட உமறு எழுந்தார்.

''இது, புரவி நடத்திப் போர் புரிகின்ற மன்னர்களும், அறிஞர்களும், புலவர்களும் வீற்றிருக்கின்ற அரசவை. இங்கே பிள்ளைகள் வரமாட்டார்கள். நான் அமுதகவி. இல்லை. இல்லை! அமுத கவிவானர்களின் அரசன்! அது மட்டிலுமன்று; மாமன்னன் எட்டப்ப பூபதி அவர்களின் அரசவைப் புலவன். என் பெயர் உமறு. இந்த உமறு ஆர்த்தெழுந்து கவி பாடினுல், அண்ட முகடுகளும் அதிர்ந்து நடுங்க வேண்டும். இதனை அறிந்து உள்ளச்சம் வையும் பிள்ளாய்!'' என்று தன்னைப் 'பிள்ளை' என உரைத்த வாலை வாரிதியை, ''பிள் ளாய்!'' எனத் திருப்பி விளித்துரைத்தார் உமறு. இவ்வுரை, உமறுதம் வாயினின்றும் ஓர் அரிய கவிதையாகவே வெளிப் பட்டது.

**சமரதுர கத்துங்க மனரும்ச பாசென்று**
**சரிசமா சனமீதிலே**
**அமரஒரு நரகொம்பு தினமும்சு மாசெல்லும்**
**அமுதகவி ராஜனுனே**

**திமிர்பகை வரைவென்ற பரிதிகளும் எமதெட்ட**
**தீரனணி வாயில்வித்துவான்**
**உமறுகுமு றிடில்அண்ட முகடும்ப டீரென்னும்**
**உள்ளச்சம் வையும் பிள்ளாய்!**

திடீரென எழுந்து ஆர்த்து முழக்கிய பாடலைக் கேட்ட வாலை வாரிதி திடுக்கிட்டான். பாட்டில் உள்ள சொல், பொருள், ஓசை நயம், எடுத்தியம்பிய விதம் அவனைத் திகைக்க வைத்தன. இவரைப் பிள்ளையென எண்ணிய தன் பேதமையை நினைந்து வருந்தினன். வயதினை வைத்து அறிவினை மதிப்பிட்டது தவறென உணர்ந்தான். இருக்கையை விட்டெழுந்தான். உமறுவின் அருகிற் சென்றான். இளமையிலேயே உமறுக்குள்ள புலமையைப் போற்றிப் புகழ்ந்தான். தான் அணிந்திருந்த விருதுகளை உமறுக்கு அணிவித்தான். தோல்வியை ஏற்று அவையை விட்டு வெளியேறினன். அதுகாலை உமறுக்கு வயது பதினறென்பர். பதினறே வயதுடைய உமறுவைக் கடிகைமுத்துப் புலவரின் விருப்பின்படி எட்டப்ப பூபதி தமது அரசவைக் கவியாக்கி மகிழ்ந்தார்.

இந்த உமறுப் புலவர்தான் பிற்காலத்தில் சீருப் புராணம் பாடியவர். இவருடைய ஊர் கீழக்கரை என்பர். செத்தும் கொடை கொடுத்த வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளின் படி உமறுப் புலவர் சீருப் புராணம் பாடினர் எனக் கூறப்படுகின்றது. மிகப்பெரும் ஞானவள்ளல்களான கீழக்கரை சதக்கத்துல்லா அப்பா என்கின்ற முகம்மதுதீபி போன்ருரின் ஆசியும் ஆலோசனையும் பெற்று அருள் வாக்காகப் பாடப் பெற்ற காவியம் சீருப் புராணம்.

நபிகள் நாயகம் அவர்களைக் கனவில் கண்டு, அவர்கள் தம் ஆசியும் அனுமதியும் பெற்ற பின்பே உமறு சீருப்புராணம் பாடினர் என்பர். இக்கூற்றிற்குச் சான்ருக உள்ளது உமறு பாடியுள்ள **முதுமொழி மாலை.**

முதுமொழி மாலையைக் கீழக்கரையிலுள்ள பள்ளிவாசல் ஒன்றிலமர்ந்து பாடினர் உமறு என்பர். மாலை என்பதினுல் நூறு பாடல்கள் பாடி இருக்க வேண்டும். ஆனல் நமக்குக் கிட்டியிருப்பது எண்பது பாடல்களே! பாடல்கள் அனைத்தும் "முகம்மது நபி (சல்) அவர்களை என்று காண்குவனே!" எனும் ஈற்றடியைக் கொண்டு முடியக் காண்கின்றோம்.

**அறநெறி வழுவாத் தவத்துறை வேந்தை**
**அருமறைப் பொருளின் உள்பொருளைத்**
**துறைமதி யிட்ட காமியம் உதவும்**
**சற்குணக் கற்பக அடவியைக்**
**குறைவில் ஆனந்தத் துறையிடத்து அமர்ந்த**
**கொண்டலை லோக நாயகரை**
**மறைபுகழ்ந் தேத்தும் ஞான வாரிதியை**
**முகம்மதை என்று காண்குவனே**

இப்படி 'என்று காண்குவேன்' 'என்று காண்குவேன்!' என நூறு பாடல்களைப் பாடி முடித்துப் பள்ளிவாசலிலேயே படுத்து உறங்கிய புலவர் உமறு, தமது கனவில் நபிகள் நாயகம் அவர்களைக் காணுகின்றார். அவர்களுடைய வாழ்த்து தலைப் பெறுகின்றார். தமது வரலாற்றை உமறு தமிழில் பாட வேண்டும் என நபிகள் நாயகம் அவர்கள் கட்டளையிட்ட நிலையில் உமறு விழித்துக் கொள்கின்றார். அதன் பின்னர்ப் பாடப்பட்டதே "சீருப் புராணக் காவியம்".

சீருப்புராணத்தில் 'விலாதத்துக் காண்டம்', 'நுபுவத்துக் காண்டம்', 'ஹிஜரத் காண்டம்' என மூன்று காண்டங்கள் உள்ளன.

விலாதத்துக் காண்டம் என்பது, நபிகள் நாயகம் அவர்களின் தலைமுறையில் துவக்கி, பிறப்புக்கூறி, அவர்கள் தம் திருமணம் வரை உரைப்பதாகும்.

நுபுவத்துக் காண்டம், நபிப்பட்டம் அருளப்பட்டதில் இருந்து, மக்கமாநகரில் நபிகள் நாயகம் அவர்கள் வாழ்ந்த காலம் வரை நடந்த வரலாற்றினைக் கூறுவது.

ஹிஜ்ரத் காண்டம் என்பது, மக்கமாநகரிலிருந்து மதீன மாநகருக்கு நபிகள் நாயகம் அவர்கள் புறப்பட்டுச் சென்றது முதல் அவர்களின் மதீனு நகர் வாழ்க்கையைக் கூறுவது.

பெருங்காப்பியம் என்பது வீடு பேறு வரை கூறுவது என்பது இலக்கண வழக்கு. ஆனுல் உமறு தரும் சீரு, உறணிக் கூட்டத்தார் படலத்துடன் முடிகின்றது. நபிகள் அவர்களின் இறப்புவரை இந்நூல் உரைக்கவில்லை. எனினும் சீருப்புராணம் புலவர்கள் மத்தியிலே, பெருங்காப்பியம் என் கின்ற மதிப்புடன் திகழக் காண்கின்ருேம். சீருப்புராணத்தின் சிறப்பிற்கு இது ஒரு சான்ருகும்.

சீருப் புராணத்தில் மொத்தம் தொண்ணூற்றிரண்டு படலங்கள் உள்ளன. ஐயாயிரத்து இருநூற்று இருபத்தேழு விழுமிய செந்தமிழ்ப் பாக்கள் திகழ்கின்றன. பதினெட்டாம் நூற்ருண்டின் மையப் பகுதியில் இதன் முதற்பதிப்பு அச்சாகி யுள்ளது. ஏடுதேடிப் பதிப்பித்து வெளியிட்டவர் 'புலவர் நாயகம்' என்கின்ற விருதுப் பெயர் உடைய செய்கப்தில் காதிறு நயினுர் லெப்பை ஆலிம் புலவர் ஆவார்.

இவர் மேற்கொண்ட சுவடிதேடும் முயற்சி வெற்றி பெற்றிராவிடின், இவ்வரிய தேன்தமிழ்க் காப்பியம் நமக்குக் கிட்டாது போயிருக்கலாம். எனவே, நாடுசுற்றி, ஏடு தேடி, சீருப்புராணம் என்னும் இவ்வரிய காப்பியத்தை அச்சிட்டு வழங்கிய புலவர் நாயகம் அவர்கட்கு நன்றி கூறி நூலாய்ந்து துய்ப்போமாக!

# 2

தமிழை, சங்க காலத் தமிழ், இடைக்காலத் தமிழ், தற்காலத் தமிழ் என வகைப்படுத்துவர். இடைக்காலத் தமிழ் என்பது புராண இலக்கியம் செழித்த காலம். அக்காலப் புலவர்கள், கடவுள் வாழ்த்துப் பாடியே தமது நூலினை யாத்தளித்துள்ளனர். அந்த மரபை யொட்டியும், இஸ்லாமியப் பண்புப்படியும் கடவுள் துதியுடன் சீருப்புராணத்தைத் துவக்குகின்ருர் உமறுப் புலவர். அவர் பாடியுள்ள கடவுள் வாழ்த்துப் பகுதியில் இருபது பாடல்கள் உள.

முதலில் உள்ள 'திருவினும் திருவாய்' என்று ஆரம்பமாகின்ற பாடலைக் கடவுள் வாழ்த்து என்பதோடு, பாயிரம் என்று கொள்ளவும் இடமுண்டு.

இஸ்லாமியப் புலவர்கட்குக், கடவுள் வாழ்த்துப் பாடுவது என்பது, சர்க்கஸ் வித்தைக்காரன் கம்பியின்மீது நடப்பதினும் எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டிய ஒன்ரும். ஆம்! உருவமற்ற கடவுளைப் பாடுகின்ற அவர்கள், உவமானமாகவும் கூட உருவமுடைய பொருள்களைச் சுட்டாமல் பாடவேண்டும். இந்த மரபு நெறியை உமறு முறையுடன் பிழையின்றிப் பின்பற்றிச் செல்கின்ருர். 'திருவினும் திருவாய்' என்று எழும் பாட்டைப் பல கோணங்களில் ஆய்ந்து பயன்துய்க்க இயலும். ஆம், முழுமையாக இந்தப் பாட்டைப்படிக்கும்போது இது கடவுள் பற்றிய விளக்கமாக இருக்கக் காண்கின்ருேம். விளக்கணி படுத்திப் பார்த்தால், இறைவனை உள்ளத்தில் எவ்வாறெல்லாம் பொருத்தலாம் எனக் காணலாம். மூன்ருவதாக, இப்பாடலைப் பாயிரமாகக் கொண்டு நோக்கிஞல்தான்,

நூல் செய்வதின் நோக்கம், தம்மனத்தகத்தே மட்டுமின்றி நூலினைக் கற்கும் யாவருடைய மனத்திலும் இறைவனைப் பொருத்துதல் தமது நோக்கமென உமறுப்புலவர் கூறுகின்றார் என்பது விளங்கும். இப்படி ஒரு பாடலைப் பல கோணங்களில் கண்டு, காணுந்தோறும் அதன் வடிவில் ஒரு புதுமை தோன்றுவதை உணர்ந்து இன்பம் துய்க்குமாறு அமைவதே சிறப்புடைய கவிதை யாகும். அத்தகு முறையில் பாடல் புனையும் கவிஞனையே காலத்தை வென்ற கவிஞன் எனப் புலவர் உலகம் போற்றும். உமறுப் புலவர் தமது முதல் பாட்டிலேயே இந்த அரிய வெற்றியை ஈட்டுத் திகழக் காண்கிறோம். இவ்வுயரிய பாடலை ஒருமுறை பாடிப் பார்த்துக் கொண்டால் உமறுவின் உயர்வை மட்டுமின்றி, பாடலின் உயர்வையும் ஓர்ந்து துய்த்து மகிழ முடியும்.

**திருவினும் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்**
**தெளிவினும் தெளிவதாய்ச் சிறந்த**
**மருவினும் மருவாய் அணுவினுக் கணுவாய்**
**மதித்திடாப் பேரொளி அனைத்தும்**
**பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்**
**பூதலத் துறைந்தபல் உயிரின்**
**கருவினும் கருவாய்ப் பெருந்தலம் புரந்த**
**கருத்தனைப் பொருத்துதல் கருத்தே !**

இப்பாடலை முழுமையாகப் படிக்கிறபோது, உருவமற்ற பொருள்களாகப் பொறுக்கி எடுத்து, அதனுள் அதுவாய் இறைவன் இயங்குவதை உமறு கூறக் காண்கிறோம்.

இத்தகு கடவுளை எவ்வாறு மனத்தில் பொருத்திக் காண்பது? என்னும் கேள்விக்கு விடைகாண இப்பாடலை விளக்கணியாக்குதல் வேண்டும்.

விளக்கணி என்பது பாட்டில் உள்ள ஒரு சொல்லைத் தொட்டுக் கொண்டு, பாடலின் பொருள் துலங்க விளக்கிக்

காட்டுவதாகும். அம்முறையில் இப்பாடலின் இறுதியிலுள்ள 'கருத்தனைப் பொருத்துதல் கருத்தே' எனும் தொடரை—(கடை விளக்கை) ஏனைய ஒவ்வொரு சொல்லினேடும் இணைத்துப் பார்த்தால், கடவுளை மனத்தில் பொதித்துக் கொள்ளும் வகையினைக் காணலாம். அதாவது, முதலில் உள்ள 'திருவினும் திருவாய்' என்பதோடு 'கருத்தனைப் பொருத்து தல் கருத்தே' என்பதையும் இணைத்தால், திருவினும் திரு வாய்க் கருத்தனைப் பொருத்துதல் கருத்தே, என்றுதலைக் காணலாம். இவ்வாறே பாடல் முழுவதுமாக நோக்கின், பொருளினும் பொருளாய்க் கருத்தனைப் பொருத்துதல் கருத்தே! தெளிவினும் தெளிவதாய்க் கருத்தனைப் பொருத்து தல் கருத்தே! சிறந்த கருத்தனைப் பொருத்துதல் கருத்தே! அணுவினுக்கணுவாய்க் கருத்தனைப் பொருத்துதல் கருத்தே! மதித்திடாப் பேரொளி அனைத்தும் பொருவினும் பொரு வாக் கருத்தனைப் பொருத்துதல் கருத்தே! வடிவினும் வடிவாய்க் கருத்தனைப் பொருத்துதல் கருத்தே! பூதலத் துறைந்த பல்லுயிரின் கருவினும் கருவாய்க் கருத்தனைப் பொருத்துதல் கருத்தே! பெருந்தலம் புரந்த கருத்தனைப் பொருத்துதல் கருத்தே எனக் கடவுளை மனிதன் தன் மனத்துள் பொருத்துகின்ற, பொருத்த வேண்டிய பாங்கினையெல்லாம் விளக்குவதாகக் காணலாம். இவற்றிற்கப்பால் இப்பாடலைப் பாயிரமாகக் கொண்டு நோக்கின், கருத்தன் என்னும் இறை வனைத் தம் மனத்திலும் தமிழ்உலகினர் மனத்திலும் புகுத்து வதற்கான வழி நபிகள் நாயகம் அவர்களின் வாழ்க்கையை விளக்கிக் கூறுவதுதான். அந்நோக்குடன்தான் இச் சீருப் புராணத்தைப் பாடலுற்றேன் என உமறு பாயிரம் கூறுகிருர் என்று கொள்ள இயலும். 'இத்தகு' சிறந்த பாடலை முதல் பாட்டாகக் கொண்டு சீருப்புராணம் ஆரம்பமாகின்றது.

அவையடக்கம் பாடுவது என்பதும் இடைக்காலத் தமிழ்ப் புலவர்களின் வழக்கமாக இருந்து வந்துள்ளதென்பதைக் காண்கிருேம். கம்பன் தனது காப்பியத்தில்,

**ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றொரு**
**பூசை முற்றவும் நக்குபு புக்கென**
**ஆசை பற்றி அறையலுற் றேன்மற்றுக்**
**காசில் கொற்றத் திராமன் கதையரோ**

என, அவையடக்கம் பாடியுள்ளான். இது போன்றே தத்தம் மனவள வளத்திற்கேற்ப,கற்பனை நயத்தோடு சொற்சுவையும் பொருட்சுவையும் சொட்டப் புலவர்கள் அவையடக்கம் பாடியுள்ளார்கள். உமறு, இயற்கைக்கு மாறான கற்பனையில் திளைக்காமல், பொருந்தக் கூறுவது எனும் பண்புடன் அவையடக்கம் பாடுகின்றார்:

**படித்த லத்தெழு கடல்குல கிரிநிலை பதற**
**எடுத்து வீசிய சண்டமா ருதத்திற்கு எதிரே**
**மிடித்து நொந்தசிற் றெறும்புஒரு மூச்சுவிட் டதுபோல்**
**வடித்த செந்தமிழ்ப் புலவர்முன் யான்சொலும் மாறே!**

இப்பாடலில் தமக்கு முன்தோன்றி, புகழ்மிகு காவியங்கள் பாடிப் போந்துள்ள புலவர்களைச் சண்டமாருதம் என்றால் அவர்கள் முன்னே வருந்தி நொந்து இளைத்த சிற்றெறும்பு மூச்சுவிட்டதற் கொப்பானதே எனது பனுவல் என்று உமறுப் புலவர் அடக்கத்துடன் அவையடக்கம் கூறக் காண்கிறோம். இன்னும் அவருக்கு முன்பு தோன்றித் தமிழ் வளர்த்துப் போந்துள்ள செந்நாப் புலவர்களின் பாடல்களை இடி இடித்திடும் ஆரவாரம் என்றால், என்னுடைய பாடல்களை அவ்விடியின் முன்னர், கைவிரல்களை இணைத்து நொடிநொடித்தால் போன்றதே எனவும் அவையடக்கம் கூறுகின்றார் உமறு.

**படிப டித்தசெஞ் சொற்புல வோர்முனம் பகர்தல்**
**இடிஇ டித்திடும் ஆரவா ரத்தினுக்கு எதிரோர்**
**நொடி நொடிப்பது போலும்ஒத் திருந்ததென்னூலே**

கடவுள் வாழ்த்துப் பகுதியின் இறுதியில் இவ்வரிய அவையடக்கப் பாடல்களையும் இணைத்துப் பதிப்பித்துள்ளார் பதிப்பாசிரியர்.

கடவுள் வாழ்த்துப் பகுதியில் உள்ள பாடல்கள் அனைத்தும் சந்தத்துடன் பாடி மகிழக் கூடிய ஓசை நயம் உடையவை யாகும்.

**ஆல கால வாரி போலு மாகொ டூர மாகிய**
**கால கேள்வி தான டாத கார ணீக ராளவே**
**தால மீதி லாதி தூதர் சார மேவு வாழ்வினோர்**
**நாலொ டாறு பேர்கள் பாத நாவில் நாளு மோதுவாம்.**

இது ஆரம்ப நாளில் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்ற பத்துப் பேர்களை வாழ்த்துவது.

**படிகிடு கிடெனநாக முடிநெறு நெறெனவாரி**
**படுதிரை யளற தாகவே**
**வடவரை அசையவான முகடுடை படவருத**
**மழைமுகில் சிதறி போடவே**
**அடையலர் கொடிகள்கோடி யிடிபடு படலதூளி**
**அலரியி னுடலில் மூழ்கவே**
**நடமிடு கடினவாசி மிசைவரு சமரசூர**
**நரர்புலி அலியை யோதுவாம்.**

இப்பாடலில் நபிகள் நாயகம் அவர்களின் மருகரும் நான் காவது கலிபாவுமாகிய அலி ரலி அவர்கள் புகழ்ந்துரைக்கப் பட்டுள்ளார்கள்.

**கவியால் உரைத்தபுகழ் பெறுவார் மிகுத்தகவி**
**அடைவார் கலக்க மறவே!**
**செவியார மெய்ப்பொருளை அறிவார் மனத்திலுறு**
**செயல்கே டகற்றி விடுவார்**
**புவியார மொய்த்தநெறி மறைநா லினுக்குமொரு**
**பொறியா யுதித்த வடிவார்**
**நவியார் சுவர்க்கபதி நயினர் பதத்துணையை**
**நடுநாவில் வைத்த வர்களே!**

இப்பாடல் நபிகள் நாயகம் (சல்) அவர்களின் உயர்வை, மேன்மையை எடுத்தியம்பி, அவர்கள் அரியமலரடியிணையைத் துதிப்பதின் ஏற்றத்தைப் புகல்வது.

*சீருப் புராணத்தில்* உள்ள கடவுள்வாழ்த்துப் பகுதியைப் பொருள் உணர்ந்து படித்தறிவோர் இஸ்லாமியச் சமயம் தன்னை வளர்த்த சான்றோரையும், அந்தச் சான்றோர் உலகு தோன்றிய காலந் தொட்டே தோன்றித் துலங்கியவர்கள் என்பதையும், அவர்கள் எல்லா நாட்டிலும் எல்லா மொழிகளிலும் தோன்றிய சான்றோர் ஆவார் என்பதையும் இந்த அடிப்படையின் மீதே இஸ்லாம் மார்க்கம் நிலைநிறுத்தப்பட்டிருக்கிறதென்பதையும் அறிய முடியும்.

ஓர் இறைவனை—உருவமற்ற இறைவனை ஓர்ந்து சிந்தித்து, தெளிந்து மனத்திருத்தி வணங்கி வாழ்வதே இஸ்லாம் என்று தெளிய இயலும்.

இந்த வரிசையில் இறுதியாக மக்களை நேர்வழிப்படுத்த வந்தவர்களே மக்கத்து வள்ளல் என்பதையும் உணர இயலும்.

கடவுள் வாழ்த்திற்குப் பின்னர் வருவது நாட்டுப் படலமும் நகரப் படலமும் ஆம். அவ்விரண்டையும் சிறிது நோட்டமிட்டுக் கொண்டால், பின்னர்ச் *சீருப்புராண* வரலாற்றுக்குள் செல்கின்றோம். இந்த நினைவோடு நாட்டுப் படலம் நகரப் படலங்களை அடுத்து நுகர்வோம்; நுகர்ந்து இன்பம் துய்ப்போமாக.

# 3

வடமொழி மரபினை யொட்டி, தமிழில் காவியங்கள் தோன்றிய காலத்திலிருந்து கடவுள் வாழ்த்து, நாட்டுப்படலம் நகரப் படலம், ஆற்றுப்படலம்,அரசியற்படலம் என்றெல்லாம், காப்பியக் கதைக்குள் நுழையுமுன்னர்ப் பாடுவது இயல்பாக இருந்து வந்துள்ளது.

**வாங்கரும் பாதம்நான்கும் வகுத்தவான் மீகிஎன்பான்**
**தீங்கவி செவிக ளாரத் தேவரும் பருகச் செய்தான்**
**ஆங்கவன் புகழ்ந்த நாட்டை அன்பெனும் நறவம் மாந்தி**
**மூங்கையான் பேச லுற்ருன் என்னயான் மொழிய லுற்றேன்**

என்பதாகக் கம்பர் நாட்டுப் படலம் இயம்புகின்ருர் தமது நூலில். இதிலிருந்து நாட்டுப் படலம், நகரப் படலம், ஆற்றுப் படலம் அரசியற் படலம் என நூலின் நுழைவாயிலில் பாடுவது வடமொழி இலக்கிய மரபென்ருகின்றது. திருத்தக்க தேவர் தம் சிந்தாமணி காப்பியத்தில்,

**காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் நெற்றிப்**
**பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து**
**தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்**
**ஏமாங் கதமென்று இசையால் திசைபோய துண்டே**

என்று ஏமாங்கத நாட்டணி பாடப் போந்ததாக இயம்பிப் பாடுகிருர். இவர்களின் மரபினை யொட்டித் தமிழில் சீருப் புராணம் பாடப்போந்த உமறுப்புலவரும் நாட்டுப் படலமும் பாடி அளித்துள்ளார். ஆற்றுப் படலம் அரசியல் படலம் என்றெல்லாம் இவர் விரித்துரைக்கவில்லை.

உமறுப் புலவர் பாடியுள்ள நாட்டுப்படலப் பாடல்களில் காணப்படுகின்ற உயரிய வருணனை தமிழ் நாட்டைப் படம் பிடித்துக் காட்டுவதற்கொப்பத் திகழ்கின்றது. எனவே அப் பாடல்களைக் கண்ணுறுவோம்: உமறுப்புலவர் அரபு நாட்டைத் தமிழ் நாடாகவே நினைந்து பாடியுள்ளார் எனக் கூறக் காண் கின்றோம். மேலெழுந்த வாரியாக நோக்கின், இக்கூற்றில் உண்மை இருப்பது போன்றே தோன்றும். ஆனால் கூர்ந்து நோக்கின், தாம் பாடுகின்ற நாடு இதுதான் எனக் குறிப்பிட்டு உமறுப் புலவர் பாடியிருக்கவில்லை என்பது புலப்படும். அவர் பாடியுள்ள நகரப் படலத்தில் மக்கமா நகர்வளம் சிறிதெடுத் திசைப்பாம் என்று மக்க மாநகரினைப் பாடப்போவதாகக் கூறிப் பாடியிருக்கக் காண்கின்றோம். இதுபோன்று அரபு நாட்டையோ, வேறு எந்த ஒரு நாட்டினையோ குறித்துப் பாடாமல்,பொதுப்படையாகவே நாட்டுப்படலம் பாடியுள்ளார். அவர்தம் பாடல்களில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய் தல் நிலங்கள், அவற்றின் வளங்கள், அவற்றினிடையே பெருக்கெடுத்தோடுகின்ற வெள்ளம், விவசாயப் பணி, அதில் ஈடுபட்டுழைக்கின்ற மக்கள், அவர்களின் உழைப்பால் ஈட்டிய தானிய மணிகள், அவற்றைச் சுமந்து செல்கின்ற வண்டி வாகனங்கள் எல்லாமே விரித்துரைக்கப்பட்டிருக்கக் காண் கிறோம். ஆனால் அந்த நாடு எது எனச் சுட்டாமல் தெளிவாகத் தெரிகின்றது. நாடு இன்னதெனச் சுட்டாமல் ஏன் உமறு பாடி யுள்ளாரென்றால், நாட்டுப் படலம் பாடுவது அவர் காலத் தமிழ்க் காவிய மரபு என்பதால் பாடியுள்ளார் எனலாம். அரபு நாட்டைப் பாடி இருக்கலாமே என்று கேட்பதாயின், மங்களமாகப் பாட வேண்டும் என்பது மரபு. அரபு நாடு பாலை வன நாடு ஆனதால் அந்நாட்டைப் பாடுவது மங்களமாகா தென்பதால் பாடவில்லை எனக் கொள்க. இதே போன்றே அரபு நாட்டில் ஆற்றுவள மின்மையால் ஆற்றுப் படலம் பாட வில்லை என்றும் அந்நாட்டில் அக்காலை அரசு என்று ஒன்றின் மையால் அரசியல் படலம் பாடவில்லை என்றும் கொள்ளலாம். ஆனால் மரபை யொட்டி நாட்டுப் படலம் பாடிப் போந்துள்

ளார். எனினும் அது அவர் கண்ட கற்பனை நாடேயன்றி அரபு நாடோ தமிழ் நாடோ அன்று எனத் தெளிக. கற்பனையில் கண்ட நாடானதாலே, தம் மனவளத்தை யெல்லாம் அந்த நாட்டின் வளமாக்கிப் பாடியுள்ளார் கவிஞர். சான்றிற்காக ஓரிரு பாடல்களை விரித்துக் காண்போம்.

தாம் கண்ட கற்பனை நாட்டின் கழனியினூடே நடக்கின்றார் உமறுப்புலவர். அது கார் காலம் போலும்! கழனிகளிலே நடவு முடிந்து பயிர்கள் ஒன்று பத்தாகக் கிளைத்துத் தழைத்துப் பச்சைப் பசேலென்று செழித்தோங்கி வளர்ந்திருப்பதை அவர் தம் கண்கள் காண்கின்றன. அவருடைய புலமை மனம், அப் பயிரின் செழிப்பிற்கு, வளர்ச்சிக்கு உவமானம் கண்டு மகிழ்கின்றது. பாடுகின்றார்:

**அருமறை நெறியும் வணக்கமும் கொடையும்**
**அனபும் ஆதரவும்நல் லறிவும்**
**தருமமும் பொறையும் இரக்கமும் குணமும்**
**தயவும்சீர் ஒழுக்கமும் உடையோர்**
**பெருகிய செல்வக் குடியோடு கிளையும்**
**பெருத்தினிது இருந்துவாழ் வனபோல்**
**மருமலர்ப் பழனக் காடெலாம்நெருங்கி**
**வளர்ந்தது நெட்டிலை நாற்றே!**

ஒன்றை ஒருவருக்கு ஈந்தால் ஈந்தவருக்கு அதனைப் பத்தாகப் பெருக்கி அளிப்பதாக இறைவன் உரைத்துள்ளான். இந்த வாசகத்தை அறிந்து அதன்படி நடந்து மனிதர்களிடையே அன்பும் ஆதரவும் இரக்கமும் காட்டி அவர்கட்குத் தேவைப்பட்டதை ஈந்து, கடவுளை வணங்கி வாழுகின்ற ஒழுக்கமும் பண்பும் நேர்மையும் உடைய வள்ளல்களின் மனை எவ்வாறு செல்வச் சிறப்போடு மக்கள் சுற்றம் சூழச் சிறந்து பெருகி வாழுமோ அவ்வாருகக் கழனியில் நடப்பெற்றுள்ள ஒற்றை நாற்றனது பலவாக வெடித்துத் தழைத்தோங்கிச் செழித்திருப்பதாக உமறு பாடியிருப்பது உன்னி யுன்னி

மகிழத் தக்கதாகும். இஸ்லாமியர்களோ ஒன்றளித்தால் பத்து நல்குவேனென இறைவன் உரைத்திருப்பதை இப் பாடலில் கண்டு மகிழ்வார்கள்.

துன்பம் நேருங்கால் மனித இனம் மட்டுமின்றி, உயிரினம் அனைத்துமே பகை மறந்து ஒன்றிணைந் தொழுகும் நியதி உலகில் நிலவுவது கண்கூடு. இந்த உயரிய நியதியை, மழையும் குளிரும் தோன்றி வாட்டுகின்ற போது, காட்டிலும் காடடர்ந்த மலையினூடும் வாழ்கின்ற யானையும் சிங்கமும் போன்ற ஒன்றுக்கொன்று பகை கொண்டு வாழும் இயல் புடைய மிருகங்களெல்லாம் கூடத் தம் பகை மறந்து ஒன்று பட்டு நேசமாய் நெருங்கி உறைந்தன என்று உமறுப் புலவர் பாடியிருப்பதைப் படிக்குங்கால் இடுக்கணிலும் இறைவன் விளைவிக்கின்ற நன்மையை நினைந்து மகிழவைக்கின்றது. இறைவன் படைத்துள்ள இன்ப துன்பங்கள் அனைத்துமே நன்மை பயப்பதற்கே என ஓர்ந்து தெளிய முடிகின்றது.

**பம்மி எங்கணும் பொழில்தரு சாரல்வாய்ப் பட்டுக்**
**கம்மி னத்துஅக டுறக்கொடு கியகுளிர் கலக்க**
**மும்ம தக்கரி களும்அரி களும்முரண் அறவே**
**சம்ம தித்தொரு புடைகிடப் பனஎனச் சாரும்.**

இதுபோன்ற அழகிய இனிய நெறியுடைய ஐம்பத்து ஆறு நயமிளிர் பாக்களை உமறு பாடிய நாட்டுப் படலத்தில் காண்கின்றோம்; கண்டு கற்று மகிழ்கின்றோம்.

நாட்டுப் படலத்தைப் போலின்றி, நகரப் படலத்தைப் பாடுங்கால் கற்பனையைத் தவிர்த்து, மக்கமா நகர் வளம் சிறி தெடுத்து இசைப்பாம் எனக்கூறிப் பாடத் தொடங்குகின்றார் உமறுப் புலவர். இது கூர்ந்து நோக்கத்தக்கதாம்.

அக்கால மக்கமா நகரம் வளம் நிறைந்த நகரம் என்று அறிந்தோர் உரையார். அந்நகரில் உள்ள வளமெல்லாம் வணிக வளம்தான்; எனவே அந்நகரின் வணிக வளத்தைச் சில பாடல்களில் கூறுகிறார், உமறு.

அங்குள்ள கஃபத்துல்லா என்கின்ற இறையில்லம் மிக மிகத் தொன்மையும் புனிதமும் உடையது. நபிகள் நாயகம் அவர்கள் தோன்றி, உருவமற்ற ஓரிறைவன் நெறியைப் பரப்புவதற்கு முன்னம் சுமார் ஐந்நூறு ஆண்டுக் காலமாக அந்தப் புனிதப் பள்ளிவாசலில் உருவ வணக்கம் நிலவி நின்ற தென்றாலும், அதற்கு முன்னர் உருவ வழிபாடு இல்லா ஒரு புனித ஆலயமாகத்தான் அது இருந்ததென்பதே வரலாறு. அரபு நாட்டினர் அனைவரும் ஆண்டிற்கொருமுறை அப் பள்ளி வாசலில் கூடி இறைவணக்கம் புரிந்து போவது தொண்டு தொட்டு நடைபெற்று வருகின்ற புனிதச் செயலாகும். எனவே அந்தக் கஃபத்துல்லா என்கின்ற பள்ளிவாசலைப் பாடுகின்றார் உமறு. முடிவாக மக்கமா நகருக்குள்ள சிறப்பு,நபிகள் நாயகம் பிறந்து உருவமற்ற ஓரிறை நெறிக்கு அங்குள்ள மக்களைத் திருப்பியதும், அதன் காரணமாகத் திருக்குர்ஆனை ஓதுகின்ற வர்களாகவும், இறைவனைத் தோத்தரிப்பவர்களாகவும், தொழு தேற்றுபவர்களாகவும், அந்நகர மாந்தர் அனைவரும் வாழ்ந்தனர் என்பதேயாம். இந்த அரிய சிறப்பை இறுதியில் பாடி, நகரப்படலத்தை முடிக்கிறார் புலவர் உமறு.

**மறையின் மிக்கவர் ஓதிய ஓசையும் வரிசைத்**
**துறவின் மிக்கவர் திக்கிறின் ஓசையும் சூழ்ந்தே**
**இறை வனைத்தொழுது இருகையும் ஏந்திய ஆமீன்**
**முறைமு றைப்படி கூறிய ஓசையும் முழங்கும்**

மிகுந்த அறிவுடையோர் ஓதிய திருக்குர்ஆன் என்னும் திருமறையின் ஓசை, உயர்ந்த துறவு நிலையை மேற்கொண் டோர் ஓதுகின்ற இறைப் புகழ்ச்சித் தோத்திரமாகிய திக்ருவின் ஓசை, ஒன்று சேர்ந்து கூட்டமாக இறைவனைத் தொழுவோர் நடத்துகின்ற கூட்டுப் பிரார்த்தனையின்போது, அதனை ஏற்று வழிமொழிகின்ற ஆமீன் என்னும் ஓசை ஆகிய னவே மக்கமா நகரில் முழங்குவதாக இப்பாடலில் உமறு கூறுகின்றார்.

ஆக, உமறுப் புலவரின் நாட்டுப் படலம் கற்பனை எனக் கண்டோம். நகரப் படலத்தை மிகமிக எச்சரிக்கையாகவும் படிப்போர் புரிந்து வியந்து போற்றும்படியாகவும் பாடியுள்ளார் என்றும் தெரிந்துகொண்டால், உமறுவின் புலமையும், அக்கால அரபுநாடு பற்றிய அவர்தம் பூகோள அறிவும் புலப்படும். இனி உமறு, நபிகள் நாயகம் அவர்களின் வரலாற்றுக்குள் நம்மை அழைத்துச் செல்லவிருக்கின்றார். அதனை அடுத்துக் காண்போம்.

# 4

சீருப் புராணக் காப்பியத்தில் நபிகள்நாயகம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினைச் செப்ப முற்படுகின்ற உமறுப்புலவர், நாயகத் திருமேனி அவர்களின் தலைமுறையிலிருந்து ஆரம்பிக் கின்றார்.

நபிகள் நாயகம் அவர்கள் இஸ்லாம் என்னும் ஒரு பேரியக்கத்தை விளக்கம் செய்து நிலைபெறச் செய்தவர்கள் ஆதலின், அந்த இயக்கம் தோன்றிய வரலாற்றை உமறு முத லில் கூறவிழைகின்றார். இஸ்லாமியப் பேரியக்கம், நமது நாட் டிற்குப் புதிய அறிமுகம் ஆனதினால், அப்பேரியக்கத்தின் தன் மையை அதனுடைய தோற்றக் காலத்திலிருந்தே கூறிவிட நினைந்தே உமறு தலைமுறைப் படலம் கூறுகின்றார் எனக் கொள்ளவேண்டும். மேலும், நபிகள் நாயகம் அவர்களின் வரலாற்றைக் கூறுகின்ற முறையும் இதுவேயாம்.

நபிகள் நாயகம் அவர்களின் தலைமுறைப் படலத்தைப் பாட விழைகின்ற உமறுப்புலவர் மகிழ்வோடும் 'கிராண்ட் ஓப் பனிங்' (GRAND OPENING) என்பார்களே அது போன்று மிகப் பொலிவோடும் ஆரம்பிக்கின்றார்.

மகிழ்ச்சிக்குக் காரணம், அருளரசும், ஆன்மிக அரசும் நடத்திய வள்ளல் மாநபி அவர்களின் வரலாற்றைச் சொல்லப் போகிறோம் என்பதாகலாம். அத்தோடு, வரண்ட பூமியுடைய மக்க மாநகரைப் பாடிச் சோர்ந்த மனம், வளம் பூத்த மதீனமா நகரினைப் பாடுகின்ற வாய்ப்புக் கிட்டுவதாலும் இருக்கலாம். எனவே சோர்வகன்ற மனத்தோடு, சுறுசுறுப்படைந்த தன்மை யில், துள்ளு தமிழ் நடையில், கம்பீரமாக உமறு தரும் சீருப் புராணத்தின் தலைமுறைப் படலம் துவங்குகின்றது.

**மருவிரி வாவி செந்தாமரை மலர்க் கைகள் ஏந்தச்**
**சொரிமது சிந்துஞ் சந்தத் துடவைசூழ் மதினுதன்னில்**
**தெரிதர அரசு செய்து தீன்நிலை நிறுத்திச் செல்வம்**
**தருநபி இரசூலுல்லா தலைமுறைத் தோற்றம் சொல்வாம்.**

சீறுப்புராணத்தின் தலைமுறைப் படலத்தில் உள்ள முதல் பாட்டு இது. இந்தப் பாட்டின்மூலம், நபிகள்நாயகம் அவர்கள் மதின மாநகரில் அரசு நடத்தியிருந்தவர்கள் எனத் தெரிந்து கொள்கின்றோம். அங்கிருந்துதான் 'தீன்' நெறியாகிய இஸ்லா மியப் பேரியக்கத்தை இவ்வுலகின்கண் நபிநிலைநிறுத்தினார்கள் என்கின்ற உண்மையையும் உள்ளத்தில் நிரப்பிக் கொள் கின்றோம். இவ்வுலகு, மறுவுலகு இரண்டிற்குமான நற்செல் வத்தை அருளி அளித்தவர் இறைவனின் திருத்தூதரான வள்ளல் மாநபி என்பதை ஓர்ந்து உணர்கின்றோம். இவற்றோடு அரபுநாடு முற்றிலுமே பாலைவனநாடு அன்று, அங்கே மதின மாநகரினையொத்த சோலைவள நகரங்களும் உண்டு என அறி கின்றோம். ஆம். அரபு நாட்டைத் தமிழ் நாடென நினைத்துப் பாடிவிட்டார் உமறு என்னும் கூற்றினருக்கு இது ஒரு விளக்கம். வாசம் கமழுகின்ற தாமரை மலர்கள் பூத்துத் திகழ் கின்ற ஓடைகளையும், சந்தத்துடவை என்னும் சோலைகளையும் மதினத்தில் காணலாம் என்பதை இப்பாடல் மூலம் உணர்த்து கின்றார் புலவர் உமறு.

சீறுப்புராணம் தலைமுறைப் படலத்தில் 67 விருத்தப் பாக்கள் உள்ளன. இவை அனைத்தும் அழகிய பாக்கள் என்பது மட்டிலுமன்று; இந்த உலகத்தை இறைவன்படைத்த விதமும், ஏன் படைத்தான் என்பதும், படைப்புகட்கெல்லாம் மூலகாரண மாய், முதல் படைப்பாய் நூரேமுகம்மது என்னும் ஒளித்திவலை யாய்த் தன்னிலிருந்து நபிகள் நாயகத்தை இறைவன் தனித்து ஆக்கினான் என்பதும் விளக்கப்படுகின்றன. ஏறக் குறைய இப்படலத்தில் கூறப்பட்டுள்ள அனைத்தும் பைபிள் பழைய ஏற்பாட்டில் இருக்கக் காணலாம். நபிகள் நாயகம்

பற்றிய விரிவுமட்டுமே பைபிளின் பழைய ஏற்பாட்டில் காணப் படா தொன்றும்.

ஆதி மனிதனை ஆதம் என்ற பெயரில் இறைவன் படைத் தான். அவரை ஆதியில் சொர்க்கபுரியில் வைத்தான். அங்கே அந்த ஆதி மனிதர் இறைவனின் திருநாமம் பேரொளியாக இலங்குவதைக் கண்டார். அப்பெயரின் கீழ் இன்னொரு பெயர் இலங்கிற்று. அது எவருடைய பெயர் என்று, ஆதிமனிதராகிய ஆதம் இறைவனிடத்தே கேட்டார்.

**கணித்தள வறுக்க வொண்ணுக் கடவுளே குதாயே நீங்கா**
**மணிக்கதி ரெறிக்கும் சொர்க்க வாயிலின் நிலைக்கு**
**மேல் பால்**
**பணித்தநின் திருநாமத்தின் உடன்ஒரு பெயரைப்**
**பண்பாய்**
**அணித்துவைத் திருக்கக் கண்டேன் அவர் எவர்**
**அறியேன் என்றார்.**

இது, ஆதி மனிதராகிய ஆதம் ஆண்டவன் பால் கேட்ட கேள்வி. இன்னதன்மை, இன்னவடிவம், இப்படித்தான் இருக் கின்றாய் நீ என்று அறுதியிட்டு எவராலும் உரைக்க ஒண்ணுக் கடவுளே! சொர்க்கவாயிலின் மேல்பால் உன்னுடைய பெய ருடன், வேறு ஒரு பெயரும் காணப்படுகின்றதே! அது யாரு டையது? என ஆதம் கேட்டார் என்பதே இதன் சுருக்கமான பொருள்.

**மாதர்சூல் அகட்டுள் தோன்று மனுநெறி ஆதமேநின்**
**காதலில் உதவு கின்ற கான்முளை அதிலோர் பிள்ளை**
**வேதநா யகமாய் எங்கும் விளங்குதீன் விளக்காய்ப்**
**பின்னுள்**
**பூதல நபியாய்க் காணப் படைத்தனன் புகலக் கேண்மோ**

முதல் மானுடராகிய ஆதம் அவர்களின் கேள்விக்கு ஆண்டவன் தந்த பதிலாக இந்தப் பாடல் அமைந்துள்ளது.

இது உமறுப் புலவரின் கற்பனையன்று. இஸ்லாம் மார்க்கம் இயம்புகின்ற ஆகம வரலாறு.

முதல் மனிதராகிய ஆதம் ஆண்டவனால் நேரடியாக முழு மனிதனைப் படைக்கப்பட்டவர். அவர் குழந்தை வடிவம் உற்றவரல்லர். எனவே அவருக்குத் தந்தை இல்லை. தாய் வயிற்றில் கருவாகத் தோன்றி உருவானவரும் அன்று. இது, மரம் முந்தியா வித்து முந்தியா என்னும் கேள்விக்கு, மரமே முந்தியது எனக் கூறுவதாய் அமைந்தது. எனவே தாயின் வயிற்றினின்றும் பிறவா ஆதமே, என ஆண்டவன் அவரை விளித்து,நீர் காணுகின்ற பெயருக்குரிய அந்தஒளி, பின்னாளில், உமது பிள்ளைகளில் ஒன்றாக உலகின்கண் தோன்றற்குரியது. அப்பிள்ளை உலகில் நபிமார்களின் நாயகமாக, இறுதி நபியாக அமையும். வேத நாயகமாக விளங்கி, அறியாமை இருளில் உள்ள மக்களுக்கு நேர்வழியைக் காட்டுகின்ற ஒளிவிளக்காகத் திகழும் என்று கூறி, மேலும் கேளும் ஆதமே என்று இயம்புவதாக இப்பாடல் தோற்றமளிக்கின்றது. மீண்டும் நினைவில் கொள்வோம். இது இஸ்லாமிய ஆகமம். இதனை அழகியபாடலாக ஆக்கியுள்ளார் புலவர் உமறு.

**கலைமறை முகம்ம தென்னும் காரணம் இல்லை யாகில்**
**உலகுவின் இரவி திங்கள் ஒளிர் உடுக் கணம் சுவர்க்கம்**
**மலைகடல் நதிபா தாளம் வானவர் முதலாய் உம்மை**
**நிலையுறப் படைப்பதில்லை எனஇறை நிகழ்த்தினானே !**

முன்னம் உள்ள பாட்டின் தொடர்நிலைப் பாட்டாக அமைந்ததே இப்பாட்டு. முதற்பாட்டின் இறுதியில் 'புகலக் கேண்மோ' என ஆதத்திற்குக் கூறிய இறைவன், மேலும் விளக்கந் தருவதாக அமைந்தது இப்பாடலின் கருத்து.

கலை என்பது மனிதனை மேல்நிலைப் படுத்துவது. அவ்வகையில் நிகரற்றுத் திகழ்வது வேதம் என்னும் மறை. அந்த மறையே வடிவ முற்றது போன்றவர்களே முகம்மது என்னும் நபிகள் நாயகம். அவர்களே அனைத்தும் தோன்றுவதற்கான

காரணப் பொருள் என்று, பரம் பொருளாகிய இறைவன் ஆதத்திற்கு உரைக்கின்ருன். உரைத்து, காரணம் இன்றிக் காரியம் ஆகா. எனவே கலேமறை முகம்மது என்னும் காரணம் இல்லேயாகில் உலகு, வானம், சூரியன், சந்திரன், நட்சத் திரங்கள், சுவர்க்கம், மலே, கடல், நதி. பாதாளம், அமரர்கள் ஆகியவற்றுள் எது ஒன்றையுமே படைக்கின்ற, படைக்க வேண்டிய காரியம் இல்லே. ஆதமே உம்மையும்கூடப் படைக் கின்ற வேலே தேவை யற்றதாம். இதனே உணர்வீராக! என ஆண்டவன் முதல் மனிதரான ஆதத்திற்கு விளக்கம் உரைத்த ஆகமத்தை இப்பாட்டு நிலேப்படுத்துகின்றது.

இப்பாடலில் பொதிந்துள்ள பொருள் மிக ஆழமானது, விரி வான விளக்கம் கூறத்தக்கது; படைப்பிற்கான அடிப்படை ஆதாரம் எது என்பதை நெஞ்சில் நிரப்புவது.

ஒன்றை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். தத்துவங் களேக் கவிதையில் கொணர்வது கடினம். அப்படிக் கொணரும் போது, புற அழகினேக் கூறுகின்ற சொற்களேப் பயன்படுத்த இயலாது, கூடாது. அந்தத் தத்துவங்களேக் கூறுகின்ற சொற் களின் உட்பொதிந்துள்ள கருத்துக்கள் தாம் அச்சொற்கட்கு மட்டுமின்றி, தம் மனத்திற்கும் ஆனந்த அழகைத் தருவன. எனவே, பாடலேப் படிக்கின்ற நாம் எவ்வளவு பெரிய அரிய உயரிய தத்துவத்தை இப்பாடலினுள் கவிஞன் கொண்டு வந்து விட்டான் என்று கண்டுவப்பதே சிறப்பு. இந்த நிலேயை அடையக் கவிஞன் கூறுகின்ற தத்துவம் நமக்குத் தெரிந்திருத் தல் வேண்டும். சீருவில் உமறு தருகின்ற பாடல்களில் பொதிந் துள்ள கருத்துக்களேத் தெரிந்திருந்தால் அன்றி, பாடலின் உயர்வு நோக்கி நாம் உவகை எய்த இயலாது,

இந்தப் பாடலுக்குப் பின்னர், சீருவின் தலேமுறைப் படலத்தில் உள்ள பாடல்கள், உலகில் மனிதன் தோன்ற நிகழ்ந்த நிகழ்ச்சிகளே விவரிப்பனவாக உள்ளவையே அதாவது,

ஆண்டவனிடம் விளக்கம் பெற்ற ஆதம், வானுலகில், சொர்க்கத்தில் இருந்தார். அவருக்குத் துணையாக, ஹவ்வா என்னும் பெண் திருவை இறைவன் படைத்து ஆதத்துடன் இணைந்து வாழுமாறு செய்தான். தீண்டவும் தகாதது என்று இறைவன் எதைச் சுட்டிக் காட்டி அறிவித்தானே, அதை அவர்கள் தீண்டினார்கள். எனவே, அவ்விருவரும் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டார்கள். இங்கு வந்து, அழுது, இறைஞ்சி மன்னிப்பு வேண்டினார்கள். ஆண்டவன் மன்னிப்பளித்தான். அதன் பின்பு இருவரும் மக்க மாநகரின் துறைமுகமாயுள்ள ஜித்தா எனும் இடத்தில் இணைந்து இல்லறம் நடத்தினார்கள். இவர்களின் வழித் தோன்றலாக, மக்கமாநகரிலே, அரபிக் குலத்திலே, குறைஷிக் குடும்பத்திலே, அப்துல்லா என்பாரின் மகனாக நபிகள் நாயகம் தோன்றினார்கள் என்கின்ற வரலாற்றினை உரைப்பது தலைமுறைப் படலம். இப்படலத்திலே நபிகள் நாயகம் அவர்கட்கு முன்னர் வாழ்ந்து, மக்களை நேர் வழிப்படுத்த உழைத்த பல நபிமார்களின் பெயர்கள் காணப் படுகின்றன. அவர்களின் வழியில், இறுதி நபியாகவும், அவர்கள் செயல்படுத்த முயன்று முடியாது நின்றுபட்ட காரியத்தை, அதாவது, உருவமற்ற ஓர் இறைவனை ஏற்று மனிதகுலம் அனைத்தும் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற அடிப்படையில் வாழும் வகை காணப் பிறக்கின்றார்கள் வள்ளல் மாநபி என்று பேசுவது சீறாப் புராணத்தின் தலை முறைப் படலம். மீண்டும் நினைவு படுத்திக் கொள்வோம்: தத்துவ விளக்கப் பாடல்களில் அமைகின்ற சொற்கள் புற அழகைச் சுமந்தமையா. அக அழகே அவற்றின் அழகாம். சீறாப்புராணத்தின் பாடல்களில் இணைக்கப்பட்டுள்ள சொற்களின் பொருள் நயத்தை—அழகைக் கண்டு மகிழ, இஸ்லாமிய ஆகமப் பயிற்சி தேவை, அவசியம் தேவை!

# 5

நபி அவதாரப் படலத்தைச் சீருப்புராணத்தின் 'கண்' என்று சொல்ல வேண்டும். நபிகள் நாயகம் அவர்களின் பிறப்பை இப்படலம் விரிவாகப் பேசும். ஆம், நபிகள் நாயகம் அவர்களின் தந்தையராகிய அப்துல்லா அவர்களின் சிறப் பில் துவக்கி, அவர் ஆமினு என்கின்ற அறிவார் மாமணியை மணந்து வாழ்ந்த விதம் புகன்று, பின்னர் ஆமினுத் தாயார், நபிகள் நாயகம் அவர்களைப் பெற்றளித்த நற்பேற்றையெல் லாம் விரித்துரைப்பது நபி அவதாரப் படலம்.

அவதாரம் என்பது 'பிறப்பு' என்பதைக் குறிக்கின்ற வட மொழிச் சொல். 'பிறப்பு என்பதைத் தவிர்த்து வேறு சிறப்பு அவதாரம் என்கின்ற சொல்லிற்கில்லை. இதனாலேயே திரு அவதாரப்படலம் என்று ராமன் பிறப்புப்பற்றிய படலத்திற்குக் கம்பர் அடைமொழி கூட்டிப் பெயர் தந்துள்ளார். எனவே, அவதாரம் என்னும் சொல்லைக் கொண்டு நபிகள் நாயகம் அவர்களைக் கடவுள் அவதாரம் என்று எண்ணுதல் தீது. இறை வனுக்கு, அவதாரம் என்கின்ற பிறப்பு உண்டு என்பதை ஏற் காத சமயம் இஸ்லாமியச் சமயம்.

அப்துல்லா என்பவர், மக்கமா நகரின் சிறப்பிற்குரிய தலை வரான அப்துல் முத்தலிப் என்பாரின் மகனார்களில் ஒருவர். சிறந்த கல்விமான். ஒழுக்க சீலர், அறிவார்ந்த மேதை. கவி பாடும் ஆற்றல் மிக்கவர். வீரம் கெழுமிய மன்னர், வள்ளல், வணிகர். இவருடைய நெற்றியில், இருபுருவங்கட்கும் நடுவில் சுடர்மிகு ஒளி ஒன்றிலங்கிக் கொண்டிருந்தது. அதனால், அக் கால வேத விற்பன்னர்களும், கோளறி கணித நூலினரும், அப்துல்லா ஓர் அரிய சிறப்புடைய மகனுக்குத் தந்தையாவார்

எனக் கணித்துரைக்கலாயினர். இதனல் இவருக்கு அயல்பதி அரசர்களும் பெண்தர விரும்பி, இறைஞ்சிப் பணிந்து வேண்டினராம். அப்துல் முத்தலிப் என்பார், கோரிப் பெற்ற வரத்திஞலும் பிறந்தவர் அப்துல்லா.

**வரபதி உலகெலாம் வாழ்த்தும் மக்கமா**
**புரபதிக் கதிபதி என்னும் பூபதி**
**பரபதி அரசர்கள் பணிந்து இறைஞ்சிய**
**நரபதி அப்துல்லா என்னும் நாமத்தார்.**

இந்த அரிய பாட்டு, அப்துல்லாவின் மேன்மையைப் படம் பிடித்துக் காட்டுவதாகும். அழகிய பாடல். பதினறு சொற்களைக் கொண்ட இப்பாடலில், ஆறு 'பதி' வரப் பாடியுள்ளார் உமறுப் புலவர். வரபதி, மக்கமாபுரபதி, அதிபதி, பூபதி, பரபதி, நரபதி எனப் பல பதிகளை நம் மனத்தில் பதிய வைக்கின்ற பாட்டு இப்பாட்டு. படிக்கப் படிக்க இனிப்பூட்டும் பாவென இப்பாடலை இயம்புவது பொருந்தும்.

இந்த அப்துல்லாவிற்கும், மக்கமா நகரிலிருந்து இருநூற்றறுபது கல் தொலைவுக்கு அப்பால் உள்ள மதீனமாநகரில் பிறந்து வளர்ந்த ஆமினு என்னும் பெயர் கொண்ட பெண் மாமணிக்கும் அப்துல்லாவின் தந்தையராகிய அப்துல் முத்தலிப் திருமணம் நடத்தி வைத்தார்.

ஆமினு, தாய் தந்தையரற்ற எத்தீம். எத்தீம் என்பது அனுதை என்பதைக் குறிக்கின்ற அரபிச் சொல். சிறப்பாக, தந்தையை இழந்துவிட்ட பிள்ளையை எத்தீம் என்கின்ற சொல் குறிக்கும்.

திருமணமாகிவிட்ட மகனை, தனிக் குடித்தனம் ஏற்படுத்தி வாழுமாறு பணிப்பது அக்கால அரபியர்களின் மரபு போலும். எனவே, அப்துல்லா தமது தந்தையின் விருப்பின் பேரிலேயே தனிக்குடித்தன வாழ்க்கையை மேற்கொள்கின்ருர். கணவனுக்கேற்ற காரிகையாக வாழுகின்ற ஆமினுவைத் தமது அரிய

இரு பாடல்களைக் கொண்டு உமறுப் புலவர் நமக்கு அறிமுகம் செய்கின்றார்.

**அறத்தினுக்கு இல்லிடம் அருட்கோர் தாயகம்**
**பொறுத்திடும் பொறுமையில் பூமிக்கு எண்மடங்கு**
**உறைப்பெருங் குலத்தினுக் கொப்பிலா மாமணி**
**சிறப்பினுக் குவமையில் லாத செல்வியே!**

என்றும்,

**இற்புகுந் தெழுமதி இலங்கு மாமணி**
**விற்புரு வக்கடை மின்கள் நாயகம்**
**பொற்பெலாம் பொதிந்தபொற் கொடிநற் பூவையர்**
**கற்பெலாம் திரண்டுருக் கொண்ட கன்னியே**

ஆமினாவின் குணத்தை, நலத்தை, எழிலை, ஏற்றத்தை, இனிய பண்பை, அன்பை, அடக்கத்தை, அறிவை நம் முன்பு இவ்விரு பாடல்களாலும் படம் பிடித்துக் காட்டி விடுகிறார் உமறுப் புலவர். இதிலே ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்துவது என்பார்களே, அப்படி ஒரு சொல்லிற்கு இரு பொருள் தருகின்ற சொற்களைக் கொண்டு திகழ்கின்றது முதல் பாட்டின் முதல்வரி. ஆம்; அறத்திற்கு இல்லிடம் என்பதை, அறம் சிறக்கும் வாழ்வுடையவராக ஆமினா வாழ்ந்தார்கள் என்று கொள்ளவும், அறமே வடிவான நபிகள் நாயகம் அவர்களைத் தம் வயிற்றில் சுமந்த இல்லமாகவும் திகழ்ந்தார்கள் என்றும், அறத்திற்கு இல்லிடம் என்பதற்குப் பொருள் கொள்ள இயலும். இதே போன்றே அருட்கோர் தாயகம் என்றிருப்பதற்கும் பொருள் காணலாம்.

இரண்டாவது பாட்டில் உள்ள முதல் இருவரிகளும் ஆமினாவின் பால் உறைந்து திகழ்கின்ற பெண்மை நலத்தைப் பேசும். ஈற்றிரண்டடிகள், ஆமினா அவர்களின் உயர்வைப் பேணி உரைப்பதுடன், அரபு நாட்டில் அன்று வாழ்ந்த பெண் மணிகள் கற்பிழந்து விட்ட அவலத்தைக் கூறுகின்ற சரித்திர விளக்கமாகவும் அமைந்து திகழக் காண்கின்றோம். ஆம், நற் பூவையர் கற்பெலாம் திரண்டுருக் கொண்ட கன்னி என்றிருப்

பதை உற்று நோக்கின், அக்காலப் பெண்கள் வாழ்ந்த நிலே, வரலாறு நம் கண் முன்னர்ப் படமாடும். இன்னும்,

மாதர்களின் கற்பெலாம் ஒரு பிள்ளேயாக, பிள்ளே முகம்ம தாகத் திரண்டு உருக்கொள்ள, அந்த அழகிய மகவினேத் தம் வயின் கருக் கொண்டு திகழ்கின்ற கன்னி ஆமிஞ, என்னும் மறு பொருளும் துலங்கும். ஆம், இருபொருள் தொக்குமாறு சொற்களமைத்துப் பாடும் வல்லார் உமறு என்பதை இங்குக் கண்டு களிப்பெய்துகின்ரேம்.

அப்துல்லா-ஆமிஞ வாழ்க்கை அருள் வாழ்க்கை. உலகம் விரும்புகின்ற பொருள் வாழ்க்கை அன்று. புகழ் உண்டு, பொருள் இல்லே. அருள் உண்டு, அரிசி வாங்கி உலே யில் இடக் காசு இல்லே. மகான்கள் தோன்றுகின்ற இடமெல் லாம் இதே நிலேயில் தான் இருக்கும் போலும்!

ஆமிஞ கர்ப்ப முறுகின்ருர். அதுபோது, தந்தையாகிய அப்துல் முத்தலிபின் விருப்பப்படி வணிகத்தை மேற்கொள் கின்ருர் அப்துல்லா. ஆறுமாதக் கர்ப்பவதி ஆமிஞ. வணி கத்தை மேற்கொண்டு மதீனமாநகரம் சென்ற அப்துல்லா, அங்கேயே நோய்வாய்ப்பட்டு இறந்து விடுகின்ருர்.

இச்செய்தி கருவுற்றுத் திகழுகின்ற ஆமிஞ செவிக்கு எட்டுகின்றது. கணவனே இழப்பதினும் அவலம் பெண்ணிற்கு வேறே என்ன இருக்க இயலும்? கருவுற்றுத் திகழும் ஆமிஞ கதறி அழுது புலம்புகின்ருர்கள். அயல்மனேப் பெண்கள் கூடித் தேற்றுகின்ருர்கள். தேற்றம் பெரு ஆமிஞவைச் சுற்றி அமர்ந்து பெண்கள் தேற்றுரை புகன்று திகழ்கின்ருர்கள். இவ் வரிய காட்சியைப் பாட்டாக்கிக் காட்டுகின்ருர் உமறு. வெறும் பாட்டல்ல, உயரிய உவமை நயத்துடன் கூடிய பாடல்.

**வருந்தி நொந்தழு(து) ஆமிஞ விடைதலும் வளேந்து**
**திருந்தி ழைக்கொடி மடவியர் இரங்குதல், திரள்முத்து**
**இருந்த சூல்வலம் புரியினேச் சூழ்ந்தசங் கினங்கள்**
**இரைந்து இரங்குவ போன்றன எங்கணும் நிறைந்தே!**

ஆமினு, துக்க மிகுதியால், கதறிப் பதறி, நொந்து வாய் விட்டு அழுது புலம்பவும், அங்கே வந்து குழுமிய அயல்மனைப் பெண்கள் தேற்றுமொழி பகர்ந்து சூழ்ந்தமர்ந்திருப்பதானது, வலம்புரிச் சங்கினை வெண் சங்குகள் சூழ்ந்திருந்ததை ஒத் திருந்ததென உமறு பாடுகின்ருர். இதில் வெளிப்படையாகக் காணப்படுகின்ற இப்பொருளினும் மேன்மையான கற்பனை வளம் மிளிரும் உள் உவமம் ஒன்றும் உண்டு.

சங்குகள், ஊதினுல் ஒலிப்பன. வலம்புரிச் சங்கு, ஊது வாரின்றியே தானுக இடைவிடாது ஒலித்துக் கொண்டிருப்ப தாகும். துன்பம் சூழப்பட்ட ஆமினு, வலம்புரிச் சங்கு போன்று இடையருது தன்னிலை நினைந்து அழுது கொண்டே இருக்கின் ருர்கள். சூழ அமர்ந்துள்ள பெண்களுக்குத் துக்கமின்மை யால் வெற்றுச் சங்கினை யொப்ப வெறுமனே வீற்றிருக்கின் ருர்கள். இது உமறு காட்டும் உள் உவமம். பின்னர், தமது மாதுலராகிய அப்துல் முத்தலிப் வந்து வயிற்றிலுள்ள குழந் தையின் மேன்மையைக் கூறவே, தம் மகவின் நலம் கருதி ஆமினு அழுவதை நிறுத்தி ஆறுதல் கொண்டு வாழ்ந்து வரு கின்ருர்கள். பேறுகாலம் வருகின்றது. ஊரிலுள்ள பெண்கள் உதவிக்கு வர மறுக்கின்ருர்கள். அதற்கு அவர்கள் கூறும் காரணம், மானிட வர்க்கம் சுயநலமுடைய தென்பதைச் சுட்டு வதாக உளது. ஆம், அப்துல் முத்தலிப், தம் மகன் அப்துல்லா விற்கு, இந்த மக்கமா நகரிலே பெண் கொள்ளாமல், மதினம் சென்று ஆமினுவை மருமகளாகக் கொண்டாரல்லவா ? அங் கிருந்தே மருமகளின் மருத்துவத்திற்கும் பெண் கொணரட்டும் என்கின்ருர்கள் மக்கத்துப்பெண்கள். விதியற்ற நிலையிலே வழி யற்ற மனிதன் ஆண்டவனை நாடுகின்ருன் என்பதை மெய்ப் பிப்பான் போன்று, அப்துல் முத்தலிப்,கஃபத்துல்லா என்கின்ற இறை இல்லத்தினுள் சென்று, தூயவனே, துணையானவனே என்று துதித்து வேண்டுகின்ருர். வான மகளிர்கள் மருத்துவம் பார்க்க, வள்ளல் முகம்மது, பிள்ளை முகம்மதாக, கி.பி. 570 ஆகஸ்ட் மாதம் திங்கட் கிழமை அதிகாலையில் சூரிய உதயத் திற்கு முன்பதாக இவ்வுலகின் கண் அவதரிக்கின்ருர்.

இதனை—

**கோதறப் பழுத்து மதுரமே கனிந்த**
**கொவ்வைவாய் அரம்பையர் வாழ்த்தித்**
**தீதற நெருங்கி ஏவல்செய் திருப்பச்**
**செழுங்கம லாசனத் திருந்த**
**மாதருக் கரசி ஆமினு உதர**
**மனையிடத் திருந்துமா நிலத்தில்**
**ஆதரம் பெருக நல்வழிப் பொருளாய்**
**அகமது தோன்றின ரன்றே!**

என அழகுபட, ஆர்வம் துடிக்க, இனிய பாடலாக்கி, படிப் போரை இன்ப வாரிதியில் திளைக்க வைக்கின்றுர் உமறுப் புலவர்.

இப்பாடலில் வள்ளல் நாயகமாகிய, பெருமானுர் அவர்களின் பிறப்பின் போது, வானமகளிர் தீதற நெருங்கி நின்று மருத்துவப் பணிகள் புரிந்தனர் என்பதும், அந்த வானமகளிர் தம் எழில் நலமும் உரைக்கப்பட்டுள்ளன. மாதருக்கரசி ஆமினு வயிற்றினின்றும் வள்ளல் நபி அவர்கள் அவதரித்தார்கள் என்று கூறுகின்ற உமறுப்புலவர், முகம்மது தோன்றினர் எனப் பாடாமல், அகமது தோன்றினரன்றே எனப் பாடிப் போந்துள்ளார். இது அறியாமல் நேர்ந்த தவறன்று. அச்சுப் பிழையுமன்று. முகம்மது என்பது வள்ளல் மாநபி அவர்கட்கு இடப்பெற்ற பெயர். ஆனுல் ஆமினுத் தாயார் தம் மகனை அன்பொழுக அழைத்த பெயர் அகமது என்பது. தாய்க்கு முதலிடம் அளிக்குமாறு உபதேசித்தவர்கள் வள்ளல் மாநபி அவர்கள். எனவே அவர்கள்தம் பொன் மொழியை நினைவுகூரும் விதமாக ஆமினுத் தாயார் அழைத்த அகமது என்ற பெயரினை முதல் பாட்டில் இட்டு மகிழ்வளிக்கின்றுர் உமறுப் புலவர். இதற்கப்பாலுள்ள பாடல்களிலெல்லாம் முகம்மது என்றே பாடியுள்ளமை காண்க. ‘ஆதரம் பெருக நல்வழிப் பொருளாய்’ என்று உள்ள சொற்கள் நபிகள் நாயகம் அவர்கள் ஆற்றிய பணிகளை, அவர்கள்தம் பண்பை,

குணமேன்மையைக் குறிப்பன ஆகும். இஸ்லாத்தின் முழு இயல்பையும் அதனுடைய நன்னெறிகளையும் இவ்விரு வாக்கியங்களும் உள்ளடக்கித் திகழ்கின்றன. விரிக்கிற் பெருகும்.

பெண்கட்கு ஆதரம்பெருக, நலிந்தோருக்கு ஆதரம் பெருக, அடிமை வாழ்வினருக்கு ஆதரம் பெருக, கறுப்பு நிற நீக்ரோக்களுக்கு ஆதரம் பெருக, ஏழைகட்கு ஆதரம் பெருக, எத்தீம்கள் என்கின்ற அனாதைகட்கு ஆதரம் பெருக, ஆட்சியிலே நேர்மையெனும் ஆதரம் பெருக, நல்வழிக்கான பொருளாய், நல்வழி காட்டுகின்ற பொருளாய் நபிகள் நாயகம் பிறந்தார்கள் என்ற உண்மை நிலையை விவரிப்பது இப்பாடல். இப்பாடல் ஒன்றே போதும் நபிகள் நாயகம் அவர்களின் கொள்கைகளைக் கோட்பாட்டினை விளங்கிக் கொள்ள, விரித்துரைக்க. இப்பாடலின் மூலம், நபிகள் நாயகம் அவர்கள் பிறந்து விட்டார்கள் எனக் கண்டோம். அடுத்து, அவர்களின் வளர்ச்சி பற்றிய படலங்களைக் காண்குவம்!

# 6

தமிழ் இலக்கியங்களிலோ, இந்திய இலக்கியங்களிலோ பெற்ற தாயைப் பிரிந்து வேறு ஒரு தாயினிடம் பிள்ளை வளருவது புதிய படைப்பன்று. யசோதையிடம் கண்ணன் வளர்ந்த கதை நாடறிந்த ஒன்றும். அரண்மனையில் வளர வேண்டிய பிள்ளை ஆசிரமத்தில் வளர்ந்த கதையைப் பெருங்கதை பேசும். சீவகன் பிறப்பும் வளர்ச்சியும் இலக்கிய வாழ்வினர் யாவரும் அறிந்தனவே. இவற்றிற்கெல்லாம் மாறுபட்டது நபிகள் நாயகம் அவர்களின் பால்குடிப் பருவ வரலாறு.

ஆம், பெற்ற குழந்தைக்குப் பாலூட்டி வளர்க்க இயலா வறுமை வாழ்வு, நபிகள் நாயகம் அவர்களை ஈன்றளித்த ஆமினுத் தாயாரின் வாழ்வு. ஆரம்பத்தில், அக்கம் பக்கத்தில் உள்ளோர், நபிகள் நாயகம் அவர்கட்குப் பாலூட்டியதாக அவர்கள்தம் வரலாறு பேசும். இறுதியில், ஹலிமா என்னும் மாதிடம் நபிகள் நாயகம் அவர்கள் பால் குடித்து வளர்கின்றார்கள். ஹலிமா விவசாயக் குடும்பத்திலுள்ளவர்கள், குனைன் என்ற கிராமவாசி.

மழையின்மையால் விவசாயம் பொய்த்துப் போகவே, பிழைப்பு நாடிக் குனைன் என்ற கிராமத்திலிருந்து மக்க மாநகருக்கு வந்த ஹலிமா, நபிகள் நாயகப் பிள்ளைக்குப் பால் கொடுத்து வளர்க்கின்ற பொறுப்பை ஏற்றுக்கொள்கின்றார்கள். பின்னர், குனைன் கிராமத்தில் மழை பெய்து செழிப் பேற்பட்டதறிந்து, குழந்தையைக் குனைன் கிராமத்திற்கே எடுத்துச் சென்று வளர்த்து, ஐந்து வயது நிரம்பியதும் தாயாரிடம் கொணர்ந்து ஒப்புவிக்கின்றார்கள்.

குணேன் கிராமத்தில் மழை பொய்த்ததை வைத்து, பஞ்சம் படுத்தும் பாடுகளையெல்லாம் பாடல்களாக்கியுள்ளார் உமறுப் புலவர்.

**கருங்கடல் நீரையுண் டெழுந்து கார்க்குலம்**
**பெருந்தரை யெங்஖ணும் பெய்த லில்லையால்**
**இருந்தபைங் கூழெலாங் கருகி யெங்஖ணும்**
**பரந்தது சிறுவிலைப் பஞ்ச மென்பதே!**

இப்பாடல்''விசும்பிற்றுளி வீழினல்லான் மற்றுங்கே, பசும் புற்றலை காண்பரிது'' என்னும் வள்ளுவர் வாக்கிற்கு விளக்கம் போல் திகழக் காண்கின்றோம். பஞ்சத்தைப் பற்றிப் பதினறு பாடல்கள் உமறு பாடியுள்ளார். அனைத்தும் அரிய கவிதை முத்துக்கள். குணேன் பகுதியைப் பஞ்சம் முறையின்றி அரசோச்சியதாம். இதனை:

**குலமுறை மன்னர்போய்க் கொடிய பாதகர்**
**தலைநிலம் புரந்திடும் தகைமை போலவே**

என்கிறார் உமறு.

'வழங்கு மேலவரையும் தரித்திரம் பிடித்திட்ட சாமகாலம்' என்று இன்னொரு பாட்டில் சுட்டுகிறார்.

காய்; இலை, கிழங்குகளை எல்லாம் கருவறுத்து, மேய்கின்ற விலங்கினங்களையெல்லாம் கொன்று, மென்று தின்ற பின்னரும் தீராத பிணி, பஞ்சம் என்னும் பிணி என்று வேறு ஒரு பாட்டில் விளம்புகிறார்.

நலந்தரும் கற்பெனும் நாமம் கெட்டு, உடல் உலர்ந்து, பசியினல் ஒடுங்கி, ஊனர்தம் மனைதொறும் புகுந்து, இரந்து, இடைந்து வாடி, கற்பை இழந்தும், பசி அகலாமல் பெண்கள் அவதியுறும் காலம் பஞ்சகாலம் என்கிறார் உமறு பிறிதோர் பாட்டில்.

''கரிப்பினில் சனமெலாம் கலைந்து போதலால்'' என்று பஞ்சம் பற்றிய ஒருபாடலை உமறு துவக்குகின்றார். இதில் உள்ள கரிப்பு என்ற சொல், பஞ்சத்தைச் சுட்டுகின்ற அரிய சொல்லாகும். இலக்கியத்திலே அதிகம் இடம் பெற வாய்ப் பில்லாச் சொல் என்றாலும், இன்றும் தமிழகத்தின் வடக்கு மாவட்டங்களில், கிராமப்புற மக்களிடையே வழக்கில் உள்ள சொல்லாகும்—கரிப்பு-என்பது! கரிந்து போதலை வேர்ச் சொல் லாகக் கொண்டுள்ள விழுமிய சொல் இச்சொல்! கவிஞன் என் போன், நாடு சுற்றி, நாட்டின் கண் வாழுகின்ற மக்களின் பழக்க வழக்கங்களையும்,அவர்களிடையே நிலைத்து நிலவுகின்ற சொற்களையும் கண்டறிந்தவனாக இருத்தல் வேண்டும் எனச் சிலப்பதிகாரம் பேசும். அக்கூற்றிற்கு மெய்ச் சான்றாக விளங்கு கின்றார் உமறு என்பதனை இச்சொல் எடுத்தியம்புகின்றது.

பிறர் பிள்ளையையெடுத்துப் பாலமுதூட்டி வளர்ப்பதின் மூலம், தங்குடும்பத்தைச் சூழ்ந்துள்ள வறுமையைப் போக்கிக் கொள்ள மக்கமா நகரம் போந்த ஹலிமா, ஆமினாவின் மகனுக்குப் பால்தரும் தாய் தேவை என்றறிந்து அங்குச் செல் கின்றார். சென்று, பிள்ளையைக் கொணருமாறு கேட்கின்றார்.

ஹலிமா கூறி விட்டாலும், ஹலிமாவின் தோற்றத்தைக் கண்டு நிலைமையை உணர்ந்த ஆமினாத்தாயார், பிள்ளையை ஏற்குமுன், அப்பிள்ளையின் குடும்ப நிலையினைத் தெரிந்து கொள்ளுங்கள் எனக் கூறுகின்றதாக ஒரு பாடல்—

**உற்ற தந்தையும் இல்லைஉறு பொருளில்லை எத்தீம்**
**பெற்ற பிள்ளைஓர் உதவிசெய் குவர்பிற ரிலைநீர்**
**பற்று நற்பொருள் குறித்துவந் தவர்பசி யுடையீர்**
**இற்றைக்கு உண்பதற்கு இடமிலை என்னிடத் தென்றார்.**

உதவிகளில் சிறந்தது உணவளித்தல் என்று உணர்த்தி, தம்மைப் பின்பற்றுவோரை உணவளிக்கும் உயர் அறம் புரியு மாறு பணித்தவர்கள் வள்ளல் மாநபி அவர்கள். தாம் பட்டினி

இருக்கின்ற நிலையிலும், தம்மிடம் வந்தோருக்கு,இல்லை எனாது வழங்கியவர்கள் மாநபி அவர்கள். பசித்திருப்போர் பார்த் திருக்க உண்ணுவது பாவம் என்று கூறியவர்கள் நாயகத் திருமேனி அவர்கள். பட்டினியால் வாடி நொந்தழுகின்ற பஞ்சை பராரிகளே முதலில் சொர்க்கம் புகுவார் எனப் புகன்ற புண்ணிய மாநபி பிறந்துள்ள வீட்டிலே, பெற்றெடுத்த தாய் கூறுகிறார், இன்றைக்கு உண்பதற்கு இல்லை என்று. ஆமி னுத் தாயாரின் தன்னிலை விளக்கமாக உள்ள இப்பாடல் வர லாறு புரிந்து படிப்போரின் கண்களைக் குளமாக்க வல்லது.

ஆமினுத் தாயாரின் விளக்கத்தைக் கேட்ட பின்னரும், குழந்தையைக் கொண்டு வருமாறு கேட்டு வாங்கிப் பாலமு தூட்டுகிறார் ஹலிமா. பின்னர், பிள்ளையின் பொலிவையும், ஒளியையும், உயர்வையும் உணர்ந்த ஹலிமாவும் அவர்தம் கணவரான ஆரிதும் எவ்வித நிபந்தனையுமின்றிப் பிள்ளையை எடுத்துக் கொண்டு தம்மூர் செல்கின்றார்கள். மழை பொழிந்து செழிக்கின்றது குனைன்! பிள்ளை முகம்மது பாலமுதம் உண்டு பசியறியா நிலையில் வளர்கின்றார்கள்!

நபிகள் நாயகம் அவர்கள் நடந்தார்கள், உரை புகன்றார் கள், வளர்ந்தார்கள் என்றெல்லாம் உமறுப் புலவர் பாடி யுள்ள அழகிய சொற்சித்திரத்தைக் கண்ணுறுவோர், இது என்ன பிள்ளைத்தமிழ்போல் இருக்கின்றதே! உமறு சீறுப்புரா ணக் காவியம் தானே பாடினார்? அதனுள் பிள்ளைத்தமிழ்ப் பாக்கள் எப்படி முளைத்தன என்று ஐயுறுகின்றனர்.பிள்ளையைப் பற்றிய பாடல் பிள்ளைத்தமிழ்ப் பாடலாக அமைவதில் வியப் பென்னவோ! வண்டோதரி போர்க்களத்தே மாண்டு கிடக் கின்ற தன் கணவன் ராவணனைக் கண்டு அழுது புலம்புகின்ற பாடலைப் படிப்போர், ஈதென்ன ஒப்பாரி போன்றிருக்கிறதே என்று கேட்பதையொத்த கேள்வியே இதுவும். அழுது புலம்பு வது, ஒப்பாரி போன்றல்லாது, வேறு எவ்வாறிருக்கும்? கவி ஞன், தான் எதை விளக்க நினைக்கின்றானோ, அது அதுவாகவே அமையும் போதுதான் வெற்றி பெற்றவனாகின்றான். பிள்ளை

முகம்மதை உமறு பாடும்போது, அது பிள்ளைத்தமிழாக அமை வதே சிறப்பு.

**விண்ணகத் தமரர் மனமகிழ் வளர**
**வியனுறும் வரிசைகள் வளரக்**
**கண்ணகத் துறைந்து கருணையும் வளரக்**
**கவின்நிறை பிறையென வளர**
**எண்ணரும் புதுமைக் காரணம் வளர**
**இறையவன் திருவருள் வளர**
**மண்ணகத் திருந்து கிளையெலாம் வளர**
**முகம்மது நபிவளர்ந் தனரே!**

இவ்வாறு பிள்ளை முகம்மது அவர்களின் வளர்ச்சியைப் பாடுகின்றார் உமறு. இது போன்றே நடந்தாரென்றும், சொல் விளங்கினார் என்றும் அழகுற இனிய தேன் தமிழில் கவிதைகள் யாத்தளித்து மகிழ்விக்கின்றார் உமறுப்புலவர்.

பால்குடி மறந்ததும், பிள்ளையை அதன் தாயிடத்திலே கொண்டு சேர்க்க மக்க மாநகருக்கு எடுத்துச் செல்கின்றார் ஹலிமா. வறுமையின் வயப்பட்டுள்ள ஆமினாத் தாயாருக்கு, பிள்ளையை எப்படி வளர்ப்பது என்ற கவலை. மக்கத்தில் அது காலை ஒரு கொள்ளை நோய் பரவுகின்றது. பிள்ளையின் நலன் கருதி, ஹலிமா பிள்ளையுடன் குனென் திரும்புகின்றார். நான்கு வயதை அடைந்தபோது, ஆடு மேய்க்கச் செல்லுகின்ற பிள்ளைகளுடன் தானும் செல்ல விரும்புகின்றார்கள் பிள்ளைப் பெருமானார் அவர்கள். ஹலிமா தடுத்தும் கேட்பாராய் இல்லை. ஆடு மேய்க்க அனுப்பப்படுகின்றார். அங்கே நடக்கின்ற அரிய நிகழ்ச்சி ஒன்றைக் கண்ட ஹலிமா, பிள்ளைக்கு ஆபத்து நேர லாம் என அஞ்சி, தாயாரிடம் சேர்த்து விடுகின்ற எண்ணத் துடன் ஐந்து வயது நிரம்பிய பிள்ளைப் பெருமானார் அவர்களை, மக்க மாநகருக்கு இட்டேகுகின்றார். ஏகும் வழியில், காடு ஒன்றின் கண், இளைப்பாறும் இடத்தே பிள்ளையைக் கைத்தவற விட்டு, வருந்திக் காடெல்லாம் சென்றுதேடி அலைகின்றார்.

**படியின் மீதினில் ஓடுவர், தேடுவர் பதறிக்**
**கடிதில் கல்முழை முள்செறி பொதும்பினும் கவிழ்ந்து**
**நெடிது நோக்குவர், செடியறக் கிளறுவர் நிகரில்**
**வடிவுறும் மகவே எனக் கூவுவர் வருந்தி!**

இவ்வரிய பாடல், ஹலிமா காட்டினிடையே கைத்தவற விட்டு விட்ட பிள்ளைப் பெருமானார் அவர்களைத் தேடிக் காடெலாம் அலைந்த நிலையை விளக்குகின்றது. என்ன தேடியும், எங்குத் தேடியும், எவ்வளவு நேரம் தேடினாலும் பிள்ளை கிட்டாது என அறிந்த ஹலிமா மக்க மாநகர் நோக்கி நடக்கின்றார்கள். பிள்ளையின் பாட்டனாரிடம் சென்று, நடந்ததை உரைக்கின்றார்கள். கேட்ட பாட்டனாராகிய அப்துல் முத்தலிப், மணி இழந்த நாகமெனத் துடிக்கின்றார். பதறிக் கதறி அரற்றி அழுகின்றார். ஆட்கள் நாலா பக்கங்களிலும் சென்று தேடியும் பிள்ளை கிட்டவில்லை. முடிவில், கஃபத்துல்லா என்கின்ற பள்ளி வாசலினுள் சென்றமர்ந்து, இறைவனிடம் முறையிடுகின்றார். பிள்ளை முகம்மது ஊரின் வெளிப்புறத்தே, ஒரு தோப்பில் உள்ளதாக அசரீரி உரைக்க, சென்று கொண்டு வருகின்றார்கள். ஐந்து வயதடைந்த பிள்ளைப் பெருமானார் அவர்கள் ஆமினாத் தாயாரிடம் ஒப்புவிக்கப் படுகின்றார்கள். வளர்ந்த பிள்ளையை எப்படி மேலும் வளர்ப்பது? இது ஆமினாத் தாயார் கவலை. இனி வருவது புனல் விளையாட்டுப் படலம்.

நபிகள் நாயகம் அவர்கள் தம் பிள்ளைப் பிராயத்திலும், வேடிக்கை, விநோத விளையாட்டுகளில் ஈடுபட்டவர்களல்லர். இத்தகு குணமிக்கவர்கள் குளத்திலிறங்கி நீராடி மகிழ்ந்த விதம் கூறுவதே புனல்விளையாட்டுப் படலம். இப்படலத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை ஐம்பத்தேழு. அத்தனை யும் விருத்தப் பாக்களே!

ஹலிமா அம்மாளிடமிருந்து தம் மகனைப் பெற்றுக் கொண்ட ஆமினுத் தாயார், மகன் உடன்வர மதீன மாநகருக்குச் செல்கின்றார்கள். அங்குத்தான் இந்தப் புனல் விளையாட்டு நடைபெறுகிறது.

நபிகள் நாயகம் அவர்கள் குளிக்கச் சென்ற குளத்திலே நீர் நிரம்பித் ததும்புகின்றது. குளத்தில் நீர் நிறைந்து ததும் புகின்ற விதத்தை, ஒரு நல்ல உவமானத்துடன் விளக்கிப் பாடல் புனைந்தளிக்கின்றார் உமறுப் புலவர்.

சீறுப்புராணம் அரங்கேறுவதற்குக் கொடை நாயகராகத் திகழ்ந்தவர் அபுல் காசிம் என்கின்ற வள்ளல். அவர்மனையில் செல்வம் நிறைந்திருந்த தன்மையை ஒத்திருந்தது, அக் குளத்தில் நீர் நிறைந்திருந்த பாங்கெனப் பகர்கின்றது உமறுப் புலவரின் பாட்டு.

அபுல் காசிம் வீட்டில் நிறைந்திருந்த செல்வத்திற்கும் குளத்திலே நீர் நிறைந்ததற்கும் உள்ள ஒற்றுமை என்ன?

குளத்தில் நீர் நிறைந்தால், மனிதர்கள் குடிக்கின்றார்கள், குளிக்கின்றார்கள். மாடாடுகளும் குடிக்கின்றன, குளிப்பாட்டப்

படுகின்றன. காக்கை, கழுகு, கொக்குக் குருவிகள் குடிக்கப் பயன்படுகின்றது. குளத்தில் உள்ள மீன் தவளைகள் போன்ற உயிரினங்கள் வாழப்பயன்படுகின்றது.இன்னும், அக்குளத்தில் முளைத்து, செழித்து வளருகின்ற தாமரை, அல்லி, புல் பூண் டாகிய அனைத்திற்கும் அது பயனுகின்றது. ஆனால், நீரினைச் சுமந்து திகழ்கின்ற குளத்திற்கு அத்தண்ணீர் துளியும் பயன் படுவதில்லை. இது போன்ற தன்மையிலே அபுல்காசிம் படைத்த செல்வம் பயன்பட்டது என்று கூறுகின்ருர் உமறுப் புலவர்.

**கடகரி எனுமபுல் காசிம் செல்வம் போல்**
**இட ளறப் பெருகியங் கிருந்த வாவியே**

செல்வம் சேருங்கால், செல்வர்கள் தம் செல்வவளத்தைச் செலவிட வேண்டிய விதம் பற்றி விளக்குவது இப்பாடல். வெறும் அறவுரையினை வெறுப்போருண்டு; கவிதை என்கின்ற தேனுள் பொதித்திருப்பதால் கஞ்சமனத்தினரும் படித்துக் களி உவகை கொள்ள முடியும். இதுதான் பாடலுக்கு உள்ள சிறப்பு.

நபிகள் நாயகம் அவர்கள் நீந்திக் குளித்துக் களிக்கக் குளத்தில் இறங்குகின்ருர்கள். குளத்தின் நீர், சிறுசிறு அலை களாகி, நாயகத் திருமேனி அவர்களின் எதிரில் செல்லத் தலைப் படுகின்றது. கவிஞர் உமறு இக்காட்சியைக் கற்பனைக் கண் கொண்டு காணுகின்ருர். கவிதை உதயம் ஆகின்றது.

**நிறை தடம் அலைதலால், நிகரி லாமுதல்**
**இறையவன் தூதர்நம் இடத்தில் மூழ்குறக்**
**குறைபடா அரியமெய் குளிரு மோவென**
**நறைபுனல் கலங்கியுள் நடுங்கல் போன்றதே!**

இப்பாடலின் பொருள், ஆண்டவனின் தூதுவரான முகம்மது நபி அவர்கள் நம்முள் இறங்கிக் குளிக்க வருகின்ருர் களே, அவர்கள்தம் உடலை நம்முடைய பெருக்கம் குளிரீந்து வருந்துமாறு செய்துவிடுமோ என எண்ணி, அக்குளத்து நீர்

அஞ்சி நடுங்குவ போன்றிருந்ததாம். கவிஞர்களின் கண்கள் எவ்வளவு கூர்மையுடையனவாயிருக்கின்றன? அவர்களின் நெஞ்சங்களிலிருந்து பிறக்கின்ற கற்பனைகள் படிப்போருக்கு எவ்வளவு மகிழ்வை அளிக்கின்றன? பெரியவர்களிடம் நாம் எவ்வளவு அச்சமும், மரியாதையும் உடையவர்களாகத் திகழ வேண்டும் என்கின்ற பாடத்தை இப்பாடல் போதிக்கின்றது. வெறும் போதனையன்று. கவிதை மனம் கமழுகின்ற இனிய போதனை. நீரில் எழும் அலையை, பெரியோர் பால் காட்டுகின்ற, காட்டவேண்டிய அச்சம் என, மரியாதை எனப் புனைந்துரை செய்கின்ற கற்பனை, உமறு தந்துள்ள இப்பாடலாகத் தான் இருக்க முடியும். தமிழில் மட்டுமின்றி, வேறு எம் மொழியினும் இது போன்ற கற்பனை இராதென்றே கூறலாம்.

இஸ்லாமியப் புலவர்கட்கு, இயற்கையைக் கண்டால் ஒரே ஆனந்தம்! காரணம், மற்றெதையும் கற்பனையாகவோ, கற்பனைகலந்தோ பாடுகின்ற வாய்ப்பு இஸ்லாமியப்புலவர்க்கு அடியோடு இல்லை. உள்ளதை உள்ளவாறே பாடவேண்டும். பெண்களையோ, ஆண்களையோ அங்க வருணனை செய்ய அனுமதியில்லை. எனவே, இயற்கையின் பால் வரும்போது, ஆனந்தப் பேரருந்தலுக்காளாகி விடுகின்றனர்கள். ஆகவே இஸ்லாமியப் புலவர்களிடையே, இயற்கையை வருணிக்கின்ற திறம் சற்றே கூடுதல எனலாம.

குளத்தில் பிள்ளைகள் இறங்கிக் குளித்து, நீந்திக் களித்து விளையாடும் போது, தண்ணீர் கரைகளில் மோதுவதால் நீர்த் திவலைகள் தெறித்துச் சிதறுகின்றன. இக்காட்சியைப் பாட்டாக்கிக் காட்டுகின்ற உமறுப்புலவர், நபிகள் நாயகம் அவர்கள், தன்பால் குளிப்பதிலே எழுந்த மகிழ்ச்சிப்பெருக்கால் குளத்துநீர் அப்படித் துள்ளிக் குதிக்கின்றதென்கின்றனர்.

**தங்கிய புனலிடை குளிப்பத் தத்துநீர்**
**எங்ஙணும் கரைதவழ்ந்து இழிந்து தோன்றுவ**
**கங்கை தன் உள்ளகம் களிப்புற்று ஆனந்தம்**
**பொங்கியே உடல்புறம் பொசிவ போன்றதே!**

பாடலின் பொருளுணர்ந்து படிக்கின்றபோது, அவ்வரிய குளத்தின் நீர் பொங்கிப் பொசிந்ததே போன்று, நாமும் நம் உள்ளத்தே எழுகின்ற ஆனந்த வெள்ளம் தத்தித் ததும்பப் பூரிப் பெய்துகின்றோம்.

மொத்தமாகப் புனல் விளையாட்டுப் படலத்திலே உள்ள 57 பாடல்களில், இருபதுக்கும் அதிகமான பாடல்கள் இயற்கையின்பால் உமறு காணுகின்ற, காட்டுகின்ற கற்பனை வளத்தை வெளிப்படுத்துவனவாகவே உள்ளன. வெறும் கற்பனையன்று. மனிதன் அறிந்து பின்பற்ற வேண்டிய அரிய நீதி நிறைந்த கற்பனையாகவும் காண்கின்றோம்.

குளிக்கும்போது நாயகத் திருமேனி அவர்களைக் கண்ணுற்ற மதீனத்தாரில் சிலர், தம்முள் கூறிச்சென்ற வார்த்தைகளை, குளித்து இல்லம் திரும்பிய பிள்ளைகள் உரைக்கின்றன. அவ்வுரையைக் கேட்ட ஆமினுத்தாயாரின் உறவினர்கள், முகம்மது எனும் இப்பிள்ளையை இனி இவ்வூரிலே தங்குமாறு செய்வது ஆபத்தாக முடியும் என்பதை உணர்ந்து, ஆமினுவுக்கு உணர்த்துகின்றார்கள். இதை உமறுப் புலவர்,

**குருத்திரல் முகம்மதைக் குடியிவ் வூரிடை**
**இருத்துதல் பழுது, நம் மினத்தார் யாவர்க்கும்**
**பொருத்தமில் லெனமனம் புழுங்கித் தம்குலத்**
**திருத்திழை யாமினு தெரியச் செப்பினர்.**

எனப் பா இசைக்கின்றார். வந்த போது அடைந்த வழித் துன்பத்தையும், திரும்பி மக்கமாநகர் சென்றபின் தம் பிள்ளையை வளர்ப்பதில் உள்ள சிரமத்தையும் எண்ணியவர்களாக, தம் மகனைக் கையிலே பற்றியபடி, கானலும், காடும், கல்லும், முள்ளும், பாலையும் நிறைந்த வழியே நடந்து சென்று அபூவா என்னும் சிற்றூரை அடைந்த ஆமினுத் தாயார், மனக் கொதிப்பும், உடல் கொதிப்பும் கொடுத்த வேதனையைத் தாளாமல் இறந்து படுகிறார்கள். முகம்மது என்கின்ற ஆறு

வயதே உடைய அப்பிள்ளைக்கு இவ்வுலகில் இருந்த இரண்டாவது பற்றுக்கோடும் அற்று விடுகின்றது. இதன்பின் அபூவா எனும் ஊர் மக்கள் நாயகத் திருமேனியாகிய நற் பிள்ளையை மக்கமாநகருக்கு அனுப்புகின்றனர். தாயை இழந்து தனித்து வந்த பேரப்பிள்ளையை அப்துல் முத்தலிப் என்னும் சான்ருேர் ஏற்றதன்மையை உமறுப் புலவர்,

**மதிமுக முகம்மதை மக்க மாநகர்ப்**
**பதியினில் கொடுவரப் பார்த்துச் சிந்தைகூர்ந்து**
**அதிசயித் தப்துல்முத் தலிபு மாமலர்**
**பொதிதரு தடப்புயம் பொருந்தப் புல்லினுர்.**

என்பதாகப் பாட்டிசைக்கின்ருர். ஆறுவயதுப் பாலகருக்கு எட்டு வயது நிறைகின்ற நாளில், பாட்டனுரும் இறந்துபடவே, அபூத்தாலிப் என்னும் பெயர் பூண்ட தம்முடைய பெரிய தந்தையிடம் வளருகின்ருர்கள் நபிகள் நாயகம். அதுகாலே, அபூத்தாலிப் அவர்கள், வணிகப் பயணமாக சிரியா நாடு செல்கின்ருர்கள். அவர்கள உடன சென்ற சிறுவராகிய நபிகள் நாயகம் அவர்களைக் கண்ணுற்ற புகைரு எனும் ஞானி, இபபிள்ளையை சிரியாவிற்கு இட்டேகக் கூடாது; ஆபத்து நேரும் எனக் கூறி, மக்காமா நகருக்குத் திரும்பிச் செல்லச் செய்கின்ருன்.

இதன் பின் தமது பதினன்காம் ஆட்டைப் பிராயத்திலே நிகழ்ந்த போரொன்றில், பெரிய தந்தையாருக்கு அம்பு சேகரித்தளிக்கின்ற பணியில் நபிகள் நாயகம் அவர்கள் ஈடுபடுகின்ருர்கள். இது ஒன்றே நபிகள் நாயகம் அவர்கள் தமது ஐம்பத்து நான்கு வயதிற்கு முன்னர்க்கண்ட போர்க்களமாகும். இதன் பின்னர் நபிகள் நாயகம் அவர்களை இருபத்தைந்தாவது வயதிலே சீருப்புராணத்தில் சந்திக்கின்ருேம்.

# 8

இருபத்து ஐந்தாம் வயதில் தமது வளர்ப்புத் தந்தையும் பெரிய தந்தையுமான அபூத்தாலிப் அவர்களை நாயகத் திருமேனி அவர்கள் சந்தித்துச் சில சொற்கள் பகர்கின்றார்கள். இதனைக் கூறுகின்ற உமறுப்புலவர், முகம்மதின் அழகு பூத்த வாய் திறந்து உரைக்கலுற்றார் என்பார்.

**குடித்தனப் பெருமை சேர்ந்த குலத்தினுக்கு உயர்ந்த மேன்மை**
**படித்தலம் புகழுஞ் செங்கோல் பார்த்திவர் ஆதல் தேய்ந்து**
**மிடித்தவர் பெரிய ராதல் மிகுபுகழ் கிடைத்தல் கையில்**
**பிடித்திடும் பொருள தன்றிப் பிறிதில்லை உலகத்தன்றே!**

இப்பாட்டினையும், இதன்பின்னர் வருகின்ற பாட்டின் பொருளையும் கொண்ட சொற்களையும் எடுத்துரைத்து, வணிகக் கூட்டத்துடன் சிரியாநாடு சென்று தொழில் புரிந்து பொருளீட்டி மீளத் தாம் கொண்டுள்ள நாட்டத்தைப் பெரிய தந்தையாரிடம் உரைத்து, அவர்தம் கருத்தறிய விரும்புகின்றார்கள் நாயகத் திருமேனி அவர்கள்.

பொருளின்றி இவ்வுலகில் எதுவும் நடக்காது, நடத்தவும் இயலாதென்பதைக் கூறுகின்ற மகன், தொழில் புரியவும் பொருள் வேண்டும் என்பதைப் புரியாதிருக்கின்றாரே என அபூத்தாலிப் நினைந்தார் போலும்! ஆனால், "பணம் இல்லையே வணிகம் புரிய" என்று கூறினால், மகனின் ஆர்வம் குன்றி விடுமே என அஞ்சியோ என்னவோ, வணிகம் புரிய முதல் தந்துதவும் நல்லாரைச் சொல்லவிழைகின்றார். எனினும் எடுத்த எடுப்பில் உதவுவோரின் பெயரைக் குறிப்பிடாமல், அவர்தம் குண இயல்பினைக் கூறுகின்றார். முடிவில் பெயரைக்

கூறுகின்றார். இதுவே நபிகள் நாயகம் அவர்களை மணம் புரிந்து மகிழவிருக்கின்ற, தலைவியரான கதிஜா நாயகியின் அறிமுகமாக அமைந்துவிடக் காண்கின்றோம். இந்த அறிமுகம் இலக்கியத்தில் மிகப் புதுமையானது. ஆம், தந்தையே தன் மகனிடம், அவர் மணந்து கொள்ளப்போகின்ற பெண்ணைப் பற்றி உரைப்பது; அந்த உரையின் வாயிலாக, சீறுவைப்படிப் போரின் சிந்தையிலெல்லாம் தலைவியின் சிறப்பினைப் பதிய வைப்பது; தலைவி அறிமுகம என ஒன்றைத் தனியாகக் கூறாமல் வேறு ஒன்று பற்றி உரைக்கும் போது இந்த அறிமுகமும் இயற்கையாக நடந்து விடுகின்ற யுத்தியைப் பெரும் புலவரான உமறுப் புலவர் கைக்கொண்டிருப்பது ஆகியவை இதில் உள்ள புதுமைச்சிறப்பு எனலாம். இதில் உள்ள தனிச் சிறப்பு, தலைவியின் உடலழகை உரைக்காமல், உள்ளத்தழகை, குணமேம்பாட்டழகை விவரித்திருப்பதாம். இத்தன்மை தமிழ்க் காப்பிய உலகின் புதுமைச் சிறப்பென்றே சொல்லவேண்டும். இஸ்லாமியம் தந்த ஏற்றமிகு தனிச்சிறப்பெனக் கூறுவதும் பொருந்தும். கதிஜாப் பிராட்டியாரின் பெயரைக் கூறாமல், அவர்தம் குண அழகை அபூத்தாலிப் வாயின்மூலம் உமறு கூறுகின்ற உயர்வினைக காண்போம்:

**வருகவி வெயிலால் வாடும் மானுடப் பயிர்கட்கெல்லாம்**
**பொருளெனும் மாரி சிந்திப் பூவிடத் தினிது நோக்கி**
**அருமறை மலருன் காய்த்த அறிவெனும் கனியையுண்ட**
**திருநமர் குலச்சஞ் சீவிச் செழுங்கொழுந் தனையபாவை**

**வணக்கமும் அறிவும் சேர்ந்த மனத்துறும் பொறையும் நல்லோர்**
**இணக்கமும் வறியோர்க்கு ஈயும் இரக்கமும் நிறைந்த கற்பும்**
**குணக்கலை வல்லோ ராலும் குறித்தெடுத் தவட்கொப் பாகப்**
**பணக்கடுப் பாந்தள் பாரிற் பகருதற் கரிய வன்றே!**

என்பதாக எடுத்திசைத்து, முடிவிலே மின்னென ஒளி மாறுத விளங்கிழை கதிஜா எனச் சுட்டுகின்ற நயம் சீறாப் புராணத்திற்கே உரிய தனிச்சிறப்பாகும். இதன் பின்னர்;

**கலைத்தடக் கடலே எந்தன் கண்ணிரு மணியே யாமும்**
**அலைத்தடக் கடல்கண் பாவை அணிமனை அடுத்துச்**
**செம்பொன்**
**நிலைத்திட நினைத்து வாங்கி நெறிநெடுந் தூரமெல்லாம்**
**தொலைத்திவண் புகுவம் வல்ல தொழில் முடித்திடுவம்**

என்று பெருமானார் அவர்களின்பால் அபூத்தாலிப் உரைப்ப தாகப் பாடல் புனைந்து வழங்கியுள்ளார் உமறுப்புலவர். இக் கூற்று வணிகம் புரிய முதலீடு பெறுவதற்கான வழிகூறு வதாக இருந்தாலும், இதுவே, நபிகள் நாயகம் அவர்கட்கும் கதிஜாப் பிராட்டியாருக்கும் திருமணம் நடைபெற வழிவகுப்ப தாகவும் அமைகின்றது.

ஆம்! ஒரு தினம் வணிகத்திற்கு முதலீடு கேட்டுப் பெற, கதிஜாப் பிராட்டியாரின் அரண்மனை போன்ற இல்லத்திற்குப் பெருமானார் அவர்களையும் தம்முடன் அழைத்தேகுகின்றார் அபூத்தாலிப். பெருமானார் அவர்களின் குணநலம் பற்றி அறிந்திருந்த கதிஜாப் பிராட்டியார், பொருளீந்ததோடு மட்டுமின்றி, சிரியாநாடு செல்லவிருக்கின்ற தமது வர்த்தகக் குழுவின் தலைமைப் பொறுப்பினையும் பெருமானார் அவர் களிடம் ஒப்புவிக்கின்றார். சிரியா நாடு செல்கின்ற வர்த்தகக் குழுவைப் பொதுவிடத்தே மக்கள் கூடி வாழ்த்துரைத்தனுப்பு கின்றனர். கதிஜாப் பிராட்டியார் தம்முடைய கணக்கர் தலை வரான மைசரா என்பவரையும் அக்குழுவினருடன் சேர்த்த னுப்புகின்றார். அவரிடம் கதிஜாப்பிராட்டியார் புகன்றனுப்பு வது பெருமானார் அவர்கட்கு மெய்காப்பாளராகவும் பணி யாள ராகவும் செயல்படுவதோடு, அவர்களின் குண நலன் களையும் நித்தியச் செயல்களையும் முறையே தனக்கு எழுதி அனுப்பவேண்டும் என்பதே யாம். இவற்றை நோக்கும் யாருக்கும் கதிஜாப் பிராட்டியார் பெருமானார் அவர்களை மணந்து கொள்ள உளம் பொருந்தி விட்டார்கள் என்பது புலப்

படவே செய்யும். வணிகக்கூட்டம் மக்கமா நகரிலிருந்து சிரியா நாடு நோக்கிப் புறப்பட்டுச் செல்கிறது.

பிற்காலத்தில் பெருமானார் (சல்) அவர்களை எதிர்த்துப் பகைப்பவன் அபுஜஹில் என்பதனை இப்பயணத்தின் முதல் தினத்திலேயே அறிமுகம் செய்து விடுகின்றார் உமறுப்புலவர். இது மட்டுமின்றி, நபிப்பட்டம் அருளப்பட்ட அடி நாளிலிருந்தே முழு நம்பிக்கையுடன் நபிகள் நாயகம் அவர்களை நம்பிக்கையுடன் பின்பற்றி ஒழுகும் நன்மனத்தராகிய அபூபக்கர் சித்திக் அவர்களையும் அறிமுகம் செய்து விடுகின்றார். இந்த அறிமுகம் நடந்தேறுவதற்கு அடிப்படையாக, தலைமை தாங்கும் போட்டி ஒன்று நிகழ்கின்றது. ஆம், செல்லுகின்ற வணிகக் குழுவிற்குத் தலைவராக பெருமானார் அவர்களின் பெயரை அபூபக்கர் சித்தீக் அவர்கள் முன்மொழிகின்றார்கள்.

.......முன்னிலை எவரென விளம்பினர், அவரோடும்
அடைந்த பேர்களில் முகம்மது முதலென
அபூபக்கர் அறைந்தாரே.

அதனை உடனே எதிர்த்த அபூஜஹில் ''நானே தலைமை தாங்குவேன்; அத்தகுதி எனக்குத்தான் உண்டு'' என ஆர்ப்பரிக்கின்றான்.

**முகம்ம தென்றுரை கேட்டலு மபூஜஹில்**
**மனத்திடை தடுமாறி**
**மிகமு னிந்தனன் இவர்தமை முன்னிலை**
**விலக்குவ துனக்காகா**
**திகழெ னப்பலர் கூறவுங் கேட்டிலன்**
**இதற்கு முன்னிலை யானென்**
**றகம கிழ்ந்திட நடந்தனன் கெடுமதி**
**யடைவது மறியானே.**

பெருமானார் அவர்கள் வணிகக் குழுவிற்குத் தலைமை தாங்க வேண்டுமென, பலரின் விருப்படிக்கு அபூபக்கர் சித்தீக் அவர்கள் இயம்பினார்கள். அவ்வுரையை மறுத்த அபூஜஹிலோ, ''நானே தலைவன்'' எனத் தனக்குத் தானே முன்

மொழிவாரின்றி உரைக்கின்ருன். பலரின் எதிர்ப்பையும் பொருட்படுத்தவில்லே அவன். மட்டுமின்றி, ''நான்தான் தலேவன். அனேவரும் என்னேப் பின்பற்றி வாருங்கள்'' எனப் புகன்றவனக, ஒட்டகத்தின் மீதேறி, யாவருக்கும் முன்செல்லு கின்ருன். அபூஜஹிலின் இச் செயல் பிற்காலச் சர்வாதிகாரி கட்கு ஒரு முன் மாதிரியாக உளது. ஆம், சர்வாதிகாரிகளின் தலேமை, தமக்குத் தாமே உண்டாக்கிக் கொள்வதுதானே?

சிறிது தொலேவே சென்றிருப்பர். அதற்குள் கட்டை ஒன்றில் ஒட்டகத்தின் கால் தட்டுகின்றது. ஒட்டகத்தின் மீத மர்ந்து சென்ற அபூஜஹில் கீழே விழுந்து படுகாயமடை கின்ருன். ஏற்ற வேகத்திலும் விரைவாகப் பதவி பறி போயிற்று அபூஜஹிலுக்கு!

அடுத்த தலேமையும் நிலேக்கவில்லே. அதன் பின்பு தோன்றிய தலேமையும் சரிந்து வீழ்ந்துபட்டது. முடிவில் பெரு மாஞர் அவர்களின் தலேமையே நிலேத்திடுகின்றது. ஏற்க மனமின்றிக்கெடு மதி அபூஜஹிலும் நாயகத் திருமேனி அவர் தலேமையை ஏற்று நடக்கின்ருன். இடர்பாடு எதுவுமின்றி, வணிகக் குழு சென்று கொண்டிருக்கின்றது. செல்லும் வழியில் சுரத்தில் புனலழைத்தல், பாந்தள்வதை, நதி கடத்தல், புலியுடன் பேசுதல், பந்தளுடன் வசனித்தல் போன்ற பல பல அற்புதங்கள் நடத்துவிக்கப்படுகின்றன. இதன்பின் அறுநூறு ஆண்டு வாழ்வுடைய ஒரு ஞானியின் தவப்பள்ளி அடுக்கின்றது. அந்த முதிய ஞானி, பெருமாஞர் அவர்களே விரும்பி விருந்திற்கழைக்கின்ருன். பெருமாஞர் அவர்கட்கு, வலியவருகின்ற சிறப்பைக்கண்ட, அடைவது அறியாஞன அபூஜஹில், மனம் புழுங்கி மாற்றம் செய்கின்ருன். அவன் மாற்றத்தை, கற்றுத்தேர்ந்து முற்றும் துறந்த தவப்பள்ளி நாயகன் அறிந்து அகற்றி, நாயகத் திருமேனி அவர்களே உவந்து வரவேற்று விருந்திட்டு உபசரிக்கின்ருன். அத்துடன் அவனதன் ஆவி உடலே விட்டுப் பிரிகின்றது. உயிர் பிரியும் அந்த ஞானி கூறியவண்ணம், அவன் உடலே நபிகள் நாயகம்

அவர்கள் முன்னின்று நல்லடக்கம் செய்கின்றார்கள். அந்த ஞானியின் பெயர், புகைரு என்பதாம். புகைருவைப் பாடும் முகத்தான், நல்ல ஞானிகளின் தரத்தை, தன்மையை ஆழ்ந்த அறிவை, மேன்மைக் குணத்தைப் பாடல்களாகப் படைத்து வழங்குகின்றார் உமறுப்புலவர்.

**பல்வித நூலிற் றேர்ந்து பலசம யங்களாகச்**
**செல்வழி யனைத்து நோக்கிச் சென்றுமட் டறுத்துத் தேறி**
**கல்பினி லிருத்தி மாறாக் கதிப்பதி சேர்க்குந்தூய**
**நல்வழி தெரிந்து காண நடுவெடுத் துரைக்கு நாவான்**

**அறிவுநல் லொழுக்கம் வாய்மை யன்புறும் இரக்க மிக்கப்**
**பொறைதவங் குணவ ணக்கம் பொருவி லாசார மேன்மைத்**
**திறநிறை யருள்நன் மானந் தேர்ச்சியில் தேர்ந்த கல்வி**
**குறைவறுப் பெருகி நாளுங் குடிபுகுந் திருந்த நெஞ்சான்**

இத்தகு சிறந்த ஞானியின் நல்லுடலை, மண்ணில் சேர்த்த பின் பெருமானார் அவர்கள் தலைமையில் அவ்வணிகக்குழு மேலும் செல்கின்றது சிரியாவை நோக்கி.

# 9

சிரியா, இயற்கைவளம் ததும்புகின்ற எழில் நிறை நாடு. நபிகள் நாயகம் அவர்களின் தலைமையில் சென்ற வணிகரின் குழு, அந்த நாட்டின் வனப்பினைக் கண்டு மகிழ்ந்தவாறு ஷாம் நகரினை நோக்கி நடக்கின்ற வழியில், நெல் வயல்கள் காட்சிக்கு வருகின்றன. அறுவடையான வயல்கள் அன்று. அறுவடையை எதிர்நோக்கியுள்ள முற்றிய நெற்கதிர்களைத் தாங்கியுள்ள செழிப்புடைய வயல்கள். தலைசாய்ந்த நிலையிலே நிற்கின்ற நெற்கதிர்களைக் கண்டதும், நாணித் தலைகவிழ்ந்து நிற்கின்ற நற்குல நங்கையின் நினைவு தோன்றுவது இயல்பு. பல கவிஞர்கள் இதுபற்றிப் பாட்டிசைத்துள்ளனர். ஆனால், உமறுப் புலவரின் கற்பனை அலாதியானது. பெண்ணிற்கும், நெல்லிற்கும் உள்ள ஒற்றுமையை உமறுப் புலவரின் உள்ளம் ஊன்றிச் சிந்திக்கின்றது.

பெண், ஒரு மனையில் பிறந்து, இன்னொரு மனைக்கு வாழச் செல்கிறாள். நெல்லும் அப்படியே; ஒரு வயலில் நாற்றாக வளர்ந்து, இன்னொரு வயலில் நடவாகிப் பயிராகச் செழிக்கின்றது. பெண்ணும் கருக்கொள்கிறாள். நெற்பயிரும் அப்படியே. பெண்களில் சிலர், பேறுகால வேளையிலே தம் கணவன் மீது கோபம் கொள்வதுண்டாம். நெற்பயிர் அப்படிச் செய்வதில்லை! நல்ல பெண், தான் வாழச் செல்கின்ற வீட்டில் திருவும் செல்வமும் பெருகக் காரணமாவாள். அதனையே நெற்பயிரும் செய்யத் தவறுவதில்லை. இவ்வரிய ஒற்றுமையைப் பாட்டாக்கி, படிப்போர் உள்ளங்களைத் தம்பால் பற்றி இழுக்கின்றார் உமறு என்னும் உயர் தமிழ்ப் புலவர்.

**ஒருமனைப் பிறந்து, ஒருமனை யிடத்தினில் உறைந்து**
**கருவரத் தரித்து ஈன்று,தன் கணவனை இகழாப்**
**பெருவரம் புறும் பெண்கொடி யெனத்தலை சாய்த்துத்**
**திருவும் செல்வமும் திகழ்தரக் காண்பன செங்நெல்.**

உவமை என்பது இதுதான். உப்பிற்கும் ஆகா வெற்று உவமானத்தால் யாது பயன்? நபிகள் நாயகம் அவர்களின் ஷாம் நகரச் செலவு நேர்ந்திராவிடில், உமறுப் புலவரின் இவ் வரிய பாடலை நாம் நுகர இயலாதல்லவா? எனவே, நபிகள் நாயகம் அவர்களின் ஷாம் நகரப் பயணம் ஒருவகையில் உமறுப்புலவருக்கு வெற்றியாகி நம்மையும் மகிழ்விக்கின்றது. நபிகள் நாயகம் அவர்களுடன் ஷாம் நகரம் சென்ற அனை வரும் தம்தம் வணிகத்தில் என்றுங்காணு வெற்றிகண்டு நாடு திரும்புகின்றனர். மக்கமா நகரிலிருந்து புறப்படுங்கால், மைசரு எனும் தமது கணக்கர்பால் கதிஜாப்பிராட்டியார் கூறியபடி, கனவிற்குப் பலன் சொல்லுகின்ற ஊசா என்னும் அறிவுசால் மேதையைச் சந்தித்து விட்டால், வணிகத்தின் மூலம் பெற்ற ஆதாயத்துடன் கனவின்பலன் என்கின்ற ஆதா யத்தையும் சுமந்தவாறு மக்கமா நகரினுள் நுழையலாம். இது மைசரு என்கின்ற கணக்கரின் கவலை. ஊசா என்பவர், கனவிற்குப் பலன் உரைப்போர் மட்டும் அல்லர். சிறந்த நல்ல ஞானி. அவர் உறைகின்ற அறச்சாலையின் அருகிலேயே வணிகக்குழு வந்து தங்குகின்றது.

முக்காலமும் அறிந்த, மூன்று வேதங்களும் கற்ற மூதறிஞ ரான அந்த ஞானி, மனித குலம் உற்ற கீழ்மையை நீக்கி, மேல்நிலைப்படுத்த, இக்காலத்தே இறுதிநபி தோன்றியிருக்க வேண்டும். அந்த மாநபி இன்றிவ்விடம் வந்து தங்குவார் என்று கணித்து வைத்துள்ளார். எனவே தம் கணக்குத் தப்பா தெனும் உறுதியில் வணிகக் கூட்டத்தின்பால் பார்வையை வீசினர். அக்கூட்டத்தின் மத்தியிலே ஒருவரைக் காண்கின்றார். அடங்கா ஆவலுடன் எழுந்தோடி வந்து,

**திருந்தார் அடல் அரியே தரு செழுமாமழை முகிலே**
**பெருந்தாரணி தனில்நும்பதி குலம் பேரவை யனைத்தும்**
**வருந்தாதுஉரை யீரென்றனன் மறையோதிய மதியோன்.**

நபிகள் நாயகம் அவர்களைக் கண்டு, அவர்களின் அருகில் வந்து அமர்ந்த ஊசா என்கின்ற அந்த ஞானி, உங்கள் ஊர்,

பெயர், குலம் ஆகியவற்றை உரையுங்கள் என அன்பொழுகக் கேட்டார். அந்த ஞானியின் கேள்விக்குப் பதிலாக, தமது மூன்று தலைமுறைக்கு முன்பிருந்து துவக்கி, தம் பெயரையும் உரைத்தார்கள் நல்லருள் நாயகம் அவர்கள். கேட்ட அந்த ஞானி நீங்கள் தான் இவ்வுலகத்தைத் திருத்த வந்த உத்தம நபி, இறுதி நபி என்றியம்பி மகிழ்ந்தார்.

**அதுனன்கிளை, ஹாஷீம்குலம், அமரும்பதி மக்கம்**
**பிதிராநிலை அபுத்தாலிபு பின்னேரபு துல்லா**
**சுதனும்முகம் மதுகான்எனச் சொன்னார்மறை வல்லோன்**
**இதமாகிய நபியாம்என இசைத்தான்மனம் மகிழ்ந்தான்**

நல்லோர்களை நல்லோரே அறிகுவர் என்றபடி, நபிகள் நாயகம் அவர்களை, நபி எனக் கண்டுரைத்து மகிழ்ந்தார் அந்த ஞானி என்பது மேலே உள்ள பாட்டின் பொருள். இதன்பின் இவர்தான் நாம் தேடி வந்த நல்லார் என அறிந்த கணக்கர் மைசரு, கதிஜாப் பிராட்டியாரின் கனவினைக்கூறிப் பலன் கேட்டார். அந்த ஞானவானிடம் குவைலிது எனும் எனது நண்பரின் மகள் கண்ட கனவின் பலன், இந்த நபிகள் நாயகம் அவர்களை மணம்புரிந்து வாழ்வார்கள் என்பதுதான். இது நடக்கும். இணையிலாச் சிறப்புடன் கதீஜா வாழ்வார்கள். அவர்கட்கு எனது நல்வாழ்த்து, என்று கூறினர் அந்த ஞானியார். அவர் கூற்றையும், அதுவரை நபிகள் நாயகம்பால் தாம் கண்ட அரிய பண்புகளையும் நிருபமாக்கி, விரைந்து செல்லும் புரவியோட்டுகின்ற ஒரு ஏவலன்வசம் ஈந்து, மக்க மாநகரில் உள்ள கதீஜாப் பிராட்டியாருக்கு அனுப்பினர் கணக்கர் மைசரு.

**மறைதெரி அறியவன் உரைத்தசொல் கேட்டு**
**மைசரு மனம்மிக மகிழ்ந்து**
**நிறைபதி தனைவிட்டு இற்றைநாள் வரைக்கும்**
**நிகழ்ந்த காரணம் உளது அனைத்தும்**

**குறைவிலாது எழுதி முத்திரை பொருத்திக்**
**குறித்தவன் இடத்தினில் கொடுத்துக்**
**கறையிலா மதியம் எனும்மயில் கதீஜா**
**கரத்தினில் அளித்திடு என்றான்.**

இத்தகு எளிய இனிய சொற்கள் நிறைந்த லிகிதத்தை ஆள் ஒருவன் வசம் அனுப்புகின்ற போது, சென்றவர்களைப் பற்றிய செய்தி அறியத் துடித்துக் கொண்டிருந்தார்கள் கதீஜாப் பிராட்டியார். தினந்தினமும் மைசருவிடமிருந்து கடிதம் வரும் என எதிர்பார்த்தார்கள். அதே சிந்தனையில் மூழ்கி இருந்தவர்கள் ஓர் தினம் ஆழ்ந்த தூக்கத்தில் அழுந்தி விட்டார்கள். தூக்கத்தில் கனவு காண்கின்றார்கள்.

கனவு, கதாசிரியர்கட்கும், காவியம் புனைவோருக்கும் ஒரு அரிய வரப்பிரசாதம். கதீஜாப் பிராட்டியாரின் கனவு, உமறுப் புலவரின் கற்பனைப் புரவி தங்குதடையின்றிச் செல் வதற்கான பாட்டை! கரடு முரடான பாட்டையன்று. மிகச் சிறந்த ராஜபாட்டை!

ஷாம் நகரின்கண் தமது வர்த்தகப் பணிகளை முடித்துக் கொண்ட நபிகள் நாயகம் அவர்கள், தம் சகாக்கள் புடைசூழ, ஒரு அழகிய தோப்பினிடையே வந்து தங்கு கின்றார்கள். நபிகள் நாயகம் அவர்கள் வந்து தங்கி இருந்த தோப்பினில் நிறைந்து திகழ்ந்த கனிதரும் மரங்களைப் பாடு கின்றார் உமறு:

**தேன்குடம் அனைய முன்புறக் கனிகள்**
**திகழ்தரச் செறிந்தன ஒருபால்**
**மாங்கனி அமுதத் திவலைகள் தெறிப்ப**
**மலிதரச் சொறிவன ஒருபால்**
**பூங்குலைக் கூன்காய் பொன்பழுத்து ஒளிர்வ**
**போன்றன கதலிகள் ஒருபால்**
**தீங்கில் பொன் கலசம் விண்டுசெம் மணிகள்**
**சிந்தும் மாதுளைத் திரள் ஒருபால்**

இத்தகு கனிதரும் மரங்கள் அடர்ந்த சோலையிலே அழகிய ஓடைகளுக்கு மத்தியிலே, அல்லியும் தாமரையும் அடர்ந்து மலர்ந்த தடாகத்தின் இடையிலுள்ள விரிந்த இடத்திலே, அறிவினுக்கறிவாய் அரசினுக்கு அரசாய் அணியினுக்கணியதாய்த் திகழுகின்ற மாநபிகள்நாயகம் வந்து தங்குகின்றார்கள். அதுபோது, வானிலிருந்து எண்ணிலடங்கா அமரர்கள் வந்து குழுமினார்கள். பொன்னுலகில் இருந்து தாங்கள் கொணர்ந்திருந்த சிறந்த அணிமணிகளை நாயகத் திருமேனி அவர்கட்குச் சூடினார்கள். அழகிய ஆடைகளை அணிவித்தார்கள். வாசம் கமழுகின்ற மாலை தரித்திடவைத் தார்கள். ஒப்பனை செய்யப்பட்ட ஒட்டகத்தின் மீது ஏற்றினார் கள்.வானுலகவாத்தியங்கள் ஆர்த்தன. வானமகளிர் வெண்சாமரம் வீசினர். கண்ணும் கருத்தும் களிப்புறநோக்கி மகிழ்ந்து, மக்கமாபுரத் தெருக்களினூடே உலாவரச்செய்தார்கள். அந்த ஊர்வலம் கதீஜாப் பிராட்டியார் தம்வீட்டின் வாயிலின் முன்பு வந்து நின்றது. நாயகம் அவர்கள் ஒட்டகத்தின் மீதிருந்து இறங்கினார்கள். இறங்கிய அவர்களின் பாதகமலங்களில்தாம் பணிவதாகக் கதீஜாப்பிராட்டியார் கனவு கண்டார்கள். விழித்துக் கொண்டார்கள், விழிப்பிலும் தாம் கண்டது கன வென்ற நினைவின்றி உண்மை நிகழ்வாகவே கருதி, தெருப் புறத்தே சென்று நோக்கினார்கள். தெரு வெறிச்சோடிக் கிடந்திடக் கண்டு துயரினில் ஆழ்ந்தார்கள்.

**கனவினை நனவென்று அகமகிழ்ந்து எழுந்து**
**கதிர்மணி வாயிலை நோக்க**
**இனமத கரியும் பரியோடு ரதமும்**
**இருங்கடல் சேனையும் விருதும்**
**மனமலர் உறைந்த முகம்மது தமையும்**
**வானவர் மகளிர்கள் தமையும்**
**புனைமணிக் கொடியும் கவிகையும் காணார்**
**பொருந்திய துயரமே கண்டார்.**

தாம் கண்டது கனவென்பது போய், திரும்பத் திரும்ப அக் காட்சியே தம்மனக் கண்முன் தோன்றத் துன்பம் மிகைத்து,

தூக்கத்தைக் கொன்றது. துயருள் ஆழ்ந்தார்கள். மனம் நொந்து வாடிய கதீஜாப் பிராட்டியார் எதிரில் பணிப்பெண் தோன்றினுள்; மைசரு அனுப்பிய லிகிதம் என ஈந்து மறைந்தாள். பெற்ற லிகிதத்தின் முத்திரையை நீக்கி, விரித்துப்படித்தார்கள், முகம்மது எனும் பெயரினைக் கண்ணுறும் போதெல்லாம் கண்களில் ஒற்றி மகிழ்ந்தார்கள். வந்து கொண்டிருக்கிருர் முகம்மது எனும் வாசகம் அவர்கட்குத் தேனுகப் பாகாகச் செந்தமிழ்ச் சொல்லாக இனித்தது. மகனைப் பிரிந்து வருந்திக் கொண்டிருக்கும் அபூத்தாலிபும் மகிழட்டும் என, அவ்வரிய லிகிதத்தை அனுப்பி வைத்தார்கள். அவரும் படித்து உயிர் பெற்ற உடலென உய்த்தெழுந்து அகம் நிறை ஆனந்தம் கொண்டார். மதியை எதிர்பார்க்கும் மலர்களாகக் கதீஜாப் பிராட்டியாரும், அபூத்தாலிபும் நாயகத்திருமேனியார் வரவுக்குக் காத்திருந்தனர்.

**திரு நிகர் கரத்துஅபூத்தாலிப் ஆகிய**
**குரிசி லும்கதீ ஜாவெனும் கோதையும்**
**வரும் மதிக்கு இன்புறும் மலர்கள் ஒப்பென**
**இருவரும் உவகையில் களித்து இருந்தனர்**

என்று பாடி, கதீஜா கனவு கண்ட படலத்தை முடிக்கின்ருர் உமறுப் புலவர். இதனை அடுத்து வருவது, மணம் பொருத்து படலம். பின்னர் மணம்புரிபடலம்; சுவையான விருந்து.

# 10

அபூத்தாலிப் என்கின்ற முதியவர் மனத்திலே, தம்முடைய வளர்ப்பு மைந்தரைக் காணப் போகின்றோம் என்கின்ற குதூகலம். கதீஜாப் பிராட்டியார் உள்ளத்திலோ, திருமணம் பற்றிய ஆசை. இந்தச் சூழலில், வணிகத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்தவர்களாக, நபிகள் நாயகம் அவர்கள் மக்கமா நகரினுள் நுழைகின்றார்கள். அபூத்தாலிப் வந்து ஆரத்தழுவி, மைந்தரை இல்லத்திற்கு இட்டு ஏகுகின்றார். ஏனையோரும் அவரவர் இல்லம் சென்று சேர்ந்தனர்.

இதன் பின்னர், கணக்கர் தலைவர் மலிபுகழ் மைசருவைக் காணுகின்றோம். அவர், ஈட்டிய செல்வத்தையும் எழுதிய கணக்கையும் ஏந்திச் சென்று, கதீஜாப் பிராட்டியாரின் திருமுன் வைத்து வணங்கி நிற்கின்றார்.

**........................மலிபுகழ் மைச ருவும்**
**ஓங்குமா நகரம்புக்கி, ஒளிர்மணித் தவிசில் ஆய**
**தேங்குழல் கதீஜா பைம்பொன்சீரடி வணக்கம் செய்தான்,**

என்பது உமறு கூறுகின்ற உயர்தமிழ்ப்பா. மைசரு அளித்த கணக்கையோ, ஈட்டி வந்துள்ள செல்வத்தையோ கதீஜாப் பிராட்டியார் தீண்டியும் பார்க்கவில்லை. ''உம்மிடம் ஒப்புவித்த பணி என்ன ஆயிற்று? பிரயாணத்தின் போது, நாயகத் திருமேனியார் எப்படி நடந்து கொண்டார்கள்? குணம் எப்படி? பழகும் முறை எத்தகையது? கூறும் முதலில் அதனை'' என்று கேட்டார்கள்.

**''மறைப்பதம்வழுத்தி அன்னோர்வாய்மொழி மறுதுநின்றோர்**
**திரைப்பெரும் புவியில்மேலோர் செல்வமே பெறுவர்கேளார்**
**நிரைப்பெரும்நரகம் ஆழக் கெடுவர்....''**

என் றும்,

**"தெண்டிரைப்புவனம் ஏழும்சேர்ந்தபொன் உலகம்எட்டும்**
**கொண்டுதன் நேமிஒன்றால் கொற்றவெண் குடையுள்ஆக்கி**
**வண்டணிதுதையும் தண்தார்முகம்மதே புரப்பர்தேனும்**
**கண்டும்ஒத்தனைய சொல்லாய்க்காண்பது திண்ணம்"**

என்று மொழிந்து, இதற்குமேல் தெரிய வேண்டுமாயின், நான் எழுதி அனுப்பிய லிகிதத்திலே முழுவிவரமும் குறித்துள்ளேன். கண்டுகொள்க எனவும் புகன்ற மைசரு சென்ற பின்னர், அவர் செப்பிய மொழிகளில் எண்ணத்தைச் செலுத்தி, இன்புற்றார் கள் கதீஜாப் பிராட்டியார். நபிகள் நாயகம் அவர்களைத் தம் மணாளராக வரித்துவிட்டது கதீஜாப் பிராட்டியாரின் எழிலார் இதயம். தம் இதயம் ஏற்று மகிழ்கின்ற இன்ப நினைப்பை, எப்படி நிறைவேற்றுவது? யார் நிறைவேற்றித் தருவது? கதீஜாப் பிராட்டியாருக்குத் தந்தை உண்டு. வயது முதிர்ந்த வள்ளல் குவைலிது என்பது அவர் தம் பெயர். அவர் அறிந்தால் நடைபெறலாம். அவரிடம் யார் இயம்புவது? மகளே தந்தையிடம் சென்று, இன்னாரை எனக்கு மணவாள ராக ஆக்கித் தாருங்கள் என்று கேட்க முடியுமா? கேட்பது முறையா?...கவலைப் பெருக்கு ஊற்றாகத் தோன்றி, நதியாகப் பெருகி, கடலாக மாறி, துன்ப அலைகளை எழுப்பி, தொல்லைக் குள் ஆக்கிற்று கதீஜாப் பிராட்டியாரை என்கிறார் உமறுப் புலவர்.

**நனிதுயர்ஊறு தொட்டுநதிப்பெருக் காகிப்பின்னும்**
**கனைகடல் விரிவ தாக்கிக்கதித்தெழப் பெருக்கிற்றன்றே!**

இது உமறு தரும் உயர் வாசகம். ஒரு பெண்ணின் மனத் தெழுந்து வியாபித்து நிற்கும் துயரினை இதைவிட எப்படி உவ மானித் துரைப்பது?

தம் துயரினை, துன்பத்தை, வேட்கையை, அதிலும், திருமண ஆசையை மகள், தன் தந்தையிடம் கூற இயலாது தான். ஆனால் வேறு வழி?

அரபு நாட்டுச் சரித்திரங்களில், கனவுகள் பல நற்காரியங்கள் நடைபெற உதவியிருப்பதைக் காண்கின்றோம். அக்கனவே இங்கே கைகொடுத்து உதவுகின்றது. ஆம், தூக்கத்தில் அரிய கனவொன்றைக் காணுகின்றார்கள் கதீஜாப் பிராட்டியார். தம் உறவினரும், கனவிற்குப் பலன் சொல்பவருமான 'வரக்கா' என்பவரை அழைத்து, கனவிற்குப் பலன் கூறுமாறு வேண்டுகின்றார்கள். அவர் பலன் சொன்னது மட்டுமன்றி, அக்கனவின் பொருளைக் கதீஜாப் பிராட்டியாரின் தந்தையார் இடமும் விரித்துரைத்து, ஆவன செய்யுமாறு அறிவிக்கின்றார். அவர் சொன்னது இதுதான்.

இந்தக் கனவிற்கான பலன், கதீஜா, நபியை மணப்பார் என்பதே! நபி யாகும் செவ்விய குணமும் தகுதியும் அப்துல்லா மகன் முகம்மது என்பாருக்கே உண்டு. உங்கள் மகள் மனத்திலும் அவரை மணந்து கொள்ளும் எண்ணமிருப்பதாகத் தோன்றுகின்றது. காலம் தாழ்த்தாமல் காரியம் ஆற்றுவது நல்லது.

கனவுக்கலை வல்லுநரான வரக்கா கூறியதைக் கேட்டு ஆனந்தக் கொழுங்கடல் குளித்தார் குவைலிது. நாயகப் பேரொளியைத் தமது மருகராக அடைவதிலே மகிழ்வுதான் அவருக்கு. ஆனால்....

கதீஜாப் பிராட்டியாரின் தந்தையாரான குவைலிது, செல்வச் சிறப்புடைய சீமான். அரச வாழ்வினும் அதிஉன்னத வாழ்வினர். அரண்மனையினும் அதிமேலானது அவர்தம் மாளிகை. நபிகள் நாயகம் அவர்கள், ஏழைமட்டிலுமின்றி, அனாதையும்கூட. எப்படி வலிந்து சென்று, "என் மகளை மணந்து கொள்ளுங்கள்" என்றுரைப்பது? இது குவைலிதிற்குள்ள கவலை. காலம் ஓடுகின்றது! நாயகத் திருமேனி அவர்கள், வேறு யாரையேனும் மணம்புரிந்து கொண்டு விட்டால்? நடக்கலாம்; அவ்வளவு நல்லவர்கள் நபிகள் நாயகம் அவர்கள். மேலும் ஷாம் நகர வணிகத்தில் அவர்கள் ஈட்டி வந்துள்ள லாபம் பெரும் புகழைத் தேடித்

தந்துள்ளது. எனவே, அவர்கட்கு யாரும் பெண்தர முன்வரலாம். அப்படி நடந்துவிட்டால்? அன்பாலும், ஆசையாலும், அடக்கஒண்ணு அவசரத்தாலும் தூண்டப்பெற்ற கதீஜாப் பிராட்டியார், மதிநுட்பம் உடைய கணக்கர் மைசருவை அழைத்தார்கள். அழைத்து, ஆமாம், ஏன் இன்னும் நபிகள் நாயகம் அவர்கள் திருமணம் புரிந்து கொள்ளாதிருக்கின்ருர்கள்? எனக் கேட்டார்கள். இக்கேள்வியை, தம் கணக்கரிடம், எஜமானி கேட்கின்ற தன்மையில் அதிகாரத்துடன் கேட்கவில்லையாம் கதீஜாப் பிராட்டியார்.

**அரும்புகழ் மைசருவை அழைத்து, அருகிருத்தி, நெஞ்சில்**
**விரும்பியஉவகைகூரக் காரணவேந்தர்க்கு, அன்பாய்ப்**
**பெரும்புவி மணத்தின்கோலம் பெற்றிலாது என்கொல்**

என்று கேட்டார்கள் என்பதாக உமறுப் புலவர் உரைக்கின்ருர்.

திடீரென்று தம்முன் இப்படி ஒரு கேள்வி வரும் என்று மைசரு எதிர்பார்க்கவில்லை. எனவே, பதில் கூறுவதில் சிறு தயக்கம். பின்னர் அவர் இக் கேள்வி ஏன் எழுகின்றது என்பதை யூகித்தறிந்து கொள்கின்ருர். எனினும், பொதுவாக, முதியோர் உரைக்கின்ற தத்துவத்தையே அவர் புகல்கின்ருர். சுருக்கமாகச் சொல்லப்புகின், மைசரு உரைத்தது, "எந்தக் காரியமும், நாம் நினைத்தபடி முடிகின்றதா? இறைவன் விதித்தபடிதானே நடக்கும்?" என்பதேயாம்.

**தேறியகரணம் போகம்செழும்புவி யாக்கைபோல**
**ஊறியஊழின் அன்றிமுடியுமோ உலகத்தில் என்ருன்.**

மைசருவின் உரையை இவ்வரிய கவிதை வரிகளில் நிறைத்துக்காட்டுகின்ருர் உமறு. இதன் பின்னர், அறிவார்ந்த கதீஜா எதுவும் கூறவில்லை. மைசரு சென்று விடுகின்ருர். ஆனல், மைசருவின் கடமை அத்துடன் தீர்ந்துவிடவில்லை. கேள்வியின் உட்பொருளை உணர்ந்த அவர், நபிகள் நாயகம் அவர்களைச் சென்று காண்கின்ருர். கண்டு, தம்மிடம்

கதீஜாப் பிராட்டியார் கேட்ட அதே கேள்வியைக் கேட்கின்றார்: "ஆமாம், உங்களுக்கு ஏன் இன்னமும் திருமணம் ஆகவில்லை?" மைசருவின் கேள்விக்கு நாயகப் பேரொளியவர்கள் அளித்த பதில், "இது, என்னை அன்புடன் வளர்ப்போரிடம் விடுக்க வேண்டிய வினா" என்பதாம்.

"நீங்கள் விரும்பினால், இந் நகரத்தின் அரசிக் கொப்பான கதீஜாப் பிராட்டியாரை மணந்து கொள்ளலாம். அவர்கள் விரும்புகின்றார்கள்!"

மைசருவின் இக்கூற்றுக்கு நபிகள் நாயகம் அவர்கள் பதில் கூறவில்லை. தமது பெரிய தந்தையர்பால் இட்டேகினார்கள்.

**தந்தைமாட்டேகி அங்ஙன்சார்பிடம் அறிந்துசார்ந்து**
**நம்தமர்தனினும் மிக்கநண்பினன் இவனென்றுஓதி**
**மந்திரமொழியாய் யாதோவாசகம் உளதென்றான்தன்**
**சிந்தையை விளக்கமாகக் கேளுதி தெரிய என்றார்.**

மைசரு சொன்ன வாசகம், பெருமானார் அவர்கட்கு உடன்பாடானதுதான். ஆனால், தம் விருப்பத்தை வெளியிடவில்லை. பெரிய தந்தையிடம் மைசருவை இட்டேகினார்கள். இம்மனிதன் எனது மேன்மையை விரும்புகின்ற நண்பன் என அறிமுகப்படுத்தினார்கள். நமது சுற்றத்தாரினும் மிக்க நல்லான் என்றார்கள். இவன் ஏதோ, நாம் மட்டுமே தெரிந்து கொள்ள வேண்டிய செய்தி ஒன்றுளதென்கின்றான்; விளக்கமாகக் கேளுங்கள், என உரைத்து அகன்றேகி விட்டார்கள்.

வந்திருப்போன் சொல்லவிருக்கின்ற செய்தி, தம் மைந்தருக்கு உடன்பாடானதே என உணர்ந்து கொண்ட அபூத்தாலிப் அவர்கள், மைசருவை அழைத்து அருகிருத்தி, யாது செய்தி கூறும் என்றார்கள்.

நபிகள் நாயகம் அவர்களிடம் உரைத்ததையே அபூத்தாலிப் அவர்களிடமும் உரைத்தார் மதிமிகு மைசரு. கேட்ட அபூத்தாலிப் அவர்கள் உளம் பூரித்துப் போனார்கள். தாய்

தந்தையற்று, தமது வளர்ப்பு மகனுக உள்ள நபிகள் நாயகம் அவர்கட்கு, யாருக்கும் கிட்டாத பெரிய இடத்துப் பெண்! அழகு, அறிவு, அடக்கம், பண்பு, நற்குணம் அனைத்தும் நிறைந்த பெண்! மறுத்துரைக்க என்ன இருக்கின்றது? ஆயினும் அவசரப்படவில்லை அபூத்தாலிப். நல்லது, யோசிப்போம் என்று கூறி, வல்விருந்தளித்து வழிகூட்டியனுப்பினர் மைசருவை. மைசரு சென்றபின்—,

**அயர்விலாதுஉரைத்த சொல்கேட்ட அருளுறைஅபுத்தா லிபு**
**புயவரைபூரித்து ஓங்கி,பொருவில் அப்பாசு,ஆரிது**
**வயவரிஹம்சா ஈருய்,மன்னும சோதரரை எல்லாம்**
**நயனுறஅழைத்து இருத்தி,நடந்தசொல் அனைத்தும்சொன்னர்.**

மைசரு சென்ற பின்னர், தம்முடன் பிறந்த சகோதரர்களை அழைத்து, நம்முடைய சகோதரரின் மைந்தருக்குக் கிட்டி வந்துள்ள பெரும் பேற்றினை விளக்கி உரைத்தார் அபூத்தாலிப். கேட்டு அனைவரும் ஆனந்தத்தில் திளைத்தனர். இன்றே இப் பொழுதே சென்று பேசிமுடித்திடலாம் என்றுர் ஒருவர். வேலைக்காரன் சொன்ன சொல்லை நம்பி, மிகப்பெரிய இடத்தில் பெண் கேட்கச் சொல்வது சரிதான என்றுர் இன்னொருவர். சற்றுமுன்னர் நிலவிய குதூகலம் இப்பொழுதில்லை. என்ன செய்வதிதற்கு என்ற சிந்தனை எல்லோர் உள்ளிலும். நடந்து விடும் என்றெண்ணிய திருமணத்திற்கு நடுவில் ஒரு தேக்கம், உமறுப்புலவர் கடைப்பிடித்துள்ள யுத்தி, தமிழ் இலக்கியத்தில் மிகவும் புதுமையானது.

கதீஜாப் பிராட்டியார், இனித் தனக்குத் திருமணம் தேவையில்லை என்றிருந்தவர்கள். அவர்கள் திருமணத்தை நாடுகின்றார்கள், அதுவும் அப்துல்லாவின் மகனார் அண்ணல் முகம்மதுநபி அவர்களை மணம் புரிந்து கொள்ள விரும்புகின்றார்கள் என்பது மகிழ்ச்சிதான். எனினும், இது அவர்களின் கணக்கர் மூலம் வந்த செய்தி; ஆகவே எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லதென்ற முடிவிற்கு அபூத்தாலிப் அவர்களும், அவர்தம் உடன் பிறந்தோரும் வந்தனர். இவர்கள் எல்லோரினும் இளையவர் ஹம்ஸா என்பவர். பேச்சாற்றல் மிக்கவர். எண்ணியதை எண்ணியாங்கு முடிக்கின்ற இயல்பினர். இத்தகு திறனுள்ள ஹம்சாவை அனுப்பி, கதீஜாப் பிராட்டியாரின் தந்தையரான குவைலி தென்பாரின் மனப்பாங்கினை அறிந்து வரச்செய்யலாமே என்றார் அபூத்தாலிப். திறலறிவர் அபூத்தாலிப் உரையை ஏற்று ஹம்சா மன மகிழ்வும் மனக்களிப்பும் உடன்எழப் புறப்பட்டார். இந்த ஹம்சா அவர்கட்கும், நபிகள் நாயகம் அவர்கட்கும் சம வயதென்பர். தொண்ணூறு வயதுடைய குவைலிதிடம், வள்ளல் நபிக்குப் பெண் கேட்பதற்கு, இருபத்தைந்தே வயதுடைய இளவல் ஹம்சா புறப்பட்டார்.

**மனமகிழ்வும்மனக்களிப்பு மருங்குவரஎழுந்தமுசா**
**வாயில்நீங்கி**
**இனமணிஒண் கதிர்மாடத் திடுமணிவில் எறிப்பஅடல்**
**ஏறுபோலத்**
**தினகரன்மெய் மறுகுமணி மறுகூடு மறுகாது**
**சென்று நீங்காக்**
**கனகமழை பொழிமேகக் குவைலிதுவாழ்ந்திருந்ததலைக்**
**கடையில்சார்ந்தார்,**

ஹம்சா என்பாரின் மன எழுச்சி இருந்த தன்மையைச் சுட்டுவது போன்று, நடை எழுச்சி கூட்டிப் பா இசைத் துள்ளார் உமறு. ஹம்சா, குவைலிதுதம் மனைவாயிலைச் சென்று சேர்ந்தார் என்பதே பாட்டின் பொருள். ஆனால் இதனைச் சொல்லப் போந்த உமறுப் புலவர், மனமகிழ்வும், மனக்களிப்பும் மருங்கு வர என்றும், மறுகுமணி மறுகூடு மறு காது சென்றார் என்றும் சொற்பெய்துள்ள நயம், சிறப்பிற்குரிய தாம். மற்றும் திருமண வீட்டில் இசைநாதம் எழுவது போன்று, பாடலில், நடைநாதம் ததும்புமாறு செய்துள்ளதும் திரும்பத் திரும்பப் பாடி மகிழத்தக்கதாம்.

தம்முடைய இல்லம் போந்த ஹம்சாவை, மகிழ்வுடன் வர வேற்று உபசரித்த குவைலி தென்பார், வந்தவாறு யாது என வினவுகின்றார்.

முதியவரின் கேள்வியைப் பயன்படுத்திக்கொண்டு, நபிகள் நாயகம் அவர்களின் சிறப்புக்களையெல்லாம் தொகுத்துரைக் கின்றார் ஹம்சா. ஹம்சாவின் கூற்றிலே, அவர்தம் சொல்லுந் திறம் மட்டுமின்றி, மாப்பிள்ளை வீட்டார், மாப்பிள்ளையின் சிறப்பை விரித்துரைப்பது மரபு என்கின்ற தன்மையும் தொக் கப்பாடுகின்றார் உமறு. இவற்றோடு, படிப்போர் மனத்திலும் நபிகள் நாயகம் அவர்களின் சிறப்பினை நன்கு பதியுமாறு செய்கின்றார்.

**தெரிந்தமறை முறையாலும், தேர்ந்தவர்சொல்**
**தெளிவாலும், தெருண்ட மேலோர்**
**அருந்தவமாய், எம்மினத்தோர் ஆருயிராய்,**
**அருமருந்தாய் அப்துல்லாபால்**
**இருந்தமணி யாயுதித்த முகம்மதெனும்**
**விடலைகருத் தினிதுகூறப்**
**பொருந்தமணம் முடிப்பதற்கு வந்தேன்**
**என்றினியமொழி புகல்வதானார்.**

மேலோர்களின் அரிய தவமாகவும், எமது இனத்தார்களின் ஆருயிராகவும் உள்ள மேன்மைமிக்கோய்! எனது அண்ணன் அப்துல்லாவின் மகனர் நபிகள் நாயகம் அவர்களின் திருமணம் முடியும்வகை காணவந்தேன் என்று கூறுகின்ற ஹம்சா, அருமருந்தாகவும் உள்ளவர்கள் நபிகள் நாயகம் என்றும் புகல்கின்ருர். ஆனல் மேலோரின் அருந்தவமாய், எம்மினத்தவரின் ஆருயிராய் என்ருற் போன்று அருமருந்தென்றதற்கு அடைமொழி கூட்டவில்லை. உலக மக்களின் பவப்பிணி தீர்க்கும் அருமருந்தாய் உதித்தவர்கள் நபிகள் நாயகம் அவர்கள். இந்த உயரிய அடைமொழியைச் சுட்டவில்லை. இங்கே அதைச் சுட்ட வேண்டிய அவசியமும் இல்லை. கதீஜாப் பிராட்டியாரின் உள்ளத்துற்ற ஆசைப் பிணிக்கு, அருமருந்தாய் என்று குறித்திருக்கலாம். அப்படிக் கூறுவது பண்பன்று ஆகலான், பொதுவாக அருமந்தென உரைத்து, இந்த அருமருந்தை அடையும் பேறு எவருக்கு உளதோ எனும் ஆசையைத் தோற்றுவிக்கும் தன்மையிலே ஹம்சா அடைமொழி கூட்டாது அருமருந்தென்கின்ருர். பாத்திரங்களைப் பேசவைப்போன் கவிஞன். ஆனல், அந்தப் பாத்திரமாகப் பேசுவதும் கவிஞனே! உயரிய கவிஞன். பால் படாத பாத்திரங்கள் ஓட்டைப் பாத்திரங்களாகி விடுவது இயல்பு. தாம் படைக்கின்ற பாத்திரங்களால் உயர்வடைகின்ருன் கவிஞன். இங்கே ஹம்சாவின் பேச்சுத்திறம், உமறுப்புலவரை உயர்புலவராக உயர்த்திக்காண்பிக்கக் காண்கின்ரேம்.

ஹம்சா, நபிகள் நாயகம் அவர்களை அருமருந்து எனச் சுட்டியதோடு அமையவில்லை. அந்த அருமருந்தை அடைகின்ற பேறு யாருக்குக் கிட்டியுளதோ என்று கருதுமாறும் பேசுகின்ருர்.

ஆம், இந்த மக்கமா நகரில், பொன் அனைய பெண்களை ஈன்றுவக்கும் மதிப்பிற்குரியாரெல்லாம், தம் தம் கன்னியரை எமதருங் குரிசிலுக்குத் தருவதாக வலிய வந்துரைக்கின்றனர்.

எனினும், உங்களைக் கேளாமல், எவரிடத்தும் பெண் கொள்ளல் தகாதென்பது என்னுடன் பிறந்தார் அனைவர் தம் முடிவு. ஏனெனில், நீங்கள் அனுபவமிக்கவர். இவ்வூரில் உள்ள எல்லாக் குடும்பங்களையும் அறிவீர்கள். எங்கள் நலனிலும் அக்கறை உடையவர்கள், உறவினரும்கூட. எனவே, யார் வீட்டில் பெண் கொள்வது நலம் என்பதுபற்றி, உங்கள் அறிவுரையைக் கேட்டு வருமாறு எனது தமயன் மார்கள் என்னை உங்களிடம் அனுப்பினார்கள். உங்கள் கருத்துவழி நடப்பதாக உரைக்குமாறும் கூறியனுப்பியுள் ளார்கள்.

**இந்நகரில் குறைஷிகள்நம் இனத்தவரில்**
**மதித்தவர்தம் இடத்தில் வாய்ந்த**
**பொன்னனைய மடவாரைத் தருதுமென**
**அவரவரே புகல்கின் றூரால்**
**அன்னவரில் பெரியாரில் மதியாரில்**
**தவத்தோரில் தலைமையோரில்**
**நின்னையலது இலையெனவே அவருரைத்த**
**மொழியனைத்தும் நிகழ்த்தி யன்றே**

*மாற்றுரை நும் கருத்திலுறும்படி கேட்டு வருதியென மறுவி லாது போற்றியுரைத்தனர். எனது முன்னோரின் உரைப் படியே புகன்றேன். மிக்க தேற்றமுறு மனத்தாய்ந்து நிகழ் காலம் வருங்காலச் செய்கை நோக்கி, ஊற்றமுடன் உரைத் திடுக. அவ்வுரையின்படி நடப்பது உறுதி என்றூர்.*

ஹம்சாவின் உரை, அனுபவமும் ஆற்றலும் மதிநுட்பமும் உடைய முதியவரை, குவைலிதைத் திகைப்பிலாழ்த்திற்று. ஆம், ஹம்சா, எம் அண்ணன் மகனூர் திருமணம் பற்றிப் பேசவந்தேன் என உரை நல்கியபோது, கதீஜாப் பிராட்டியார் பற்றியே பேச வந்திருக்கின்றூர் என எண்ணுவது இயல்பு. எனவே, தம் மகள் விருப்பப்படி, திருமணம் நடைபெறுவதற் கான வேளை வந்துவிட்டதென நினைத்திருப்பார் குவைலிது. ஆனல், 'ஊரில் யார் வீட்டில் பெண் கொள்ளலாம்?' என

ஹம்சா கேட்டதும், தமது முன்னினைவு மாய்ந்து, இதற்கென் செய்வதெனக் குவைலிது சிந்திக்கலானார். ஆம், உமறு காட்டு கின்ற இளமை, முதுமையின் ஆற்றலை, அறிவை, அனுபவத்தை மடக்கி வெற்றி கண்டிலங்கக் காணுகின்றோம். பாத்திரங்களை அப்பாத்திரங்களின் தன்மைக்கேற்ப உரையாற்றச் சொற்படைத்து, நம்மைப் பயன் துய்க்கவைக்கின்றார் உமறு.

குவைலிதிற்கு வேறு வழியில்லை. தாமே வலிய தம் மகளைத் தருகின்றேன் என்று உரைத்தாலொழியக் காரியம் கைகூடாது. எனவே, நாயகத் திருமேனி அவர்களின் பண்புகளை எடுத்துரைத்து, இத்தகையோருக்கு யார் பெண்தர மறுப்பார்கள்? நீங்கள் கூறியது உண்மை. நாயகத் திருமேனியருக்கு, யாரும் வலியப் பெண்தர முன்வருவது இயல்பு. ஏன், நானே என் மகள் கதீஜாவை மணம் முடித்துத்தரக் காத்திருக்கின்றேன். இதை உங்கள் உடன் பிறந்தார்களிடம் உரைத்து, அழைத்து வாருங்கள் என, ஹம்சாவிடம் கூறி வேண்டுகின்றார் குவைலிது.

**வடிவாலும், குணத்தாலும், குலத்தாலும்**
**முகம்மதுநேர் மற்றோ ரில்லைப்**
**படியாளும் முதியாரில் யாவரவர்**
**மணம்பொருந்தப் பகர்ந்தி டாதார்?**
**பிடியாரும் மென்னடைக்கொம்**
**பினைக்கதீஜா எனத்தமியேன் பெற்ற பேற்றைக்**
**கடியாரும் மலர்சூடி நும்மிடத்தில்**
**தருகமனம் கருதிற் றன்றே**

இது, குவைலிதின் உரை. கேட்ட ஹம்சா மனம் மகிழ்ந்தவராகத் தமது மூத்தோருள்ள இடத்தேகினார். தமது சாதனையை இளைஞர்கட்கே உள்ள வெற்றி மிடுக்கோடு இயம்பினார். கேட்டவர் மகிழ்ந்து உடனெழுந்து குவைலிதின் இல்லம் வந்த மருகின்றார்கள். திருமணப் பேச்சு, கதீஜாப் பிராட்டியாரின் உள்ளம் களிப்பெய்த இனிதே முடிந்தது.

முரசறைவோன், ஒட்டகத்தின்மீது முரசமேற்றி, மாநகர்கு ஈந்தான் மணம். ‘‘ஒட்டை மீதினில் மணமுரசினை எடுத் துயர்த்தி, பாசமுற்றவர்க் குரைப்பதுண்டெனப் பகர்ந்திடு வான்’’ என்பது உமறுவின் வாக்கு.

யானை எருத்தத்து முரசேற்றி, பறைசாற்றி, திருமணச் செய்தியைச் செப்புவது, தமிழகத்தில்—தமிழ்க்காப்பியங்களில் நிகழ்வது. அரபு நாட்டில் யானைகளில்லை. ஒட்டகம் முரசு சுமந்து வீதி வலம் வருகின்றது. அண்ணலாரின் திருமணம் அறிவிக்கப்படுகின்றது.

தமிழ்க் காப்பியங்களில், சீறாப்புராணத்தில், உள்ளது போன்று மணம் பொருத்து படலம் விரிவாக இல்லை. இல்லாக் குறையை நிறைவு செய்கின்றார் உமறு. இது, தமிழிற்கு இஸ்லாம் நல்கிய ஏற்றமிகு பரிசு, இன்பப் பரிசு எனலாம். அடுத்து வருவது மணம்புரி படலம்.

# 12

சீருப்புராணத்தில் உள்ள மணம்புரிபடலம். நபிகள் நாயகம் அவர்கட்கும் கதீஜாப்பிராட்டியாருக்கும் நடந்த திரு மணம்பற்றி விரித்துரைப்பது. செல்வச் செழிப்புடைய குடும் பத் திருமணம். எனவே, தெருவை அடைத்துப் பந்தல் போடுவதென்பார்களே, அதையும் விஞ்சி, ஊரை அடைத்துப் பந்தல் போடப்பட்டதென உமறு பாடியுள்ளார். பந்தலைக் காவணம் என்று சொல்லுவது செட்டிநாட்டினை ஒட்டியுள்ள பகுதிகளில் பேச்சு வழக்கில் இன்றும் உளது. இந்தச் சொல்லை உமறுப்புலவர் கையாண்டிருக்கக் காண்கின்றோம். திருமணம் போன்ற நற்காரியங்கட்கு இடப்படுகின்ற பந்தலையே காவணம் என்றியம்புவது இன்றுள்ள வழக்கு. உமறுப்புலவர் காலத்தில், வேறு காரியங்கட்காக இடப்படுகின்ற பந்தலையும் கூடக் காவணம் என்றே மக்கள் சுட்டியிருக்க வேண்டும். எனவே, கதீஜாப்பியாட்டியார் திருமணத்திற்குப் போடப்பட்ட பந்தலை, வெறுமனே, காவணம் என்று குறிக்காமல், திருக் காவணம் என உமறுப்புலவர் சுட்டக் காணுகின்றோம்.

“இடன்அறத் திருக்காவணம் நிரைநிரைத்திடுவார்” என்றிருப்பது காண்க. இன்னும் இக்காவணத்தை அழகு பெறச் சித்திர வேலைப்பாடுகளமைந்த துணிகளைக் கொண்டு அலங்கரித்ததையும், தோரணங்கள் கட்டிய பாங்குகளையும் இதர அலங்காரங்களையும் மிக விரிவாகக் கூறுகின்றார் உமறுப் புலவர்.

**இடன்அறத் திருக் காவணம் நிரைநிறைத்திடுவார்**
**நடலையுள்ள றமகரதோ ரணம்பல நடுவார்**
**விடுசு டர்ப்படம் எடுத்துயர் வெளியடைத்திடுவார்**
**குடுமிமாடத்தில் அணியணிக் கொடித்திரள் நடுவார்**

என்பது உமறு தரும் பாட்டு. இன்னும், காவணத்தே கனிக் குலைகள் கட்டு வித்தைதயும், பந்தற்கால்கள் தோறும் வெள்ளிக் குடங்களை வைத்து, அவற்றில் தென்னம்பாளைகளை மடல் விரித்து வைத்திருந்த காட்சியையும்,அக்காட்சி, சூரியன் உதித்தெழுவதை ஒத்திருந்த தென்பதையும் வருணிக்கின்றார் புலவர் உமறு.

பல்லியங்கள் ஆர்த்ததும், பன்மணி சூடியதும், பட்டாடை புனைந்ததும், பலவித மணப்பொருள்கள் நறுமணம் பரப்பியதும் நவிலப்படுகின்றன.

நபிகள்நாயகம் அவர்கள் மணக்கோலம் பூண்டு, புரவியின் மீது ஆரோகணித்து நகர்வலம் புறப்படுங்கால், ஏழை மக்களுக்கு உடையும் பொருளும் ஈந்து புறப்பட்ட விதம் இயம்பப்படுகின்றது. பின்னர், மறைவல்லார்களின் வாழ்த்தொலியுடன் நகர்வலம் ஆரம்பமாகின்றது. குதிரையின்மீது, முழுமதியென முகம் இலங்க, நபிகள் நாயகம் அவர்கள் மணமகனாக நகர்வலம் வருகின்ற காட்சியை, பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்கின்ற ஏழுவகைப் பருவப் பெண்களும் தெருக்கள்தோறும் கூடிநின்று கண்டு களிக்கின்றனர். தமிழ்க் காப்பியங்களிலும், உலா நூல்களிலும் நகர்வலம் காண்கின்ற பெண்கள், தந்நிலை மறந்து, காமவயப்பட்டு, மோக மொழிகள் பகர்ந்து, உலாக் காணும் பாங்கை விரித்துரைக்கக் காண்கின்றோம். சீறுவில், உமறுப்புலவர், இந்த நிலையில் மாற்றம் கண்டுள்ளார். ஆம், நபிகள் நாயகம் அவர்களின் நகர்வலக் காட்சியைக் காணுகின்ற பெண்கள், 'இந்த அரியகாட்சியைக் காண நபிகள் நாயகம் அவர்களின் தாயார் ஆமினா இல்லையே' என அனுதாபப்படுகின்றனர். நபிகள் நாயகம் அவர்கள் சிறந்த அழகென்றால், கதிஜாப் பிராட்டியும் அவர்களினும் அழகென்கின்றனர். அழகும் அழகும் சேர்வது மிகப்பொருத்தம் என்றியம்புகின்றனர். அழகும் பணமும் வலியவந்து மாநபியைச் சேர்வதாக இயம்புகின்றனர். குதிரை சற்றே மெதுவாகச்

சென்றால், நாயகத்திருமேனியாரின் நல்லழகை இன்னும் சற்று நேரம் கண்டுகளிக்கலாமே என்கின்றனர்.

**மணிப்பளிக் கறைநிலை மாடம் மீதினும்**
**குணிப்பரு கூடகோ புரத்து மீதினும்**
**பணிப்பரு மேல்நிலைப் பரப்பு மீதினும்**
**தணிப்பிலா துயர்ந்தமண் டபத்தின் சார்பினும்**

**செழுமுகில் கவிகைஅம் செம்மல் வீதிவாய்**
**வழுவறு பவனியின் வருகின் றார்என**
**எழுவகைப் பேதைபே ரிளம்பெண் ஈறதாய்க்**
**குழுவுடன் திசைதிசை நிறைந்து கூடினர்.**

இவ்விரு பாடல்களும் நபிகள் நாயகம் அவர்களின் பவனியைக் காண ஏழுவகைப் பருவப் பெண்களும், மாட மாளிகை மீதிலும், கூட கோபுரங்கள் மீதிலும் குழுமிநின்றதை விரிக்கின்றன.

**கண்ணகல் ஞாலமெல்லாம் களிப்புறும் அரியகாட்சி**
**அண்ணல்தன் மணத்தின்கோலம் ஆமினாஎன்னும் அந்தப்**
**பெண்ணிருந் தினிதுகாணப் பெற்றிலள்காணு மென்பார்**

இவ்வரிகள், ஆமினாத்தாயார் இருந்து தம்மகனின் திருமணக்காட்சியைக் காணவில்லையே எனப்பெண்கள் வருந்தி உரைப்பதைப் பகர்கின்றன.

'வடிவுறை முகமம் தின்தன் வனப்பலால் வனப்புமில்லை' என்னும் வரி, நபிகள் நாயகம் அவர்கள்தம் எழில் நலத்தை வியந்து புகழ்ந்துரைப்பதை உணர்த்துகின்றது.

**கொடியிடைக் கதீஜாவென்னும் கொம்புசெய் தவப்பேறுகப்**
**பிடிநடை யவரில் பேறுபெற்றவ ரில்லை என்பார்.**

இவ்வரிகள், அழகுமிளிர் நாயகத் திருமேனி அவர்களை மணந்து கொள்ளப்போகின்ற கதீஜாப்பிராட்டியாருக்கிணை

யான் பாக்கியசாலிகள், வேறு எவருமே இல்லை என்ப் பெண்கள் வியந்துரைத்த பாங்கினை உரைப்பது.

நாயகத்திருமேனி அவர்களின் நல்லெழிலைக்கண்டு, மேனியில் பசலை பூத்துத்திகழ்கின்ற ஆசைவெறியுற்ற பெண்கள் பேச்சிலும் கூட, விரசவாடையில்லை. "இன்று நம்முடைய ஊரும், ஊரின் கண் உள்ள தெருக்களும் எவ்வளவு அழகுடையனவாகத் திகழ்கின்றன? எனவே, என்றும் இப்படித் திகழ இது போன்ற பவனி தினமும் வரச் செய்யுமாறு கடவுளைத் துதித்து வேண்டுவோம் என்றே அவர்கள் பேசினராம்.

**களந்துதைந் தொதுங்குமாடக் கதிர்நிலா வீதிவாயிற்**
**தினந்தொறும் பவனிகாணச் செய்தவம் செய்வோமென்பார்.**

இவ்வரிகளில் வரும் கருத்து, பசலை பூத்த மேனிப் பாவையர் பகர்ந்தவை. இப்படி,கூடி நின்ற ஏழுவகைப் பருவப்பெண்களும் நபிகள் நாயகம் அவர்களையும் கதீஜாப் பிராட்டியாரையும் அவ்விருவர் தம் அழகையும் அரிய பேற்றையுமே புகழ்ந்து பாரா ட்டுவதைக் காண்கின்றோம். இது உலா வருணனையில் புதிய பாணி எனலாம். உமறுப் புலவர் காலத்திற்கு முன் இருந்தவர்கள் செய்த நூல் முறையில் இது சிறிது மாறு பட்டதே. இன்றையத் தமிழ் இலக்கிய வழக்கு இதனினும் மாறுபட்டதென்பதோடு, வேறுபட்டதென்றே கூறவேண்டும். இலக்கியத்தைக் காலக் கண்ணாடி என்பர். உமறுப் புலவர் வாழ்ந்த காலம் எத்தகைய தென்பதை இம்மாறுதல் கண்ணாடியாகிக் காட்சி படுத்தக் காண்கின்றோம்.

சீறுப்புராணத்தில் வருகின்ற கதீஜாப் பிராட்டியார் திருமணக் காட்சியைக் கருத்தூன்றி நோக்குவோர், கதீஜாப் பிராட்டியாரின் திருமணத்தை, தமிழ்க் காப்பியத் திருமணமாக மட்டுமின்றி, தமிழ் நிலத் திருமணத்தை ஒத்திருப்பதாகவும் காணுவர். இது திருமணம் நிகழ்ந்த நிலப் பழக்க வழக்கங்களை வலியுறுத்தாமல், நூலினை நுகர்வோர் வாழுகின்ற நில வழக்கினை உரைத்து உய்த்துணரச் செய்து, ஒன்றி,ரசித்து

மகிழக் காவியம் படைத்துள்ளார் உமறுப்புலவர் எனக் கொள்ளச் செய்கின்றது. இதில் ஒரு சிறு குறை. கதீஜாப் பிராட்டியார் திருமணம் நடந்தேறுவதை உரைக்கின்ற மணம்புரி படலத்தில், கண்ணிற்கும், கருத்திற்கும், செவிக்கும் இன்பம் பயக்கின்ற தன்மையில் கவிதை படைத்தளித்துள்ள உமறுப் புலவர், உடலுக்கு ஊட்டமளிக்கின்ற உணவு விருந்து நடந்ததாக உரைத்தாரில்லை. இக் குறையை உணர்ந்து, நிறைவு செய்வதே போன்று, நபிகள் நாயகம் அவர்களின் அன்புப் புதல்வியரான பாத்திமா நாயகியாரின் திருமணத்தில் விருந்து நடத்தி மகிழ்விக்கின்றார் அவர்.

கதீஜாப் பிராட்டியார், நபிகள் நாயகம் ஆகிய இருவருக்கும் நடந்த திருமணத்திற்கு வீடுகளும், வீதிகளும், நகரமும் ஏழு நாட்கள் அலங்கரிக்கப்பட்டன என்று விரித்துப் பாடியுள்ள உமறுப்புலவர், திருமணம் நடந்தேறிய விதத்தை ஒரே ஒரு பாடலில் கூறி விடுகின்றார். இது, இஸ்லாமியர் திருமண முறை வெகு சுருக்கமாகவும் எளிதாகவும் நடைபெறுகின்ற ஒன்று என்பதை உணர்த்துவதாய் உளது.

**முதியவர் உவந்துநீதிமுன் மார்க்க**
**முறைப்படி சடங்குகள் முடிப்ப**
**மதிவலன் குவைலிது அகம்மகிழ்ந் தெழுந்து**
**முகம்மதின் செழுமணிக் கரத்தில்**
**புதுமதி வதனச்செழுங்கொடிக் கதீஜா**
**பொன்மலர்க் கரத்தினைச் சேர்த்திக்**
**கதிர்மதியுளநாள் வாழ்கவென் றிசைத்துக்**
**கண்களித் தினிதுவாழ்த் தினரே**

—என்பார் உமறுப்புலவர்

நபிகள் நாயகம் அவர்களின் திருமணம் நடந்தேறியவிதம் பற்றிப் பேசுகின்ற மணம் புரி படலத்தின் சிறப்பினை இதுகாறும் நுகர்ந்தோம்.

# 13

கதீஜாப் பிராட்டியாரை மணந்து, இனிய வாழ்வு வாழ்ந்தார்கள் நபிகள் நாயகம் அவர்கள். கதீஜாப் பிராட்டியார், நான்கு பெண் மகவிற்கும், மூன்று ஆண் மக்களுக்கும் தாயார் ஆனார்கள். பிள்ளைப் பிராயத்திலேயே ஆண்மக்கள் மூவரும் இறந்துவிட்டார்கள். பெண்மக்கள், நால்வருடனும், தமது அரிய மனைவி கதீஜாப் பிராட்டியாருடனும், இல்லறம் ஓம்பி, இயல்புற நபிகள் நாயகம் அவர்கள் மக்கமா நகரில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அங்குள்ள உலகச்சிறப்புடைய கஃபத்துல்லா எனும் பெயருடைய பள்ளி வாசலைப் புதுப்பிக்கின்ற பணி நடந்தது. அதில் ஈடுபட்டு, பள்ளிவாசல் கட்டுதற்குக் கல்லும் மண்ணும் சுமந்தளித்தார்கள் நாயகத் திருமேனி அவர்கள். அப் பள்ளி வாசலில், இன்றும் இலங்கிக் கொண்டுள்ள புகழ் வாய்ந்த கறுப்புக் கல்லினை, யார் எடுத்து உரிய இடத்தில்பொருத்துவது என்பதிலே கோத்திரச் சண்டை ஆரம்பமாயிற்று. நடுநிலையாளரின் முயற்சியில், மறுநாள் காலை, கஃபத்துல்லா எனும் பள்ளி வாசலுக்குள், யார் முதலில் வந்து சேர்கின்றார்களோ அவர்கள் அளிக்கின்ற தீர்ப்பிற்குக் கட்டுப்படுவதென முடிவாயிற்று. நபிகள் நாயகம் அவர்கள் தாம் அதன்படி வந்தார்கள். கோத்திரத்திற்கொருவர் என்ற முறையில், அனைவர் தம் உதவியுடன், உரிய இடத்திலே நபிகள் நாயகம் அவர்கள் அக்கல்லினை எடுத்து இருத்தி அமைத்தார்கள். கோத்திரச் சண்டை தோன்றிய சுவடு தெரியா நிலையிலே அழிந்தொழிந்தது. இச் செய்தியைப் பகரும் படலத்தின் பெயர், கஃபத்துல்லாவின் வரலாற்றுப் படலம் என்பதாம். இப் படலத்துடன், சீறாப் புராணத்தில் உள்ள மூன்று காண்டங்களில் முதற் காண்டம் ஆகிய விலாதத்துக் காண்டம் முடிகின்றது. விலாதத்துக் காண்டத்தில்

உள்ள படலங்களின் எண்ணிக்கை இருபத்தி நான்கு. பாடல் கள் ஆயிரத்து இருநூற்று நாற்பதாம். இதனை அடுத்து வருவது நுபுவத்துக் காண்டமாகும். நபி என்ற சான்றாண் மையை, இறைவன் நாயகத் திருமேனி அவர்கட்கு வழங்கிச் சிறப்பித்ததையும், தீன் நிலை விளக்கம் செய்து, தமது ஐம்பத்திரண்டு வயது வரை, நபிகள் நாயகம் அவர்கள், மக்கமா நகரில் வாழ்ந்திருந்ததையும், மக்களை நேர்வழிப் படுத்த மேற்கொண்ட முயற்சியில் ஏற்ற தொல்லைகளையும், இன்னல்களையும் இயம்புவது நுபுவத்துக் காண்டம். இதில் உள்ள முதற்படலம் நபிப் பட்டம் பெற்ற படலம் என்பதாம்.

சோதியாய், எவைக்கும் உள்ளுறைப் பொருளாய், தோற்ற மும் மாற்றமும் இல்லான் இறைவன். இவ்விறைவனின் தூதுவராக இவ்வுலகின்கண் தோன்றியவர் நபிகள் எம்பெரு மான் அவர்கள். இவர்கள் உலகில் உள்ள ஏழுவகைப் பிறப் பினங்களின் உயிரெனத் திகழ்பவர்கள் என்பது திருமறை செப்புகின்ற நியதி. இத்தகு சிறப்புடையவர்கள், தமது முப்பத்து எட்டாம் வயதிலே, மக்கமா நகரினை ஒட்டியுள்ள ஹிராமலைக் குகையில் சென்று, தங்கி, தவநிலையை மேற் கொண்டார்கள். நாற்பதாம் வயதில், நபி எனும் பட்டம் வந்தடைந்தது. திருக் குர்ஆன் என்கின்ற வேத நூலின் சில வாக்கியங்களும், நபிப் பட்டம் வந்த போது அருளப் பட்டன. திருக் குர்ஆனின் வாசகத்தை நபிகள் நாயகம் அவர்கள்,

**பறவைகள் இனங்கள்போற்ற விலங்கினம் பலவும்போற்ற**
**உறைதரும் தருக்கள்போற்ற ஊர்வனஎவையும்போற்ற**
**நிறைதரும் அலகைபோற்ற நிரைநிரைப் பரவைபோற்ற**
**மறைவிலாதுஅமரர் போற்றமுகம்மதும் ஓதினாரால்**

என உமறுப் புலவர் தமது பாட்டினால் போற்றி உரைக்கின் றார். மானிடரும் போற்றினர், என்றியம்பவில்லை. நல்லோர் மேலோர் தம் நய உரையை, மானிட வர்க்கம் ஆரம்பத்தில் போற்றுவதில்லை என்பதே வரலாறு. போற்ற மறுக்கின்ற மானிடவர்க்கத்திற்குத் தமது நற்போதனையைப் புகட்ட வரு பவர்களே மகான்கள் என்பது இதனால் தெளிவாகின்றது.

நபிகள் நாயகம் அவர்கள், ஈராண்டுக் காலம், ஹிரா மலைக் குகையில், தனித்தும் விழித்தும் பசித்தும் இருந்து, அறிந்து வந்த, உருவமற்ற இறைவனே இறைவனென்பதையும், அவ் விறையவனின் உண்மைத் தூதர் முகம்மதென்பதையும், முதன் முதலில் மனப்பூர்வமாக ஏற்று இஸ்லாம் ஆனவர்கள், நபிகள் நாயகம் அவர்களின் மனைவியரான கதீஜாப் பிராட்டியார் தாம். இஸ்லாம் என்றால் என்ன என்பதை உமறு இங்கே ஒரு கவியால் உரைக்கின்றார்.

**ஒருத்தன் நாயகன்அவனுக்கு உரியதூதெனும்**
**அருத்தமே உரைகலிமா, அன்நின்னயப்**
**பொருத்தம் ஈமான்நடைபுனை தலாம்அமல்**
**திருத்தமே இவையிசுலாமில் சேர்தலே!**

ஒருவனே இறைவன். இந்த உண்மை நெறியை எடுத்தியம்பி, மனித குலத்தை ஒற்றுமைப் படுத்த வந்த சத்குரு முகம்மது எனும் பெயருக்குரிய நபிகள் நாயகம் அவர்கள். இதனைச் செப்புகின்ற திருமந்திரமே கலிமா என்னும் இஸ்லாமிய மூலமந்திரம். இதை நெஞ்சில் ஏற்று, உறுதிப்பாட்டுடன் ஒழுகுவதே ஈமான் என்பது. இந்த நெறியில் சிறிதும் மாற்றமின்றி நேர்வழியில் நடப்பதே இஸ்லாம் ஆகும். இதனை மேலே கண்ட உமறுவின் பாட்டு உணர்வு ததும்ப உரைக்கின்றது. நேர்வழியில் நடத்தல் என்பதானது, பல தெய்வ வணக்கத்தை நீங்கி, உருவமற்ற ஓரிறைவனை உறுதியுடன் ஏற்று, மனிதரில் தாழ்வுயர்வுகளை அகற்றி, அறவழி சார்ந்து, அறிவு வழிப்பட்ட அருள்மய வாழ்வு வாழ்வதென்பதாம். இதனை, வெளிப்படையாக மக்களிடையே எடுத்தியம்பிய போது, எதிர்ப்புத் தோன்றிற்று. எதிர்த்த கூட்டத்தின் தலைவன் பெயர் அபுஜஹில். இவன், அறிவாளி, ஆற்றல் மிக்கவன், செல்வச் சீமான், செல்வாக்கு மிக்கவன். ஆனால் சொல்லுகின்ற விஷயம் என்ன எனச் சிந்திக்காமல், சொல்லுகின்றவர் யார் என்பதில் தன் அறிவைச் செலுத்தியவன்.

நபிகள் நாயகம் அவர்கள் ஏழை, தாய் தந்தையற்றவர், படிக்காதவர். அவருக்குள்ள சிறப்பெல்லாம் செல்வச் சீமாட்டியரான கதீஜாப் பிராட்டியாரின் கணவர் என்பதே! இவர் அறிவுரை புகல்வதா? அதை நாம் ஏற்பதா? என அகந்தை கொண்டு அக்கிரமம் புரிந்தவனே அபுஜஹில். இதனை,

**''கோதில்கற்பகச் செழுங்கொடிக் கொழுங்கனிக்கதீஜா**
**மாதுதன்மணம் புரிந்துஅவர் பொருள்தரும்மதமே''**

என அபுஜஹில் கூட்டம் கூறிற்று எனப் பாட்டிசைத்து, உமறு விளக்குவார்.

ஏழைகளும் மனிதர்களே என உரைத்ததும், எல்லோரும் சமம் என ஏற்றதும், தாம் ஏற்ற கொள்கையை நபிகள் நாயகம் அவர்கள், நடைமுறைப் படுத்தியதும் மக்களைக் கவர்ந்தன; இஸ்லாம் விரிவடைய உதவின. அபுஜஹிலின் அடக்குமுறை வலுவாயிற்று. முடிவில் அந்த அடக்குமுறை பயனற்று விட்டதைக் கண்ட அபுஜஹில் கூட்டம், ஆசை காட்டி, நபிகள் நாயகம் அவர்கள் மேற்கொண்ட கொள்கையை விட்டு விடுமாறு தூதனுப்பிச் சொல்லிற்று.

இவ்வாசை வார்த்தையைக் கேட்ட நபிகள் நாயகம் அவர்கள் உரைத்ததாக உமறு தரும் பாடல்....

**பரிதி யைக்கொணர்ந்து அணிவலக்கரத்திடைப் பதித்தும்**
**அரிதி னில்சசி கொணர்ந்துஇடக் கரத்தினில் அமைத்தும்**
**ஒருமொ ழிப்படஇனத்தவர் ஒருங்குற நெருங்கிப்**
**பொருது அடக்கினும்........... ...........**

**ஈதலால் சிலஇடர்எனை அடுக்கினும் இறையோன்**
**தூதன் யான்எனச் சுருதியை விளக்குவதுஅலது**
**பேதியாது எனதுஅகம் எனமுகம்மது உரைத்தார்.**

மிக எளிய சொற்கள். ஆனால், நபிகள் நாயகம் அவர்கள், தாம் ஏற்று ஒழுகிய கொள்கையின்பால், அவர்கள் கொண்டுள்ள

உறுதிப் பாட்டினை விளக்கி உரைக்கின்ற உறுதியான சொற்கள். ஆம்,

சூரியனையும் சந்திரனையும் கொணர்ந்து, எனக்குப் பரிசாகத் தந்திடினும், இந்த மாநிலத்தில் உறைகின்ற எல்லா மானிடரும் அபுஜஹிலின் சொல்லிற்கிணங்கி எனக்கு இடர் பல விளைத்திடினும், மானுடர் மேன்பட, இறைவன் ஈந்துள்ள வேத நெறியை மக்களிடம் எடுத்து இயம்புவதிலிருந்து நான் விடுபட மாட்டேன். என்னை அவ்வுயர் நெறியினின்றும் விலக்கி விட இறைவனை அன்றி வேறு எவராலும் இயலாது. அதட்டலுக்கும், மிரட்டலுக்கும், அச்சுறுத்துதலுக்கும், அடி உதைகளுக்கும் அஞ்சுவது இறைத் தூதர்களின் செயலன்று. ஆசை வார்த்தைகளிலும் இறைத் தூதர்கள் மயங்க மாட்டார்கள் என நபிகள் நாயகம் அவர்கள் உரைத்த வாசகத்தை உள்ளடக்கியது மேலே உள்ள உமறு தரும் பாட்டு. இப்பாட்டு, நல்லோர் உள்ளத்தை நயந்து பற்றுவதாகும். கொள்கை வழுவாதவனே மானுடரைத் திருத்துகின்ற மாமனிதன் என்பதை யாவர் நெஞ்சிலும் நிலைபெறச் செய்வதாகும். ஆனால், இவ்வுரை கேட்ட அபுஜஹில் திருந்தவில்லை. எதிர்ப்பைத் தீவிரமாக்கத் திட்டமிடுகின்றான்.

# 14

தத்துவங்களைச் சொல்வது வேறு, அவற்றைச் செயல் படுத்துவது வேறு. இரண்டையும் ஒருவரே செய்வதென்பது இதனினும் வேறு. நபிகள் நாயகம் அவர்கள், சொன்னது மட்டுமின்றி, தாம் சொல்லியதைச் செயல்படுத்தப் பாடுபட்ட வரும் ஆவார்கள். மேலும், தாம் சொல்லியவற்றைத் தாமே கடைப்பிடித்து வாழ்ந்து காட்டியவர்களும் ஆவார்கள். பொது வாக, நற்போதனைகளைக் கேட்டு மகிழும் அளவிற்கு அதனைச் செயல்படுத்த மக்கள் முன்வருவதில்லை. செயல்படுத்துமாறு அழைப்போருக்கு ஆதரவும் தருவதில்லை. மாறாக, செயல் வீரர்களை, கொள்கைவாதிகளைத் துன்புறுத்துவதே மானிடரின் இயல்பாக உளது. தமிழகத்தில், ஜாதி பேதத்தை அகற்றப்பாடுபட்ட ராமானுஜரையும், நமது நாட்டிற்குச் சுதந்திரம் பெற்றளிக்க உழைத்த காந்தி அடிகளையும், ஆதிக்க வாதிகள் நடத்திய விதம்பற்றி வரலாற்றேடுகளில், மிகவிரி வாகக் காண்கிறோம். ராமானுஜரும், காந்தி அடிகளும் தத்துவ விளக்க ஆசான்களாக மட்டுமின்றி, தாம் ஏற்ற தத்துவங்களை செயல்படுத்துகின்ற தொண்டர்களாவும் வாழ்ந்தனர். இவர்களுக்கெல்லாம் பலநூறு ஆண்டுகட்கு முன்னதாகவே தோன்றி, தாம் ஏற்றிருக்கின்ற கொள்கைக்காகத் தமது இன்னுயிரையும் ஈயத்துணிந்து நின்று தொண்டாற்றிய வர்கள் நபிகள் நாயகம் அவர்கள்.

தாங்கொணா வேதனைக்குப் பின்னரே, தாய் பிள்ளை யைப் பெற்றளிக்கின்றாள். நல்ல தத்துவங்களை உல கிற்களிக்கின்ற தத்துவ மேதைகளும், மக்கள் தருகின்ற கடும் தொல்லைகளைத் தாங்கிய பின்னரே போற்றப்படுகின் றனர். நபிகள் நாயகம் அவர்கட்கு, மக்கா நகரவாசிகள் தந்த தொல்லைகட்கு எல்லையே இல்லை. அனைத்தையும் தாங்கி

நின்று வெற்றி கண்டவர்கள் நபிகள் நாயகம் அவர்கள். ஒரு நாள், நாயகம் அவர்கள், தமதுதலை பூமியில் படிய,இறைவனை வணங்கிக் கொண்டிருக்கும் போது, செத்து நாறிய ஒட்டகத்தின் குடலைக் கொணர்ந்து பிடரியிலே வைத்து, மூச்சுத் திணறிச் சாகட்டும் எனச் செய்தார்கள் அபுஜஹிலின் ஆட்கள். இன்னொரு நாள், கழுத்தில் துணியைப்போட்டு முறுக்கி, கண்கள் பிதுங்கி மூச்சுமுட்டச் செய்தார்கள். அமைதியோடு அவற்றையெல்லாம் சகித்துக்கொண்டார்கள் அண்ணலெம் பெருமானார் அவர்கள். பாட்டையிலே செல்லுங்கால் பழித்தும், சிரித்தும் கிண்டலும் கேலியும் பேசுவார்கள். இது எதிரிகளின் நித்தியச் செயல். அவர்கட்கு நற்புத்தியை அருளுமாறு இறைவனிடம் இறைஞ்சுவதன்றி, வேறு எதுவும் மொழியாதவர்கள் நபிகள் நாயகம் அவர்கள். இவை பற்றி, சீறாப் புராணத்தில் உமறுப்புலவர் யாத்தளித்துள்ள பாடல்கள் ஏராளம் ஏராளம்....

ஓர் தினம், நபிகள் நயேகம் அவர்கள் தெருவினூடே தனித்துச் சென்றுகொண்டிருக்கின்றார்கள். எதிரில் அபுஜஹில் தமது சகாக்களுடன் வருகின்றான். நபிகள்நாயகம் அவர்களைக் காண்கின்றான். கண்டதும் கோபம் மீறியவனாக, வாயில் வந்தவாறெல்லாம் ஏசிப்பேசுகின்றான். அவனும் அவன் சகாக்களும் பேசி முடித்துச் செல்லுகின்ற வரையில், கேட்டு நின்ற நபிகள் நாயகம் அவர்கள், அபுஜஹில் கூட்டம் சென்ற பின்பே அவ்விடம் விட்டுப் பெயர்ந்து செல்கின்றார்கள். இவ்வரிய காட்சியைக் கண்டு நின்ற பெண் ஒருத்தி, மனம் வெதும்பி, அந்நிகழ்ச்சியை, ஹம்சா என்பவரிடம், ஆவேசத்துடன் கூறினாள். ஹம்சா, நபிகள் நாயகம் அவர்களின் சிறிய தந்தை. எனினும் அதுவரை நபிகள் நாயகம் அவர்களை ஆதரிக்காதவர். தீனுல் இஸ்லாத்தில் சேராதவர். தமது அண்ணன் மகனாகிய நாயகப் பேரொளியை அபுஜஹில் திட்டினான், பேசினான் என்பதை அப்பெண்மணி கூறிடக் கேட்டபோதுகூட ஹம்சா அவர்கள் கோபப்பட்டுவிடவில்லை, "எதுவும் கூறாமல், எதிர் உரையும் பகராமல், தமக்கு இவ்வுலகில் ஆண்டவனைத் தவிர்த்து வேறு உதவுவோர் யாருமே

இல்லை என எண்ணியவர் போன்று நின்றிருந்துவிட்டு, ஏசி யோர் ஏகிய பின்னரே, அவ்விடத்தைவிட்டகன்றார் முகம்மது'' என அப்பெண் உரைத்த போதுதான் சீற்றம் அடைத்த சிங்கம் ஆகின்றார் ஹம்சா. உடனே அபுஜஹில் இருந்த இடம் நோக்கிப் பாய்ந்து செல்கின்றார். பெருங் கூட்டத்தின் மத்தி யிலே இருந்த அவனை நையப் புடைக்கின்றார். புடைத்துவிட்டு, ''நானும் என் அண்ணன் மகன் முகம்மதுடன் சேர்ந்து, அவர் இயம்புகின்ற உருவமற்ற ஓரிறைவனை ஏற்று, அக்கொள்கை யைப் பரப்புவதில் ஒருவனாகித் தொண்டாற்றப் போகிறேன். உன்னால் ஆனதைச் செய் பார்க்கலாம்!'' என உரைத்து உடனே நபிகள் நாயகம் அவர்கள் இருந்த இடத்திற்கேகி, தீனுல் இஸ்லாத்தில் ஆகிவிடுகின்றார். கொடும் மனத்தாரின் செயல்கள் மூலமாகவே நன்மனத்தவர்கட்குப் பலம் கிட்டு கின்றது; கிட்டுமாறு செய்கின்றான் இறைவன் என்பதற்கு இந் நிகழ்ச்சி ஒரு சான்றாகின்றது.எம்பெருமானார் அவர்கள்,கடைப் பிடித்த சாத்வீக நெறியை, அது நடந்த ஆயிரத்து நானூ றுண்டுகட்குப் பின்னரும் கூட, இவ்வுலகில் வியந்து உரைக்க காணுகின்றோம். இவ்வுலகம் உள்ளவரை இவ்வரிய நிகழ்ச் சியை, மக்கள் மறவாது நினைவில் கொண்டு எடுத்தியம்புவர் என்பதில் ஐயமில்லை. இந்த நிகழ்ச்சியை உமறுப்புலவர் தம் சீறாப்புராணத்தில், கீழ்வரும் கவிதைகளினால் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

பழுதுஉறும்கொடிய மாற்றம்
அபூஜகல் பகர்ந்தவெல்லாம்
பொழில்கதிர்ப் பொருப்புத்திண்தோள்
புரவலர்பொறுத்தார் என்ன

வழுஅறு ஹம்சாகேட்டு
மனத்தினுள் வேகம் மீறிக்
குழுவொடும் திரண்டு வைகும்
கொடியவன் இடத்தில் சார்ந்தார்.

**படிறபூஜஹிலென்றேதும் பாதகன்வதனம் நோக்கி**
**அடல்முகம்மதுவைச் சொல்லாத அவமொழி பகர்ந்ததுஎந்த**
**மிடல்?எனச்சினந்து சீறி வீரவேல் தடக்கை வில்லால்**
**உடைபடச் சிரத்தில்தாக்கி யுறுக்கொடும் கறுத்துச்செல்வார்**

**துனிமனத்துறைய முன்னேன்தோன்றலே யுரைத்தாய்என்னில்,**
**இனிஎவைஉரைப்பன்? யானும்மியல்நபி மொழிந்தமார்க்கம்**
**தனில்நடுநிலைமை யானேன்சாதியில் தலைவர்கூடி**
**கனிபகைவரினும் காண்பேண்காணுநீ நவில்தல் என்றார்.**

இத்தகு வீர உரைகளையும், மண்டை உடைபடுகின்ற நிலையையும் நல்கி விட்டு ஹம்சா அவர்கள் நபிகள் நாயகம் அவர்களின் பால் சென்று, இறைவன் ஒருவனே, அவன் தம் இறுதி நபி முகம்மதே என்கின்ற இஸ்லாமிய மூலமந்திரத்தை ஓதி தீனுல் இஸ்லாத்தில் ஆகிவிட்டார். ஹம்சா நாயகத் திரு மேனி அவர்களுடன் சேர்ந்து விட்டார்கள் என்பதை அறிந்த அபுஜஹிலின் கூட்டத்தினர் துன்பம் உற்றார் என்பதனை,

**அறிவுறும் ஹம்சாதீனில் ஆயினர்என்னும் மாற்றம்**
**மறுவுறை குபிரர்கேட்டு மனத்தினில் துன்பமுற்றார்**

என்று உமறுப் புலவரின் கவிதை முழங்குகின்றது. அதாவது, நல்லோரைப் பகைத்துத் தீயோர் செய்கின்ற தீச்செயல்கள், நல்லோருக்கு நன்மையாகவே முடிகின்றன. அபுஜஹில் நபிகள் நாயகம் அவர்களிடம் பேசியது அவன் தன் குணத்திற் கேற்ற இழியுரை. அதனைத் தாங்கிக் கொண்டது பெருமானாரின் பொறை. ஹம்சா அபுஜஹில் முன்னம்புகன்றது வீரமிக்கச் சூளுரை. அவர்தம் சூளுரைக்கேற்பப் பாடலின் நடையும் அமைய, புலவர் உமர் பாடியிருப்பது தமிழ் இலக்கியத்திற் கோர் அழகிய செந்தாமரை.

அபூஜஹில் என்பானை, நாயகத்திருமேனி அவர்கட்கு எதிரியாக்கி, அவன் மூலம் இஸ்லாம் பரவ இறைவன் வழி வகுத்தான் என்பதே முஸ்லிம் பெரியோர்கள் கண்ட முடிவு.

ஆம், அவர்களின் முடிவு, சரி என்றேற்கும் வகையில் தான் அபூஜஹிலுடைய செயல்களும் அமைந்து திகழ காண்கின்ரேம். அடலேறு ஹம்சா, நாயகத் திருமேனியாருடன் சேர்ந்து விட்டதினுல், நாயகம் அவர்களின் கரம் வலுப் பெறுகின்றது என்பதைக் கண்ட அபுஜஹில், தனது ஆத்திரத்தை அதிக மாக்கிக் கொள்கின்ருன். "விட்டேனு பார், இந்த முகம்மதை" என வீராப்புரைக்கின்ருன். ஊரைத் தனக்கு உடந்தையாக்கிக் கொண்டு, முகம்மதைக் கொன்ெருழிப்பேன் என கொக்கரிக் கின்ருன். அவன் தன் சகாக்களைக் கூட்டி வைத்து, "உங்களில் யார் அந்த முகமதைக் கொல்லுபவர்? முகம்மதைக் கொன் ெருழித்தென் முன் வருவோருக்குக் கொடுப்பேன் பரிசு, அளிப் பேன் அருநிதி" என ஆர்ப்பரிக்கின்ருன். அவன் தன் ஆர்ப் பரிப்புடைய, ஆசைவார்த்தைகளைக் கேட்டு, யாரும் மயங்கி, நபிகள் நாயகம் அவர்களைக் கொலை புரியத் துணிந்து முன் வரவில்லை. "வீரத்தை நமது அரபிமண் இழந்து விட்டதா?" என அபுஜஹில் கேட்டதும், வீரத்தின் விளைநிலமாகிய உமறிப்னுகத்தாப் என்ற வாலிபர், எக்காளமிட்டுக் கொதித் தெழுந்தார். உமறிப்னுகத்தாப் வீரர் மட்டுமல்லர், விவேகி, கற்றுத் தேறிய இளைஞர்.

'இவர் முகமதைக் கொன்றே ஒழிப்பார் இதில் ஐயமில்லை' என அவையினர் அனைவரும் நம்பினர். வாளேந்தி, அபூஜ ஹிலின் ஆசியுடன், நபிகள்நாயகம் அவர்கள் இருக்கும் இடம் தேடி வழி நடந்தார் உமறுகத்தாப்.

**உதிரம்சிந்திட முகம்மதின்உயிர்செகுத் தவர்க்கு, என்**
**பதியில்உற்றது எப்பொருள்உளது? அப்பொருள்பலவும்**
**நிதியும்ஈகுவன், எனக்குஅரசுஎனவும் நிகழ்த்திடுவன்**
**எதிரும்வீரர்களுள் எவர்உளர்?என எடுத்துஇசைத்தான்.**

இது, அபூஜஹிலின் உரை. ஆம், ஆசை காட்டி, வீரத்திற்கு விட்ட சவால் உரை. இவ்வுரை கேட்ட உமறுப்பினுகத்தாப்,

**வெற்றிவீரத்தின் மிக்கவர்எவர்என விரித்துச்**
**சொற்றதில்கடும் வெகுளியுற்று இருவிழிசுழல....**

**மதுகைமன்னவன் முகம்மதின் உடல்வதைத் திடும்வாள்**
**இதுகோல்காணுதி நீவீர்என்று அடல்உமறு எழுந்தார்.**

வீரமிக்க உமறிப்னுகத்தாபின் உரையை, புலவர் உமறு, வீறு கொண்ட தமிழில் பாடலாக்கிக் காட்டுகின்றார். அத்துடன், இறைவனின் விதி காட்டிய வலியையும் உரைக்கின்றார். ஆம், உமறிப்பினுகத்தாபை, உமறுப்புலவர் நமக்கு அறிமுகப்படுத்திக் காட்டும் விதம் அலாதியானது.

# 15

கையில் வாளேந்தி, கடுங்கோபத்துடன், ''முகம்மதைக் கொல்வேன்'' என, வீரநடை போட்டு, வீதியினூடே செல்கின்றார் தீரர் உமறிப்பினுகத்தாப். போகும் வழியில், தமது தங்கையின் வீட்டினுள் செல்லுகின்றார். அங்கே ஓதப்படுகின்ற மறையோசை, அவர்தம் காதுகளில் படுகின்றது. ''நீங்கள் இப்பொழுது ஓதியது, எதில் உள்ளது?'' எனத் தன் தங்கையிடமும், தங்கையின் கணவரிடமும் கேட்கின்றார். அவர்கள் அச்சத்தால் சொல்ல மறுக்கின்றார்கள். உமறிப்பினுகத்தாபிடமிருந்து, வலுவான அடிபட்டபின், 'நாங்கள் ஓதியது, திருக்குர் ஆன்வசனம்'எனச் சொல்லி, ஓதிய ஏட்டை உமறிப்பினுகத்தாபிடம் கொடுக்கின்றார்கள். வாங்கிப் படிக்கின்றார் உமறிப்பினுகத்தாப்.

> **''அவன் யாவருக்கும் யாவினுக்கும் முன்னரே உள்ளவன்!**
> **அவன் யாவருக்கும் யாவினுக்கும் பின்னரும் உள்ளவன்**
> **அவன் புறத்திலும் உள்ளான் அகத்திலும் உள்ளான்**
> **அவன்யாவற்றையும்அறிந்தவன் அவனே இறைவன்.**
> **அவனே, மனிதனைத் தவிர, மற்ற எல்லாமே**
> **துதிக்கின்றன.''**

இவ்வசனங்களை, ஒருமுறையல்ல, பலமுறை திரும்பத்திரும்பப் படித்தார் உமறிப்பினுகத்தாப். பின்னர், தம் தங்கையிடம் கேட்டார். 'இதைத்தான் முகம்மது உங்களுக்குச் சொல்லித் தருகின்றாரா' என்று. 'ஆமாம், இவற்றையும், இவை போன்றவற்றையும் எங்களுக்குப் போதிக்கின்றார்கள். இவை திருக்குர் ஆனின் வசனங்கள். இறைவனால் நபிகள் நாயகம் அவர்கட்கு அருளப்பட்ட அருள் வாசகம்' என்பதாக, உமறிப்பினுகத்தாபின் தங்கை பாத்திமா பதில் சொன்னார்கள்.

கேட்டிருந்த உமறிப்பினுகத்தாப், துணுக்குற்றார். பொருள் பொதிந்துள்ள இவ்வசனங்கள், யாருக்கும் தீங்கு பயப்பன அல்லவே! மேலும், உண்மையானதும்தானே? இந்த நன்னெறியைக் கூறுபவரை, ஏன் அபூஜஹில் கொலை செய்யச் சொன்னான்?....

சிந்தனை வட்டத்தினுள் சுழன்ற உமறிப்பினுகத்தாப், ஒரு முடிவிற்கு வந்தார். தமது தங்கையிடம் கேட்டு, நபிகள் நாயகம் அவர்கள் இருக்கும் இடத்தை அறிந்து கொண்டார். நேராகச் சென்று, நபிகள் நாயகம் அவர்களைச் சந்தித்து, இஸ்லாமிய மூலமந்திரத்தை உச்சரித்து, முஸ்லிம் ஆகிவிட்டார்.

நபிகள் நாயகம் அவர்களை, உமறிப்பினுகத்தாப் சந்தித்த இடம், மக்கத்திலே, சபா என்னும் மலையின் அருகே உள்ள ஒரு இல்லம் என்பது வரலாறு. இந்த மலையைப் புலவர் உமறு, தம் தலையில் கங்கையைத் தாங்கி நிற்கும் மலை என்பார். ஆம், மலையில் தானே மேகம் பொழிகின்றது? மேகம் பொழிகின்ற நீர்தானே கங்கையாகவும், காவேரியாகவும், வேறு பல ஆறுகளாகவும் பெருகி ஓடுகின்றது? அந்த மலை, கங்கையைத் தலையில் தாங்கியதோடன்றி, தேனைச் சொரிகின்ற, மலர்களைச் சுமந்திலங்கும் தண்டலையை உடுத்தி விளங்குகின்றதாம்.

**முதிரும் கருஞ்சூல் சலதரத்தை,**
**முடியில் தாங்கிச் செழும்தேனை**
**விதிரும் சினைத்தண்டலையுடுத்து,**
**விளங்கும் குவவு சபாவரை...**

இது உமறு காட்டும் பாடல் சித்திரம். இந்த மலையின் அடிவாரத்திலே உள்ள வீட்டினுள்ளே உறைந்திருந்த நபிகள் நாயகம் அவர்களைச் சென்று சந்தித்த உமறிப்பினுகத்தாப்—,

**வரிசை நபியே முகம்மதுவே, வானோர்க் கரசே புவிக்கரசே**
**உரிய தனியோன் முதற்றூதே, உமது கலிமா உரைப்படியே**
**அரிய மறைதேர்ந்து ஈமான்கொண்டு அறத்தாறுஒழுகும்**
**படிக்கருத்தில்**
**கருதி யிவண்இல் அடைந்தேனென்று**
**உரைத்தார் உமறு கத்தாபே**

உமறிப்னுகத்தாப் உரைத்த இம்மொழிகேட்டு, மனம் மகிழ்ந்த நபிகள் நாயகம் அவர்கள், மூலமந்திரத்தை முன்மொழிய, உமறுப்பினுகத்தாப் உடன் மொழிந்து, தீன் நெறியில் சேர்ந்தார்கள். இதனை அறிந்த அபூஜஹில், 'முகம்மது விரித்த மாயவலையில் உமறிப்னுகத்தாப் வீழ்ந்து விட்டார். அப்துல்லாவின் மகன் செய்த வஞ்சனையின் வசமாகிவிட்டார். முகம்மது மாயக்காரர், மந்திரவாதி. அவர்முன் சென்றோர், அவர்தம் மயக்கு வசனத்திற்காட்படுவதின்றி,மீளுவதேயில்லை' என்றெல்லாம் ஊராரிடத்தே உரைத்து, தனது தோல்விக்குச் சமாதானம் கண்டானும்! உமறுப்புலவர் பகர்கின்றார்—,

**விதியின் முறையென்(று) அகுமதுதாம்**
**விளக்கும் உரைகேட்(டு) உமறுகத்தாப்**
**மதிமெய் மயங்கி வஞ்சனையின்**
**மாயத்(து) உறைந்தார் எனஊரும்**
**பதியும் பெருக்க உரைநடத்திப்**
**பற்றார் இவரென்(று) அபூஜகல்தன்**
**புதிய மொழியைத் தொல்கிளைக்குப்**
**புகழ்ந்தான் நபியை இகழ்ந்தானே**

ஓசை நயம் சொட்டச் சொட்ட உணர்ச்சியோடு பாடி மகிழத் தக்க அறுசீர் விருத்தம் இது. மதிமட்டுமின்றி, உடலும் மயங்கி, முகம்மதுவின் வஞ்சனை மாயத்திற் காட்பட்டு விட்டாராம் உமறிப்னுகத்தாப். இப்படி, ஒரு கற்பனை உரையை இட்டுக்கட்டி, ஊரும் நாடும் பரவுமாறு உரை நடத்திய அபூஜஹில், "அறிவும் ஆற்றலும் மிக்கவர் உமறுகத்தாப் என எண்ணினோம். அவர், தாம் இளைஞர் என்பதை மெய்ப்பித்து

விட்டார். முகம்மதுவின் சூழ்ச்சியை, மாயமந்திரத்தை வெல்லும் திறம்பற்றார் ஆகிவிட்டார்'' என்று கூறி, நபிகள் நாயகம் அவர்களை இகழ்ந்தும், உற்றாரைப் புகழ்ந்தும் உரைத்தானும் அபூஜஹில்! பாட்டிலுள்ள சொல், பொருள், ஓசை நயம் கருதி,இன்னும் ஒருமுறை பாடிப் பார்த்துக் கொள் வோம்-

**விதியின் முறையென்(று) அகுமதுதாம்**
**விளக்கும் உரைகேட்(டு) உமறுகத்தாப்**
**மதிமெய் மயங்கி வஞ்சனையின்**
**மாயத்(து) உறைந்தார் எனஊரும்**
**பதியும் பெருக்க உரைநடத்திப்**
**பற்றார் இவரென்(று) அபூஜகல்தன்**
**புதிய மொழியைத் தொல்கிளைக்குப்**
**புகழ்ந்தான் நபியை இகழ்ந்தானே**

இவ்வாறெல்லாம், தமது தோல்வியை மறைக்க, அபூஜஹில் உரை பகர்ந்தாலும், உள்ளுக்குள் நபிகள் நாயகம் அவர் களின் வளர்ச்சியைக் கண்டு அஞ்சினன். பெரும் வீரர் களாகிய ஹம்சாவும், உமறிப்னுகத்தாபும், நபிகள் நாயகம் அவர்கள்பால் சென்று சேர்ந்து கொண்டமை, அபூஜஹிலை அச்சத்தில் ஆழ்த்தி இருக்கவேண்டும். எனவே, உத்பா என்கின்ற அறிவிற் சிறந்த இளைஞனை நாயகத் திருமேனி அவர்கள் பால் சந்துரைக்க அனுப்புகின்றான். உத்பா கற்றவன். பேச்சாற்றல் உடையவன். முன்புள்ள மூன்று வேதங்களையும் உணர்ந்தவன். இவன், நபிகள் நாயகம் அவர் களைச் சென்று சந்திக்கின்றான். "ஊருடன் ஒத்து வாழுகின்ற நெறிக்குப் புறம்பாக நீங்கள் நடக்கலாமா'' என்று கேட் கின்றான். "நமது முன்னோர்களின் மார்க்கத்தை முனிந்து, பின்னுமோர் மார்க்கம் புகல்வது பெருமைக்குரியதா?'' என்று வினவிடுக்கின்றான். நீர், முன்னோர் வழியைப் பின்பற்றி நடந் தால், இந்த நாட்டின் அரசராக வாழலாம், அதற்காவன செய்கின்றோம் என்கின்றான்.

**தந்தைதாய் தமர்வணக்க முறையொழுகிப்**
**பழையமறை தழுவி னீரேல்**
**வந்தமா வினைநீங்கும் இனத்தோர்கள்**
**எவரும்மன மகிழ்ச்சி யாகிக்**
**கந்தடர்வெம் கரியிரதம் பரிநெருங்கப்**
**படைசூழக் கவிகை யோங்க**
**இந்தமா நிலத்தரசாய் இறைஞ்சுவது**
**சரதமென இயம்பினுனல்.**

இவ்வரிய கவிதையினுள் இலங்குகின்ற கருத்தை, உத்பா உரைத்து முடிக்கின்றவரை பொறுமையுடன் கேட்டிருந்து, அவன்தன் உரை முடிந்ததும், பெருமானுர் அவர்கள், முன்மறை களின் தத்துவங்களை விரித்துரைத்து, திருக்குர் ஆன் வசனங் களில் சிலவற்றையும் முறையாக ஓதிக் காண்பித்தார்கள்.

**ஆதிதனை உளத்திருத்தி பிசுமிலெனும் உரைதிருத்தி**
**அமுதம் ஊறும்**
**வேதமெனும் புருகானில் ஒருசூரத்து எடுத்தோதி**
**விரிவதாகப்**
**போதமுறும் உபநிடதப் பொருளனைத்தும்**
**தொகுத்தளித்தார் பொருவிலாத**
**சீதரவொண் கவிகைநிழல் தனிலுலகம் புரந்தளிக்கும்**
**செவ்வி யோரே,**

எந்த வேதத்திலும், கடவுள் இரண்டென்று கூறவில்லை. கடவுளுக்கு உருவம் உண்டென்றும் கூறவில்லை. கடவுள் படைத்த மனிதரில், தாழ்வு உயர்வு உள்ளதாகவும் உரைக்க வில்லை. எனவே, இவ்வுண்மையை எடுத்தியம்புவதும், அதன் படி ஒழுகுவதும், நம் கடன் என்றெடுத்துரைத்து, புருகான் என்கின்ற திருக்குர் ஆனில் உள்ள சில வசனங்களையும் உத்பா விடம் ஓதிக் காண்பித்தார்கள் நபிகள் நாயகம் அவர்கள். கேட்ட உத்பா—,

**கலங்கும் மனம் தெளிந்து, நபி கமலமலர் முகம்நோக்கி,**
**கண்கள் நாணி,**
**விளங்கினம் ஒத்து, எவரோடும் மொழியாது**
**தனியெழுந்து விரைந்து—போனுன்.**

நபிகள் நாயகம் அவர்கள் உரைத்த நற்கருத்தை, முன்புள்ள மூன்று வேதங்களையும் கற்றுத்தேறிய உத்பாவினுல் மறுக்க இயலவில்லை. கலங்கிய மனம் தெளிந்து, முகம் நாணி, எழுந்து, அபூஜஹ்லில் வீற்றிருந்த சபையின்கண்சென்றுன். உத்பாவைக் கண்டதும், அவன் தன் முகத்தோற்றத்தைப் பார்த்த அபூஜஹ்ல், என்ன, நீயும் தோற்ருயா? என்று கேட்டான். ''முகம்மது சொல்வது உண்மை நிறைந்த வேதவாக்கு. அதை யாராலும் மறுக்க இயலாது, ஏன், வானவர்களாலும்கூட முகம்மதுதம் உரையை மறுக்க வியாலாது என்ருல், நான் சொல்ல என்ன உண்டு எனப் புகன்ருன் உத்பா.

**...முகம்மதுசொற் கெதிராக அமரராலும்**
**விள்ளரிது இந்நிலத்திலெவர் எதிர்உரைப்பர்**
**எனும்மொழியை இயம்பினுனே.**

என்பது உமறுவின் பாட்டு.

வேதங்களையும், வேத சாரங்களையும் முறையே கற்றுத் தேர்ந்த உத்பா சென்று, கண்டு, உவந்து, வந்து சொன்ன வாசகம், அபூஜஹ்லைத் திருத்தவில்லை. ''உமறிப்பினுகத்தாப் என்கின்ற, மாவீரரையே முகம்மது மடக்கி வெற்றி:கண்டிருக்கும் போது, இந்த உத்பா எம்மாத்திரம்'' என்று கூறி, முகம்மதைக் கொன்ருெழிப்பதே முறை, அதற்கானவற்றைச் செய்வேன், காண்பீர் என வீறுரை பகர்ந்து, வீம்புபேசினுன். என விளக்குகின்ருர், கெடுமதியன் அபூஜஹ்லின் சீற்றத்தைப் புலவர் உமறு. தீயோர்கள் திருந்துபவரல்லர். தீய்ந்து ஒழியவேண்டியவர்களே என்பது நியதி. தீயோருகிய அபுஜஹ்ல், ''தீர்த்துக் கட்டுவேன் முகம்மதை'' என்று பேசி, தனக்குத்தானே தீங்கு தேடியவனுகி, முடிவில் இற்ருெழிகின்ருன்.

# 16

தன்னலம் கருதிய சரத் சந்திரன், அன்னியப் படையை அழைத்தான். பின்னர், படிப்படியாக இந்தியா அடிமையுற்றது என்பது வரலாறு. இது நடந்து எண்ணூறு வருடங்கட்கு மேலாகின்றன. இதற்கு முன்னால், இன்றைக்கு ஆயிரத்து நானூருண்டுகட்கு முன்னர், நபிகள் நாயகம் அவர்கட்கு எதிராக, திம்ஷக்கு (Damascus) என்னும் நகரில் உறைந்த மன்னரை, ஓலை கொடுத்தனுப்பி, வருகைபுரியுமாறு செய்தான் திருந்தாமனத்தபூஜஹில் என்பான். வந்த மன்னன் பெயர் ஹபீபரசர் என்பார் உமறுப்புலவர். நூற்றறுபது வயதினர், சகலகலா வல்லுநர்,வேதங்கள் அனைத்தையும் கற்றுத்தேர்ந்த விவேகி.இத்தகு சிறப்புடையஹபீபரசரை அழைத்துமக்கத்தின் புறநகர்ப்பகுதியிலே தங்கவைத்து, 'முகம்மது நமது முந்திய வணக்கமுறைகளையெல்லாம் மறுத்துரைத்து, மாற்றம்செய்து, நல்லோரையெல்லாம் பொல்லோராக்கிக் கொண்டிருக்கின்ருர். அவரை அழைத்து விசாரித்து நேர்வழிப்படுத்த வேண்டும்' என்கின்ருன். அபூஜஹில், அவன்தன் சகாக்கள் ஆமாம் போடுகின்ருர்கள். நபிகள் நாயகம் அங்கு அழைக்கப்படுகின்ருர்கள். வீரன் ஒருவன் சென்று, வில்லெறி தூரம் ஒதுங்கி நின்று, உடல் வளைத்து வணங்கி, நாயகப் பேரொளியை, ஹபீபரசர் காண விழைகின்ருர் என்ற செய்தியைச் செப்பினுன். கேட்ட நபிகள் நாயகம் புறப்பட்டார்கள் ஹபீபரசரைச் சந்திக்க. இதைக்கண்ட கதீஜாப்பிராட்டியார் அவர்கள், அச்சம் கொண்டார்கள். எதிரிகளால் அழைக்கப்பட்டுள்ளவர் ஹபீபு அரசர். படைபலம் உடையவர். அவர் முன் ஏகினுல் என்ன நேருமோ என்பது கதீஜாப்பிராட்டியாரின் அச்சத்திற்குக் காரணம். எனவே, 'நீங்கள் போகத்தான் வேண்டுமா?' என, நாயகத்திருமேனியார் அவர்களைப்

பார்த்து, கதீஜாப்பிராட்டியார் கேட்டார்கள். அவ்வுரை கேட்ட நபிகள்நாயகம் அவர்கள், கதீஜாப்பிராட்டியாரின் வதனம் நோக்கி உரைக்கின்ருர்கள். ''அறிவுசார்ந்த வள்ளல் குவைலிது அவர்களின் குலச் செல்வியே! உயரிய நடத்தை யாலும், வணங்கும் மனத்தாலும், உன்னத பண்பாலும், வானவர்களும் போற்றும் தன்மையுடைய கதீஜாவே! எனது உயிரினும் மேலாக நான் நேசிக்கின்ற குணத்தரசியே! உனது கவலே என்னைக் காப்பாற்றி விடுமா? அளப்பரிய அன்புடைய ஆண்டவனின் காவல் கணப்போதும் நம்மை விட்டகலாது காத்து நிற்கின்றதென்பதை மறந்துவிட்டனையா? போகா திருப்பதினல் பிரச்சினை தீர்ந்துவிடுமா? போக மறுப்ப தொன்றே, நமது கொள்கை பலமற்றதென ஆகிவிடாதா? நாம் ஏற்றிருக்கின்ற கொள்கை உண்மையானதென்ருல், அதனை நாம் மனப்பூர்வமாக உறுதியுடன் ஏற்றிருக்கின்ருேம் என்ருல், எந்நேரத்தில், எவ்விடத்தில், எச்சபையினிடையேயும் எடுத்தியம்பத் தயாராக இருக்க வேண்டாமா? அஞ்சுவது சுய நலமல்லவா?மேலும், நாம் எக்காரியத்திற்காக அனுப்பப்பட்டி ருக்கின்ருேமோ, அக்காரியம் நடந்தேறும் முன்னம் நம்மை அனுப்பிய இறைவன்,நம்மை அழைத்துக்கொண்டுவிடுவானு? அழைப்பேற்றுச் செல்லுமிடத்தே, ஆபத்து நேர்ந்து, ஆயுள் முடிந்துவிட்டால், வந்த காரியம் முடிந்துவிட்டதென்று மகிழ்வு கொள்ள வேண்டியதுதானே? நாம் செல்வதால்; நமது கொள்கையை எடுத்து உரைப்பதால், நமக்கு நன்மையும் ஏற் படலாமல்லவா? ஏன், நம்பிக்கை இழக்க வேண்டும்? நான் சென்று வருவதே முறை. செல்லாதிருப்பது தீது. இதுபற்றி, இறைவனிடத்திலே கேட்கலாம். ''என் கணவர் ஏற்றுச் செல் கின்ற காரியம், இறைவனே; உனக்கு உவப்பானதெனில், அதனை நீ வெற்றியாக்கித் தா'' என்று, தொழுது, வணங்கி வேண்டலாம்'' எனப் புகன்ருர்கள் நபிகள்நாயகம் அவர்கள். அச்சமற்ற இவ்வரிய உபதேசத்தை உமறுப்புலவர், உரிய வகையிலே, அழகிய தமிழிலே, உள்ளத்தை ஈர்க்கின்ற இனிய சொற்களிலே, கவிதைகளாக வடித்துத் தருகின்ருர்—,

**குணவலிதுக்(கு) அரும்பெரும் குலத்தின் தீபமே**
**புவியில்விண் ணவர்தினம் போற்றும் பூவையே**
**கவினுமென் உயிரன்னீர் கவலல் காவலோ**
**அவனருள் நம்மிடத்(து) அகல்வ தில்லையால்!**

**மன்பெரும் புவியினில் வாழும் மாந்தரில்**
**துன்புறு தவரில்லை துன்பைத் துன்புறு(து)**
**இன்பமாய்க் கொள்பவர் இலங்கும் பொற்பதிக்(கு)**
**அன்பராய் இருப்பரென்(று) அறிவு சொற்றதே!**

**தன்மமே பொருளெனத் தவத்தின் மேற்செலும்**
**நன்மனத் தவர்க்கொரு நாளுந் தீங்கெனும்**
**புன்மைவந்(து) அடைந்திடா(து) என்னப் பூவினில்**
**முன்மறை தெளிந்தவர் மொழிந்த வாய்மையே!**

இவ்வரிய பாடல்கள் நபிகள்நாயகம் அவர்கள் தம் மன உறுதியையும்,இறை நம்பிக்கையும், கொள்கைப் பிடிப்பையும், அஞ்சா மனத்திட்பத்தையும் தெளிவுபடுத்துவனவாய் உள்ளன. இவ்வுரைகளைப் பகர்ந்து, மனைவியாகிய கதீஜாப்பிராட்டியார் இடததே விடைபெற்று, வந்த அவ்வீரனுடன் புறப்பட்டுச் சென்றார்கள் நபிகள்நாயகம் அவர்கள்.

நபிகள்நாயகம் அவர்களைக் கண்ட ஹபீபரசர், மன முவந்து வரவேற்று, சமஆசனத்தில் அமரச் செய்தார். நபிகள் நாயகம் அவர்கட்கு ஹபீபரசர் தருகின்ற மரியாதையைக் கண்டு மனம் கொதிக்கின்றான் அபூஜஹில்.

"நான் கண்டதுமில்லை; காட்டவும் இயலாது, அப்படி ஒரு ஆண்டவன் உண்டு என்று சொன்னால் மக்கள் நம்புவது எளி தல்ல. முன்பு வந்த ஈசா என்கின்ற ஏசு போன்றவர்கள், பல அற்புதங்களைச் செய்துள்ளார்கள். அதுபோன்று, நீங்களும் செய்து, நபியெனப் புகலவேண்டும்'' என்றுரைத்தார் ஹபீப ரசர்.அவர் உரையை நபிகள்நாயகம் அவர்கள்ஏற்கின்றார்கள். மதியைப் புவியின்கண் வருமாறு அழைக்க வேண்டும் என்றார் ஹபீபரசர். நாயகத்திருமேனி அவர்கள் ஒப்புதல் தெரிவித்

தார்கள். குறிப்பிட்ட நாளில், மலை ஒன்றின்மீது ஏறி நிற்கின்ருர்கள் நபிகள்நாயகம் அவர்கள். ஹபீபரசரும், அபூஜஹில் கூட்டமும் ஊர்மக்களும் வெள்ளம் போல் திரண்டு நிற்கின்ருர்கள். இதில் முகம்மது வெல்லப் போவதில்லை எனச் சொல்லிக் களிக்கின்ருன் அபூஜிஹில். சூரியன் சென்று மறைகின்றது. நிலவு இனி வர வேண்டும். சூரியன் மறைந்த விதத்தை உமறுப்புலவர், தமது அரிய பாடலின் மூலம் காட்சிப்படுத்திக் காட்டுகின்ருர்கள்.

ஒரு தொழிலாளி-கண்டிப்புடைய முதலாளியின்கீழ் வேலை செய்கின்ற தொழிலாளி. தினம் பன்னிரண்டு மணி நேரம் அந்த முதலாளியின்கீழ் அவன் வேலை செய்தாக வேண்டும். இடையில் ஓய்வில்லை. ஒருகண நேரம்கூட அந்தத் தொழிலாளி அயர்ந்துவிடக் கூடாது; முடியாது. அயர்வு கொண்டால் அனைத்தும் அழிந்துவிடும். அயர்வின்றி, ஓய்வின்றித் தினமும் பன்னிரண்டு மணிநேரம் நடக்க வேண்டியது அத்தொழிலாளியின் கடமை. தம் கடமை தவருமல் பணி செய்கின்ருன் அந்தத் தொழிலாளி. வேலை முடிகின்ற மாலை ஆறு மணி அடிக்கின்றது. அவனுக்குப் பசியைப்பற்றிக் கவலையில்லை. பிறகு எழுந்து உணவு அருந்தலாம். இப்போதைக்கு அலுப்புத்தீர நன்கு தூங்க வேண்டும். எங்கே தூங்குவது? இடம்?...கவலையோடு நோக்கும் அத்தொழிலாளியின் கண் முன்னே, நீண்ட நீலநிற, மெத்தைவிரிப்புத் தென்படுகின்றது அதன்மீது சென்று அமர்கின்ருன்; தனது கரத்தை ஊன்றிச் சாய்ந்து படுக்கின்ருன். போர்வையை இழுத்துப் போர்த்திக் கொள்கின்ருன். நன்கு தூங்கிப் போகின்ருன். மீண்டும் காலை ஆறுமணிக்கு, கணநேரமும் தாமதமின்றி, அவன் தயாராகிவிட வேண்டும். அவ்வாறு செய்யத் தவறவில்லை. இது அவனது நித்தியத் தொழில். மாலையில் தினமும் அவன் உறங்குவதற்கு அழகிய பட்டுமெத்தை விரித்து வைக்கப்பட்டிருப்பது தவறுவதே யில்லை. மாலைப் போதில், கடலில் சென்று படுத்து மறைகின்ற சூரியனை, இத்தகு சிறப்புடைய தொழிலாளியாகப் படம் பிடித்தாற் போன்று, பாடல் புனைந்து காட்டுகின்ருர் உமறு.

சூரியன் காலையிலிருந்து ஓய்வின்றி நடந்த தொழிலாளி. நீலக்கடல் பட்டுமெத்தை. அலை, போர்த்திக் கொள்கின்ற மென் துகில். கடல் என்ற மெத்தையின்மீது, நடந்து அலுத்த சூரியன் என்ற தொழிலாளி, தனது கதிர்க்கரங்களைக் ஊன்றி அமருகின்ருன். அலுப்புத் தீரப் படுக்கின்ருன். அலை என்ற போர்வை அவன் தன் அழகிய முகத்தையும், உடலையும் மூடி மறைக்கப் படுத்து உறங்குகின்ருனும் சூரியத் தொழிலாளி! அவன் காலையில் மீண்டும் ஆறுமணிக்கு எழுந்தாக வேண்டுமே!...

**அடரும் வான்திரிந்(து) உடல்இளைப் பாற்றுதற்(கு) அணிமேல்**
**கடல்அ ணைத்திரைத் துகிலின்மேல் கதிர்க்கரம் ஊன்றி**
**உடல்கு ழைத்திடச் செக்கரின் படத்தினுள் உறைந்து**
**படரும் பேரொளி மறைந்திடப் படுத்தனன் பருதி!**

பாடிப் பாடி மகிழத்தக்க இவ்வரிய பாடலை, எம்மொழியினும் காணவியலாதென்றே கூறலாம். முந்நூறு ஆண்டுகட்கு முன்னரே; தொழிலாளியையும், அயர்வின்றி உழைக்கின்ற சூரியனையும் உவமித்துப் பாட்டிசைத்துள்ளார் உமறு.

ஹபீபரசனின் கோரிக்கையை நபிகள்நாயகம் நிறைவேற்றுகின்ருர்கள். ஹபீபரசர் முஸ்லீம் ஆகின்ருர் ''அவரையும் முகம்மது மயக்கிவிட்டார்'' என்கின்ருன் அபூஜஹில். அவன் கூட்டம் ஆமாம் என்கின்றது.

# 17

மழையினிடைப்பட்ட மண் கரையும்; சுட்ட ஓடு கரையாது என்பது போன்று, யார் சொல்லியும் திருந்தா இயல்பினனை அபூஜஹில், ஹபீபரசையும் முகம்மது தமது மாய மந்திரத்தால் மயக்கி விட்டார் எனப் பேசினன். ஹபீபரசர் ஏகிய பின், நபிகள் நாயகம் அவர்களையும், அவர்கள் தம் தோழர்களையும் கொடுமையாகத் துன்புறுத்தலானன்.

சுமையா என்னும் ஏழை மாதை அவன் வதைத்துக் கொன்ருன்; அம் மாதரசியின் மகளையும் கணவரையும் சித்திர வதை செய்து சாகடித்தான். பிலால் என்ற நீக்ரோ அடிமை, நபிகள் நாயகம் அவர்கள் தம் வழியில் ஆகி விட்டார் என்பதற்காக, தனது கை வலி காணுகின்ற வரை அடித்தான்; பிறரையும் கொண்டு அடிக்கப் பணித்தான். சுடு மணலிலே படுக்க வைத்தான். நெஞ்சில் பெரும் கல்லை ஏற்றி இடர்ப்பட வதைத்தான். ஹப்பாப் என்பவரை நெருப்புக் கங்குகள் மீது கிடத்தினன். எது செய்தும் மாற்ற முடியவில்லை. தமக்காகத் தமது தோழர்கள் படுகின்ற தொல்லையைக் கண்டு சகியாத நபிகள் நாயகம் அவர்கள், தமது தோழர்களை, ஆபிரிக்காக் கண்டத்திலுள்ள அபிசீனியா நாட்டிற்குக் குடிபெயர்ந்து சென்று வாழுமாறு பணித்தார்கள். நபிகள் நாயகம் அவர்களின் மகள் ருக்யா என்பவர்களும் அவர்கள் தம் கணவராகிய உதுமான் என்பவரும் அபிசீனியாவுக்குச் செல்வோருடன் அனுப்பப்பட்டார்கள். மிகத் துன்பமும், துயரமும், கஷ்டமும் அடைந்து தம் நாடு வந்துள்ள அவர்களை அபிசீனிய நாட்டு மன்னன் அன்புடன் வரவேற்று, ஆதரவளித்தார். தம் நாட்டில் வாழுமாறு அனுமதித்தார். சென்ருேருக்கு அணிந்து கொள்ளக் கூடப் போதிய ஆடைகளில்லை போலும்! மன்னன்

அவர்கட்கு உண்ண உணவு அளித்ததோடு, உடுக்க ஆடையும் ஈந்து, தங்கி வாழ்வதற்கான வசதியும் செய்தளித்தார் என் பதைப் படிப்போர் மனத்தில் நன்கு பதியுமாறு பாடுகின்றார் உமறுப் புலவர்.

**உறைந்த மாந்தருக்கு, ஹபஷி அரசெனும் உரவோன்***
**நிறைந்த நன்கலை யொடும்பல வரிசையும் நிதியும்**
**குறைந்திடா தெடுத்தருளி நன்மொழி பல கொடுத்துச்**
**சிறந்ததன் முதல் இனத்தினும் இனத்தராயச் சேர்த்தான்**

ஹபஷி என்பது கறுப்பரைக் குறிக்கின்ற அரபிச் சொல். அபிசீனிய நாட்டு மக்கள் கறுப்பரான நீக்ரோக்கள் என்பது நாம் அறிந்ததே. அந்த நாட்டின் மன்னன் பெயர் நஜ்ஜாஷி என்பதாம். ஏசுவின் வழி சார்ந்த ஏந்தல் அவர். அந்த நன் மன்னன், அகதிகளாகத் தம் நாட்டிற்கு வந்துள்ள முஸ்லிம் களான அரபியர்களை வரவேற்று, தம் இனத்தவர்களினும் மேலவராக மதித்து நடத்தி மகிழ்வித்தார் எனப் பாடுகின்றார் உமறு. உடன் பிறந்தே கொல்லும் நோய். எங்கோ தொலை வில் உள்ள மலையில் முளைத்த பூண்டு மருந்தாகும் என்பது பழமொழி. உடன் உறைந்த அபூஜஹில் கூட்டம் விரட்டி யடிக்க, எங்கோ உள்ள அபிசீனிய நாட்டு மன்னன் ஆதரவு காட்டுகின்றார்.

அபிசீனியா சென்ற முஸ்லீம்கள், நிம்மதியாக வாழ் கின்றார்கள் என அறிகின்றான் அபூஜஹில். அதை அவனால் தாங்கிக்கொள்ள இயலவில்லை. அபிசீனிய மன்னன் ஏசுவழி சார்ந்தோர் என அறிகின்றான். எனவே, "அங்கு வந்திருப் போர் உங்கள் மார்க்கத்தின் விரோதிகள்" எனக் கடிதம் வரைந்தனுப்புகின்றான், கடிதத்தைப் பெற்ற நஜ்ஜாஷி மன்னர்தம் நாடு போந்து வாழுகின்ற முஸ்லிம்களை அழைத்து

---

‡ உரவோன்—அறிஞன், முதியோன

† கலை—ஆடை

விசாரிக்கின்றூர். ஜஃபர் என்பவர், அன்னே மரியம் [மேரி] பற்றிக் குர்ஆனில் உள்ள பகுதியைப் படித்துக் காட்டுகின்றூர். கேட்ட நஜ்ஜாஷி மன்னன், 'இது எங்கட்கு விரோதமான தன்று; இவர்கள் இங்கே வாழலாம்' எனத் தீர்ப்பளிக் கின்றூர். இதனே உமறுப்புலவர்—,

**அரசர் நாயகர் ஹபஷி நஜ்ஜாஷியாம் அரசன்**
**பரிசனத்தவர் மொழியினும் அறிவினும் பார்த்தே**
**உரைசமர்ப்பக முகம்மதின் வழியினுக் குரிய**
**வரிசை செய்திவண் இருத்தலே கடனென வகுத்தான்**

எனப் பாடிச் சிறப்பிக்கின்றூர். அபூஜஹிலின் முயற்சி இதிலும் தோல்வியைத் தழுவுகின்றது. இதன் பின்னர் அபூஜஹில் மக்கமாநகரிலே தனது ஆதரவாளர்களைக் கூட்டிவைத்து ஆலோசனை நடத்துகின்றுன். ஓரிறைவன் நெறிபேசி, மக்களிடையே ஒருமைப்பாட்டை வளர்க்கின்ற இந்த முகம் மதை எப்படி ஒழித்துக் கட்டுவது? இதுவே ஆலோசனையின் மையப் பொருள். ஆளுக்கொரு யோசனை கூறுகின்றனர். எதிலும் தான் சொல்வதே முன் நிற்கவேண்டும் என எண்ணு கின்ற அபூ஛ஹில், அனைத்தையும் மறுக்கின்றுன். முகம்மதை யும் அவரைச் சார்ந்தோர்களையும் ஊரைவிட்டு ஒதுக்கி வைத்தலே அவர்கட்கான தண்டனையாகும் என முழக்குகின் றுன். அவன் சொல் எழுத்து வடிவம் பெறுகின்றது. முகம்மதை சார்ந்தோர்கள். நகரை விட்டு வெளியேறி வாழவேண்டும். ஆனல், அவர்கள் ஊரினை விட்டு ஓடி விடாமல் நாம் பார்த்துக் கொள்ளவேண்டும். ஊரிலுள்ளோர் யாரும் அவர்களுடன் பேசக்கூடாது. எப்பொருளையும் விலைக்கோ, இனமாகவோ கொடுக்கக்கூடாது நீர், நெருப்புப்போன்றவையும் இதில் சேர்ந்தனவே எனத் தொகுத்தெழுதி, ஊரின் பொதுத்தல மாகிய கஃபத்துல்லா எனும் பள்ளி வாசலின் முகப்பிலே கட்டித் தொங்கவிடச் செய்கின்றுன் அபூஜஹில்.

உமறுப்புலவர் தரும் இப்பாடல், அபூஜஹில் கூட்டம், நபிகள் நாயகம் அவர்களையும், அவர்களைச் சார்ந்தோரையும், ஊர் நீக்கம் செய்து ஒதுக்கி வைத்ததை விளக்கி உரைகின்றது. இக் கொடுமையை ஏற்று, ஊரைவிட்டு வெளியேறி, இரண்டாண்டுக் காலம் ஒரு பள்ளத்தாக்கிலே, நாயகத்திருமேனி அவர்களும் அவர்கள் தம் அன்பர்களும், ஆதரவாளர்களும், கொடுந் துன்பத்தினிடையே வாழுகின்றனர். உணவுப் பொருள் எதுவும் இன்மையால் இலை, தழை, புல் பூண்டு போன்றவற்றை உண்டு வாழுகின்ற அவலநிலை அவர்கட்கு. இரண்டாண்டிற்குப் பின் நல்லோர் சிலரின் முயற்சியாலும், கஃபத்துல்லாவில் எழுதித் தொங்கவிட்ட சீட்டு இற்றழிந்ததாலும், நாயகத்திருமேனி அவர்களும் அவர்களைச் சார்ந்தோரும், மீண்டும் மக்கமா நகரில் வந்து வாழுகின்றனர். நபிகள் நாயகம் அவர்களைச் சாந்தோருக்கு நீர், நெருப்பு, உப்பு போன்றவை வழங்கல் கூடாது, அவர்களுடன் பேசுதலும் தீது என்கிற அறிவிப்பை எழுதியவனின் கை வழங்காமல் துன்புற்றான் என்ற செய்தியைப் பாடல்களாக்கி அளித்து, படிப்போர் மனத்தில் அமைதி நிலவச் செய்கின்றார் புலவர் உமறு.

சாதியின் விலக்கெனத் தவறிலா தெடுத்து
ஓதிய ஒப்பெனும் முறியை ஊரவர்
மாதிரம் அடர்கஃ பாவின் வாயிலில்
துதரும் அறியவென் றெடுத்துத் தூக்கினார்–

இன்னிசைநன் மறைமுகம்ம திருங்கலிமா
தனைவிளக்கி இருந்தோர்க் கெல்லாம்
அன்னம்அருந் திடநீர்உப்பு அங்கிஅளி
யாது, அவரோ டடுத்தி டாமல்
சொன்னபடி சாதிவிலக் கொப்புமுறி
எழுதின மன்சூறு என்போன்
தன்னிருகை வழங்காமல் மாறாத
பிணிபிடித்துத் தாழ்ந்திட் டானால்

ஒப்புமுறி எழுதியவன் பெயர் மன்சூர் என்பதும், அவன் செய்த தீச் செயலின் நிமித்தம், தன்னிரு கைகளும் வழங்

கர்மல் நோயுற்று அவதிப்பட்டான் என்பதும், நல்லோருக் கின்னல் செய்வோர், நாசமடைவர் என்ற தத்துவ விளக்கச் சான்று எனக் கொள்ளல் வேண்டும். மேலும் இவ்வளவு கொடுமையா? கேட்பாரில்லையா? என ஏங்குகின்ற வாசகர் மனத்திற்கும் இப்பாடல் ஓரளவு நிம்மதிகொள வழங்கப்படு கின்ற நன் மருந்தாகவும் அமைந்து திகழ்வதாய் உள்ளது. ஆனால், இதன்பின்னர் நிகழ்ந்த இருபெரும் நிகழ்ச்சிகள், கலங்கா உள்ளம் படைத்த நபிகள் நாயகம் அவர்களையும் கலக்கம் அடையச் செய்வனவாக அமைந்து விடுகின்றன. ஆம், நபிகள் நாயகம் அவர்களின் வாழ்க்கைத் துணைநலமாம் கதிஜாப்பிராட்டியார் அவர்களும், நபிகள் நாயகம் அவர்களின் வளர்ப்புத் தந்தையாகவும்,உற்ற பாதுகாவலராகவும் திகழ்ந்த பெரிய தந்தை அபூத்தலிப் அவர்களும், ஒருவர்பின் ஒருவராக இறப்பெய்துகின்றனர். இந்த அவல நிகழ்ச்சி, நபிகள் நாயகம் அவர்கள்தம் மனத்தை வருத்திய விதத்தைப் பாடு கின்றார் உமறுப்புலவர்.

**இலக்கமுற்றிடும் பெரியதந்தைய ரிறந்திருந்த**
**வலக்கண்மேற்கொள வருந்திய காலையில், அணியாய்**
**நிலைக்கும்பேரெழில் மனைவியும் இறந்திட, நிலையாக்**
**கலக்கமுற்றது மறைமுகம் மதுநபி கருத்தில்!**

எதற்கும் கலங்காத, எதையும் நாயன் செயல் என ஏற்று அமைதி காணுகின்ற, மாபெரிய ஞானவள்ளலாகிய நபிகள் நாயகம் அவர்கள் தம் கருத்தில், கலக்கம் உற்றது என் பதாக உமறுப்புலவர் இயம்பும்விதம், உண்மையில் எவர் மனத் தையும் கலக்கவல்லதாம். ஆம், இதுநாள்வரை, நபிகள் நாயகம் அவர்களின் நல்லுபதேசத்தைத் தடுத்து நிறுத்த இயலாத நிலை எதனால் இருந்ததோ அது இப்பொழுது நீங்கி விட்டது. "முகம்மது, இனி அவர்தம் ஓரிறைவன் நெறியை, எங்கும், யாரிடத்தும், எச்சமயத்தும் உரைக்கலாகாது" எனக் கட்டாயத் தடுப்புச் செய்யலாம் அபூஜஹில் கூட்டம். எனவே,

தமக்குப் பாதுகாப்பாக இருந்த இரு பேரரண்கள் வீழ்ந்து பட்டதிலே நபிகள் நாயகம் அவர்களின் மனம் கலங்காமல் என் செய்யும்? ஆகவேதான், கலக்க முற்றது மறைமுகம்மது நபி கருத்தில் என உமறு பாடுகின்றார். உமறு தரும் இவ்வரி, நபிகள் நாயகம் அவர்கள், இனிச் சந்திக்க விருக்கின்ற சங்கடங்களை முன்கூட்டியே உரைப்பதாகக் கொள்ளவும் இடமுண்டு.

**எடுத்துரைத்தவை என்னினத்தவர்க்கு எடுத்துஇயம்பி
அடுத்துஇரண்டொரு தினத்தில் நும்மிடத்தினில் அணுகி
வடித்தவாய்மையில் ஒழுகுவன் மறைதெரி மதியோய்
படித்தலம்புகழ் நகரினில் செலும்எனப் பகர்ந்தான்.**

''உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்'' என உரைப்பர் வடலூர் வள்ளல் ராம லிங்கம். இந்த இப்னு அப்துயாலில், உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுகின்முன். அவன் தன் உரைகளே, மேலே கண்ட இரண்டு பாடல்களும். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவதென்பதை, மதியில் வேறு வைத்து இசைந்திடும் சில மொழி வகுபபான் என்கின்முர் உமறுப்புலவர். பொய்யர் தம் உரையையும் மெய்யென நம்புவது மேலோர் பண்பு. நீங்கள் கூறுகின்ற புதிய மார்க்கநெறி எனக்கு ஏற்புடைத் தாக உளது. நீங்கள் உங்கள் ஊராகிய மக்கமா நகரினுக்குச் செல்லுங்கள். நான் என் ஊரவரைக் கலந்து கொண்டு இரண்டு நாட்களில் வந்து காணுகின்றனே'' என்ற இப்னு அப்துயலில் என்பானின் நயவஞ்சக உரையை நம்பி, விடை பெற்றுப் புறப்பட்டார்கள் நபிகள் நாயகம் அவர்கள். அவர் களை இந்தப் புறமாக அனுப்பிய அந்த நச்சு மனத்தான், வேறு புறமாகச் சென்று, ஊரின்கண் உள்ள காலிகளையும, சிறுவர் க்ளையும் ஏவிவிட்டு, நபிகள்நாயகம் அவர்களைக் கற்களைக் கொண்டு அடிக்குமாறு செய்தான். இந்த இப்னுஅப்து யாலியை, ஆலகால விடத்தையும் பின்னடையச் செய்யும் கொடு மனத்தான் என்கின்முர் உமறுப்புலவர். இவன், சிறிய வர்க்கு இனியவை உரைத்து, பேதை நெஞ்சினரான காலிகளை யும் தூண்டிவிட்ட போது கூறியதாகக் கீழ்வரும் பாட்டினை உமறு யாத்துள்ளார்.

**வெறியும்பித்தும் உற்றவன்இவன் பெருவழிவிடுத்து, ஓர்
நெறியின்இடைத் தனிசென் றனன். அவன்தனை நேடி
மறியும்கால்தலை தகர்ந்திட வலிய கல்லெடுத்து இட்டு
எறியும்ஏகும் என்றுரைத்தனன் நரகிடை எரிவான்.**

அறிவிலார்களையும் சிறுவர்களையும் தேடி நாடிக் கண்டு, நபிகள்நாயகம் அவர்களைப் பித்தனென்று புகன்று, நமது மார்க்க நெறிக்கு மாறு செய்பவர் எனப் பகர்ந்து, கல் கொண் டெறியுமாறு பணித்தான், நாளை நரகினிடை எரிபட உள்ள இப்னுஅப்துயாலில் என்பான் என்கின்றார் புலவர் உமறு. இவ் வஞ்சகன் உரைப்படியே செய்தனர் ஏதுமறியா அம்மற மாக் கள். அவர்கள் எறிந்த—,

**கல்லினல் உரம் சிரம்கரம் கால்முகம் காண(து)**
**எல்லவன் கதிர்பொழிந்தெனப் பலதொடுத்து எறிந்து**
**..........................................................**
**சொல்லொணுப் பெரும்பாதகம் விளைத்தனர் சூமர்**

என மனம்நொந்து பாடுகின்றார் புலவர்உமறு. எல்லவன் கதிர் பொழிந்தெனப் பல தொடுத்தெறிந்தார் என்பது நல்ல உவ மானம். சூரிய ஒளி இடைவிடாது பொழிவது போன்று, சற்றும் இடைவெளியின்றிக் கல்லெறிந்தனர் என்பது கருத்து. அவர் கள் எறிந்த கற்களினல் மார்பு, தலை, கால், கை, முகம் எங்ங ணும் காயங்கள் உண்டாயினவாம். இவைகளேயன்றி, நபிகள் நாயகமவர்களின் முழந்தாளில் ஓர்கல் ஏறுபட்டு, ஊறுபட்டு உதிர்ந்தன உதிரம் என்று பாடி, படிப்போர் கண்களைக் குள மாக்குகின்றார் உமறு. இபபடி,ஊரைவிட்டு வெளியிற் செல்லும் வரை அடித்து விரட்டினராம். அடிபட்ட உபாதையினேடு, நக ரிற்கு வெளியில் உள்ள ஒரு பழத் தோட்டத்தினுள்ளே வந்து அமருகின்றார்கள் நாயகப் பேரொளி அவர்கள். காயமுறக் கல்லால் அடிப்பட்ட துன்பம், பசியினல் வயிற்றினுள் ஏற்படும் உளைச்சல், நடந்த களைப்பினல் ஏற்பட்ட உடம்பின் சோர்வு ஆகிய இவை அனைத்தும், மாநபி என்கின்ற பேறும், பட்டமும் வழங்கிய எல்லாம்வல்ல இறைவனில் நாட்டத்தால் நடப் பனவே எனக் கொண்டு, அமைதி கண்டு, அத்தோட்டத்தில் இருந்தார்கள் நாயகமவர்கள் என்கின்றார் புலவர் உமறு.

**ஊறுபட்டதின் வருத்தமும் பசியின்உள் உலேவும்**
**மாறுபட்டவர் தொடர்ந்ததில் நடந்தமெய் மலேவும்**
**பேறும்பட்டமும் தந்தவன் அருள்எனப் பெரிதின்**
**தேறுபட்டுஅவண் இருந்தனர்திருநபி இரசூல்.**

இப்பாடலே, உமறுவின் பாடல் செய் பாங்கிற்கொரு எடுத்துக் காட்டெனலாம். மெய்வருந்த அமர்ந்திருந்த நபிகள்நாயகம் அவர்கள், 'மக்கத்தில் உள்ள அபூஜஹில் கூட்டமே இந்தத் தாயிப் நகர நயவஞ்சகர்களே விடமேல்'என எண்ணி இருப்பார் கள். அவ்வளவு கொடுந்தொல்லேக்கு ஆளாக்கி விட்டார்கள் தாயிப் நகர மாக்கள். ஆயினும் அவர்களே முனியாது, அனேத் தும் ஆண்டவன் செயல் என்று கொண்டு அமைதியுற்றிருந் தார்கள். அவர்களின் முன்னர், அமரர் [மீகாயில்] தோன்றினர். சலாம் உரைத்து நின்று, "தாங்கள் இடுகின்ற கட்டளேயை நிறைவேற்றுமாறு இறைவன் என்னேப் பணித்தனுப்பியுள் ளான், யாது செய்யவேண்டும்?" எனக் கேட்டார். மௌனமாக இருந்தார்கள் போலும் நபிகள் நாயகம் அவர்கள். வந்த வானவரே பேசுகின்ருர்–,

**அருந்தும்ஆரமுதக் கலிமாஉரைக்கு அடங்காது**
**இருந்தஊர்எவை? பகைத்தவர்யாவர்? நும்இதயம்**
**பொருந்திடாத் திசைஎத்திசை? பொருவராக்கதிர்மெய்**
**வருந்தல் செய்தவர்எவர்? தெரிதரவழங்கிடுமே!**

**செப்பினீர்எனில் செறுநர்கள்திரளும் அத்திசையும்**
**உப்புவாரியுள் அமிழ்த்துவன். அலதுஒரு வரையால்**
**இப்பெரும்புவிக்குள் அரைத்திடுவென் எளியேன்**
**துப்புஅறிந்திடவேண்டும் என்றுஇரவொடும் சொன்னர்.**

நபிகள் நாயகம் அவர்களேத் துன்புறுத்தித் துயருறச் செய்த தாயிப் நகர மக்களே மட்டுமின்றி, நகரையே அழித்து விடு கிறேன், ஆணேயிடுங்கள் என வேண்டி நிற்கின்ருர் வானவர். யாருக்கும் எவ்விதத் தீங்கும் எண்ணுத — செய்யாத நபிகள் நாயகம் அவர்கள், தம்மைத் துன்புறுத்தியோரை

அழித்துவிட விரும்பவில்லை. அழிவு வேலைக்காக இறைவன் தம்மைப் படைத்தனுப்பவில்லை எனக் கூறுகின்றார்கள். தவ றிழைத்த மக்கள் திருந்துவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்கின்றார்கள். ''ஒவ்வொருவரும், தமக்கு இடர் செய்வோரை அழித்துக் கொண்டே போனால், உலகில் பின்னர் எஞ்சியிருப் பவர் யாவர்?'' எனப் பேசுகின்றார்கள். ''இவர்கள் திருந்தா விடினும், இவர்கள் மக்களாவது திருந்தலாமே! அழித்தால் என்ன வரும்?'' என்கின்றார்கள். ''நீங்கள் போகலாம்'' என விடை கொடுத்தனுப்புகின்றார்கள். என்னே நபிகள் நாயகம் அவர்களின் கருணையுள்ளம்! உமறு பாடுகின்றார்-,

**இறையவன்அருள்படிக்கு இடர்அடைந்தது என்னிடத்தில்**
**குறையீதென்று, மானிலத்தவர் தமைக்குறைபடுத்தல்**
**மறையின்நேரல்ல வெகுளியை மனத்தினில் அடக்கி**
**நிறையில்நிற்பது பெரியவர்க்கு உரியநல்நிலையாம்**

**இக்கணத்தில் நல்வழிப்படார்எனில், இவர்பயந்த**
**மக்களாயினும் நல்வழிக்கு ஒழுகுவர்மறையும்**
**திக்குஅடங்கலும் பரந்துதீண்நெறி முறைசெயுமே!**
**வானநாயகன் ஏவலுக்குஉரியவா! மகிழ்வில்**
**ய ன்நினைத்திடும் போதினில்வருக இற்றையில்நும்**
**தானம்மீதினில் செல்கஎன இசைத்தனர்நபியே!**

இத்தகு அற்புத மாமணியை, அருங்குணச் செம்மலை, கல்லா லடித்துக் காயமுறச் செய்த தாயிப் நகர மக்கள், இது நடந்த பத்தாண்டிற்குப் பின்னர், நபிகள் நாயகம் அவர்களின் கொள் கைகளை ஏற்ற குணசீலராயினர் என்பது வரலாறு. ஆனால், அப்போதைக்குத் தாயிப் நகர மக்களிடையே கல்லடிபட்ட கடுந்துயரோடு, மக்கமாநகரம் சென்று சேர்ந்தார்கள் நபிகள் நாயகம் அவர்கள். தாயிப் நகர மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தே திளைத்திருந்தார்கள். இனி நாம் சந்திக்க இருப்பது ஹிஜ்ரத் காண்டம், அதன் இயல்பினை நுகர்வோமாக!

# 19

**தா**யிப் நகர நிகழ்ச்சியைச் செப்புகின்ற படலத்திற்குப் "பருப்பத ராஜனைக் கண்ணுற்ற படலம்' என்று பெயர். இதன் பின்புள்ள மூன்று படலங்களுடன் நுபுவத்துக் காண்டம் முடிவுறுகின்றது. முதல் காண்டமாகிய விலாதத்துக் காண்டத்திலும், இரண்டாவது காண்டமாகிய நுபுவத்துக் காண்டத்திலுமாக உள்ள பாடல்களின் எண்ணிக்கை, இரண்டாயிரத்து முந்நூற்று நாற்பத்து நான்காகும். இவ்வெண்ணிக்கை சீருப் புராணப் பாடல்களில் சற்றேறக் குறைய சரிபாதியாகும். நுபுவத் காண்டத்தின் பின் உள்ளது, ஹிஜரத் காண்டம். ஹிஜரத் என்பது, பிரயாணத்தைக் குறிக்கின்ற அரபிச் சொல். மக்கத்திலிருந்து மதினமாநகருக்கு நபிகள் நாயகம் சென்ற வரலாற்றையும், மதினமாநகரில் சென்று தங்கி, நபிகள் நாயகம் ஆற்றிய தொண்டினையும் விரித்துரைப்பதே ஹிஜரத் காண்டம். ஹிஜரத் காண்டம் முற்றுப்பெரு நிலையில் உமறு தரும் சீரு முடிகின்றது. இக் காண்டத்தின் நுழைவாயிலில் உள்ளவை, மதினத்தார் ஈமான் கொண்ட படலமும், வாய்மை கொடுத்த படலமும் ஆகும். இவ் விரண்டு படலங்களில் கூறப்படுகின்ற செய்திகளின் மூலம், நபிகள் நாயகம் அவர்கள், மக்கமா நகரினை விடுத்து, மதினமாநகர் செல்வதற்கேற்பட்ட சூழ்நிலையை அறிந்து கொள்ள வியல்கின்றது.

நபிகள் நாயகம் அவர்கள், தாயிப் நகரிலிருந்து திரும்பிய பின்னர், மக்கமாநகரில் 'ஹஜ்' விழா ஆரம்பமாகின்றது. 'ஹஜ்' என்பது அரபிச் சொல், ஆண்டுதோறும் மக்கள் திரண்டு குழுமி, மக்கமாநகரில் உள்ள கஃபத்துல்லா என்னும்

பள்ளி வாசலில் வணக்கம் புரிவதை ஹஜ் என்னும் சொல் குறிக்கின்றது. இந்தநாளில், உலக முஸ்லிம்கள் ஒவ்வொரு வரும், ஹஜ் செய்வதைத் தமது கடமையாகக் கொண்டுள் ளனர். அந் நாளில், மொத்த அரபி நாட்டு மக்களின் புனித விழாவாக மட்டுமே ஹஜ் விழா திகழ்ந்தது. நபிகள் நாயகம் அவர்கள் தாயிப் நகரம் சென்று மீண்டபின், அவ்வாண்டின் ஹஜ் விழா ஆரம்பமாயிற்று. அரபு நாட்டின் நான்கு பக்கங்களிலிருந்தும் மக்கள் வந்து மக்கமாநகரிலே கூடலா யினர். அவர்களைச் சந்தித்துத் தமது கொள்கைகளை நபிகள் நாயகம் அவர்கள் எடுத்துரைத்து விடாதவாறு அபூஜஹிலின் கூட்டம் பார்த்துக் கொண்டது."முகம்மதைப் பார்க்காதீர்கள். அவருரையைக் கேட்காதீர்கள்" என, அபூஜஹில் கூட்டம் செய்த பிரச்சாரமே, 'நபிகள் நாயகம் அவர்களைக் காண வேண்டும், அவர் தம் உரையைக் கேட்க வேண்டும்' என்ற ஆவலைத் தூண்டுவதாயிற்று. மதினமாநகரிலிருந்து வந்திருந் தோரில் சிலர், ஓர் நாள் நள்ளிரவிலே, யாரும் அறியா வகையில் சென்று.நபிகள் நாயகம் அவர்களைச் சந்தித்தார்கள். நாயகத்திருமேனி அவர்கள் கூறிய மார்க்க நெறி, அவர்கட்கு மிகவும் பிடித்திருந்தது. எனவே, அதனை ஏற்று முஸ்லிம்களாக அவர்கள் ஆகி விட்டனர். தம்மூர் திரும்பிய அவர்கள், அடுத்த ஆண்டில், மேலும் சிலருடன் வந்தார்கள். முன்போலவே ரகசியச் சந்திப்பு நடந்தது. அவர்களும் முஸ்லிம்களான தோடன்றி, நபிகள் நாயகம் அவர்களையும், அவர்கள் தம் தோழர்களையும், தமதூருக்கு வந்து விடுமாறு அழைப்பும் விடுத்தனர். அவர்கள் தம் அழைப்பை நாயகத் திருமேனி அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஹஜ் விழா முடிந்த பின்னர், நபிகள் நாயகம் அவர்கள் தமது தோழர்களை, இருவர், மூவர், நால்வர் என இரவு வேளைகளில், யாரும் அறியா நிலையில், மதினமாநகர் சென்று குடியேறி வாழுமாறு அனுப்பலானார்கள். இதை அறிந்தபோது அபூஜஹில், கடும் சீற்றம் அடைதான். உடனே தன் ஆதரவாளர்களைக் கூட்டி, 'இவ்வாடத காரியம் செய்கின்ற முகம்மதை என்ன

செய்யலாம்' என ஆலோசனை கேட்கின்ருன். அபூஜஹில் கூட்டிய கூட்ட நடவடிக்கையை உமறு, தம் கவிதைகளால் காட்சிப்படுத்துகின்ருர்.

**மறுவெனப்பிறந்துஇவ் வூரிடைவளர்ந்த**
**முகம்மது மாயவித்தை யினுல்,**
**அறிவுரு வினைமேல்போட்டு, நம்மினத்தாரவர்**
**தனில்சிலர் தமைஅகப்படுத்தி,**
**உறையும் மந்திரத்தின் உருமுடித்துஇவையே**
**புதுமைஎன்று உலகெலாம் செலுத்தி,**
**நிறைபெறத் தனதுபெயரையும் நிறுத்தி**
**தீனையும் நிலைநிறுத்தினுல**
**இனம்பெருத்து இருந்தும் இவைபரிகரித்தோம்**
**இலைஎனும் அவமொழி, உலகம்**
**தனில்நிலை நிறுத்திவிட்டனம் அறிவும்,**
**தரணியில் பெருமையும் இழந்தோம்.**
**மனம்உழற்றுவதென்? இனிஅவர் அவர்க்கு**
**வந்ததாய் நினைத்திடில், விளைந்த**
**வினைகளும்சிதறி, நமரவர்எவர்க்கும்,**
**மேன்மையும் வீடும் உண்டாமல்**
**புதுமறைவளர்க்கும் முகம்மது மதினப்**
**பதியினில்புகுவனேல், தொலையாச்**
**சதிவிளைத்திடுவ(து) அறுதி!தன்வலியால்;**
**தணிப்பவர் இவண்இலை எவரும்**
**பதியைவிட்டு அருங்கான் புகுந்து இனம்**
**எனும்பேர், பற்றறத்திரிவது மல்லால்**
**கதிபெறும் தேவாலயங்களும்,நமர்தம்**
**சமயமும் காண்பதற்கு அரிதே!**
**அந்தவல்வினைகள் முடியும்முன், தமர்கள்**
**எவர்களும் மறையினுல் தெளிந்து**
**புந்தியில் தெரிந்து செய்வது தவிர்வதெனும்வினை**
**பிறந்திடப் பொருத்தி**

**மந்திரப்பொருளாய்க் குலநலம்தழைக்க**
**மாற்றம்ஒன்று உரைமின்க ளென்ன,**
**நிந்தையும் படிறும்கொலையும் உள்அமைத்த,**
**நெஞ்சினன் அபூஜஹில் உரைத்தான்.**

"நபிகள் நாயகம் அவர்களை மதினமாநகரம் சென்று விடாமல் தடுக்க வேண்டும். இல்லையேல், நாம் அனைவரும் அழிவது திண்ணம்" என்பதாகத் தனது நீண்ட உரையிலே அபூஜஹில் குறித்து விளக்கினான் என்று இப்பாடல்கள் மூலம் உமறுப் புலவர் நயம்பட விளக்குகின்றார். அபூஜஹில் உரையைக் கேட்ட அவன் தன் ஆதரவாளர்கள். "தலைவர் கூறுவது நடக்கும் நடக்கும்" எனக் கூறி, ஆமோதித்தனராம். "ஆமோதித்துப் பயனில்லை, என்ன செய்யலாம்? என்பதைக் கூறுங்கள்" என்று கோரினான் அபூஜஹில்.

"ஒரு வீட்டினுள் முகம்மதைப் போட்டுப் பூட்டி, அன்னம் தண்ணீர் வழங்காமல், பட்டினி போட்டுக் கொல்லலாம்" என்றான் ஒருவன். இதை அபூஜஹில் ஒப்பவில்லை. காரணம், இப்படிச் செய்தால் சாவதற்கு அதிக நாள் ஆகும். அதற்குள் செய்தி மதினமாநகருக்கு எட்டிவிடும். பின்னர்க் காரியம் கெட்டு விடும் என்பது அபூஜஹில் கருத்து.

"ஒட்டகையின் மீது வைத்துக் கட்டிக் காட்டினுள் அனுப்பிவிட்டால், அங்குள்ள கொடும் விலங்குகள் கொன்று தின்றுவிடும்." இது இன்னொருவனின் ஆலோசனை. இதனையும் அபூஜஹில் மறுத்தான். பின்னர் அனைவரும் ஒருமித்து, அபூஜஹிலை நோக்கி, "தலைவரே! நீங்களே உரையுங்கள்" என்றனர். அபூஜஹில் உரைகின்றான்.

**வங்கிடத்தொருவர் படைக்கலம்எடுத்து,**
**முகம்மதைப் பொதுவுற வளைந்து,**
**செங்கரம் எடுத்திட்டு யாவரும் ஓங்கிச்**
**சின்னபின்னம்பட, உடலில்**

**பொங்கியகுருதி சிதறிடத், துணிகள்**
**புரள்தரப் புவியினில் வீழ்த்தி,**
**நங்களை கடிவோம், கீர்த்தியைஉலகில்**
**நடத்துவோம் நறைதரும் புயத்தீர்**

என்றனும் அபூஜஹில். அதாவது, மக்கமாநகரில் உள்ள கோத்திரங்கள் அனைத்திலும், கோத்திரத்திற்கொருவர் வீதம் ஆயுதங்களுடன் புறப்பட்டு, ஏக காலத்தில் முகம்மதுவின் மீது ஆயுதங்களைப் பாய்ச்சிக் கொன்று விடுவது, இதனால், தனிப்பட்ட எந்த ஒரு கோத்திரத்தார் மீதும் பழி வராது என்று அபூஜஹில் பகர்ந்தானும். கேட்ட அவன்தன் கூட்டம், ஆமாம் கூறி ஆதரித்ததில் வியப்பில்லை தானே? மட்டுமின்றி, ''அறிவினில் புத்திக் கூர்மையில் நம் தலைவருக்கு இணை யாருமே இல்லை'' எனவும் மகிழ்ந்துரைத்தனராம். உமறு கூறுகின்றார்—,

**அபூஜஹில்உரைத்த மொழிவழி துணிந்தங்கு**
**அகங்குளிந்தனர் அனைவோரும்**
**புவியினில்எவர்நின் சூழ்ச்சியை நிகர்ப்பர்!**
**எனப் புகழ்ந்தது......**

**................................................**

**சவிமதில்மதீனு புகுமுனம் விரைந்தித்**
**தந்திரம் முடித்திடும் என்றார்.**

''காலம் கடத்தாமல் விரைவில் முடித்திடல் வேண்டும். தலைவர் ஆணைபிறப்பித்ததும், கொலைவாளினுடன் அனைவரும் வந்து காரியத்தை வெற்றியாக முடித்து விடுகின்றோம்'' எனக் கூறி, அபூஜஹிலை வாழ்த்திக் கலைந்து சென்றனர். இதன்பின்னர், ரபியுலவ்வல் மாதத்தில், வளர்பிறை ஐந்தாம் நாளில், அனைவரும் கூடுகின்றனர். இரவு பதினொரு மணிக்கெல்லாம் நிலவு மறைந்து இருள் பரவுகின்ற இரவு. நபிகள் நாயகம் அவர்கள் வீட்டினுள் இருக்கின்றார்கள். கோத்திரத்திற்கொருவராக வந்து குழுமி, நபிகள் நாயகம் அவர்களைக் கொன்றொழிக்கின்ற நோக்கில், அவர்கள் தம் வீட்டினைச் சூழ்ந்து கொள்கின்றார்கள்.எழுந்து வெளியில் வரும்போது, அனைவரும்

தாவிப் பாய்ந்து ஆயுதங்களை வீசிக் கொன்று விடுவது என்பது திட்டம். இவர்கள் திரண்டு கூடியிருந்த விதத்தை,

**தெருவிலும்வாயில் புறத்திலும் கதிர்கள்**
**திகழ்சுதை மாளிகைப் புறத்தும்**
**பெருகியதிருமுன்றிலின் செழும்புறத்தும்**
**பிறங்கிய திருமதிள் புறத்தும்**
**நிரைநிரை செறிதரநெருங்கி நின்றனர்.**

என்று உமறுப் புலவர் பாடுகின்றார். கொல்ல வந்த கூட்டம் வெளியிலே காத்திருக்கும் போது, நாயகத் திருமேனி அவர்கள் அச்சமின்றி, வீட்டினுள் தம் மகள் பாத்திமா உடனும், தன்னை வளர்த்த பெரிய தந்தையாரின் மனைவியரான பாத்திமா வென்ற மூதாட்டியுடனும் உரையாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். ஆண்டவனின் அடியார்கட்கு அச்சமேது? நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் என்பதல்லவா ஞானவான்களின் வாக்கு? இவ்வாக்கியத்தை நினைவூட்டுகின்றது நாயகத் திருமேனி அவர்களின் அஞ்சாமை!

# 20

சிலப்பதிகாரத்திலுள்ள கொலைக்களக்காதையில், கள்வர்களின் திறன் எத்தகையதென்பதைப் பொற்கொல்லனின் வாயிலாக இளங்கோ அடிகள் விரித்துரைக்க காண்கின்றோம். இங்கே சீரப்புவாணத்தினுள், நபிகள் நாயகம் அவர்களைக் கொன்றொழிப்போம் எனக் கூடிக்கொக்கரித்து நின்ற கூட்டம், நபிகள் நாயகம் அவர்களைச் சூழ்ச்சித் திறனுடையவரென்றும், மாயா ஜால மந்திரதந்திரம் அறிந்தவ ரென்றும், அவரைக் கொல்ல வியலாது, எப்படியும் ஏமாற்றித் தப்பித்தோடி விடுவா ரென்றும் பேசிக்கொள்கின்றனர். சிலப்பதிகாரக் காலம்வேறு, சீருப்புராணக்காலம் வேறு. இளங்கோ அடிகள் பாடல் புனைய அமைந்த சூழ்நிலை வேறு, உமறுப்புலவர் பாடுகின்ற சூழல் வேறு. சொற்களும் கூட வெவ்வேறுதாம். ஆனால், நல்லோர் இடர்ப்பட, பொல்லார் உழைக்கின்ற முறைகள் ஒத்திருக்கக் காண்கின்றோம். நபிகள் நாயகம் அவர்களைக் கொல்வதற்கென, நள்ளிரவில் ஆயுதங்கள் ஏந்தி, நாயகத்திருமேனி அவர்களின் வீட்டின் நான்கு பக்கங்களிலும் சூழ்ந்து நிற்கின்ற கூட்டம் பேசுகின்றது; இல்லை கூட்டத்தில் ஒருவன் கூறுகின்றான்—,

**இருந்துஇடம் தோன்றுது இமைக்குமுன்**
**பறப்பன் எவர்க(ண்)ணும் தெரிகிலாது ஒளிப்பன்**
**அருகிருந்தவரை மதிமயக்கிடுவன்**
**அறிகிலாவேற்றுஉரு எடுப்பன்**
**வெருவிஇங்கு எவரும் நாவழங்காமல்**
**விழித்தது விழித்ததாய் இருப்பக்**
**கருவிளைத்திடுவன் முகம்மதுபடித்த**
**மாயங்கள் கவலுதற்கு அரிதே!**

இக்கூற்றை ஆதரித்து மேலும் ஒருவன் புகல்கின்றான் "முகம்மது இந்நேரம் நம்மை ஏமாற்றிவிட்டு, வீட்டினின்றும் வெளியேறிச் சென்றிருக்கவும் கூடும். அவ்வளவு வல்லமை அவருக்கு உண்டு" என்பதாக.

**இல்லகத்துஉளனோ புறத்துஅடைந்தனனோ**
**எவர்அறிகுவர்? வளைந்தவரின்**
**கல்சுகம்குழைய விலங்கினம் மலையக்**
**கற்றிடும் மாயமந்திரத்தான் ......**

இப்படி, கற்பனை நயத்துடன், தமது தோழர்கள் பேசிக் கொண்டிருக்கும் இடத்திற்குக் கெடுமதியான் அபூஜஹில் வருகின்றான்; தன் தோழர்களை அதட்டிஅடக்குகின்றான். 'இது போன்ற வெற்றுரையை விடுமின். நித்திரையைத் துறமின். பதின்மர் பதின்மராகப் பிரிந்து நில்மின். ஒருவருரிக்க ஒருவர் எழுந்து நான்கு பக்கமும் சுற்றிவருமின். எவ்வழியினும் விழி வைத்திடுமின். இவ்வீட்டைத் தவிர்த்து ஒளிந்து கொள்ளும் இடம் வேறில்லை முகம்மதுக்கு. இனி முகம்மதுமாமதினை காண் பது அரிது. புதிய மார்க்கம் புகல்வதும் விரிப்பதும் இன்றோடு தீர்ந்தது என வீறுடன் மொழிந்து; தானும் மகிழ்ந்து, தனது தோழர்களையும் மகிழ்வில் ஆழ்த்தினான் வருவது அறியானாகிய அபூஜஹில்!

**உரப்பியஉரைகள் மறுத்துநித்திரையை**
**ஒழித்திடும் திசைதிசை பதின்மர்**
**இருப்பிடம்பெயர்ந்து நின்றுநின்று உலவி**
**எவ்வழியினும் விழிபரப்பும்**
**கரப்பிடம் இனிமற்றில்லை மாமதீனைக்**
**காண்பதும்அரிது அவன்மார்க்கம்**
**விரிப்பதும் ஒழிந்ததுஇன்று,என**
**உரைத்து வீறுடன் அபூஜஹில் இருந்தான்.**

இது ஆணவத்தரசனான அபூஜஹில் கூற்றாக உமறு தரும் உயர்தமிழ்ப்பா. ஆணவத்தை அடுத்து வருவது

அவமானம் பின்னர் அழிவு. உடனடியாக அவமானம் அபூஜஹ்லைப் பற்றுமாறு பணிக்கின்றான் வல்ல இறைவன். உமறு பாடுகின்றார்—,

**நபிமுகம் மதுவை. தீவினைஇருளைத்**
**துடைத்திடும் நறுஞ்சுடர் மணியை,**
**கவலுதற்கரிய கொலைசெய நினைத்துக்**
**காபிர்கள் வளைந்து அவன் இருப்ப,**
**புவனமும் விசும்பும் செறிந்து இருள்படலம்**
**போர்த்தது அவ்விரவினில் துயில்ஒன்று**
**அவர்அவர் கருத்தும்கண்களும் மயங்கத்**
**தலைகுழைத்து அசைப்ப வந்தடுத்த**

கடும் இருள் எங்கும் பரந்து கவ்விற்று. முகமமதைக் கொல்வேன் என வந்தோரின் கண்களைத் தூக்கம் தழுவிற்று. அனைவரும் தன்னை மறந்த நிலையில் தூங்கிப் போனார்கள்- அபூஜஹ்லும்தான். கொல்வேன் என வந்தோர் அனை வரையும் நபி ஒருவரே கொன்று தீர்த்திருக்கலாம். அதுவும், அவர்கள் ஆயுதங்களைக் கொண்டே அவர்களைக் கொன்றிருக்க முடியும். அத்தகு தூக்கம். அவர்கள் தம் ஆழ்ந்த உறக்கத்தை, உமறு அழகிய பாட்டாக்கிக் காட்டுகின்றார்.

**சாய்ந்து உடல்முடக்கிக்கிடப்பவர்சிலர்,**
**வாள்தனைமறந்து அணிமுகம் முழந்தாள்**
**தோய்ந்திடத் துயின்றோர்சிலர், உடல்**
**நிமிர்த்துச் சுடர்இணைக் கருவிழி செருக**
**மாய்ந்தவர் போலக்கிடந்தவர் சிலர்,**
**வெண்மணி இதழ்விரிப்ப, ஐம்புலனும்**
**தேய்ந்து அறஒடுங்கிக் கிடந்தவர்**
**எவரும்திருமனைப் புறந்தொறும் செறிந்தே!**

என்ன வியப்பு! கொல்லவந்த கூட்டத்தினர் செத்தொழிந் ததே போன்று கால்மாடு தலை மாடாகத் தூங்கிக் கிடக்கின் றார்கள். அதுவும், சாய்ந்து உடல் முடங்கிக் கிடக்கின்றார்கள்

என்கின்றார் புல்வர் உமறு. தப்பிச் செல்லுமாறு இறைவனின் அறிவிப்புக் கிடைக்கின்றது நபிகள் நாயகம் அவர்கட்கு. ஆண்டவனைத்துதித்துப் போற்றியவர்களாக, தம் பெரியன்னை யிடத்தும் மகளிடத்தும் விடைபெற்று, மருமகன் அலிரலி அவர்களைத் தம்படுக்கையில் படுக்குமாறு கூறி, வெளியே வருகின்றார்கள் மாநபி அவர்கள். மணிவாட்கள் தரைதனில் கிடக்க, தன்னைக் கொல்ல வந்த கூட்டம் ஆழ்ந்த தூக்கத்தில் சிதறிக் கிடக்கின்றது. கொடுமையின் மொத்த உருவமான அபூஜஹிலும் உறங்கிக் கிடக்கின்றான். இது போன்ற வாய்ப்பு கொடுமனத்து அபூஜஹில்க்குக் கிட்டி இருந்தால் என்ன செய்திருப்பான்? காலமெலாம் தன்னைப் பகைக்கின்ற அபூஜஹிலைக் கொல்லச்சந்தர்ப்பம் வாய்த்தும், நபிகள்நாயகம் அவர்கள் எதுவும் செய்யவில்லை. தாம் தப்பிச் சென்று விட்டதை விழித்தபின் அவர்கள் அறியவேண்டும் என்பதற் காக, தூங்குகின்ற ஒவ்வொருவர் மீதிலும், சிறிதளவு மண்ணைத் தூவி விட்டு, அந்த நள்ளிரவிலே, பிறந்த ஊரை யெல்லாம் விட்டு, பெற்ற மக்களை விட்டு, உற்றார் உறவினரை விட்டுத் தன்னந்தனியாக வெளியேறிச் செல்கின்றார்கள்.

**திருமனைப் புறத்தில்நின்றொரு பிடிமண்**
**செங்கையில் இனிதுஎடுத்து ஏந்தி**
**ஒருதரம் யாசீன்ஓதி நால்திசையும்**
**உறங்கிய காபிரைநோக்கி**
**.......................................எறிந்து**
**சொரிக.ர்ச் சுதைமாமனையிடம் கடந்து,**
**தோன்றினர் நீண்டமா மறுகில்**

இறை நம்பிக்கை என்பது அச்சத்தைத் தவிர்க்கும் அரு மருந்து. இந்த நம்பிக்கையாளர்கட்குத்துன்பம் என்பதே யில்லை. துன்பத்தையும் இன்பமாய்க் கொள்வோரே துறவி களும் ஞானிகளும். இன்பத்தை வெறுத்து துன்பத்தை வலிந் தேற்றுத் துறவு பூண்டவரே புத்தர்.

சிரித்துக்கொண்டே நஞ்சினை உண்டவர் கிரேக்க ஞானி சாக்ரட்டீஸ்.. தாம் கொண்ட கொள்கைக்காக, அரசின்

ஏவலர் பறிக்கு முன்னரே, தமது கண்களைத்தாமே தோண்டி எறிந்தவர் கூரத்தாழ்வார். தாயார் உடலைத் தாமே சிதைத்துத் தீயிலிட்டவர் ஆதிசங்கரர். ஆனால், இவர்களில் யாருக்கும் தமது எதிரிகளைத் தனி ஒருவராக யாரும் காணுநிலையில், கொன்றொழிக்கின்ற வாய்ப்புக்கிட்ட வில்லை. கிட்டியிருப்பின், நபிகள் நாயகம் அவர்களை யொப்பவே நடந்திருந்திருப்பர் எனக்கொள்ளவும் இயலும். ஆனால், மெய்ப்பித்துக் காட்டுகின்ற வாய்ப்பு, நபிகள் நாயகம் அவர்கட்கு மட்டுமே கிட்டிற்று. கிட்டுமாறு அருள் புரிந்தான் உலகினைக்காக்கின்ற இறைவன்.

**செல்லிடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்லிடத்துக்**
**காக்கிலென்? காவாக்கால் என்?**

என்பார் வள்ளுவர். இந்த அரிய குறட்பாவிற்கு இலக்கியமாக அமைந்துளது, தூங்குகின்ற எதிரிகளைக் கொல்லாதது மட்டுமின்றி, துன்புறுத்தாமலும் நபிகள் நாயகம் அவர்கள் தம் இல்லம் விட்டு வெளியேறிச் சென்றது.

**மன்பெரும் புவியினில் வாழும் மாந்தரில்**
**துன்புறு தவரிலைத் துன்பைத் துன்புறு(து)**
**இன்பமே கொள்பவர்இலங்கும் பொற்பதிக்(கு)**
**அன்பராய் இருப்பர்என்(று) அறிவு சொற்றதே,**

இது, நபிகள்நாயகம்களின் நன்வாக்கு. தமது வாக்கின்படி நடந்து, முன்மாதிரியாகத் திகழ்கின்றார்கள் நபிகள் நாயகம் அவர்கள். பிறந்தது முதல், ஐம்பத்துமூன்று ஆண்டுக்காலமாக வாழ்ந்திருந்த ஊரை விட்டு, நள்ளிரவிலே தன்னந்தனியாக வெளியேறிச் சென்ற நபிகள் நாயகம் அவர்கள், தமது முதற்சீடராகவும், பெண்ணீந்த மாதுலராகவும் உள்ள அபூ பக்கர் சித்தீக் வீட்டை அடைந்தார்கள். சூழ் நிலையை நினைந்து, தூக்கம் இழந்திருந்த அபூபக்கர் சித்திக் அவர்கள், பெருமானாரின் காலடி ஓசையும், கனிந்த குரலொலியும் கேட்டு வந்து கதவம் திறந்தார்கள். சின்னேரத்தில் இரண்டு உருவம் ஒட்டகையின்மீது அமர்ந்து செல்வதை, வானமும் வானத்துறைந்த நட்சத்திரங்களும் கண்டு பொறுமி இருக்க வேண்

டும். மேகக் கூட்டம் தனது அழுகையைப் பனியாக உகுத்துக் கொண்டிருக்க, நபிகள்நாயகம் அவர்களும், மலிந்த அறிவு மேதையான அபூபக்கர் சித்தீக்கவர்களும், மக்கமாநகரினுக்கு அண்மையில் உள்ள தௌர் என்னும் மலைக்குகையில் சென்று தங்கினார்கள். இப்பொழுது நாம் அறிந்து கொண்டிருப்பது சீறாப்புராணத்தில் உள்ள யாத்திரைப்படலம் தருகின்ற வரலாற்றின் ஒரு பகுதி. உமறுப்புலவர்தம் தமிழ்ப்பாக்கள் தருகின்ற சரித்திரச் சான்றுகள்.

# 21

**தா**ம் மட்டும் வாழ நினையாமல், தாரணி முற்றும் வாழ எண்ணி உழைத்த நபிகள் நாயகம் அவர்கள், தமது உற்ற தோழர் அபூபக்கர் சித்திக் அவர்களுடன் மலைக்குகையில் தங்கி இருக்கின்றார்கள். ஒளிக்கதிர் பரப்பி, உலகினை விழித்தெழ வைக்கின்றது காலையம்பருதி. நபிகள் நாயகம் அவர்களின் வீட்டின் முன்னும் பின்னும் பக்கவாட்டிலும் துயிலாழ்ந்து கிடந்த ஈனமதியான் அபூஜஹ்லிலும், அவன் ஏவல் முடிக்கும் தோழர்களும் விழித்தெழுந்தனர். நபிகள் நாயகம் அவர்கள் வெளியேறிச் செல்லுங்கால் தூவிய மண், எழுந்தவர் தம் முகத்திலிருந்து இழிந்து உதட்டில் படிந்தது. பின்னர், அவர்கள் வாய் திறந்த போது வாயினுள்ளும் சென்றது. அபூஜஹ்ல் தன் வாயில் பட்ட மண்ணைத் துடைத்துக் கொண்டே சொன்னான்: 'நம் அனைவர் வாயிலும் மண்ணைப் போட்டு விட்டு மாயக்கார முகம்மது தப்பிச் சென்று விட்டான், இனி அவன் தனது வேதத்தை ஒப்பி ஒழுகுகின்ற தோழர்களுடன் சென்று சேர்ந்து கொள்வான். அவன் கரம் வலுத்து விடும். அவன் நம்மைப் பகைப்பான். அவன் பகையை வெல்ல நம்மில் யாராலும் ஆகாது என்பதாக. அபூஜஹ்லின் அவ்வுரை கேட்ட அவன் தோழர்கள், எதற்குமே ஆமாம் போடுவது போன்று, இதற்கும் ஆமாம் என்றனர். 'வீட்டிலுள்ள போதே பிடிக்க முடியவில்லை. வெளியேறிய பின்பா பிடிக்கமுடியும்? என மனத்துள் எண்ணிய அபூஜஹ்ல், "இதற்குள் நெடுந்தொலைவு சென்றிருக்க முடியாது; சென்று தேடுங்கள்" என்று கூறி, முகத்தில் விழுந்த மண்ணைத் துடைத்தவனாகத் தனது இல்லம் நோக்கி நடந்தானும் அபூஜஹ்ல்; தானும் தேடுவான் போன்று.

எடுக்கும் உவர்மண் எடுத்தினத்தோர்
எவர்வா யிடத்தும் புகுத்திக்குடி
கெடுக்கும் படிக்குச் கெடுத்தெழுந்து
கிளர்த்தும் தனது மறை நெறியின்
அடுக்கும் அவர்கள் வயின்அடைந்தான்
அவனுல்,இனிமேல் சமதினத்தில்
தொடுக்கும் பகையைத் துடைப்பவர்கள்
இலேஎன்று இவையும் சொன்னுளே

இல்லுறைந்து இரவின் கண்ணே
இருந்தனன் கண்கட் டாக
ஒல்லேயில் புறத்தில் போந்தான்
உறுதொலே கடந்தான் அன்று
சொல்லருங் குவடும் காணும்
சுற்றியே திரிவன் தேடிப்
பல்லரும் எழுக என்றுன்
திசைதிசைப் பறந்து போனுர்.

பாடுறைந்து இல்புக் கோனேப்
பற்றிலர் வீணில் முன்சார்
காடிறந்து எவர்கள் காண்பார்?
காண்பதும் அரிதுஎன்று எண்ணி
ஈடிலாப் புகழ்சேர்வண்மை
விறல்முகம் மதுவைத் தானும்
தேடிய பெயர்கள் போலச்
செல்லும்தன் திசையில் சென்றுன்.

அபூஜஹில் தேடுவதில் பயனில்லே எனத் தெளிந்து, ஆனுல் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல், தானும் தேடுவான் போன்று புறப்பட்டுத் தன் இல்லம் சென்று சேர்ந்தான். தீய வழியில் மக்களேத் தூண்டி விடுவோர், தாம் சென்ற பாதை தீதெனத் தெரிந்த பின்னரும், அதிலிருந்து விடுபட இயலா மல், அழிவாரோடு தாமும் சேர்ந்து அழிவர் என்பதற்கு

அபூஜஹ்லின் நிலை எடுத்துக் காட்டு. இதுதான் கெடுமதி யாளர்களுக்குக் கிட்டுகின்ற முடிவு. இனி நபிகள் நாயகம் அவர்களை வெல்ல முடியாதென்று அவன் அறிவு பகர்கின்றது. தேடிக் கண்டு பிடிக்கவும் இயலாது என்றும் தெரிந்திருக்கின்றான். ஆனால், தான் ஏவி விட்ட தீய சக்திகளைத் தடுத்து நிறுத்த அபூஜஹ்லால் ஆகவில்லை. எனவே, அவர்களுடன் ஒத்துழைப்பான் போன்று நடிக்கின்றான், ஊரார் முன் நலலவன் போல் நடித்து நம்ப வைக்கின்ற அபூஜஹ்ல்! அவனால் ஏவப்பட்ட கூட்டம், ஆலயத்திடத்தும், நபித்தோழர்கள்தம் அணிமனையிடத்தும்,சோலையின் இடத்தும், அருகே உள்ள சிற்றூர் இடத்தும், மலைகளிடத்தும், கூரியமுட்கள் நிரம்பியஈத்தம் காட்டினூடும் புகுந்து புகுந்து தேடி அலைகின்றனர். இப்படி அலைந்த கூட்டத்தில் ஒரு பகுதி, நபிகள் நாயகம் அவர்களும், அபூபக்கர் சித்திக் அவர்களும் உறைந்து திகழ்கின்ற தௌறு மலைக் குகையை நோக்கி வருவதை அபூபக்கர் கண்டார்கள். நாயகத் திருமேனி அவர்களிடம் கூறினார்கள், ''நாம் இருவர் தாமே உள்ளோம்; என்ன செய்வது'' என்று. எதிரிகள் தம்மைச் சூழ்ந்திருக்கின்ற அந்த வேளையிலும், சிறிதும் அச்சமின்றி நபிகள் நாயகம் அவர்கள் கூறினார்கள், ''நாம் இருவரில்லை; சர்வ வல்லமையுடைய ஆண்டவனும் நம்மோடிருக்கின்றான்'' என்று. எதிரிகள் மலைக்குகை வாயின் முன்பு வந்து விட்டார்கள்! தாங்கள் தங்கியுள்ள குகை வாயிலிலே வந்து நிற்கின்ற எதிரிகளின் முழங்கால்களின் கீழ்பகுதி தெரிகின்றது. குனிந்து குகைக்குள் நோக்குவாராயின், தாங்கள் இருப்பதை அவர்களால் கண்டு கொள்ள முடியும். இந்த நிலையிலும், அச்சமற்று ஆண்டவனைத் துதித்தவர்களாக நபிகள் நாயகம் அவர்கள் இருக்கின்றார்கள் அவர்களைப் பின்பற்றி ஒழுகுகின்றார்கள் அபூபக்கர் சித்திக் அவர்கள். வந்தோரில் ஒருவன் சொன்னான்; ''குகைக்குள் சென்று பார்ப்போமே'' என்று. இன்னொருவன், ''குகையின் நுழைவாயிலை முழுமையாக அடைந்தவாறு, 'சிலந்தி வலை பின்னி வைத்துளதே; ஆள்நுழைந்திருப்பின், இச் சிலந்தி வலை அறுபட்டிருக்க வேண்

டுமே! அறுபடாதிருப்பதிலிருந்து தெரியவில்லையா, உள்ளே எவரும் புகவில்லை'' என்று என, உள்ளே சென்று தேடாமைக்குச் சான்று காட்டினன். ''குகை நுழைவாயிலின் முகப்பிலே புரு முட்டையிட்டிருந்து நம்மைக் கண்டதும் பறந்து ஓடுகின்றதே! ஆள் நுழைந்திருப்பின் இப்புரு முன்னமே பறந்தோடி இருக்காதா'' என்று, ஆய்ந்துரைத்தான் வேறு ஒருவன். எனவே குகையினுள் யாருமே இல்லை என்று அறிவு ஆராய்ச்சியின் மூலம் முடிவு கட்டியவர்களாகத் தேடி வந்தோர் திரும்பிச் சென்றனர். ஒரு சிறு சிலந்தியையும், புருவையும் கொண்டு, தங்களை இறைவன் காத்தருள் பாலித்தவிதம் உணர்ந்து, வியந்து இறைவனைப் போற்றினர்கள் நபிகள் நாயகம் அவர்களும், அவர்கள்தம் அருந்தோழரான அபூபக்கர் சித்தீக் அவர்களும். நம்பினோர், நாசம் அடைவதில்லை என்ற நன்மொழி இங்கே வெற்றி பெற்றுத் திகழக் காண்கின்ரோம். இவ்வரிய நிகழ்சசியை, உமறுப் புலவர், அவருக்கே உரிய தன்மையில் அழகுறும் தமிழ்ப் பாக்களாக ஆக்கி அளித்திருப்பமை காண்போம்!

**பொருந்துதல் பயிலாக் காபிர்**
**திசைதொறும் புகுந்து தேடிக்**
**கருந்தடம் கொண்டல் செவ்விக்**
**கவிகையில் உலகம் காத்து**
**விரிந்ததீன் விளக்கம் செய்யும்**
**வேதியர் இரசூலுல்லா**
**இருந்தவான் உரைஞ்சி நின்ற**
**இறும்பிடத்து அடைந்தார் அன்றே!**

**கரத்தில் ஏந்திய வைவேலும்**
**காலினைக் கபுசும் நீண்ட**
**உரத்தினும முகத்தும் வேர்வை**
**உதிர்ப்பொடும் காபிர் கூண்ட**
**வரத்தினை இருகண் ணுர**
**மன்அபூபக்கர நோக்கித்**

திருத்தும்மெய் இரசூலுல்லா
செம்முகம் பார்ததுச் சொல்வார்

இரவினில்இருளில் ஊர்விட்டு
இவண்இடை அடைந்தோம் மாற்றார்
அருவரை இடத்தும் தேடி
அடைந்தனர் முழந்தாள் மட்டும்
தெரிவது நமக்கிங்கு, அன்னோர்
திறத்தொடும் கவிழ்ந்து நோக்கின்
விரைவொடுங் காண்பா என்ன
வேதியர்க்கு எடுத்துச் சொன்னார்

இருவர்நாம் இருப்பப் பூவின்
இருந்தபல் உயிரும் காக்கும்
ஒருவன்நம் இடத்தை நீங்காது
உடன்உறைந்து இருப்பக் காபிர்
தெரிதரும் கண்ணில காணச்
செயலும் மற்றுஉண்டோ? என்றார்
அருவரை முழையிற் புக்கி
அருக்கன் ஒத்திருக்கும் வள்ளல்

ஒருகினில் நின்ற காபிர்
ஒருவருக் கொருவர் இந்த
மருங்கினில் பொதும்பில் புக்கி
நோக்குவம் வருக என்றார்
நெருங்கிய சிலம்ப நூலும்
நீள்சிறைப் புறவின் கூடும்
சுருங்கிடாது அழியாது யாவர்
தொடருவர் பொதும்பில் என்றார்

இப்படிச் சிலர்கூறக் கேட்டு,
எவரும் எம்மருங்கு நோக்கி
மைப்படி கவிகைவள்ளல் முகம்மதைக்
காண்கிலோம் என்று
ஒப்புர அகன்ற நெஞ்சோடு
உளைந்துஉளைந்து அடவி சுற்றி

**மெய்ப்படும் வெயர்வை சிந்த**
**விலங்கல்விட்டு அகன்று போனார்.**

உமறு தரும் இவ்வுயர் தமிழ்ப் பாடல்களைப் பொருள் தேர்ந்து படித்து ஓர்ந்து சிந்திக்கின், நம்பிக்கையாளர் கள் அடைகின்ற வெற்றியின் ரகசியம் புரியும். சிலந்தியை யும், சிறுபறவையையும் கொண்டு, இறைவன் நடத்தியுள்ள திரு அருள் பாங்கு தெளிவாகும். சொல்லுக்குச் சொல், வரிக்கு வரி விமர்சனம் செய்யின், பாடல்களின் சிறப்புத் தேனெனத் தெவிட்டாத இன்பம் நல்கக் காணலாம். பாடல் கள் என்பன வெறும் வார்த்தை ஜாலங்கள் அன்று, எதுகை மோனைகளென்ற யாப்பு அணிகளுமன்று, பாடல்கள் தருகின்ற பாநயம் சிறக்கச் செய்யும் பொருள் நயமே பாடல்களின் சிறப்பு என்பதையும் புரிந்து மகிழ முடியும். இறவாச் செய்தி களை, என்றும் எவரும் ஏற்கும் இனிய கருத்துக் கருவூலங் களை, தன்னுள்ளே தேக்கி நிற்பதே பாட்டாகும். அதனால் தான், பாட்டிற்குச் செய்யுள் என்று பெயர். இத்தகு சிறப் புடைய பாடல்களைச் சீறாப்புராணம் முழுவதிலும் காண்கின் றோம். இங்கேயும் இவ்வரிய பாடல்களாலும் கண்டு களிக் கின்றோம்.செழிக்கட்டும் செந்தமிழ்ப்பா நல்கும் பாவாணர்கள்!

# 22

இறைவனின் தூதுவராக வந்தவர்கள் நபிகள் நாயகம் அவர்கள். அவர்கள் இனிய வரலாற்றினை இயம்புவதின் மூலம், இறைபக்தியை நிலைநாட்ட எழுந்த காப்பியம் சீறாப் புராணம். அதனுடைய மூன்றாங்காண்டமாகவும், முற்றாக் காண்டமாகவும் உள்ளது ஹிஜரத் காண்டம். அதன்நுழைவாயிலைத் தாண்டியுள்ளோம், நபிகள் நாயகம் அவர்களும், அவர்கள்தம் முதல் தோழர் ஆகிய அபூபக்கர் சித்திக் அவர்களும், தௌர் என்னும் மலைக் குகையினுள் தங்கியுள்ளார்கள். மூன்று நாட்கள் அந்த மலைக் குகையிலே அவர்கள் தங்கி இருந்தார்கள். தேடுவோர் தேடி ஓய்ந்தபின், அங்கிருந்து அகல்வது என்பது அவர்கள் தம் நோக்கம். இருக்கும் இடத்தைவிட்டு, இல்லாத இடங்கள் முற்றும் தேடுகின்றார்கள் கொல்ல நினைக்கின்ற பொல்லா மனத்தினர். இதற்கிடையே ஒரு நிகழ்ச்சி. நமது பாரத மக்கள் அனைவரும் அறிந்துள்ளது போன்ற நிகழ்ச்சிதான். அதாவது, மகாபாரதத்தில் வருவது போன்ற ஆனால் சற்றே மாறுபட்ட நிகழ்ச்சி.

தன்மடியிலே, தனது ஆசான் தலை வைத்துத் தூங்கக் கர்ணன் வீற்றிருக்கின்றான். ஒருவண்டு அவனுடைய துடையில் துளை போடுகின்றது. காலை அசைத்தால் ஆசானின் தூக்கம் கெட்டுவிடுமே என்ற எண்ணத்தில் கர்ணன் சகித்துக் கொண்டிருக்கின்றான். அவன்தன் துடையிலிருந்து வெளிப் பட்டோடிய குருதிபட்டு விழித்தெழுகின்றார் ஆசான். கர்ணன் தன்னை ஏமாற்றி விட்டதாக உணர்ந்து, "தம்மிடம் பயின்ற வித்தை, உற்ற தருணத்தில் உதவாது போகக் கடவது" எனக் கர்ணன் மீது கோபமுற்றுச் சாபம் ஈகின்றார் குருஜி! இது மகாபாரதக் காப்பியத்தினுள் வருகின்ற கர்ணன் பற்றிய சம்பவம்.

தௌர்மலைக் குகையில் அபூபக்கர் சித்திக்தம் மடியில் தலைவைத்து படுத்துறங்குகின்றார்கள் நபிகள் நாயகம் அவர் கள். மலைக் குகையினுள் உள்ள பொந்தின் வழியே, ஒரு பாம்பு தலையை நீட்டுகின்றது. வெளியில் வந்தால் நாயகத் திருமேனி அவர்களைத் தீண்டிவிடுமே என்ற அச்சத்தில், துடையை அசைக்காமல், தமதுமேல் துண்டைக் கிழித்து, அப் பொந்தினை அடைகின்றார்கள். ஆனால், அப்பாம்பு அருகிலி ருந்த அடுத்த பொந்தின் மூலம் வெளிப்பட முயல்கின்றது. அப்பொந்தினையும் முன்போன்றே அடைகின்றார்கள். இவ் வாறே அக்குகையிலுள்ள பொந்துகள் தோறும் தலைநீட்டவும், துணிகொண்டு அடைக்கவுமாக, பாம்புக்கும் அபூபக்கர் சித்தீக் அவர்கட்குமாக நடந்த போட்டியில், ஒரு பொந்து மிச்சம் உள்ள நிலையில் அபூபக்கர் சித்தீக் அவர்களிடமிருந்த துணி தீர்ந்து விடுகின்றது. எஞ்சிய பொந்தினூடே பாம்பு தலையை நீட்டுகின்றது. அடைக்கத் துணியில்லா நிலையில், தமது கால் களில் ஒன்றை நீட்டி, பாதத்தினால் அப்பொந்தினை அடைத் தார்கள் அபூபக்கர் சித்திக் அவர்கள். கோபமுற்ற பாம்பு சித்திக் அவர்களின் பாதத்தைக் கொத்திக் குதறி விடுகின்றது. விஷம் தலைக்கேற, மயங்கிய நிலையில்,சித்திக் அபூபக்கர் இருக் கும்போது, நபிகள் நாயகம் அவர்கள் விழித்தெழுகின்றார்கள். மயக்கமுற்ற நிலையிலுள்ள தமது தோழரை நோக்கி வினவு கின்றார்கள். நடந்த விதத்தை விளக்கி உழைக்கின்றார்கள் சித் தீக அவர்கள். தம் தோழருக்குச் சிகிச்சை நல்கிவிட்டுப் பொந்தினுள் இருக்கின்ற பாம்பை அழைக்கின்றார்கள் நபிகள் நாயகம் அவ்ர்கள். பாம்பு வருகின்றது. அதனிடம் கேட்கின் றார்கள் நாயகம் அவர்கள் தமது அருள் ததும்பும் வாய்திறந்து. ‘‘பாம்பே, உனக்கு நாங்கள் என்ன தீங்கிழைத்தோம்? அல்லது எங்களின் முன்னோர்களில் யாரேனும் உனக்கோ உனது முன் னோர்கட்கோ தீங்கிழைத்ததுண்டா? எத்தீங்கும் செய்யா நிலை யிலுள்ள எங்களுக்கு ஏன் நீ தீங்குபுரிந்தனை? தீங்கிழைக்கின்ற மனிதர்களிடம் இருந்து தப்பி, மனிதர்கள் அற்ற இவ்விடத் திற்கு வந்தோம். தீத்திறம் புரியும் மனிதர்களையொப்ப,

நீயும் ஆகிவிட்டனேயே, யாது காரணம்? கூறுவாயக'' என்று கேட்ட நாயகத் திருமேனியினிடம், அப்பாம்பு உரைக்கின்றது. ''நாயகமே! மதீனமாநகர் செல்கின்ற வழியில், நீங்கள் இக்குகையின் கண் வந்து தங்குவீர்கள் என்று முன்னரே நான் அறிந்திருந்தேன். தங்களைத் தரிசிக்கவே இம்மலைப் பொதும்பினில் காத்திருந்தேன். உங்களைச் சந்திக்கின்ற வேளை வந்தது. ஆவலுடன் வெளிவந்த என்னை இவர் தடுத்தார். நான் வெளிப்படுகின்ற வாயில் தோறும் அடைத்து விட்டார். கடைசியாக இருந்த ஒரே ஒரு வழியையும் அவர்தம் காலினால் மூடியபோது, தனது முயற்சியில் தோல்வி காண்கின்ற மனிதனுக்கு வருகின்ற கோபம் எனக்கும் வந்தது; கடித்து விட்டேன். என் குற்றம் பொறுத்தருள்வீரர்களாக! என்று கூறி, நபிகள் நாயகம் அவர்களின் பாதங்களில் தனது தலையைவைத்துப் பணிந்து, அவர்கள்தம் அரிய உயரிய வாழ்த்துதலையும் பெற்று, குகையை விட்டு வெளியேறிச் சென்றது அப்பாம்பு. முதலில், நபிகள் நாயகம் அவர்கள், பாம்பை அழைத்து அதனிடம் வினவிடுத்தாக உமறுப்புலவர் தருகின்ற பாடலைக் காண்போம்—,

**அருமறைப் பொருளாய் நின்றோன்**
**அமைத்த பன்னகமே! யாங்கள்**
**வரையின்ஓர் இடுக்கண் உற்று**
**வந்திருந் தனம்,அல் லாமல்**
**பரிவுடன் உனக்கு யாது**
**குற்றமும் பயின்ற துண்டோ?**
**தரையின் எம்முன்னோர் முன்னாள்**
**இயற்றிய தவறும் உண்டோ?**

**ஏதொரு குறையும் செய்ததின்றி**
**வைவுஇ கழ்ந்துஎண் ணுமல்**
**நீதமில் லவரைப் போல**
**நெடும்புடை யதனில் வந்து**

**தீதுறக் கொடிய வேகம்**
**தலைக்கொளச் சினந்து சீறி**
**வேதனைப் படவாய் வைத்தது**
**என்னென விரைவில் கேட்டார்.**

"வேதப் பொருளாக விளங்குகின்ற இறைவன் படைப்பில் நீயொன்று; நாங்களும் அவனால் படைக்கப்பட்டவர்களே! நமக்குள் பகை இருக்கக் காரணம் இல்லையே! நாங்கள் உனக்குத் தீங்கிழைத்தால் நீ எங்களுக்குத் தீங்கிழைக்கலாம். அல்லது எமது முன்னோர்கள் செய்திருப்பினும் செய்யலாம். ஏதுமில்லா நிலையில், மனிதரைப் போன்று நீதியில்லாச் செயலைச் செய்துள்ளனையே, குற்றமற்ற மனிதனுக்கு, நீதியற்ற முறையிலே, தீதிழைத்து மகிழ்கின்ற மனிதருண்டு உலகிலே. ஊர்வனவற்றுள் ஒன்றாகிய உனக்கு எப்படி அக்குணம் வந்தது" என நபிகள் நாயகம் அவர்கள் கேட்ட பாங்கினை, அப்படியே உமறு பாட்டாகத் தந்துள்ள திறம் நினைந்து மகிழ்ந்து போற்றத்தக்கதாம். இனி, பாந்தழ் பகர்வதைக் காண்போம்!

மறைநபியின் வாயுரை கேட்டு அவர்கள்தம் எழில் முகத்தை நோக்கி, அப்பாம்பு உரைபகரலாயிற்றெனத் தம் பாடலைத் துவக்குகின்றார் உமறுபுலவர். 'இதிலிருந்து இறைவன் படைப்பில், உயிரினங்கள் அனைத்தும் சமம்' என்னும் நாயகத் திருமேனி அவர்களின் உரை அவர்கள்தம் உரை மட்டுமன்று; திருமறையாகிய குர்ஆனின் உரையுமாகும் என்பதையும் நமக்கு உமறு உணர்த்துகின்றார் என ஆகின்றது பாம்பு, நாயகம் அவர்களின் வாயுரை கேட்டு அவர்கள்தம் எழின் முகம் நோக்கி, சிரம் தாழ்த்தி உரைகின்றது—,

"ஆதி நாயகன் திருநபியே! அடியேன் நீதியின்றித் தீண்டினன்அலன். பூதரத்தில், என்முன்னோர், சிலமொழி புகன்றார். பொருவிலாக் கடல் புவி நடு மக்கமாபுரத்தில், அரிய நாயகனின் திருமறையை விளக்கி, அங்கிருந்து, நாயகத்திருமேனியார்,இவ்வரையினிடை தனிவருகுவர் என்னவும், மதீனத் திருநகர் சென்று, அங்கிருந்து தீன்திருத்துவர் எனவும், கூறினர். அவருரைத்த—,

**இனைய வாசகம் அனைத்தையும்**
**உணர்ந்து உனத்திருத்தி.... ...**
**நினைவின் நேர்வழித் தவத்தொடும்**
**இருந்தனன் நெடுநாள்**
**நெடியகாலம் உற்று, ஒருபலன் நினைத்தவர்க்கு, அடுத்து**
**முடியும்போழ்தினில் தடுப்பவர் எவரையும் முரணித்**
**தடிதல்நன்றெனும் அறிவினுல் தடிந்ததே யன்றிப்**
**படியில் நேர்தவறிலன் எனஉரைத்தது பாந்தள்.**

"நீதி தவறி நான் உங்கள் தோழரைக் கடிக்கவில்லை. நீங்கள் இங்கே வருவீர்கள், உங்களைக் காண வேண்டும் என்பது எனது நெடுநாள் ஆசை. நீண்டநாள் ஆசை நிறைவேமுரு தருணத்தில் அதைத் தடுப்போர் யாரைரும் தண்டிக்கலாம் என்ற சிற்றறிவினுல் நேர்ந்த பிழை இது" எனப் பகர்ந்ததாம் அப்பாம்பு. ஓரறிவு ஈரறிவு உயிரினத்திற்குள்ள அறிவு கூட மனிதர்களிடமில்லையே என எண்ணி ஓர்ந்து தெளிவது பயன் உடையதாகும். இவ்வரிய செய்தி சீருப் புராணத்தில் ஹிஜரத் காண்டத்தில் விடமீட்ட படலத்தில் உள்ளது.

தௌவுர் மலையில் குகையில் மூன்றுதினம் இருந்தபின், நபிகள் நாயகம் அவர்களும், அபூபக்கர்சித்தீக் அவர்களும், ஒட்டகத்தின் மீதூர்ந்து மதினமாநகர் நோக்கிச் செல்கின்றுர்கள். "இவ்விருவரில் எவர் தலையைக் கொணர்ந்தாலும் ஏராளமான செல்வம் தருகிறேன்" என அபூஜஹில் பறைமுழக்கி அறிவித்திருக்கின்றுன். ஆசையுற்ற ஒருவன் அவ்விருவரையும் தேடிப் புறப்படுகின்றுன்.

# 23

மனிதன் உயிரினங்கள் அனைத்தினும் மேம்பட்டவன். ஆனால் அவன் மனமோ கொடிய விலங்கினத்தினும் கீழானது. படைப்பால் உயர்ந்த மனிதன், செயலால் மிருகங்களினும் தாழ்ந்தவனாகி விடுகின்றான். இவ்வரிய தத்துவம், விடம் மிட்ட படலத்தில் நமக்குப் பாடகமாக உளது.

நபிகள் நாயகம் அவர்களின் எச்சில் அமுதம் விஷக் கடுப்பை விரட்டியோட்ட, மதீன மாநகர் நோக்கிப் புறப்பட்டார்கள் நாயகத் திருமேனி அவர்களும் அபூபக்கர் சித்திக் அவர்களும், இரண்டு ஒட்டகங்கள் அவ்விருவரையும் சுமந்து செல்கின்றன. வேதவாக்கின்படி நடக்கின்ற மனிதரை யொப்ப, அவ்வொட்டகங்கள் தமக்குக் கற்பித்துள்ள சொல்லின் வழி நடந்தனவாம். மனித மனம், அறிவெனும் கடிவாளத்திற்கு அடங்காமல் தனது போக்கில் செல்வதாயிருக்க, பகுத்தறிவுஇல்லா ஒட்டகங்கள், தலைக்கயிற்றின் அசைவின் வழியன்றி வேறுவழி தவிர்த்து நடக்கின்றன. வஞ்சகரைப் போன்று, தரையில் மறைந்து கிடந்து, கால்களில் குத்துகின்ற முட்களை அவை பொருட்படுத்தவில்லை. முடிந்த வரை உழைப்போம், கொடுத்ததைப் பெறுவோம் என்ற அக் காலத் தொழிலாளர்களை யொப்ப, இரவெலாம் நடந்தோமே என்ற நினைப்பேயின்றி, பகலிலும் அவ்வொட்டகங்கள் அலுப் பின்றி நடக்கின்றன. ஒட்டகங்கள் மீது நபிகள் நாயகம் அவர்களும், அபூபக்கர் சித்தீக் அவர்களும் செல்வதைக் கண்ட ஒருவன் மக்கமாநகருக்கு வந்து, 'நான் வருகின்ற வழியிலே இருவர் ஏருவதைக் கண்டேன்' என்றான். அவ்வாசகம் ஊர்

முற்றிலும் பரவு முன், சுருக்கத்தென்பான், கிள்ளையிலும் வேக மாகச் செல்கின்ற குதிரையின் மீது தாவி ஏறினுன்; வில்லும் வாளும் தோளிலும் இடையின் மீதும் இலங்க, மனவேகத் தினும், மா வேகம் அதிகம் என்னும் வகையிலே குதிரையைத் தட்டியோட்டினுன். குதிரை வருகின்ற கடும் விரைவினைக் கண்ட அபூபக்கர்சித்தீக் அவர்கள், வருபவன் அபூஜஹ்லின் ஆள்தான் எனத் தெரிந்து கொள்கின்ருர்கள். ''வாளும் வில் லும் தாங்கி வருகின்ருன் பகைவன். தொடர்கின்ருன் அவன் நம்மை'' என்று நபிகள் நாயகம் அவர்களிடத்தே உரைத் தார்கள் அபூபக்கர் சித்தீக் அவர்கள். தௌர் குகையில், எதிரி கள் பலர் வந்தபோது, 'அவர்கள் பலர்; நாம் இருவர் தாமே உள்ளோம்?' என அபூபக்கர் அவர்கள் கூறியக்கால், ''நாம் இருவரல்லர்; மூவர் உள்ளோம். நம்முடன் இறைவனும் அக லாது அருகிலே உள்ளான். அவன் நமது நலத்தில், நம்மினும் மேலான அக்கறையுடையவன்'' என்பதை உணர்த்திய அச்ச மற்ற நபிகள் நாயகம் அவர்கள், ''இவன் ஒருவன் தானே? நாம் மூவர் இருக்கின்ருேம்'' எனக் கூறி, ''வருவோன் இறை நம்பிக்கையற்றவன். எனவே, இவனுக்கு இறைவனின் துணை இல்லை. தனித்தவனுக, தன்பலத்தை மட்டுமே நம்பி வரு கின்ருன். நாமோ நமது பலத்தைவிட, இறைவன் பலம் வலு வுடையது என மனம் ஒப்பி ஏற்றுள்ளோம். அவனிருக்க அச்சமேன்?'' என்று அழகுபட அறிவு ஏற்க உரைக் கின்ருர்கள். நபிகள் நாயகம் அவர்கள்தம் உரையைக் கவிதையாக்கம் செய்கின்ற உமறுப்புலவர், 'இறப்பில்லாத வன் இறைவன்; அவனும் அவனுடன் நாம் இருவரும் இருக் கின்ருேம்!' என்ற உறுதியோடு கலக்கமற்ற தன்மையில் கூறினுர்கள் என்பதுதொக்க, சொல் தேடி அமைத்துப் பா விசைக்கின்ருர்.

**இறுதியற்றவன் ஒருவன் நாம்இருவர் இங்கெய்தி!**
**மறம்முதிர்ந்து எதிர்வருபவன் ஒருவன் மற்றுஇவனுல்**
**பெறுவது என்கொல்? என்றுஉரைத்தனர் தீனிலைபிரிக்கும்**
**செறுநர்ஆகிய விலங்கினம் கெடவரும் சீயம்.**

இப்பாடலிலே வருகின்ற **பிரிக்கும்** என்ற சொல்லிற்கு, 'சேர்க்கும்' என்பது பொருள். திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள வழக்குச்சொல் பிரிக்கும் என்ற சொல். ஓர் இடத்தில் உள்ள பொருள் அங்கிருந்து பிரிந்தால் தானே இன்னோர் இடத்தில் வந்து சேர இயலும்? எனவே, 'எவ்வளவு பொருள் சேர்த்தாய்?' என்பதை 'எவ்வளவு பிரித்தாய்?' என்று அங்குள்ளவர்கள் கேட்பார்கள். சோஷலிச ஆக்கத்திற்கு இது பொருள்தரும் நற்சொல்லாகும். இச் சொல்லை, தனிச் சொல்லாக்காமல் இச் சொல்லிற்கு முன்னுலுள்ள தீனிலே என்கின்ற சொல்லிலிருந்து ஆரம்பித்து ஒரு வாசகமாக, அதாவது, தீனிலே பிரிக்கும் 'செறுநர் ஆகிய விலங்கினம் கெடவரும் சீயம்' எனப் படித்தால், நன்னெறியைப் பகைக்கின்ற, வெறுக்கின்ற, அழிக்கின்ற மிருகத்தினரை வென்று, அவர்களை நன் நெறியில் சேர்க்கின்ற ஆற்றல் உடைய சீயம் எனப் பொருள் படும். இப்படிச் சொல் தேடிப் பாட்டமைப்பது கைவந்த கவிஞர்களின் ஆற்றல் ஆம். உமறுப் புலவரின் அவ்வாற்றலை ஈண்டுக் கண்டு உவக்கின்றோம். உமறு, மேலும் நாயகம் அவர்கள் கூறியதாகப் பாடுகின்றார், ''கலங்குதல்.., ஈமான் நிலையும் வீரமும் புறம் விடுத்திருப்பவர் நெறியே!''

'கலங்குதல்'என்பது, ஈமான் நிலையும் வீரமும் புறம் விடுத்திடுபவர் நெறியேயாம். ஈமான் என்பது, நம்பிக்கை என்பதைச் சுட்டுகின்ற அறபிச் சொல். இச் சொல் இறையை, மறையை, நபியை, வானவரை, இறுதித் தீர்ப்பு நாளை, சொர்க்க நரகத்தை உறுதியாக நம்புவதைச் சுட்டுவதற்கென அறபியில் பயன்படுத்தப் படுகின்றது. எனவே, 'ஈமானையும் வீரத்தையும் தன்னகத்தே இருந்து அகற்றிவிட்டவர்கள் அல்லவா மனக்கலக்கம் அடைய வேண்டும்? நாம் ஈமானும் வீரமும் உடையவர்கள்; அஞ்சத் தேவையில்லை. அச்சமில்லாத போது, அஞ்ச வருவது என்ன இருக்கிறது? என்று, எவ்விடத்தும் எந்த நிலையிலும் ஆண்டவனைத் தவிர்த்து வேறு எதற்கும் அஞ்சாத நபிகள் நாயகம் அவர்கள் மேலும் விரித்துக் கூறினார்கள், என்பது உமறுப்புலவரின் கூற்று.

அபூபக்கர் சித்தீக் அவர்களை யொத்தாருக்கு இவ்வுரை அதிகமே என்றாலும், நம் போன்றோர்கட்கு அடிக்கடி நினைவு படுத்த வேண்டிய நல்லுரையாகும் இது. பாரதியார் கூறு வதைப் போன்று, நாம் எது எதை எல்லாம் கண்டு அஞ்சு கிறோம், கலங்குகின்றோம்?

குதிரையின் மீது, இல்லை கலிமாவின் மீது, (கலிமா என்பது போர்க்களம் கண்ட குதிரை) கலிமா மந்திரத்தை, அதாவது இஸ்லாமிய மூல மந்திரத்தைப் போதிக்கின்ற நபிகள் நாயகம் அவர்களைக் கொலை புரியக் கலிமா ஏறிப் பறந்து வந்த சுருக்கத், நபிகள் நாயகம் அவர்களை நெருங்கி விட்டான். வில்லை எடுத்தான், அம்பினைத் தொடுத்தான். எய்வதற்குக் குறி பார்த்தபோது, குதிரை இடறிக் கீழே விழ அவனும் விழுந்து மண்தோய்ந்த முகத்துடன் எழுந்தான். உள்ளத்திலே சிறு அச்சம். எனினும் பண ஆசையால் மீண் டும் தொடர்ந்தான். இம்முறை குதிரையின் கால்கள் பொதி மணலில் புகுந்துவிட மறுபடியும் விழுந்தெழுந்தான். எழுந்து மீண்டும் தொடர்ந்தான். இம்முறை நபிகள் நாயகம் உதவி யின்றி, மீள முடியாத நிலைக்குள் ஆனான். எனவே ஒட்டகத் தில் உவந்து செல்கின்ற பெருமானார் அவர்களின் காதில் விழுமாறு உரத்த குரலில்—,

**தனியவன்தன் திருத்தூதே, முகம்மதுவே**
**பொறைக்கடலே, தமியேன் கூற்றை**
**உனதுசெவிக்கு இடவேண்டும், வேண்டும்என**
**இரக்கமொடு உரைக்கின்றானால்.**

துன்பக் கடலாழ்ந்து சுருக்கத் என்பான் அழுதரற்றிக் கூவி அழைத்த ஓலம் கேட்டு ஒட்டகத்தை நிறுத்தினார்கள் நபிகள் நாயகம் அவர்கள். சுருக்கத் இருந்த இடம் சென்று அவன்தன் இடரகற்றினார்கள். நபிகள் நாயகம் அவர்கட்கு இறைவனின் பலம் அதிகம் இருக்கிறது, அவர்களை வெல்ல முடியாதென் பதை உணர்ந்தான் சுருக்கத். இறுதி வெற்றி நபிகள்

நாயகம் அவர்கட்கே என்றும் கண்டு கொண்டான். 'உங்களைக் கண்டதை நான் யாரிடமும் சொல்ல மாட்டேன்' என்றான்; சத்தியமும் செய்தான். உங்கள் அரசு அமையுங்கால், எனக்குப் பரிசு வழங்குதல் வேண்டும் என்று வேண்டினான், அதையும் எழுத்து மூலமாகக் கேட்டான். 'தாங்கள் செல்வதை நான் யாரிடமும் சொல்லாமலிருக்க இப்பரிசின் ஆசை நெஞ்சில் பதிய வேண்டும்' என்றான். அவன் விரும்பிய வாறு எழுதி வழங்குமாறு அபூபக்கர் சித்தீக் அவர்கட்குக் கட்டளையிட்டார்கள் நாயகத் திருமேனி அவர்கள். தம் கோரிக்கையை எழுத்து மூலமாகப் பெற்றதையும், நபிகள் நாயகத்தைச் சந்தித்ததையும் பிறரிடம் வெளியிடாமல் தன் மனத்தகத்தே மறைத்து வாழ்ந்தான் மக்கமாநகர் திரும்பிய சுருக்கத் என்பான். நபிகள் நாயகம் அவர்கட்குப் பின்பு இரண்டாவது கலிபாவாக வந்த உமறுகத்தாப் ரலியல்லாஹு ஆட்சிக் காலத்தில் அவன் கோரிய பரிசு பொற்கடகங்களாக அவனுக்குக் கிட்டிற்று.

சுருக்கத் சென்றபின், நாயகமும் அபூபக்கர் சித்தீக்கும் பல நாட்கள் பசித்துன்பமும் பயணத்தால் ஏற்பட்ட களைப்பும் தவிர்த்து வேறு துன்பமின்றி மதீனமாநகரம் சென்று சேர்ந்தார்கள். இதுவரை நாம் கண்டது சீறாப்புராண காவியத்தின் சுருக்கத் தொடர்ந்த படலமாகும். அடுத்து நபிகள் நாயகம் அவர்கள் மதீனமாநகர் புக்க படலம் காண்குவமாக!

# 24

நபிகள் நாயகம் அவர்கள் மக்கமா நகரினை விடுத்து இங்கு வந்து கொண்டிருக்கின்றார்கள் என்ற செய்தி எப்படியோ மதீனமா நகருக்கு எட்டிவிட்டது. அந்நகர மாந்தர் யாவரும் நபிகள் நாயகம் அவர்களை வரவேற்கக் காத்துக் கொண்டிருக்கின்றார்கள். பெண்கள் உயரிய மாளிகையின் மேல்தளத்தின் மீது நின்று பெருமானார் அவர்கள் வருகின்றார்களா என நெடுந்தொலைவு வரை தங்களின் பார்வையைச் செலுத்துகின்றனர். பிள்ளைகள் உயர்ந்தோங்கி வளர்ந்துள்ள மரங்களின் மீது தாவி ஏறி, உச்சிக்குச் சென்று நாயகத் திருமேனி அவர்கள் வரும் திசையின்கண் விழி வைத்தவர்களாகக் காத்து நிற்கின்றனர். இவ்வாறு சில நாட்கள் கடந்த பின்னர், நபிகள் நாயகம் அவர்களும் அபூபக்கர் சித்தீக் அவர்களும் ஒட்டகங்களின் மீதமர்ந்து வருவதை ஒரு யூத இளைஞன் கண்டு உரைக்கின்றான். அனைவரும் அவன் காட்டிய திசையிலே பார்வையைச் செலுத்துகின்றனர்.

**உதயமால்வரைப் பரிதியை நிகர்ப்ப ஒட்டகத்தில்**
**விதியவன்திருத் தோழரும் துணைவரும்விரிபூ**
**உதிருஞ்சோலையில் நனியிசை திசைதிசை ஓங்கப்**
**பொதுவர்முல்லையும் குறிஞ்சியும் கடந்தயல் போனார்.**

மதீனமா நகரினை நோக்கி நபிகள் நாயகம் அவர்களும் அபூபக்கர்சித்தீக் அவர்களும் ஒட்டகங்களின் மீதமர்ந்து வந்து கொண்டிருப்பதை உமறுப்புலவர்,மேலே உள்ள தேன் தமிழ்ப் பாடலில் சித்திரித்துக் காட்டுகின்றார். ஒட்டகத்தை மலை என்றும், அதன் மீது அமர்ந்து வருகின்ற நாயகத் திருமேனி

அவர்களைக் காலையில் உதித்தெழுந்து வருகின்ற சூரியனை ஒத்தவர்களென்றும் உமறுப்புலவர் தமது பாட்டினுல் படம் பிடித்துக் காட்டுவது காட்சிப் பொருத்தம் மட்டுமின்றி, கருத்துக்கும் பொருந்துவதாய் இருப்பதுகண்டு மகிழ்வர் கற்ருேர். ஆம், நபிகள் நாயகம் அவர்கள் தம் ஒளி பொருந்திய உடலையும், வதன வடிவழகையும் கொண்டு, அவர்களை உதய சூரியன் என்ருல், அந்த உதய சூரியனைத் தாங்கி வருகின்ற ஒட்டகம் மலைபோன்று திகழ்வதாகக் காட்டிப் பாடியிருப்பது, உவமை நயமுடைய தெனலாம். அறியாமை இருளை அகற்றி, அறிவு எனும் ஒளியை உலகிற்குஅளிக்க, மலையொத்த எதிர்ப்புக்களையும் கடந்து ஞான ஒளியாக வந்து கொண்டிருக்கின்ருர்கள் நபிகள் நாயகம் அவர்கள் எனக்கொள்ளும் வகையிலும் இவ்வரிய உவமானம் திகழக் காண்கின்ருேம். விதியவன் திருத்தோழரும் துணைவரும் என்ற அடியில் காணப் படுகின்ற **விதியவன்** என்ற சொல், இறைவனைச் சுட்டுவதாகத் திகழக்காண்கின்ருேம். இறைவனை விதியவன் எனச் சுட்டு கின்ற மரபு, முதன் முதலில் சீருப்புராணத்தில்தான் தோன்றி யிருக்கக் காண்கின்ருேம். அதன் பின்னரும் கூட, இஸ்லா மியப் புலவர்களைத் தவிர்த்து ஏனைய புலவர்கள் அதிக அளவில் இச்சொல்லை இறைவனைச் சுட்டும் சொல்லாகப் பயன்படுத் தாமை நோக்கற்பாலதாம். ஆக, 'விதியவன்' என்ற சொற் பிரயோகம், உமறுப்புலவரின் வாயிலாக இஸ்லாமிய சமயம் தமிழிற்கீந்த அருஞ்சொற்செல்வமெனக் கொண்டு மகிழ இட முண்டு. இன்னும், இப்பாடலில் நபிகள் நாயகம் அவர்கள் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் போன்ற வழிகளை எல்லாம் கடந்து, மலர்களை உதிர்க்கின்ற சோலையினூடே வந்துகொண்டிருக்கின்ருர்கள் என்பதை, பொதுவர் முல்லையும் குறிஞ்சியும் கடந்தயல்போனுர்'' என்ற வார்த்தைகள் விளக்கு வதாய் உள்ளன. விரிபூ உதிருஞ்சோலையில் போனுர் என்றிருப் பது, மதீனமாநகரினை அடுத்து வந்துகொண்டிருப்பதைவிரிப்ப தாம். நனி இசை திசை திசை ஓங்கப்போனுர் என்பது, மதீன மாநகருக்கு நபிகள் நாயகம் அவர்கள் வந்துற்ற பின்னரே

அவர்கள் தம் புகழும் அவர்கள் விளக்கம் செய்து பரப்பிய உருவமற்ற ஓரிறைவன் நெறியாகிய இஸ்லாமிய சமயமும் உலகு எங்கணும் பரவிற்று என்பதையும் சுட்டுவதாம். மேலும் இலக்கணப்புலவர்கள், விளக்கணி படுத்திப் பாடி விளக்க இப் பாடல் மிகமிகப் பயன் உளதாகவும் திகழக்காண்கின்றோம். ஆம், இப்பாடலின் ஈற்றில் உள்ள "போனுர்" என்னும் சொல்லைத் தொட்டுக்கொண்டு ஒவ்வொரு சொல்லொடும் பொருத்திப் பொருள் விரித்துரைக்கின்ற பாட்டின் நயம் கண்டு மகிழலாம். உதயமால்வரைப் பரிதியை நிகர்ப்பப் போனுர். ஒட்டகத்தில் போனுர். விதியவன் திருத்தோழரும் துணைவரும் போனுர். விரிபூ உதிரும் சோலையில் போனுர். நனி இசை திசை திசை ஓங்கப்போனுர். பொதுவர் முல்லையும் குறிஞ்சியும் கடந்து போனுர். அயல் போனுர். போனுர் இப்படி, பகுத்துப் பகுத்துப் பொருள் உரைக்கும் விளக்கணிப் பாடலாகவும் இப்பாடல் திகழ்கின்றது. பாடலை இன்னொரு முறை பாடிப்பார்த்துக் கொள்ளலாம்.

**உதயமால் வரைப்பரிதியை நிகர்ப்ப ஒட்டகத்தில்**
**விதியவன்திருத் தோழரும் துணைவரும் விரிபூ**
**உதிரும்சோலையில் நனிஇசை திசைதிசை ஓங்கப்**
**பொதுவர் முல்லையும் குறிஞ்சியும் கடந்தயல்போனுர்.**

இப்பாடலில் உள்ள பொதுவர் என்ற சொல்லை, நடுநில மாகிய பாலையாகவும், அயல் என்பதைக் குறிஞ்சி, முல்லை, பாலை ஆகியவை நீங்கிய மருதம், நெய்தல் எனக்கொண்டு பொருள் கண்டு இன்பம் துய்க்க இயலும்.

மதீனமாநகரின் இயற் பெயர், யதுரிப் என்பதாம். நபிகள் நாயகம் அங்குச் சென்று தங்கிய பின்னரே யதுரிப் என்ற பெயர் மறைந்து (மதீனத்துந்நபி) மதீனமாநகர் என்ற பெயர் ஏற்படலாயிற்று. மதீனத்துந்நபி என்ருல் தீர்க்கதரிசியின் நகரம் அல்லது தீர்க்கதரிசி வாழ்கின்ற நகரம் எனப் பொருள் படும். தீர்க்கதரிசி என்பது நாயகம் அவர்களைக் குறிப்பதாம்.

ஆகவே "மதீனு மாநகரம்", நபிகள் நாயகம் அவர்களால் புதிப்பிக்கப்பெற்ற இஸ்லாமியர் அல்லது இஸ்லாமிய மார்க்கம் உறையும் நகரம் என்பதே ஆகும். இப்பொருளில் அம்மாநகரின் சிறப்பினை விளக்கப்போந்த உமறுப்புலவர், இஸ்லாம் என்ருல் என்ன? என்பதை மிகச் சுருக்கி ஒரு பாடலில் தருகின்ருர்.

தானம், ஒழுக்கம், தவம், ஈகை, மானம் கெழுமிய மறம், வெற்றி, குறைவற்ற ஊக்கம் உடையதே இஸ்லாம் என்பதை மதீனமாநகரின் மீதேற்றிப் பாடி நினைவுபடுத்துகின்ருர். இதில் இன்னெரு சிறப்பு பூ, காய், பழம் என்ற மூன்று சொற்களும் பொருளுடன் பொருந்தி வருமாறு அமைத்துப்பாடியுள்ளதாம். ஆம், மானமே பூத்த, ஊக்கம் ஒளிரக் காய்த்த தீன் எனும் இஸ்லாம் மார்க்கம் பழுத்துத் திகழ்கின்ற நகரம் என்று பாடுகின்ருர் உமறுப்புலவர். மரம் பழுத்துவிட்டால் மாந்தர் மட்டுமின்றி, பறவை இனங்களும் வந்து கூடிக் கனியருந்திக் களிக்க வேண்டியதுதானே! தீனெனும் கனியை உலகம் அருந்தி மகிழ அளித்த நகரம் என்ற பொருள் அமைத்துப் பாடுகின்ருர் புலவர் உமறு.

**தானமும், ஒழுக்கமும், தவமும் ஈகையும்**
**மானமும் பூத்ததிண்மறனும் வெற்றியும்**
**ஊனமில் ஊககமும் ஒளிரக் காய்த்தநல்**
**தீனெனும் செல்வமே பழுத்த சேண்நகர்.**

இது உமறுப்புலவர் உவந்து வழங்கியுள்ள மதீனுநகர் பற்றிய பாடல். இதிலுள்ள சேண்நகர் என்ற சொல்லிற்கு, சொர்க்கம் என்பது பொருள் அதாவது பூலோக சொர்க்கம் எனப் பாடிமகிழ்கின்ருர், மகிழ்விக்கின்ருர் உமறுப்புலவர்.

**அறத்திற்கே அன்புசார்பு என்பர்அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை.**

என்பது வள்ளுவர் வாக்கு. இவ்வரிய வாக்கு உமறுப் புலவருக்குப் போதியதாகப்படவில்லை போலும்! எனவே,

மானமே பூத்த மறமே வீரமாகும் என விளக்குகின்ருர் புலவர் உமறு. இதன் பொருள், வீரம் இருக்கிறதென்பதற்காக யாருடனும் போரிடல் முறையன்று எனவும், வலுவில் வந்து அழைப்பு விடுத்தாலன்றிப் போருக்கு எழல் வீரமன்று என்றும் கூறுகின்ருர். இதனை மானமே பூத்ததிண் மறம் என்றதால் காண்க. இஃதோடின்றி, தானம், ஒழுக்கம், தவம், ஈகை, ஆகிய அனைத்தும் தன்னகத்தே தோன்றித் திகழ்வதே வீரம். இத்தகு வீரத்திற்கு எதிரியின் பலத்தைக் கண்டு அஞ்சாத ஊக்கம் வேண்டும் என்கின்ருர். இவ்வகை வீரம் வெற்றியை ஈட்டுவதன்றி, தோல்வியைத் தருவதில்லை என்றும் சுட்டு கின்ருர். மதீனமாநகர் புக்க படலத்தில் மொத்தம் அறுபத்தாறு பாடல்கள் உள்ளன. அவை அனைத்தும் மதீனமாநகர மக்கள் நபிகள்நாயகம் அவர்களை மகிழ்ந்து வரவேற்ற விதம் இயம்பு பவையே! இங்கே எடுத்தாளப்பட்டுள்ள இருபாடல்களும், நபிகள் நாயகம் அவர்கள் மதீனமாநகர் வந்தடைந்த பின்னர் அடைந்த வெற்றியையும் அவர்கள் கடைப்பிடித்துக் காட்டிய அற நெறிகளையும் இயம்புகின்றன. அத்துடன், மக்கத் தினின்றும் படையுடன் வந்து போர் தொடுத்த எதிரிகளிடம் நாயகத் திருமேனி அவர்கள் நடந்து கொண்ட விதம் பற்றியும் விளக்குவதாய் உள்ளன. ஆயிரம் பேர் ஆயுதம் தாங்கிப் போரிட வந்து வீரத்திற்கழைப்பு விடுத்த காலை, முந் நூறு பேர்கள் தாமே உள்ளோம்? ஆயுதங்களில்லையே என் கின்ற கவலையற்ற ஊனமில் ஊக்கம் இருந்தது நபிகள் நாயகம் அவர்களிடத்திலே.எதிரிகளிடம் இரக்கம்காட்டுகின்ற பெற்றியிருந்தது. அவர்கட்கு உதவுகின்ற ஈகைமனம் இருந்தது. ஒழுக்கம் இருந்தது. தானம், அதிலும் நிலைதவரு நிதானம் இருந்தது. எனவே அவர்கள் வெற்றி பெற்ருர்கள் என்பதை இப்பாடலில் உமறு விளக்கிவிடுகின்ருர். பூவென ஆரம்பித்தால் காய், கனி எனக்கொணர்ந்து முடிக்கவேண்டும் என்ற இலக்கிய மரபும் பேணியுள்ளார்.

மக்காநகரிலிருந்து புறப்பட்ட காலை, சுருக்கத் தென்பான் தொடர்ந்ததன் பின்னர், பாலை, வெயில், நடை, என்ற

வேதனை தவிர்த்து வேறு தொல்லைகளின்றி, மதீனமாநகரினை வந்தடைந்தார்கள் நபிகள் நாயகம் அவர்கள். மக்கமாநகரிலிருந்து நாயகத் திருமேனி அவர்கள் வருவதற்கு முன்னரே, மக்கமா நகரிலிருந்து வந்துவிட்டிருந்தவர்களும், மதீன மாகரின் மக்களும் பெரும் மகிழ்வுடன் நபிகள் நாயகம் அவர்களை வரவேற்று உபசரித்தார்கள். அபூஜயூபு என்பாரின் இல்லத்தே நபிகள் நாயகம் அவர்கள் தங்கி இருந்தார்கள். அபிசீனியா சென்றிருந்தோரும், மக்கத்தில் இருந்த பெண்களும் குழந்தைகளும் வந்து சேர்ந்தார்கள். இறைவணக்கத்திற்கு எல்லோரும் சேர்ந்து பள்ளிவாசல் கட்டினார்கள். எதிர்ப்பின்றி இறைவனை வணங்கி மகிழ்ந்தார்கள். நபிகள் நாயகம் அவர்களின் வளர்ச்சியைக் கேள்வியுற்ற மக்கத்தில் உள்ள அபூஜஹில் கூட்டம் பொருமையுற்றது. விட்டேனா முகம்மதை என்று வீருப்புரைத்தது. இருநூற்றைம்பது மைல்கட்கு இப்பால் வந்து விட்டபின்னரும் கூட, நபிகள் நாயகம் அவர்களை நிம்மதியோடிருக்கவில்லை. பொருமைக்காரர்கள் அழிய வேண்டியவர்களே! எனவே அவர்கள் அழிகின்றவரை பொருமை அவர்களைச் சும்மா இருக்கவிடாதல்லவா? விதியின் கை விரட்டுகின்றது, அபூஜஹில் கூட்டத்தை. அவர்கள் படைகொண்டு வருகின்றார்கள் மதீனமாநகருக்கு!

# 25

இஸ்லாம் என்பது, இறைவன் ஒருவனே என்பதும், இறைவனுக்கு உருவம் இல்லை என்பதும், இறைவனை நம்பவேண்டும் என்பதும், இறைவன் படைப்பில் மனிதர்கள் அனைவரும் சமம் என்பதும், பணத்தாலோ, நிறத்தாலோ, மொழியாலோ, மனிதரில் ஏற்றத்தாழ்வு கூறுவது தீது என்பதுமாம். இவற்றோடு, மனிதனை மனிதன் அடிமைப் படுத்துவது, குடிப்பது, சூதாடுவது, விபச்சாரம் புரிவது, பொய் புகல்வது, களவாடுவது, கொள்ளை லாபம் அடிப்பது, பண்டங்களைப் பதுக்கிவிடுவது, நிறுவையிலோ அளவையிலோ மோசடி செய்வது, வட்டி வாங்குவது ஆகியவற்றையெல்லாம் விடுத்து மனிதர்கள் நேர்மையாக நடக்கவேண்டும் என்பதுமேயாம். ''இவற்றையெல்லாம் செய்வது எங்கள் உரிமை: 'செய்யாதே' என்று சொல்ல இந்த முகம்மது யார்?'' என்பதே அபூஜஹில் கூட்டத்தாரின் கேள்வி. எனவே, அபூஜஹிலின் தொல்லையிலிருந்து விலகி, மதீனமா நகருக்கு வந்து, தங்களின் கொள்கைகளை மக்கள் முன்பு வைத்தார்கள் நபிகள் நாயகம் அவர்கள். மதீனமாநகரில் வாழ்ந்த மக்களேயின்றி, சுற்றுப்புறக் கிராம வாசிகளும் நபிகள் நாயகம் அவர்களின் கொள்கைகளை ஏற்று ஒழுகலாயினர். நாளுக்கு நாள் நாயகத் திருமேனி அவர்களின் வழியில் மக்கள் கூட்டம் சேர்ந்துகொண்டேபோவது கண்டு, பொருமையுற்ற கூட்டம், அபூஜஹில் தலைமையில் படைகொண்டு மதீனமாநகரைத் தாக்க வந்து கொண்டிருக்கின்றது என்ற செய்தி, நபிகள் நாயகம் அவர்கட்கு எட்டிற்று. ஒற்றர்களை அனுப்பி வேவு பார்த்துவரச் செய்தார்கள். படைகொண்டு அபூஜஹில் வருவது உண்மை என்றே தெரிந்தது. பயிற்சிபெற்ற ஆயிரம்

வீரர்களுடன், எழுநூறு ஒட்டகங்கள், நூறு குதிரைகளுடன் படைக்கலன்கள் ஏந்தியவாறு அக்கூட்டம் வருகின்றது என்பதை அறிந்தபோது, தமது சகாக்களைக் கூட்டிவைத்து நபிகள் நாயகம் அவர்கள் ஆலோசனை நடத்தினார்கள். மதீனமா நகரினை அபூஜஹிலின் படையினர் நெருங்கும் முன்னர், எதிர்த்துச் சென்று வழியிலே அவர்களைத் தடுத்து நிறுத்திப் போரிடவேண்டும், என்று நபித் தோழர்கள் ஆலோசனை கூறினார்கள். அதன்படி செய்வதென முடிவாயிற்று. படைக்கு ஆள் திரட்டப்பட்டது. மொத்தம் சேர்ந்தவர்களை எண்ணிப் பார்த்தபோது, 314 பேர்களே இருந்தனர். இதில் ஒருவர் போரிட இயலா நிலையில் உள்ளவர்; அவரை நீக்கி எண்ணிப் பார்த்தபோது, முந்நூற்றுப் பதின்மூன்று பேர்கள் மட்டுமே இருந்தனர். ஒட்டகம் நூறு இருந்தன. குதிரைகள் இரண்டிற்கு மேல் இல்லை. ஆயுதங்களும் அதிகமில்லை. இந்த முந்நூற்றுப்பதின்மூன்று பேர்களிலும், போர்ப்பயிற்சி பெற்றவர்கள், உமறிப்னுகத்தாப், ஹம்சாரலி போன்ற ஓரிருவரே இருந்தனர். ஆனால், இவர்களிடையே அன்பு இருந்தது; அறம் இருந்தது; இரக்கம் இருந்தது; ஈகை இருந்தது; தானம் இருந்தது; தவம் இருந்தது. எதிரிகள் ஆயிரம் பேரானால் என்ன? அதற்கும் மேலானால்தான் என்ன? எதிர்த்து வெல்வது, அல்லது வீர சொர்க்கம் புகுவது என்ற ஊனமில் ஊக்கம் இருந்தது. இவற்றிற்கு மேலாக, இறை நம்பிக்கை இருந்தது; தனக்கென வாழாத் தியாக மனப்பான்மை இருந்தது. எனவே, இச்சிறு கூட்டத்தினர் அச்சமின்றிப் புறப்பட்டார்கள். மதீனத்திலிருந்து மூன்று அல்லது நான்கு நாள் பயணத்திற்கு அப்பால் உள்ள பத்று என்னும் இடத்தில் சென்று, அபூஜஹில் கூட்டத்தைச் சந்தித்தார்கள். முன்னரே அங்கு வந்துவிட்ட அபூஜஹில் கூட்டம் வசதியான இடத்தில் முகாமிட்டிருந்தது. நாயகத் திருமேனி அவர்களைச் சேர்ந்தோருக்கு வசதி குறைவான இடமே கிட்டிற்று. முந்நூற்றுப் பதின்மூன்று பேரைக்கண்ட அபூஜஹில் கூட்டம், எள்ளி நகைத்தது. ‘போதிய படைக்கலன்களும் ஏறு

வாகனமும் அற்ற இச்சிறு கூட்டமா நம்மை வெல்லும்?" எனக் கூறிச் சிரித்து மகிழ்ந்தது. பெருமானார் அவர்கள் தமது தோழர்கட்கு உபதேசித்தார்கள்: "நாம் நமது கடமையைச் செய்கிறோம். வெற்றி தோல்வி ஆண்டவன் புறத்தில் உள்ளது. ஆனால், நீங்கள் வலியச் சென்று தாக்கவேண்டாம். அவர்கள் உங்களைத் தாக்கிய பின்னரே நீங்கள் தாக்கவேண்டும். போரிடும்போது, வீர வசனங்களோ, வீண் உரைகளோ, சவால் விடுவது போன்ற பேச்சுக்களோ பேசவேண்டாம். எக்காரணத்தாலும் நின்றநிலை பெயரவேண்டாம். யாரை நாம் ஏற்று வணங்குகின்றோமோ அந்த இறைவன் நமக்கு வெற்றிதருவான். ஊக்கம் தளரவேண்டாம்!'' என உபதேசித்துத் தம் தோழர்களை அன்றிரவு, உறக்கத்திற்கனுப்பிவிட்டு, நாயகத் திருமேனி அவர்கள் இரவு முற்றும் விழித்திருந்து பிரார்த்தனை புரிந்தார்கள். ''இறைவனே!என்னுடன் உள்ள இச்சிறு கூட்டம் அழிந்து பட்டால் உருவமற்ற உன்னை வணங்குவோர் அப்புறம் எவருமில்லை. எனவே, இச்சிறு கூட்டத்திற்கு வெற்றியை நல்கு!'' என்பதே நபிகள் நாயகம் அவர்கள்தம் பிரார்த்தனையாக இருந்தது. அவர்களின் பிரார்த்தனையை இறைவன் ஏற்றுக் கொண்டான். மறுநாட் காலை போர் ஆரம்பமாயிற்று. ஆயிரம் பேர்கட்கும், முந்நூற்றுப் பதின் மூன்று பேர்கட்கும் இடையே போர்! ஆயுதம் உடையோருக்கும், ஆயுதம் அற்றோருக்கும் இடையே போர்! பயிற்சி பெற்ற பல போர்முனை கண்டோருக்கும், பயிற்சியற்ற கூட்டத்திற்கும் இடையே போர்!

அணிவகுத்து நிற்கின்ற தமது படைவீரர்களைக் காண்பதற்கென, அங்கபடியில் கால் ஊன்றிக் குதிரையின்மீது ஏறினார்கள் நாயகத் திருமேனி அவர்கள். அவர்களைச் சுமந்து நின்ற குதிரையை நம் கண்முன் கொண்டு வருகின்றார் உமறுப்புலவர்.

**தாவிடில் மனத்தையொக்கும்; தாக்கிடில் இடியேறொக்கும்**
**ஏவிடில் திகிரியொக்கும் எதிர்ந்தவர்க்குசரியை யொக்கும்**

**பூவிடத்து அடலில்வங்கூழ் போன்றிடும் சஃபென்று ஓதும்**
**மாவினைக் கொணர்மின்என்ன முகம்மதுசரணம் வைத்தார்**

துள்ளித்தாவி ஓடுவதில் மனவேகத்தை உடையது; எதிரிகளின்மீது சென்று தாக்குவதில் இடியினை நிகர்த்தது; ஏவிவிடுங்கால் சக்ராயுதத்திற்கொப்பாகச் செயல்படக் கூடியது; ஊழிக்காற்றினும் வேகமாகத் தாக்கக்கூடியது. இத்தகு திறமுடைய குதிரையின் அங்கபடியில் தமது பாத கமலங்களை வைத்து நபிகள் நாயகம் அவர்கள் ஏறினார்கள். அக்குதிரையின் பெயர் 'சஃப்' என்பதாம். மேலே உள்ள பாடல்தரும் பொருள் இது. கம்பர், ராமன் கையிலுள்ள அம்பு, சொல்லினும் கடிய வேகமுடையதென்பார். சொல் மனத்தில் தோன்றி வெளியில் வரவேண்டும். கம்பனின் பின்தோன்றலாகிய உமறுப்புலவர், அதனினும் சிறப்புறச் சொல்ல எண்ணுவது இயல்பு. எனவே, சொல் உதிப்பதற்குக் காரணமாகிய மனத்தையே குதிரையின் வேகத்திற்கு உவமமாக்கியுள்ளார். இது உமறுப்புலவர் காலத்திலுள்ள புலவர்களின் புலமை வளர்ச்சியைக் காட்டுவதாகக் கொண்டு மகிழ இடமுண்டு. குதிரையின் திறம் கூறும் இப்பாடல் தமிழிற்கோர் நல்ல அணி.

போர் ஆரம்பமாகின்றது. அபூஜஹில் கூட்டத்தினர் தாம் முதலில் போர்க்களத்தில் இறங்கிப் போர்புரிய வருமாறு அழைப்புவிட்டனர். முதலில் தனி நபர்களைக் கொண்டு துவந்த யுத்தம் நடத்தி, பின்னர் போரினை நடத்துவது அரபியர்களின் அக்காலப் போர்முறை. இம் முறைப்படி, அபூஜஹில் அணியினின்றும் ஆமிர் ஹல்ரமி என்பான் போர்க்களத்தில் குதித்து, தன்னுடன் போர்புரிய ஒருவரை அனுப்புமாறு அறைகூவி அழைத்தான். நாயகத் திருமேனி அவர்கள்தம் அணியிலிருந்து மஹஜஆ என்பார் அனுப்பப்பட்டார். ஆமிர் ஹல்ரமியால், மஹஜஆ ஷஹீதானார். அதாவது, வீரமணம் எய்தினார். இதன்பின் போர் துவங்கிற்று. இருதரப்புப் படைகளும் போரிட்ட திறம்பாடுகின்றார் உமறுப்புலவர். சான்றிற்காக ஓரிருபாடல்களை நுகர்வோம்.

**வேலில்தாக்கினர் வில்லினில் தாக்கினர்,விரிமுக்**
**கோலில்தாக்கினர் வாளினில் தாக்கினர் குடங்கைத்**
**தோலில்தாக்கினர் சுரிகையில் தாக்கினர் துரத்திக்**
**காலில்தாக்கினர் தாக்குறும் பேரமர்க் களத்தில்,**

**கேடகத்தையும், தாங்கிய கரத்தையும், கிடந்த**
**சோடிணைப்படும் இரும்பையும், உரத்தையும், துளைத்துள்**
**ஊடுறப்புகுந்து, இருந்தவல் உயிரையும் உருவிச்**
**சாடி,அப்புறம் போயின வீரர்கைச் சரங்கள்.**

இவ்விரு பாடல்களும் போரில் நடந்த தாக்குதல்களையும் அவற்றால் நேர்ந்த விளைவுகளையும் உரைக்கின்றன. குறைந்த எண்ணிக்கையுடையோர்க்கிடையே நடந்த சண்டையாதலின் காலையில் துவக்கிய போர் மாலைக்குள் முடிந்துவிட்டது. அபூஜஹில் முதல், வலீது, உத்பா, உமையா, ஷைபாபோன்ற முக்கியமான தலைவர்கள் உள்ளிட்ட எழுபதுபேர் இறந்து பட்டனர். எழுபது பேர் போர்க் கைதிகளாகப் பிடிபட்டனர். எஞ்சியோர் போர்க்களம் விட்டோடி விட்டனர். நாயகத் திருமேனியார் அணியில் இழப்பு, பதினான்கு பேர்களே! போர் முடிந்த களத்தைக் காட்சிப் படுத்துகின்றார் உமறுப் புலவர்:

**முரசமும் அவிந்த,காகளம் அவிந்த,**
**முரிவெம் பேரியும் அவிந்த**
**பரிகளும் அவிந்த, ஆவணத்தொகுதிப்**
**பாசறை முழக்கமும் அவிந்த**
**திரைகடல் எனும்பே ரோதையும்அவிந்த,**
**வீரர்கள் சேவகம் அவிந்த,**
**அரசரும்அவிந்த, வாகையும் திறனும்**
**ஆண்மையும் அவிந்தன அன்றே.**

**நிரைநிரைப் பரியின் பிணக்குவைமலிந்த,**
**நிருபர்கள் உடல்குறை மலிந்த,**
**விரிகதிர்ப் பூணும் ஆரமும்மலிந்த,**
**வெற்றிவெம் படைக்கலம் மலிந்த,**

**குருதியும்மலிந்த, குடல்துடர் மலிந்த,**
**கொற்றவர் மணிமுடி மலிந்த,**
**முரிதரும் சிரசின் மூளைகள்மலிந்த,**
**மொய்த்தவெண் நிணங்களும் மலிந்த**

வீரர்கள் மலிந்த போர்க்களத்தில், போர் நிகழ்ந்து முடிந்த பின்னர், அப்போர்க்களம் கண்ட அமைதியையும், அங்கே மலிந்து கிடந்த பிணக் குவியல்களையும், அணிமணி ஆயுதங்களையும் இவ்வாறாகப் பாடி விளக்குகின்றார் உமறுப்புலவர்.

குருக்ஷேத்திரப் போரைப் போன்று, உறவுமுறையினர் தம் இடையே நடந்த போர்தான் இப்போர். இது நடந்திருக்க வேண்டாம் என்பதே நபிகள் நாயகம் அவர்கள்தம் விருப்பம். ஆனால் நடந்து விட்டது. மூன்று நாட்கள் அவ்விடத்தே தங்கி, போரில் மாண்டோரின் உடலங்களைப் புதைத்துவிட்டு, பிடிபட்ட எழுபது பிணைக் கைதிகளுடன் மதீனமாநகர் நோக்கிப் புறப்பட்டுச் சென்று சேர்ந்தார்கள், தமது தோழர்கள் புடைசூழ நபிகள் நாயகம் அவர்கள்.

# 26

பத்றுப் போரில் பிடிபட்ட எழுபது பேர்களில் இரு வரைத் தவிர்த்து மற்ருேர் அனைவரும்மதீனமா நகருக்குக் கொண்டு வரப்பட்டனர். இவர்களை என்ன செய்யலாம் எனத் தம்தோழர்களிடம் கேட்டார்கள் நபிகள் நாயகம் அவர்கள் அனைவரையும் கொன்றுவிடவேண்டும் என்ருர் உமறிப்னுகத் தாப். நாயகத் திருமேனி அவர்கள் அக்கருத்தை ஏற்கவில்லை. பிணைக் கைதிகளாக நடத்தவே விரும்பினுர்கள். தலைக்கு நாலாயிரம்திர்ஹம் (ஆயிரம் ரூபாய்) நட்டஈடு தந்து, விடுதலை பெற்றுச் செல்லலாம் எனப்பணிந்தார்கள். நட்டஈடு தரவசதி யில்லாஏழைகளைவிடுதலை செய்தனுப்பினுர்கள்.கல்விஅறிவுள்ள ஒவ்வொருவரும் கல்வி அறிவில்லாத மதீனமாநகரத்திலுள்ள பிள்ளைகட்கு எழுதப்படிக்கக்கற்றுக் கொடுத்து விடுதலை பெற்றுச் செல்லலாம் என்ருர்கள். இவர்களை நன்கு உணவளித்துப் பாதுகாக்குமாறு தம் தோழர்களிடம் ஒப்புவித்தார்கள். நபித் தோழர்கள் தம்மைக் கொல்லவந்த அவ்வெதிரிகளைத் தமது நண்பர்களாக ஏற்று, இல்லத்திற்கிட்டேகி உணவு, உடை உறையுள்வழங்கி அன்புடன் நடத்திஞர்கள். தம்பகைவர்களை இவ்வளவு மேன்மையாக நடத்திய வரலாற்றினை நபிகள் நாயகம் அவர்கள்தம் வரலாற்றிலின்றிக் கற்பனைக் கதை களில்கூடக் காண்பது அரிதேயாகும். மேலும், கைதிகளைக் கல்விப் போதர்களாக அமைத்ததும்கூட வேறு சரித்திரங்களில் காண்பது அரிதேயாம். நபிகள் நாயகம் அவர்களும் அவர்கள் தம் தோழர்களும் தங்களை நடத்திய விதம்பற்றி, அக்கைதிகள் மக்கமா நகரிற்குத் திரும்பிய பின்னர் அங்குள்ளோரிடம் வியந்து கூறிஞர்கள். எனினும், நபிகள் நாயகம் அவர்களைப்

பகைக்கின்ற, எதிர்த்து அழித்தே தீருவதென்கின்ற எண்ணம் மக்கமாநகர வாசிகளின் மனத்திலிருந்து அகலவேயில்லை. இந்தப் போர் முடிந்த அடுத்த ஆண்டு முடியும் முன்னர் மறுபடியும் அவர்கள் படைகொண்டு போருக்கெழுந்தனர். இடையில் சில் சில்லறைப் போர்களை நடத்தினூர்கள் என்ருலும், அக்கம் பக்கத்திலுள்ளவர்களையெல்லாம் தூண்டிவிட்டுப் போரிடச் செய்தனர் என்ருலும், அவை எல்லாம் சில்லறைப்போர்களே! முதலில் நடந்த பத்றுப்போருக்குப் பின்னர் எழுந்த பெரும் போர் இதுவேயாம். உகதுப் போர் என்பது இப்போரின் பெயராகும். உகதெனும் மலை அடிவாரத்தில் போர்நடந்ததால் இப்பெயர்வந்தது. உகதுமலை மதீனமாநகருக்கு அண்மையில் உள்ளது. இப்போருக்கு மூவாயிரம் மக்காநகரவாசிகள் தக்கபோர்க்கருவிகளுடனும், குதிரைகள் ஒட்டகங்கள் போன்ற ஏறு வாகனங்களுடனும், போர்ப்பரணிபாடி வீரம் ஊட்டுவதற்கு எனப் பெண்கள் பலருடனும் வந்திருந்தனர். நபிகள் நாயகம் அவர்கள் அணியில்எழுநூறு பேர்களே இருந்தனர். இந்த எழுநூறுபேர்களும் போர்க்களம்நோக்கிச்செல்கின்றனர். குதிரைகளின்மீது இவர்களில் சிலர் சென்றனர். உமறுப்புலவர் பாடுகின்ருர்.

**பரவைமாநிலம் சுமந்த வெம்பரிகளை, பரிகள்**
**விரைவின் வேகத்தில்சுமந்தன வேந்தரை, வேந்தர்**
**மருமலர்ப்புயம் சுமந்தன வாட்களை, வாட்கள்**
**பெருகும் ஊன்நிணம் சுமந்தன பிறங்கொளி பிறங்க.**

நிலம் குதிரைகளைச் சுமக்க, குதிரைகள் வீரர்களைச்சுமக்க, வீரர்கள் வாட்களைச் சுமக்க, வாட்கள் நிணங்களைச்சுமப்பதற்கென விரைந்து சென்று போர்க்களம் உற்றனராம். உமறுவின்பாடல் தருகின்றகாட்சிநயமுடையது. போர் மூண்டது. போர் முனையிலும் தமது பண்புமுறை தவருத நெறியினரான நாயகத் திருமேனி அவர்கள், முந்திய போரில் சொன்னது போன்றே இப்போரிலும், ''எதிரிகள் வந்துதாக்கினுல் ஒழிய நீங்கள்தாக்கக் கூடாது. போர் என்பது தற்காப்பிற்காகவே ஏற்கப்படவேண்டிய தவிர்க்கமுடியாத ஒன்ரும்' என்று கூறுகின்ருர்கள்.

நாயகப் பேரொளியவர்களின் அவ்வுரையை உமறுப்புலவரின் பாடலாக நாம் காண்கின்றோம்.

**திருக்குஉறும் கருத்துடைஅயலர் சினத்தொடும் கெழுமி**
**இருக்கும் நம்மிடத்துவருவார் எனில், எதிர்ந்து**
**முருக்கிநம்புகழ் நிறுத்துதல் கடன்என மொழிந்தார்**
**மருக்கொழுந்தொடை துயல்புய பூதரவள்ளல்.**

நாயகத்திருமேனி அவர்கள்தம் வாக்கினை வேதவாக்கின் விளக்கம் என ஏற்றொழுகும் நபித்தோழர்கள், தமக்குஇடப் பட்ட கட்டளைப்படியே ஒழுகினர். ஆனால், இரு நூற்றைம்பது கல் தொலைவினைக் கடந்து வலிந்து போரிடவந்து குழுமியுள்ள அஞ்ஞான இருள் நிறைந்த கல்மனத்தோரின் பண்பு வேறு விதமாக இருந்ததாம். புலவர் உமறுபாடுகின்றார்.

**அல்லும்கல்லும் ஒத்தனமனக் குபிரவர் படையில்**
**செல்லும்செல்லும் என்றுஏவின விசிறியின் திரள்கள்**
**கொல்லும்கொல்லும் என்றுஆர்த்தன பல்லியங் குமுறல்**
**வெல்லும்வெல்லும் என்றாடின விடுநெடும் கொடிகள்.**

நீண்ட நல்ல விளக்கம் செய்ய வேண்டிய இப்பாடலை, ஓசை நயம் கருதியும், ஒழுங்கற்றோர் மனப்பாங்கு தெரியவும் பல முறை பாடி, மனத்துள் பதியவைத்துக் கொள்ளலாம்.

மரபு ஒழிந்த மக்கமாநகர மறமாக்களின் நிலை இது என்றால், வேதம் மறுவும் நாவுடைய நபிகள் நாயகம் அவர் கள்தம்படையினர் எப்படி?

**மாற்றலர் திறமும்கூறும் வாய்மையும் ஒடுங்க,வெற்றி**
**ஊற்றமும் ஒடுங்கத் தேருஉள்ளமும் ஒடுங்க,வந்த**
**தோற்றமும் ஒடுங்க,நின்ற தொன்நெறி ஒடுங்க,மாறுச்**
**சீற்றமும் ஒடுங்க,வேத தீனவர் ஆர்த்துநின்றார்.**

பாடல்களின் ஓசை ஒலிப்பின்வாயிலாகவே பரபரப்பாளரின் பாங்கினையும்,பண்புடையார் நெறியினையும் விளக்கிவிடுகின்றார்

உமறுப்புலவர். எனவே, இப்பாடல்கட்குச் சொல்விளக்கம் தேவையில்லை எனலாம்.

தம்மை எதிர்த்தோரை எதிர்த்து நபிகள் நாயகம் அவர்கள் நடத்திய போர்களிலே இந்தப் போர் கடுமையான போர் எனலாம். ஒரு கட்டத்திலே நபிகள் நாயகம் அவர்கள் இறந்து பட்டார்கள் என்னும் வதந்தியை எதிர் முகாமிலுள்ள கொடியோன் ஒருவன் பரப்பி விடுகின்றான். எதிரிகள் அணியில் மகிழ்ச்சி ஆரவாரம். நாயகத் தோழர்களிடையே சோர்வு. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, ஹம்சா ரலி அவர்களை ஒருவன் மறைந்து நின்று வேல்வீசிக் கொன்றுவிடுகின்றான். நபிகள் நாயகம் அவர்களின் சிறிய தந்தையார் ஹம்சா ரலி அவர்கள், ஆற்றல் மிக்க போர்த்தளபதி யாவார்கள். எதிரிமுகாம் தலைவனின் மனைவியான இந்தா என்னும் மாது,இறந்துபட்ட ஹம்சா ரலி அவர்களின் உடலை உருத்தெரியாதபடி சின்னாபின்னப் படுத்திவிடுகின்றாள். குடலைப்பிடுங்கிக் கழுத்தில் மாலையாகப் போட்டுக் கொண்டு கலிங்கத்துப் பரணியில் வருகின்ற பேய்க்கொப்பாக ஆடிக் களிக்கின்றாள். நபிகள் நாயகம் அவர்களின் முன்பற்களின் இரண்டு இப்போரில் உடைபட்டுப்போகின்றன. முகத்தில் குருதிகொப்பளித்தோடும் படியான காயம் ஏற்பட்டுவிடுகின்றது. மயக்கமுற்றநிலை சிறிது நேரம் நீடிக்கின்றது. பிறகு மயக்கம் தெளிந்து போர்க் காரியங்களில் ஈடுபடத் தமது தோழர்களை ஏவுகின்றார்கள்.

நபிகள் நாயகம் அவர்கள் இறந்து பட்டார்கள் என்ற தவறான செய்தி மதீனமாநகரில் பரவவே, அங்குள்ள பெண்களெல்லாம் நாயகம் அவர்களைக் காண்பதற்கென உகதுமலை அடிவாரத்தை நோக்கி ஓடிவருகின்றார்கள். அதிலே ஒரு பெண், தன் முன்னம் எதிர்ப்பட்ட ஒரு வீரரிடம் நபிகள் நாயகம் அவர்கள் எப்படி இருக்கின்றார்கள் என்று வினவுகின்றாள். 'போரில் உன் கணவன் இறந்து விட்டார்' என்கிறார் அந்த வீரர். 'அதிருக்கட்டும்; நபிகள் நாயகம் அவர்கள் எப்படி இருக்கின்றார்கள்' எனக் கேட்கின்றாள் அப்பெண்மணி.

'உன் மகன் போரில் இறந்து விட்டான்' என்கின்றார் அவர். இப்பொழுதும் அவள் நபிகள் நாயகம் அவர்களைப்பற்றியே கேட்கின்றாள். 'உன் தந்தை இறந்து விட்டார், உன் சகோதரர் இறந்துவிட்டார்' என்று அவ்வீரன் கூறியதை எல்லாம் அம்மாதரசி காதில் ஏற்றுக்கொள்ளவில்லை. முடிவில் அவ்வீரர், 'நபிகள் நாயகம் அவர்கள் நன்றாக உள்ளார்கள்' என்று உரைத்ததும், "ஆண்டவன் என்னைக் காப்பாற்றிவிட்டான்; புகழ்அனைத்தும் அந்த ஆண்டவனுக்கே" எனக்கூறி, நாயகத் திருமேனி அவர்களைக் காண்பதற்கு ஓடினாள் அந்த நங்கை நல்லாள்.

உகதுப் போரில், நாயகம் அவர்களின் அணியில் பெரும் சேதம். ஆனால் எதிரிமுகாமில் உள்ளோருக்கு இதனினும் அதிக இழப்பு. முடிவில், போர்முனையைவிட்டே ஓடினார்கள் மக்கா நகரத்தினர். ஓடுகின்ற வேகத்தில் போர்க்கருவிகள் போன்றவற்றை எல்லாம்கூடக் களத்திலே விட்டு விட்டு ஓடினார்கள் இறந்து பட்டவர்களை எடுத்து நல்லடக்கம் செய்துவிட்டு, மதீனமா நகரில் சென்று சேர்ந்தார்கள் நபிகள் நாயகம் அவர்கள். இந்தப்போர், மக்கமாநகரிலிருந்து நபிகள்நாயகம் அவர்கள் மதீனம் சென்று சேர்ந்த மூன்றாவது ஆண்டில் நடந்ததாகும். இந்தப் போர்பற்றிப் பிற்காலத்தில் நபிகள்நாயகம் அவர்கள் குறிப்பிடும் போது, பத்றுப் போரில் கிடைத்த வெற்றியை வைத்து, வெற்றி நமக்கே என எமதுதோழர்கள் எண்ணிப் பெருமிதம் கொண்டு விட்டார்கள். அந்தப் பெருமிதத்திற்கு இறைவன் தந்த எச்சரிக்கையே இப்போரில் நாம் பெரும் இழப்பிற்குள்ளானது எனக்கூறி, வெற்றியில் களித்தல் மிகத்தீது என எச்சரித்துள்ளார்கள். இந்த எச்சரிக்கை இன்றும் என்றும் எல்லோருக்குமே பொருந்துவதாகும்.

ஏழுநூறு எளிய வீரர்களை மூவாயிரம் அடலேறுகளால் வெல்ல இயலவில்லை; ஆனால், மனமும் திருந்தவில்லை. வள்ளல் நபியை எப்படி மாய்த்து அழிப்பது என்பது பற்றியே கவலையுடன் சிந்திக்கின்றார்கள். முன்னம், அபுஜஹில் ஒருவனே சிந்திப்பவனாயிருந்தான். இப்பொழுது, அபுசுபியான், இக்ரிமா, காலித்பின்வலீத் என்ற முப்பெரும் தளபதிகள் சிந்திப்பில் ஈடுபடுகின்றார்கள். இவர்கள் அரபு நாடு முற்றிலும் சுற்றிப் படை திரட்டுகின்றார்கள். இதற்குமுன் பத்று, உகது என்ற இரு இடங்களிலும் நடந்த போர் மக்கத்தில் வசிப்பவர்கட்கும் மதீனத்தில் வசிப்பவர்கட்குமான அரபியர்கட்குள் மட்டுமே நடந்தது. இம்முறை நடைபெற விருக்கின்ற போருக்கு, யூதர்களையும் ஏனையோரையும் முடிந்தவரை திரட்டினார்கள் மக்கா நகர வாசிகள். உமறுவின் பாடல், மக்கா நகரவாசிகள் திரட்டிய படையில் இருந்தோர் யார்யார் எனக் கூறுகின்றது.

**சுற்றுளவேந்தர் பல்பெருங் குலத்தில்**
**தோன்றிய அரசரும் அவரோ(டு)**
**உற்றவெம்படையும் பனீகுறை ளாவென்(று)**
**ஓதிய மாந்தரும் கபடம்**
**பற்றிய எஹூதிக் குழுவின ரவரும்**
**பரிவொடு மக்கமா நகரில்**
**தெற்றினர் வளைந்தமுகக்குசை பரியும்**
**செறிந்திடத் திரைக்கடல் சிவண.**

இப்படி, பலதர மக்களைப் பெரும் அளவில் திரட்டிக்கொண்டு, தம்மை எதிர்க்க மக்கா நகரினர் வருகின்றார்கள் என அறிந்ததும், முன்போலின்றி இம்முறை மதீன மாநகரிலிருந்தபடியே எதிரிகளைச்சந்திப்பது என மாநபியும், நபித்தோழர்களும் முடிவு

கட்டினர். எனவே, மூன்று புறங்களிலும் மலைகள் அரணாகத் திகழ்கின்ற மதீன மாநகரின் ஒரு புறத்தில் மட்டும் அகழ் வெட்டிப் பாதுகாப்புச் செய்தார்கள், நாயகத்திருமேனி அவர்கள். அகழி தோண்டுவதில் ஈடுபட்ட மூவாயிரம் பேர்களுடன் சேர்ந்து கற்களை உடைத்தும், பூமியை அகழ்ந்தும் மண் கூடைகளைச் சுமந்தும் பணி புரிந்தார்கள். நாயகம் அவர்களும் ஏனையோரும், இரவு பகல் என்று பாராமல், பசியும் பட்டினியுமாகப் பல நாட்கள் முயன்றுழைத்து அகழி தோண்டி முடித்தார்கள். அகழி தோண்டிய மூவாயிரவர்களே நாயகத்திருமேனி அவர் அவர்களின் படையணி வீரர்கள் ஆவர். எதிரிகள் வந்து தாக்கும்போது, அகழியின் உட்பக்கக்கறைமீது நின்று, தடுத்து எதிர்த்துப் போர் செய்வதென முடிவாயிற்று. நாயகத்திரு மேனிகளும் அவர்கள் தம் தோழர்களும் அகழி அகழ்ந்ததை உமறுவின் ஒரு பாடல் கீழ்க்கண்டவாறு கூறுகின்றது.

**மட்டிலாதகல் வெட்டியும், நீண்டகை வாய்ந்த**
**கொட்டும், ஏந்துகூந்தாலமும் பலப்பல கொணர்ந்து**
**வெட்டுவார் அவைஅடிக்கடி கூடையில்வீழ்த்தித்**
**தட்டுவார் பலதிடரென முறைமுறை தாங்கி.**

இப்பாடல்,கற்களை உடைத்தும் பூமியைக் கிண்டியும் தோண்டியும் அகழ்வதற்கும் அகழ்ந்த கற்களையும் மண்ணையும் அப்புறப் படுத்துவதற்கும் பயன்படுத்திய கருவிகளையும் அவற்றைப் பயன்படுத்திய தன்மையையும் பகர்கின்றது. கல்வெட்டி, நீண்ட பிடியுடைய மண்வெட்டி, குந்தாலம், கூடைகள் பயன் படுத்தப்பட்டனவாம். இவற்றில் மண்வெட்டி, குந்தாலம், கூடை ஆகியவற்றை நாம் அறிவோம். கல்வெட்டி என வரும் கருவியை நம் நாட்டிலும் சரி, இலக்கியங்களிலும் சரி, நாம் கண்டறியோம். கற்களைப் பிளக்க உளியைப் பயன்படுத்துவ துண்டு. கல்லுளி என அதனைச் சுட்டுவர். கல்லுளியைக் கல் வெட்டி எனக் குறிக்கின்றார் எனக் கொண்டாலும் இது வழக்கிலும் இலக்கியத்திலும் இல்லாப் புதுச் சொல்லேயாம். சொல் புதிது, பொருள் புதிது நவகவிதை என்பான் பாரதி! பாரதி

யின் கணக்குப்படி உமறுவின் கவிதைகளை நவகவிதை எனலாம்.

**விரைந்து மன்னவர் அவரவர் தனித்தனி மேவி**
**அரிந்துசூழகழ்க் கிடங்கினை அழகுறத் திருத்தி,**
**சொரிந்தநீள்கரைப் புடவியும் வரையெனத் தோன்ற,**
**திருந்தவே அமைத்தனர் குபிர்த்திருந்தலர் திகைப்ப.**

மூவாயிரம் பேர் ஒன்றுகூடி அகழி தோண்டினர். தோண்டிய அகழி அதனுடைய ஆழத்தாலும் நீண்டு கிடப்பதாலும் கிடங் காயிற்று. அக்கிடங்கின் இரு மருங்கினையும் கரடுமுறடு அற்ற தாகக் கருவிகொண்டு சுவர் போன்று தெரியுமாறு அழகுறச் செம்மைப் படுத்தினர்கள். இதனை, அரிந்து ஆழகழ்க் கிடங் கினை அழகுறத் திருத்தி என மென்மைதொக்கப் பாடுகின்றார். அகழியின் சுவர்ப் பகுதியை, அரிந்து செம்மைப் படுத்தினர் என்பதிலுள்ள அரிந்து என்னும் சொல் புதிதல்ல வெனினும் இடம் கருதி நோக்கின் புதுமை என்றே கொள்ளல் வேண்டும். கிணற்றின் சுவரையோ, அகழியின் இருமருங்கையுமோ செதுக்குவதை, அல்லது செத்துவதை 'அரிந்து' என உமறு வின் இப்பாடலில்தான் காண்கின்றோம். கறி, காய், பழம் போன்றவற்றையே அரி எனச் சுட்டுவோம். 'அரிவாள், மனை அறிவாள்' என்றியம்பல் இதனை மெய்பிக்கும். அகழியின் இரு மறுங்கினையும் அரிந்தார் என்றிருப்பது நயத்தகு சொல்லாட்சி எனலாம். ஆக, எதிரிகள் கண்டு திகைக்கும் வண்ணம் மாநபி அவர்களும் அவர்தம் தோழர்களும் தற்காப்பு நிமித்தம் மதீன மாநகரில்,காப்பாரற்றிருந்தபகுதி முழுமையிலுமாக அகலமும் ஆழமும் உடைய கிடங்கு அகழ்ந்து, அகழ்ந்தெடுத்த மண் ணினைக் கொண்டு நீண்டமலை எனத் தோன்றுமாறு கரை யமைத்து எதிரிகள்வரின், சந்திக்க வாள்கட்கும், வேல் அம்புகட்கும் கூரம் போட்டு வைத்துக் காத்திருந்தனர் என் பதைச் சீருப்புராணத்திலுள்ள கந்தக்குப் படலத்தில் காணு கின்றோம். கந்தக்கு என்பது, 'கந்தக்' என்ற அறபிச்சொல்லின் திரிபாகும். கந்தக் என்ற அரபிச் சொல்லிற்கு அகழ் என்பது

பொருள். இப்படலத்தில் எண்பத்து மூன்று பாடல்கள் உள. நபிகள் நாயகம் அவர்கள்தம் வரலாற்றுத் தமிழ் நூல்களில் அகழ்ப் போர் என்ற தலைப்பின் கீழ் உள்ளவற்றை, 'கந்தக்குப் படலம்' என்றும் 'உயைவந்த படலம்' என்றும் இருபகுப் பாக்கிப் பாடி மகிழ்விக்கின்றார் உமறுப் புலவர். மக்கமா நகரி லிருந்து புறப்பட்ட படையணியில், ஐயாயிரம் குதிரைகள் இருந்தனவென்று வரலாற்றாசிரியர் கணித்துரைத்துள்ளனர். ஒட்டகப் படை வேறு. அம்பெய்பவர், வேல்வீச்சினர், வாட் படையினர், கவண்கல் படையினரென்று ஐயாயிரத்தவரும் குதிரைப் படையினர் ஐயாயிரத்தவருமாக மொத்தம் பத்தா யிரம் பேர் புறப்பட்டு வந்தனர். இவர்கள் முழுமைக்கும் அபூசுபியான் தலைமை. மக்கத்துப் படையினருக்குக் காலிதிப்னுவலீதும், இக்ரிமாவும் தளகர்த்தர்கள். மற்றப் படைகட்கு, அவ்வக்குழுவிலிருந்தே தலைவர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டிருந்தனர். இப்படி வந்தவர்களில் கத்துபான் கூட்டம் என்றொரு அணி. இந்த அணியினர், போரையே தொழிலாகக் கொண்ட வஞ்சினத்தவர் ஆவர். கண் மண் தெரியாமல் தாக்குவதென்பார்களே, அத்தகைய தாக்கு தலினர். இவர்களின் தலைவனாக உயையினா இப்னுஹசன் அமைகின்றான். இவனைச் 'சினமுறுமனத்து உயையினா' என்பர் உமறுப்புலவர். அகழ்ப் போர் நடந்தவிதம் கூறும் படலத் திற்கு இவன் பெயரால், உயை வந்த படலம் என உமறுப் புலவர் பெயரிட்டுள்ளார்.

**கனல்முகம் தெரியும் கவட்டிலைச் சூலம்**
**கைவிசைத் தெறிகதிர் வேலும்**
**குனிதருவாளும் மருங்கினில் விசித்து**
**கத்துபான் குழுவினர் சூழப்**
**புனைமயிர்ப்புரவி ஆயிரம் நடப்ப**
**அசன்பெறும் புதல்வன் கோளரியின்**
**சினமுறும் மனத்தன் உயையினா என்னும்**
**செம்மலும் ஏகினன் சிறப்ப.**

மக்கமா நகரினரின் அழைப்பின் பேரில் அவர்கட்கு உதவப் படை நடத்தி இணைந்துவந்த கோத்திரம், குழு, கூட்டம் ஆகிய ஒவ்வொன்றுக்கும் ஒரு தலைமையைக் கூறிவருகின்ற உமறுப்புலவர் கத்பான் கூட்டத்திற்குத் தலைமை தாங்குகின்றவன் உயையினு என்று இயம்புவதோடின்றி, படலத்தின் பெயரையே உயைவந்தபடலம் எனக் கூறுவதற்குக் காரணம் உண்டு. கத்பான் கூட்டம் என்பது காசு தருவோருக்கெல்லாம் படை நடத்தும் கூலிப் பட்டாளத்தையும் மக்கமா நகரினர் கூலி கொடுத்து அழைத்து வந்துள்ள அவமானத்தை அம்பலப்படுத்துவான் வேண்டியே உயை வந்த படலம் எனப் பெயர் தந்துள்ளார் எனலாம். இல்லை எனில் முழுப்படைகட்கும் பொறுப்பினுகைத் தலைமை ஏற்று நடத்தி வருகின்ற அபூசுபியான் வந்த படலம் என்றோ, குதிரைப் படை நடத்துவதில் நிகரில்லாத் தளபதியான காலிது பின்வலிது படைப்பலம் என்றோ, வீரன் மகன் வீரனுன இக்கிரிமா வந்த படலம் என்றோ பெயரிட்டிருக்கலாம். மக்கா நகர வாசிகள், தங்களை விட மேலானவர்கள் இல்லை எனக் கூறிக் கொள்பவர்கள். அதிலும் குறைஷிக் குலத்தினர் தங்களின் வீரத்தாலும் விவேகத்தாலும் எதிலும் எதற்கும் தலைமை தாங்கும் ஆற்றல் தங்கட்கே உண்டு எனக் கொக்கரிப்பவர்கள். அத்தகையோர் கூலிப் பட்டாளங்களையும் குணங்கெட்ட சந்தர்ப்பச் சதிகாரர்களையும் இணைத்துப் பெருங் கூட்டமாகப் போருக்கெழுந்துள்ள விதத்தை அவமதிப்புச் செய்யவே கூலிப்படைத் தலைவனின் பெயரால் உயை வந்த படலம் என அகழிப் போர்ப் படலத்திற்குத் தலைப்பீந்துள்ளார் புலவர் உமறு. மக்கமா நகரிலிருந்து புறப்பட்ட பதினுயிரவரைக் கொண்ட படையணி மதீனமா நகரினை நோக்கி, போரினையும் வெற்றியையும் மனத்தில் கொண்டு, மமதை மதமதப்பில் வேக நடை, வீர நடை, விரைவு என, தம்மை மறந்த களிப்பில் வந்து கொண்டிருக்கும் திறம் கூறுகின்றுர் உமறுப்புலவர்.

**பூண்டவெந் தானைஅறிந்திலர் கழுத்தில்**
**போட்டநன் மணிவடம் உணரார்**

**நீண்டஉட்பினரைக் கண்டும்அங் கறியார்**
**நிகழ்த்திய மாற்றமும் அறியார்**
**ஈண்டியவேந்தர் யாவர்என் றறியார்**
**எழுகடல் சேனையும் அறியார்**
**தூண்டியசீற்றத் தீயொன்றே தாங்கி**
**ஏகினர் மிடலுடைச் சூரர்.**

இப்படி, போர் நினைவொன்றே நினைவாகக் கொண்டு மதீன மாநகர் நோக்கிப் போகின்றது மக்கமாநகர்ப் படை.

# 28

வீரம் பேசி, வெற்றிநடை பயின்று, மிகவேகமாக மக்கமா நகரத்தின் மாபெரும் படையணி மதீனமா நகரின் அண்மையில் வந்து பாடி வீடமைத்துத் தங்கிற்று. அவர்களைப் பொறுத்தவரை இரவு ஊர்ந்து சென்றது. உதய சூரியனை மிக ஆவலுடன் பார்த்திருந்தார்கள். பொழுது புலர்ந்ததும் தானைத் தலைவர்கள் எழுந்து புரவிமீதூர்ந்து, போர்க்களத்தைப் பார்க்கச் சென்றனர். மதீனமா நகரினை அவர்கள் அண்மியபோது, ஒரு புதுமையைக் கண்டு வியந்து நின்றனர். ஆம், அவர்கள் கண்ணெதிரில் ஆழ்ந்த அகன்ற மிக நீண்ட அகழி தென்பட்டது. இவர்கள் நின்ற அகழிக்கரைக்கு எதிர்க்கரை மிக உயர்ந்த மண்மேடாக, எளிதில் கடக்கவியலாத அளவிற்கு உயரமானதாக இருந்தது. அதற்கு அப்பால் தமது தோழர்களுடன் நபிகள் நாயகம் அவர்கள் காட்சி தந்தார்கள். மக்கமா நகரப்படை தாக்கினால் அகழ்க்கரையின் பின்னால் மதீனப் படையினர் மறைந்து கொள்ள வியலும். மதீனப்படை தாக்கினால், மக்கமா நகரப் படையினருக்குத் தங்களைத் தற்காத்துக் கொள்ள மறைவான தகுந்த இடமில்லை. மேலும், மதீனா வாசிகளைத் தாக்குவதாயின் நேரில் சென்று தாக்குவதாயின், அகழியிலிறங்க வேண்டும். மதீனப் படையினர் மேட்டின்மீது நின்று வில்லினாலும் வேலினாலும் தாக்கினால் இவர்கள் அகழியிலேயே மாண்டுமடிவதைத் தவிர வேறு வழியில்லை. இந்த விசித்திர அகழ் அரண் அமைப்பு, அரபி நாட்டினர் அறிந்திராத தற்காப்பு முறையாகும். பாரசீக தேயத்தவராகிய சல்மான் என்பவர் நபித் தோழர்களில் ஒருவராகி, நாயகத் திருமேனி அவர்களுடன் மதீனமாநகரில் வாழ்ந்திருந்தார். அவர், பாரசீக தேசத்தில் இது போன்ற

தற்காப்பு அமைப்பு உண்டு எனக் கூறியதின் பேரில், இவ் வகழ் அமைப்புச் செய்யப்பட்டது. எனவே, அதுவரை கண் டும் கேட்டுமிராத அகழ் அரணைக் கண்டதும், மக்கமாநகரத் தலைவர்கள் செய்வதறியாது திகைப்பில் ஆழ்ந்தனர் என்கின் றார் பாவல்ல உமறு.

**முன்இலாத கவுத்துவம் முற்றுற**
**இன்னாளில் இயற்றினர் ஈங்குஇதால்**
**பன்னும் மாயமதோஎனப் பாவியர்**
**உன்னி மீண்டுஓர் இடத்தினில் உற்றனர்.**

அகழ் அரணைத் தாண்டிச் சென்று தாக்குவதற்கான மார்க்கம் புலப்படவில்லை. எனவே, இது யார் வகுத்த திட் டமோ? அல்லது மாயமோ என மதிமயங்கியவர்களாக மக்க மாநகரினின்றும் மாவீரம் பேசி வந்த தலைவர்கள் ஓர்புறத்தே சென்று அமர்ந்து யோசிக்கத் தலைப்பட்டனர்.

வில்லேர் உழவன் இக்ரிமா, வீரமிக்க குதிரைப் படைத் தளபதி காலித்பின்வலீது, கொலைவெறி படைத்த கத்பான் படையினர், ஊக்கமிகு உயையினா, மொத்தப் படைக்குந் தலை வனான அபூ சுபியான், ஆகிய அனைவர்தம் அறிவிற்கும் எட்ட வில்லை அகழ் கடந்து சென்று போர்புரியும் மார்க்கம். படை உறங்கின. குதிரைகள் ஒட்டைகள் யாவும் உறங்கின. எண்ணி வந்த எண்ணம் வேறு; நடக்கின்ற நடப்பு வேறான நிலையில் நாட்கள் நடந்து கொண்டிருந்தன. கொண்டு வந்திருந்த உணவுப் பொருள்கள் குறைந்து கொண்டே வந்தன. குதிரை ஒட்டகைக்குத் தீனிகள் இல்லாத் திண்டாட்டமும் வந்தது. இருபது நாட்கள் முற்றுகையின் மொத்த நாட்கள். இடை யில் நடந்த இரண்டொரு துவந்த யுத்தங்களைத் தவிர்த்துப் புலவர் உமறுக்கும் தமது ஆற்றல் துலங்குமாறு போர்ப் பரணி பாட வாய்ப்பில்லை. எனவே, அவர் போர்க்களத்தே நடந்த யுத்தங்களைப் பாடிக் குறைபோக்குகின்றார். ஆம், துவந்த யுத்

தத்தில் காயமுற்ற சஃது என்பார் இப்படை எடுப்பின் முடிவு காணும்வரை தான் இறவாதிருக்க அருள்புரியுமாறு ஆண்டவ னிடம் வேண்டிப் பாடுவதாக உமறுப் புலவர் ஆர்த்தளித் துள்ள பாடல்கள் ஆண்டவனைப் பாடுகின்ற, அறிவுத் திறம் படைத்த துதிப்பாடல்களாய்த் திகழக்காண்கின்றோம்.

**வானவர்க்கும் நின்னுடைய தூதருக்கும்**
**மறைதெளிந்த மற்றை யோர்க்கும்**
**ஊனுடைய பல்லுயிர்க்கும் உணர்வரிய**
**பேரொளியாய் ஓங்கி நின்ற**
**ஞானம்எனும் பரம்பொருளே அழியாத**
**பெரும்பேறே நடுநின் றென்றும்**
**ஊனமற விளையாடி எவ்விடத்தும்**
**எந்நாளும் உறையும் கோவே!**

**குறைஷியெனும் குலக்காபிர் பகைநாளும்**
**வளருமெனில் கோதில் லாது**
**நிறையும்என துடல்உயிரைத் தரவேண்டும்**
**எத்தலத்தும் நீண்ட ஜோதி**
**இறையவனே அக்காபிர் நாள்தோறும்**
**தேய்வார்எனில் இலங்கும் வாளி**
**உறையும்மலர்க் கரத்துடனே பீசபீல்**
**மவுத்தாக்க உதவி செய்வாய்!**

சஃது பாடியதாக உமறு தரும் ஐந்து பாடல்களில் முதலும் முடிவுமாய் இலங்குகின்ற பாடல்களே இவ்விரு பாடல்களும். இடையில் உள்ள மூன்று பாடல்களும் இதனினும் இனிய கருத்துக் கருவூலங்கள் எனலாம். இது போன்றே போர் நிமித்தம் தொழுகை தவறி விட்டதற்காகவும், போரின் வெற் றிக்காகவும் நாயகப் பேரொளி அவர்கள் இறைவனைத் துதித்து வேண்டிய அரிய உயரிய கருத்துக்களையும் உமறு, செந்தமிழ்ப்.பாடல்களாகத் தந்து மகிழ்விக்கின்றார்.

அஞ்சொகுத்தும் தப்பாது கடன்கழிப்பன்
நாள்தோறும் அளித்தேற்கு அந்தோ
வஞ்சமுறும் குபிரவரால் ஓர்வணக்கம்
தாராது வருந்தி நின்றேன்
மிஞ்சுகதி வினைப்பயனே உலகமெங்கும்
பெருங்காட்சி விரித்த கோவே
தஞ்சமுற உனையடைந்தேன் இத்தகைமை
பொறுத்திரக்கம் தாங்கு வாயே!

பொல்லாத வஞ்சகரைத் தெளியாத
மனத்தவரைப் புன்மை யோரைக்
கல்லாத கயவரெனும் குபிரவரை
வேகம்அறக் களைந்து நாளும்
எல்லாரும் தொழும்அரிய தீனைவளரத்
துறுவிசயம் எற்கீந் தாள்வாய்
அல்லாவே அல்லாவே என்றிரங்கிப்
புகழ்ந்துபுகழ்ந்து அறைந்தார் மன்னே

நாயகப் பேரொளி அவர்கள்தம் வாக்காக உள்ள இவ்விரு பாடல்கட்கு இடையே உள்ள அரிய பாடல்களில் சில, விரி வஞ்சி விடப்பட்டுள்ளன.

கிட்டத்தட்ட மூன்று வாரங்கள் நடந்த இம்முற்றுகைப் போரில் வந்தோர் படையில் இறந்தோர் மூவர். மதீனத் திருந்தோர்தம்மில் இறந்தோர் அறுவர். இதற்கிடையில், வந்தோரிடையே ஒருவரை ஒருவர் நம்பாநிலை தோன்றி யது. தோன்றச் செய்தான் இறைவன். இவற்றோடு, பெருஞ் சூறைக்காற்றொன்று தோன்றித் துன்பம் விளைவித்தது. ஏறு வாகனங்களாகிய ஒட்டகங்கள், புரவிகள் தீனி இன்றித் திண்டாடின. எனவே, வந்தபோது சேர்ந்து வந்த படையினர் தமக்குள் ஒற்றுமை சிதைந்து தனித்தனியே பிரிந்து செல்லலா யினர். வீரம் சோர்ந்து வீடு திரும்பிய வீணர்களை அவர்தம் இல்லத்தரசிகள் எப்படி வரவேற்றனரோ தெரியவில்லை. உமறு பாடவில்லை. பாடி இருந்தால் போர்க்களத்தே ஏதோ

நடக்கப் போகிறதென்று எதிர்பார்த்துப் படிக்கின்ற வாசகரின் சோர்வுக்கு மருந்தாக அமைந்திருக்கும்.

பனிமூட்டம் விலகியது போன்று, வந்த பகை மூட்டம் விலகியதிலே மதீனமா நகர மக்களுக்கு ஒரே மகிழ்ச்சி!

'இனி மக்கமா நகரினர் நம்மீது போர் தொடுக்க மாட்டார்கள்,' என நபிகள் நாயகம் அவர்கள் கணித்துரைத்தார்கள். அது அவ்வாறே ஆயிற்று. மக்கமாநகரினர் அதுவரை பெரிதும் சிறிதுமாக நடத்திய போரின் எண்ணிக்கை இருபத்தெட்டெனக் கணித்துள்ளனர் வரலாற்றுசிரியர்கள். அவை மேலும் எண்ணிக்கையை வளர்த்துக் கொள்ள வியலாதவாறு முடித்தது, முடிந்தது இந்தப் போரேயாம். அதிகமான எண்ணிக்கையினர் வந்து ஏமாந்து திரும்பியதும் இந்த அகழ்ப் போரேயாம். இப்படலத்தை முடிக்கின்ற உமறுப்புலவர்,

**இனையமன்னர்நாள் இருபதும் சின்னமும் இருந்து**
**மனம்உழன்று அகம்வெறுவி ஓடினர்எனும் வாய்மை**
**துனிவின் மாநபிகேட்டு நாயனைத் துதித்தார்**
**நனியொடும் சயவாக்கியம் இடந்தோறும் நடந்த**

என்று பாடி முடிக்கின்றார். 183 பாடல்களைக் கொண்ட படலம் இந்த உயை வந்த படலம். ஆனால் பத்று, உகதுப் படலங்களைப் போன்று வீரவிளைவுகள் அதிகம் நிகழாத படலமாகி வெற்றி விளம்பி முடிகின்றது.

# 29

அகழிப் போர் நடந்து முடிந்த அடுத்த ஆண்டில் நபி கள் நாயகம் அவர்கள் மக்கமாநகரம் செல்வதற்குத் திட்டமிட்டார்கள். போர் புரிந்து மக்கமா நகரினைக் கைப்பற்றுவதற்காக அன்று; அங்குள்ள கஃபத்துல்லா எனும் பள்ளிவாசலில் காணிக்கை செலுத்தி, பிரார்த்தனை புரிவதற்காகவேயாம். கஃபத்துல்லாவில் அரபியர்கள் அனைவருக்கும் பிரார்த்தனை நடத்த உரிமையுண்டு. அரபு நாட்டினர் அனைவரும் ஆண்டிற் கொருமுறை அங்கு வந்து கூடுவர். அதற்கு 'ஹஜ்' என்று பெயர். ஹஜ் அல்லாத நாளில் அப் பள்ளிவாசலைத் தரிசிக்கச் செல்வதை 'உம்ரு' என்று கூறுவர். உம்ருச் செலுத்தத் தம் தோழர்கள் ஆயிரத்து நானூறு பேர்களுடன், ஓர் தினம் மக்கமாநகர் நோக்கிப் புறப்பட்டார்கள் நபிகள் நாயகம் அவர்கள். நபிகள் நாயகம் அவர்களையோ, அவர்கள்தம் தோழர்களில் யாரையுமோ, நகருக்குள் நுழைய அனுமதிப்பதில்லை என மக்காவாசிகள் முடிவு செய்தனர். வருவோரை எதிர்த்துப் போர் புரியவும் ஆயத்தமாயினர். எனவே, அனைவரும் போர்க்கருவிகளுடன் மக்கமா நகருக்கு வெளியில் வந்து நபிகள் நாயகம் அவர்களை எதிர்பார்த்திருந்தனர். நபிகள் நாயகம் அவர்கள் புறப்பட்டிருப்பது துல்கஃதா மாதம். இந்த மாதம் அரபியர்கள் போர் புரியத் தகாத மாதம். அப்படியிருந்தும் மக்கமாநகர வாசிகள் போரிடத் தயாராகி அணி வகுத்து நின்றனர்.

மதீனத்திலிருந்து புறப்பட்டிருந்த நாயகத்திருமேனி அவர்களும் அவர்கள்தம் தோழர்களும் மக்கமா நகரினுக்கு

அண்மையிலுள்ள ஹுதைபியா என்னும் இடத்தில் சென்று தங்கினார்கள். அங்குள்ள கிணறு ஒன்றே ஒன்றுதான். அதில் தண்ணீர் இல்லை. அதை அறிந்த நபிகள் நாயகம் அவர்கள் இறைவனைப் பிரார்த்தித்து, தம்மிடமிருந்த சிறிதளவு தண்ணீரை அக்கிணற்றில் ஊற்றினார்கள். உடனே கிணற்றில் தண்ணீர் பெரும் அளவில் சுரக்கலாயிற்று. இந்த அற்புதத்தைப் பாடுகின்ற உமறுப் புலவர், வழங்குகின்ற வள்ளல் வீட்டில் செல்வம் பெருகியது போன்றும், நபிகள் நாதர் அவர்கள் தம் மனத்தில் அருள் சுரப்பதே போன்றும், தினந்தினம் நாயகத்திருமேனி அவர்களின் சன்மார்க்கம் பெருகுவது போன்றும் கிணற்றில் தண்ணீர் பெருகிற்றெனப் பாடுகின்றார்.

**கொடுக்கும் வள்ளியோர் மனையினில் செறிநிதிக்குவைபோல்**
**வடுப்படாதநன் நெறியுறுதீன் வளர்வதுபோல்**
**அடுக்கும் அன்பருக் குதவிசெய் நபிமனத் தருள்போல்**
**தடுக்கலாத்துறைப் பெருக்கெனப் பெருகின தாங்கல்.**

இப்பாடலின் இறுதியில் உள்ள தாங்கல் என்ற சொல் சிறிய ஏரிகள் போன்ற நீர்நிலைகளைக் குறிக்கின்ற சொல்லாகத் தொண்டைநாட்டுப் பகுதிகளில் இன்றும் நிலைத்திருக்கக் காண்கின்றோம். தென்மாவட்டங்களில் வழக்கில்இல்லாத சொல் இச்சொல். இலக்கிய வழக்கிலும் பெரும் அளவில் இடம் பெறாச் சொல்லேயாம். இச்சொல்லினைக் கீழக்கரைவாசியான உமறுப் புலவர் தமது பாடலில் தேடி அலைந்து, கண்டு கொணர்ந்து இடம் பெறச் செய்திருப்பதானது, சொற்களைக் கையாண்டு பரப்புவதில் அவர்க்குள்ள ஆர்வத்தைக் காட்டுவதாயுளது.

இப்பாடலின் மூலம் உமறுப் புலவர் ஈந்து உவப்போரின் பெருமையைப் பாடுகின்றார். நபிகள் நாதர் அவர்கள் அருள் மனம் உடையவர்கள் என்பதைப் படிப்போருக் குணர்த்துகின்றார். அவர்கள் வளர்க்கின்ற சன்மார்க்கம் நாளுக்குநாள் வளர்கின்றது என்பதைத் தெரிவிக்கின்றார். இவற்றைத் தெரிவிப்பதின் மூலம், எதிர்த்து நிற்கின்ற மக்கமாநகர வாசிகளை,

நபிகள் நாயகம் அவர்கள் இந்தத் தடவையும் வெல்லப் போகின்றூர்கள், அவர்கள்தரும் அரியமார்க்கம் மேலும் வளரவே போகின்றது என்பதையும் ஊகித்துணரு மாறு உரைத்து விடுகின்றூர். வல்ல கவிஞர்கள் கடைப் பிடிக்கின்ற முறை இதுவேயாம். உள்ளுவமம் தொக்கப் பாடுவதே சிறப்புடைய கவிதையாகும். வெளிப்படையாகக் கூறுவதைவிட, மறைமுகமாக உணர்த்துவதே கவிநயமாகும். காதலர்கள் ஒன்றுபட்டார்கள் என்பதை, வெள்ளத்திஞே டொரு வெள்ளமுமாய் நல்ல வீணையும் நாதமும் ஆகிவிட்டார் என்கின்ற பாரதிதாசனுர் கூற்று, சுவையுடைய இலக்கியம். கவிஞர் கூறுவதைப் படிப்போர் யூகித்தறிந்து சுவைத்து மகிழ் கின்ற தன்மையில் அமைகின்ற கவிதையை இனிய சொற் சித்திரம் எனக் கூறலாம். உமறுப் புலவரின் இப்பாடல் இத் தகைய உள்உவமம் உடைய உயரிய பாடலேயாம்.

ஹுதைபியாக் கிணற்றருகே தங்கியுள்ள நபிகள் நாயகம் அவர்களை ஒருவர் வந்து சந்திக்கின்றூர். வந்திருப் பதின் நோக்கம் பற்றிக் கேட்கின்றூர் அவர். பிரார்த்தனைக் காக வந்திருப்பதாக நபிகள் நாயகம் அவர்கள் கூறுகின்றூர் கள். போர் புரிவது தமது நோக்கமன்று எனவும் கூறுகின் றூர்கள். இத்தகவலை மக்கமாநகரவாசிகட்கு எடுத்துரைக்கு மாறும் கூறுகின்றூர்கள், வந்தவர் மக்கமாநகரில் சென்று தலைவர்களைச் சந்திக்கின்றூர். தாம் சொல்வதை ஏற்கும் பக்குவத்தினர் அல்லர் மக்கமாநகரத் தலைவர்கள் என்பதை அவர் அறிந்தேயுள்ளார். எனினும் அவர்களிடம் தம் கருத்தை விண்டுரைத்திடல் வேண்டும். ஆகவே அவர் "ஒரு தாய், தமது குழந்தையின் உரை அர்த்தமற்றதாகத் தானிருக் கும் என்றறிந்தும் கூட, அதை அவள் கேட்டின்புறுவ துண் டல்லவா? அது போன்ருகிலும் என் உரையைக் கேளுங்க ளேன் என உவமான நயத்துடன் தம் கருத்தினை, எடுத்துரைத் தார் என உமறுப் புலவர் பாடுவது நயமுடையதாகவும், கனி வுடையதாகவும், சொல்வோரின்பால் இரக்கம் தோன்றத் தக்கதாகவும் திகழக் காண்கின்றேம்.

**வந்து,மக்க மாநகர் உறும் காபிர்மா(டு) அணுகிக்**
**கந்தம்நாறும்மெய் முகம்மதைக் கண்டுஅவண் இருந்து**
**சிந்தைகூர்சில செய்திகேட்டு உம்முழை புகுந்தேன்.**

**திருந்தயான் சொலும் விண்ணப்பம்**
**செவித்துணைக்கு ஏருதேனும்**
**வருந்திய மழலைவார்த்தை கேட்டதாய்**
**மகிழ்வ போல்நீர்**
**பொருந்திடக் கேட்பிராயின் நன்குறப்**
**புகல்வேன் என்றார்.**

இவற்றைப் படிக்கும் நாம், கேளாமனத்தினரையும் கேட்க வைப்பதற்கு எம் முறையில் கூற வேண்டும் என உமறுப் புலவர் கற்றுத் தரக் காணுகின்றோம். கவிஞர்களும் புலவர்களும் சமுதாயத்தின் ஆசிரியர்களாவர். அவர்கள், சமுதாயம் மேன்படப் பல அரிய கருத்துக்களைப் போதிப் பவராவார்கள். நாம் அவர்கள்தம் நல்லிலக்கியங்களைக் கற் பதில் ஆர்வம் காட்டுதல் வேண்டும் என்பதனை நினைவில் கொள்ளவைக்கின்றது உமறுப்புலவரின் இவ்வரிய நெகிழ்ப்பா.

ஹுதைபியா எனும் இடத்தே தங்கி இருக்கின்ற நபிகள் நாயகம் அவர்களை மக்கமாநகரவாசிகளின் சார்பாக மேலும் பலர் வந்து காணுகின்றனர். அவர்கள் அனைவரும் திரும்பிச் சென்று, நாயகத் திருமேனி அவர்களைப் பிரார்த்தனை செலுத்த அனுமதிப்பதே சிறந்ததெனக் கூறுகின்றனர். ஆனால் மக்கமாநகரவாசிகள் ஒப்பவில்லை. முடிவில் இந்த ஆண்டு திரும்பிச் சென்று அடுத்த ஆண்டு வந்து பிரார்த்தனை செலுத் தட்டும் என்கின்றனர். நாயகத் திருமேனி அவர்கள் சம்மதம் தெரிவிக்கின்றார்கள். ஒப்பந்தம் எழுதப் பெறுகின்றது. அதில் தம் தோழர்கள் விரும்பாத நிபந்தனைகள் பலவற்றை நாயகத் திருமேனி அவர்கள் ஏற்றுக் கொள்கின்றார்கள்; ஒப்பந்தம் எழுதி ஏற்கப்படுகின்றது. தங்கி இருந்த இடத்திலேயே தங் களின் காணிக்கைகளை ஈந்து பிரார்த்தனையை முடித்துக் கொண்டு மாநபி அவர்களும் அவர்கள்தம் தோழர்களும்

மதீனமாநகர் நோக்கிப் புறப்படுகின்றார்கள். போகும் வழியில் பாலை நிலம் குறுக்கிடுகின்றது. பாலையின் வெம்மையை முன்னம் பல பாடல்களில் விளக்கியுள்ள உமறுப் புலவர் இவ்விடத்தும் கூறுகின்றார்.

பாம்புகள், ஆகாரம் கிட்டாக்காலை, காற்றினையே ஆகாரமாகக் கொண்டு வாழுந்தன்மை உடையன. பாலையின் வெப்பத்தால் காற்றும் அற்றுவிட்டது. எனவே பாலைவனப் பாம்புகட்குக் காற்றும் கிட்டவில்லை. மான்களுக்கோ நாவரட்சி; நாய்களின் நீண்ட நாக்குகளிலே வடிகின்ற நீரை உண்ணக் கருதி மான்கள் ஓடுகின்றன. அவை ஓடுகின்ற வேகத்திலே எழுகின்ற காற்றை உண்ணும் நோக்கில் பாம்புகள் தங்களின் வாய்களைத் திறந்து கொண்டிருக்கின்றன. அப்பாம்புகளின் அகன்ற வாய்களைப் பொந்துகள் என எண்ணிப் பாலையின் வெப்பம் தாங்காமல் ஓடிவருகின்ற எலிகள் அப்பாம்புகளின் வாய்களில் தாமாகவே தாவி நுழைகின்றன. எது? என்ன? என்று நிதானித்துப் பார்க்கவும் இயலாத கொடிய வெப்பம் தன்னரசு செலுத்திற்று அப்பாலையில், என்பதை விளக்க, மான்களின் ஓட்டத்தையும், எலிகளின் நிதானமிழந்த நிலையையும் காட்சிப்படுத்திக் காட்டுகின்றார் உமறுப் புலவர்.

**தேற்றமுற நாயின்நெடு நாத்திகழும் நீரை**
**மாற்றமற உண்ணவரும் மான்உடல் பிறந்த**
**காற்றினை அருந்தும்விடக் கட்செவியன் வாயைத்**
**தோற்றுபுழை என்றுஎலி சுழன்றுசெல எண்ணும்.**

திகைப்பும், நகைச்சுவையும், உண்மையும் கலந்து உமறு புலவர் தமது கற்பனையில் காட்டுகின்ற பாலைநில வருணனையை, பாலைவன வெப்பத்தால் தகிக்கப்படுவோரும் கூடப் படிப்பாராயின் தமது துன்பம் மறந்து மகிழத்தக்க நகைச்சுவைக் கற்பனை வளமுடையதாய் இப்பாடல் திகழக் காண்கின்றோம். அத்துடன் பாலைநிலத்தின் தகிப்பையும் கண்டு திகைக்கின்றோம்.

# 30

தமிழகத்தைப் பொறுத்தவரை, ஏன், தென்னகத்தைப் பொறுத்தவரையிலும்கூட, இது பாலைநிலம் அற்ற பகுதியேயாம். திரிபு நிலங்கள் உண்டு. முழுப் பாலைநிலம் தென் மாநிலங்களில் இல்லை. எனவே, நமது இலக்கியங்களில், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நிலங்களைப் பாடு வதை யொப்ப இயற்கை கெழுமிய தன்மையில் பாலை நிலத்தைப் பாடுகின்ற வாய்ப்பு நம் புலவர் பெருமக்கட்கு இல்லை. பாடியுள்ளவற்றையும் படிப்போர் உணர்ந்து மகிழும் வகையில் பாலைநிலம்பற்றிய அனுபவம் இலக்கிய நுகர்வாளர்களில் பெரும்பாலோர்க்கில்லை. இவ்விரு தன்மைகளினுலேயே பாலைநில வருணனைகள் மற்றநில வருணனைகட்கு ஒப்ப நம் நாட்டில் பரவவில்லை. இஸ்லாமியத் தமிழ்ப்புலவர்கட்குப் பாலைநிலம் பற்றிப் பாடுகின்ற வாய்ப்பு நிறைய வாய்த்துள்ளது. பாடியும் உள்ளனர். ஆனல் நுகர்வோர் குறைவு ஆதலின், அவர்கள் யாத்துள்ள பாலைநிலப் பாடல்களும் மக்களிடையே பரவவில்லை. சீருப்புராணத்தில் சுரத்தில் புனல் அழைத்த படலம் முழு அளவில் பாலைநிலம் பற்றிய பாடல்களைக் கொண்டதேயாம். அப்படலத்தில் உள்ள பாடல்களில் ஒன்று பாலைநிலப் பயணிகள் வெப்பத்திற்காற்ரு நிலையில் தாம் ஏறிச் செல்லுகின்ற ஒட்டகத்தின் வயிற்றினடி நிழலில் துணியை விரித்து அதன்மீதமர்ந்து வெப்பக்கொடுமையிலிருந்து தப்ப முயன்றதைக் கூறுகின்றது. இக்கூற்று, இயற்கையாயிருக்கக் காண்கின்ரேம்.

**பாடுறு புனலற்று ஒவ்வொரு காதம்**
**படுபரல் பரப்பு நால்திசைக்கும்**
**ஓடுவர்திரும்பி மீள்குவர் அடிசுட்டு**
**உச்சியும் வெதுப்புற உலர்ந்து**

**வாடுவர் துகில்கீழ்ப்படுத்தி ஒட்டகத்தின்**
**வயிற்றிடைத் தலைநுழைத் திடுவர்**
**தேடிடும் பொருட்கோஉயிர் இழப்பதற்கோ**
**செறிந்திவண் அடைந்தனம் என்பர்.**

இப்பாடலிலுள்ள, வாடுவர், துகில் கீழ்ப்படுத்தி ஒட்டகத்தின் வயிற்றிடைத் தலை நுழைத்திடுவர் என்பது, பாலையின் வெப்பக் கொடுமையை இயற்கை ததும்ப, உண்மை துலங்க உணர்த்துவஃதாயுள்ளது.

கல்விக்கும் செல்வத்திற்கும் தொடர்பில்லை என்பது முன்னோர்கள்வாக்கு. இதனை,'திருவேறு, தெள்ளியராதலும் வேறு, எனும் வள்ளுவர்வாக்கு உணர்த்தும். கற்றோர் பிறரிடம் கேட்டுப் பெறஅஞ்சுவர். அவர்கள் வள்ளல்களை நாடிச் செல்லுவர். நிலையுணர்ந்து அவ்வள்ளல்கள் தாமாக ஈந்தால் பெறுவர்! இல்லையேல், வருந்தி நொந்து திரும்புவர். இவர்தம் மனம்படும் துன்பத்தை ஒத்திருந்தது பாலைதரும் வெம்மையின் கொதிப்பு என சுரத்தில் புனல் அழைத்த படலத்தில் பாடுவார் உமறுப்புலவர்.

**பாலைஎன்று உலர்ந்த செங்நிலக்கானல்**
**பரப்பினைப் புனல்என ஒடிச்**
**சாலவும் இளைத்துத்தவித்து உழைஇனங்கள்**
**தனித்தனி மறுகிய மறுக்கம்**
**மாலுளர்ந்து இருண்ட புன்மனச் சிறியோர்**
**மருங்கினில் இரந்திரந்து இடைந்து**
**கால்அறத் தேய்ந்த பலகலை மேலோர்**
**கருத்தினில் வருத்தம் ஒத்தனவே.**

பாலையில் எழுகின்ற கானலை நீரென்றெண்ணிக் கலை மான்கள் கால் அறத்தேய்ந்து ஏமாறுகின்றன. ஈயாதானை வள்ளலென எண்ணி அலைந்தலைந்து கால்கள் தேய மனம் புண்ணாகி வருத்தமுறுகின்றனர் பலகலை மேலோர். இவ்வுவ

மானத்தை மேலேயுள்ள பாடலில் காண்கின்றோம். பாலையில் நீர் தேடி அலைகின்ற கலைமான்கட்கும் ஈயாரை நாடி இதயம் நொந்த கலைவல்லுநர்கட்கும் உள்ள துன்பத்தைப் பாலைக்கு உவமித்திருப்பது சிறப்பினும் சிறப்பாம்.

இப்படிப் பலபாடல்களைச் சுரத்தில் புனல் அழைத்த படலத்தில் பாடியுள்ள உமறுப் புலவர் உம்ருவுக்குப் போன படலத்திலும் பாலையைப் பற்றிப் பாடியுள்ளதையும் கண்டோம். ஆம், கொடும் மனமுடைய மக்கமாநகரத்தாரிடையே ஒப்பந்தம் எழுதி முடித்த பின்னர், மதீனமாநகர் நோக்கிப் பாலையினூடே தமது தோழர்கள் புடைசூழ நாயகத் திருமேனி வந்துகொண்டிருக்கின்றார்கள் என்பதை அறிந்தோம். அந்தப் பாலையில் நாய்களின் வாயிலிருந்து வடியும் நீரினை உண்ண மான்கள் ஓடியதும், மான்கள் ஓடும் போது எழுகின்ற காற்றினை அருந்தப் பாம்புகள் வாய்பிளந்திருந்ததும், அவ்வரவின் வாய்களை வளை என நினைந்து எலிகள் புகுந்ததையும் நகைச்சுவையுடன் உமறுப்புலவர் பாடியிருப்பதைப் பார்த்தோம்.

பாலையில் வெயிலின் கொடுமையுள்ளபோது காற்றிருக்காது. காற்றுமேவினுல் வெப்பமே மேல் எனும் வகையில் பாலை மணலை அள்ளி, கண் காது, வாய் மூக்கென்று பாராமல் நிரப்பி விடும். சில நேரங்களில் பாலையில் எழுகின்ற சூறைக் காற்று, ஆட்களைக் கீழேதள்ளி மணல் கொண்டு மூடி மறைத்துச் சாகடித்துவிடும். இதை நினைவு கூர்கின்ற வகையிலும் புலவர் உமறு பாடக் காண்கின்றோம்.

**தேறரிய தாகவெகு சீழ்உதிரம் ஒடக்**
**கூறுபடு புண்ணில்ஒரு கோலிடுதல் போல**
**மீறுபரலால் அடிமெலிந் தவர்கள்ஆவி**
**சூறையிடல் போலஅழல் சூறைவளி வீச**

இப்பாடலில் உள்ள ஆவி சூறையிடல் போல அழல் சூறைக்காற்று வீச, என்னும் வாசகம், பாலையிலே வீசுகின்ற

சூறைக்காற்று, உயிரைச் சூறையிட வல்லது என விள்ளக்காண்கின்ருேம். உண்மையில் பாலையில் எழுகின்ற சூறைக்காற்று மணலை வாரி வீசி, மனிதனைக் கீழே தள்ளி மணல் மேடிடுமாறு மூடிக் கொன்றுவிடுகின்ற தன்மையுடைய தென்பதை இக்காலத்தில் உள்ள நாம் அறிவோம். உமறு பாடிய காலம் நிலவள அறிவை முழு அளவில் பெறுவதற்கான வாய்ப்பில்லாக் காலம். அக்காலத்தே வாழ்ந்த உமறுப் புலவர், பாலை நிலத்தின் தன்மையைப் பாடியுள்ளது வியத்தற்குரியதாம். மீண்டும் நினைவு கூர்ந்து கொள்வோம். நாய்களின் வாய் நீரை நாடி மான்கள் ஓடுவதும், அம்மான்களின் ஓட்ட விசையிலே எழுகின்ற காற்றை உண்டு வாழப் பாம்புகள் வாய்களை அகலத்திறந்து உறைவதும், அப்பாம்புகளின் வாய்களைத் தாம் வாழ்வதற்கான பொந்துகள் என எண்ணி எலிகள் புகுவதும் பாலைவன வெம்மைபற்றிய கற்பனை; உமறுவின் அதீதக் கற்பனையை இதில் காணுகின்ருேம். ஆனால் பாலைவனச் சூறைக்காற்று மனிதனை மணலால் மூடிக் கொன்றுவிடும் என்பது கற்பனையன்று: உண்மை. கற்பனையைக் கண்டு ரசிப்போம். உண்மையைக் கண்டு வியப்போம். கற்பனைக்கிடையே உண்மை மிகைத்து விளங்கும் போது இதுதான் கவிதை என்று கூறி வாழ்த்தி வரவேற்போம். ஆம், தமிழர்கள் அனைவரும் போற்றிப் புகழுமாறு இன்தமிழ்ப்பா இசைத்து மகிழ வைப்பவர் உமறுப் புலவர். அவர் பாடிய சீருப்புராணத்தில் உம்ருவுக்குப் போன படலத்தில் நாம் நுழைந்துள்ளோம்.

மக்கமாநகரின்கண் உம்ருச் செலுத்தச் சென்று இந்த ஆண்டு திரும்பி அடுத்த ஆண்டு வருவதென்ற உடன்படிக்கையை ஏற்று மதீனமாநகரம் போந்தார்கள் நபிகள் நாயகம் அவர்கள். இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டது சரியல்ல என்றே ஆரம்பத்தில் நபித்தோழர்கள் எண்ணினர்கள். ஆனால், இவ்வொப்பந்தத்தின் விளைவாக ஏற்பட்ட சுமுக உறவு, பகைக்குறைவு, அக்கம்பக்கத்தில் உள்ளோர்கள் கொண்ட மகிழ்வு, அதனால் இஸ்லாத்தின் பால்கொண்டிருந்த தப்பெண்ண மறைவு, இதனால் இஸ்லாம் பரவ வாய்த்த வாய்ப்பின் விரைவு ஆகியவற்றைக் கண்டபோது நாயகத் திரு

மேனி அவர்களின் தோழர்கள் அடைந்த ஆனந்தத்திற்கோர் எல்லேயே இல்லே. சுற்றிப் பகையிருள் மூடியிருந்தது நீங்கி, அரபுநாடு முழுவதும் பெரும் அளவில் இப்போது சன்மார்க்க ஒளி பரவி எழலாயிற்று. மக்கமாநகரில் மனேவிமக்கள், மதீனத்திலே தனித்த வாழ்க்கை என்கின்ற நிலே தகர்ந்து போயிற்று. அபிசீனியா நாடு சென்று வாழ்ந்தோர்கள் எல்லாம் கூட முழு அளவில் மதீனமாநகரில் வந்து வாழத்தலேப்பட்டு விட்டார்கள். தீமை நீங்கி, நன்மை மலரத் துவங்கி விட்டது அரபி நாட்டில்! நபிகள் நாயகம் அவர்கள் உம்ருவுக்குப் போனது அவர்கள் தம் ஐம்பத்தொன்பதாம் ஆண்டில். நூற்றுப்பதின் மூன்று பாடல்கள் இப்படலத்தில் உள்ளன.

உமறுப் புலவர் யாத்துள்ள சீருப் புராணத்தில் மொத்தம் மூன்றுகாண்டங்களும், தொண்ணூற்றிரண்டு படலங்களும் ஐயாயிரத்து இருநூற்று இருபத்தேழு பாடல் களும் உண்டு என்பதை அறிந்துள்ளோம். இதன் இறுதிக் காண்டம் ஹிஜரத்காண்டம், இறுதிப்படலம் உறணிக் கூட்டத் தார் படலம். உறணிக்கூட்டத்தார் படலத்தில் உள்ள பாடல் களின் எண்ணிக்கை பதினேழு. இப்படலத்தில் அறியக் காண கின்ற வரலாறு, இஸ்லாத்தில் இணைந்திராத உறண் எனும் அயலவர் சிலர் நோய் உற்ற நிலையில் நபிகள் நாயகம் அவர் கள் முன்னர்த்தோன்றி, சன்மார்க்கத்தைத் தழுவ வந்துள்ள தாக உரைக்கின்றனர். அவர்களை ஏற்றுக்கொண்ட பெருமா னார் அவர்கள், அவர்கட்குக்கண்டுள்ள நோய்க்கு ஒட்டகத்தின் பால் அருந்தினால் நலமாகிவிடும் என்று சொல்கின்றார்கள். ஆனால் அவர்கள் தங்களிடம் ஒட்டகங்கள் இல்லை என்றும் பால்வாங்கி அருந்தவும் வகையில்லை என்றும்உரைக்கின்றனர். காட்டுப்புறத்தேயுள்ள ஒரு ஒட்டகப் பண்ணைக்கு அவர்கள் அனைவரையும் அனுப்பி, பால்கொடுத்துதவவும், உணவு நல்கி ஆதரிக்கவும் நபிகள் நாயகம் ஏற்பாடுசெய்கின்றார்கள். அங்குச் சென்ற அக்கூட்டத்தினர் ஒட்டகப் பண்ணையின் காவலர்களைக் கொன்று, அவ்வொட்டகங்களைக் கவர்ந்து சென்றுவிடு கின்றனர். பால் வார்த்தோர்க்குப் பாதகம் செய்த கூட்டம் உறணிக் கூட்டம். அவர்களின் அடாதசெய்கைபற்றிப் பேசு வதே சீருப்புராணத்தின் இறுதியிலுள்ள உறணிக்கூட்டத்தார் படலம். இப்படலத்துடன் நபிகள் நாயகம் அவர்களின் வரலாறு முற்றுப்பெறவில்லை. அறுபத்து மூன்றாண்டுவாழ்க்கை

நபிகள் நாயகம் அவர்கள்தம் உலக வாழ்க்கை. உமறுப் புலவர்தம் சீருப்புராணம் நாயகத்திருமேனி அவர்களின் ஐம்பத்தொன்பதாம் வயது வரையுள்ள வரலாற்றினைத்தான் செப்புகின்றது. இதன் பின்னர் உள்ள நான்காண்டுக்கால வரலாறு காணப்படவில்லை. புலவர் உமறு எழுதவில்லையா? அல்லது அவர் எழுதிய முழுச்சுவடியும் கிட்டவில்லையா என்பது தெரியவில்லை. அக்காலப் புலவர்கள் நூல் முற்றுப்பெற்ற காலம், அரங்கேறிய காலம், ஆகிய விவரங்களைச் சுவடியின் ஆரம்பத்திலோ முடிவிலோ பாடலாக்கிவைப்பது மரபு. சீருப் புராணத்தில் அம்மரபு காணப்படவில்லை. சீருப்புராணம் தோன்றிய ஐம்பதாண்டுகட்குள் இதன் பிற்பகுதியாகச் 'சின்னச் சீரு' என்றொரு நூல் தோன்றியிருக்கக் காண்கின்றோம்.ஆயிரத்து எண்ணூற்று இருபத்துமூன்று பாடல்கள் அதில் உள்ளன. உமறுப்புலவர் விட்ட இடத்திலிருந்து தொடங்கி, நபிகள் நாயகம் அவர்களின் வாழ்க்கை முற்றும் வரை அந்நூலில் திகழக் காண்கின்றோம். அந்நூலின் ஆசிரியர் பெயர் பனீ அகமதுமரக்காயர் என்றுளது. ஆசிரியர் பெயர் பொறிக்கப் பட்டிராவிடினும் நடையே மெய்ப்பித்து விடும், சின்னச் சீரு உமறுபாடியதல்லவென்று. தமிழ்க் கவிதை நடையை மென்நடை, வன்நடை எனப் பகுத்துரைப்பதுண்டு. கம்பராமாயணம் மென்நடை, சீவகச் சிந்தாமணி வன்நடை. நூல். அதேபோன்று, சீருப்புராண நடை வன்நடை.சின்னச்சீரு நடை மென்நடையாகும். மென்நடையைப் பெண்நடை என்றும், வன்நடையை ஆண்நடை என்றும் சொல்வதுண்டு. ஆக, சீருப்புராணமும், சின்னச்சீருவும் நடையால் வேறுபடு வதைக்கொண்டு இரு வேறு ஆசிரியர்கள் எழுதியவை என்றே ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இரண்டு காவியங்களும் ஒருசேர இணைந்ததே நபிகள் நாயகம் அவர்களின் வாழ்க்கை வரலாறு.

முதல்முறை மக்கமாநகரினுள் சென்று நிறைவேற்ற முடியாத உம்ருவெனும் காணிக்கையை ஒன்றரை ஆண்டு கட்குப் பின்னர்த் தமது தோழர்களுடன் சென்று நிறை

வேற்றித் திரும்புகின்றூர்கள் நபியவர்கள். பின்னர் அவர்கள் தம் அறுபத்தொன்றும் வயதில் திரும்பவும் மக்கமாநகருக்குச் செல்கின்றூர்கள். அதுபோது நபிகள் நாயகம் அவர்களின் கொள்கையை ஏற்கின்ருர்கள் மக்கமா நகரத்தின் மாந்தர்கள். ஆம், 'கத்தியின்றி, ரத்தமின்றி' எனப் பாடுவாரே நாமக்கல் கவிஞர்! அந்த முறையில், நபிகள்நாயகம் அவர்களை, அவர்கள் தம் கொள்கைக் கோட்பாட்டினை ஏற்றவர் நகரமாகின்றது மக்கமாநகரம்.

அகழ்ப்போர் நடந்த காலை, முப்பெருந் தளபதிகளாக மக்கமா நகரிலிருந்து படை நடத்தி வந்த அபூசுபியான், காலித்பின்வலித், இக்ரிமா போன்ருரெல்லாம் சன்மார்க்க நெறி தழுவித் திகழ்கின்ருர்கள். தமது அறுபத்து மூன்றும் வயதில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான பெருங் கூட்டத்தின ருடன் தமது இறுதி ஹற்ஜை, அதாவது மக்கமா நகரப் புனிதப் பயணத்தை நிறைவேற்றுகின்ருர்கள் நபிகள்நாயகம் அவர்கள். இதன் பின்னர், மூன்று மாத காலமே வாழ்ந் திருந்து, மதீன மாநகரினை என்றென்றும் தமது உடலுறை யும் உயர்நகரமாக ஆக்கி, உலக வாழ்க்கையிலிருந்து விடுதலை பெறுகின்ருர்கள் நபிகள் நாயகம் அவர்கள். இவ்வரலாற்றினை அறிய, சின்னச்சீருக் காவியத்தையும் நாம்நுகர வேண்டும். இப்பொழுது நாம் உமறுப் புலவர் பாடிய சீருப்புராண அள வோடு நிறைவு காண்கின்ரேம். இவற்றிலும்கூட, கவி நயத்தை மட்டுமே காட்டிச் செல்லாமல், நபிகள்நாயகம் அவர் களைச் சூழ்ந்த இன்னல்களையும், இன்னல்கள் விளைத்தவர்களை யும், அவற்றை யொட்டிய பாடல்களையுமே கண்டு வந்துள் ளோம். இவ்வாறு கூறியமைக்குக் காரணம், சீருப்புராணத் தின்கண் உள்ள ஐயாயிரத்து, இரு நூற்றுஇருபத்தேழு பாடல் களுமே இலக்கியச் சுவையும் வரலாற்றுண்மையும் உடை யனவாயிருப்பதால், அனைத்தையும் உரைக்க, காலம் இடந் தராதாகையால், ஒரு கோணத்தில் நின்று விளக்குவது நலம் என்ற நோக்கில் இவ்வாறு பகுத்துரைக்கப்பட்டதாம் என்க. கரும்பின் எப்பகுதியுமே இனிப் புடைய தென்பது

போன்று, கற்கண்டுக் கட்டியை எம்முனையில் சுவைத்தாலும் சுவைதரும் என்பதை ஒத்தும், நபிகள் நாயகம் அவர்களின் வரலாற்றினை அறிந்தவரை பயனுடையதே.

மனிதர்களிடையே ஒற்றுமையைத் தோற்றுவிக்க உலகத்தின்கண் தோன்றியவர்கள் நபிகள்நாயகம் அவர்கள். அவர்கள் கூறியுள்ள உருவமற்ற ஓரிறைவன் நெறி, கடவுளை ஒப்புகின்ற எல்லாச் சமயங்களிலுமே இயம்பப்பட்டிருக்கக் காண்கின்றோம். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது திருமூலர் வாக்கு இது சைவ நெறி.

**புன்புலவழியடைத்து**
**அரக்கில் அச்சினை செய்து,**
**நன்புல வழிதி றந்து**
**ஞானநற் சுடர் கொளுசி**
**என்பில் எஃகி நெக்குருகி**
**உள்கணிந்து எழுந்த தோர்**
**அன்பில்அன்றி ஆழியானை**
**யாவர்காண வல்லரே.**

என்பார் காணவியலார் கடவுள்பற்றி திருமிழிசை ஆழ்வார்.

**கோடிமா கோடிகோடி இலக்கங்கள் கொண்டதாக**
**நீடிய அகலம்ஒவ்வா தகன்றது. நெடுமாகல்பம்**
**வீடியநாளும் முற்றுதது. மிகப்பழைய தேனும்**
**பீடியபிறைக் கொழுந்தில்பெரிதும் மெல்லியது.**

காட்டவியலாக் கடவுள்பற்றி வசிஷ்ட மாமுனிவர்.

“நாம் எதைக் கடவுள் என நம்பிக்கொண்டிருக்கிறோமோ, கூறிக்கொண்டிருக்கிறோமோ அது கடவுளன்று. நமது காதுக்குக் காதாயும், மனதிற்கு மனதாயும், வாக்கிற்கு வாக்காவும் உள்ளது எதுவோ அதுவே, பிராணனுக்குப் பிராணனாகவும்,

கண்ணுக்குள் கண்ணுகவும் உள்ளது. அதுவே கடவுள். இந்த உண்மையை உணர்ந்தவர்கள் தனக்கென்ன வாழாச் சாவத் தன்மை பெற்றவர்கள்'' என்பது கேஞே உபநிஷத்தின் உரை.

''கேட்டாலும் அழியாதன் கேடு ஒன்றில்லான் கேளாதே எல்லாம் கேட்பான்'' என்பது மாணிக்கவாசகரின் மணிமொழி.

''பண்ணேன் உனக்கான பூசை ஒரு வடிவிலே பாவித்து.'' என்பது தாயுமான அடிகளின் அறவாக்கு.

உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும் நிலைப்பெறுத் தலும் நீக்கலும் நீங்கிலா அலகிலா விளையாட்டுடையார் அவர் தலைவர் அன்னவர்க்கே சரண்யாங்களே என்பது கம்பர் காட்டு கின்ற கடவுள் கணிப்பு.

**உம்பரும்முனிவர் தாமும்யாவரும் உணராஒன்றை**
**இம்பரில்உனக்கு நானேஇசைவுற உணர்த்தலானேன்**
**ஐம்பெறும்பூதத்தாலும் அமைந்தன உடலகம்யாவும்**
**நம்பனும்ஒருவன் உள்ளே ஞானியாய் நடத்துகின்ருன்.**

இது வில்லிபுத்தாழ்வார் தரும் மகாபாரதம் காட்டும் நெறி. இந்த ஞானமாமேதைகள் ஒப்பிய-உரைத்த உயர் கருத்து வழி ஒழுகுமாறு உலகமக்களை அழைத்தவர்கள் நபிகள் நாயகம் அவர்கள். மக்கள் ஒன்றுபட்டு ஒரேவழியில் நிற்க எடுத்தோதுகின்ற மார்க்கம் இஸ்லாமிய மார்க்கம். இவ்வரிய நன்னெறியைப் போதிக்க, பரப்ப நபிகள் நாயகம் அவர்கள் பட்டஇன்னல்களைப்பற்றி மட்டும் உமறுப்புலவர் தரும் உயர் தமிழ்பாடல்களின் வாயிலாகக் கண்டோம். அவர் தந்துள்ள செந்தமிழ்க் காப்பியமாகிய சீருப்புராணத்தின் அரிய பாடல்களை முற்றும் படிப்பது பயனுடையது.

## படித்துவிட்டீர்களா ?

கலைமாமணி கவி கா. மு. ஷெரீப்
அவர்கள் இயற்றிய இனிய இஸ்லாமிய பா நூல்கள்

### 1. நபியே எங்கள் நாயகமே

ஹதீதுகளின் கவிதை ஆக்கம் 5-00

### 2. இறையருள் வேட்டல்

451 அரிய முனாஜாத்துகள் 5-00

### 3. ஆயிஷா நாச்சியார் பிள்ளைத் தமிழ்

நாயகத் திருமேனி அவர்களின் மனைவியரான ஆயிஷா நாச்சியார் அவர்களின் வாழ்க்கை விளக்கக் காவியம்
5-00

வெளியீட்டாளர்கள் :
சீதக்காதி நூல் வெளியீட்டக
21, பச்சையப்பன் செட்டி தெரு,
சென்னை - 600 002.

Wrapper Printed at Threeyem Printers, Madras-600001